431



# தர்ம சக்கரம்

சக்கரம்-8 ஆரம்.1-3

தை. மாசி. பங்குனி-1982

JL
N59.8.1—3
158845

230

# தர்மசக்கரம்


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 JAN 1959
MADRAS
431

விளம்பி ஹூ தை மீ சக்கரம் 8 ஆரம் 1

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

ஆவலுடன் எதிர்பார்த்த

மூன்றாம் பதிப்பு வெளிவந்துவிட்டது

# ஸ்ரீமத் பகவத்கீதை

**தேவநாகரியிலும் தமிழிலும் மூலம்**

**சுவாமி சித்பவானந்தர் அவர்கள் இயற்றிய**

பதவுரை — பொழிப்புரை — விளக்கமான விரிவுரையுடன், ஏற்ற இடங்களில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேசங்களிலிருந்து மேற்கோள்களும் தரப்பட்டிருக்கின்றன.

எல்லோரும் அறிந்துகொள்ளக்கூடிய இனிய தமிழ்நடை. டெம்மி 1-க்கு 8ல் 920 பக்கங்களை உடையது. உயர்ந்த தடிப்பான இந்தியன் பிரிண்டிங் கிளேஸ் காகிதம் - சுத்தமான பதிப்பு - அழகிய பிளாஸ்டிக் காலிகோ பைண்டு. ரூ. 10–00 மதிப்புள்ள இப்புத்தகம் பிரசார நோக்கத்தைக்கொண்டு மிக மிகக் குறைந்த

***விலை ரூ. 3–75 க்கு விற்கப்படுகிறது.***

புத்தகத்தின் கிரயத்துடன் (ரூ. 3-75) பேக்கிங் செலவு 0-25 ந.பை சேர்த்து ரூ. 4-00 மணியார்டர்மூலம் முன்பணம் அனுப்பிவைத்தால் புத்தகத்தை ரயில்வே பார்சல் மூலம் 'To Pay'ல் அனுப்பப்படும். ரயில்வே நிலையத்தின் பெயரை தெளிவாக எழுதியனுப்பவேண்டும். ரயில்வே பார்சல் மூலம் அனுப்புவதில் ஒரு கீதை பிரதிக்கு சுமார் 0-50 ந.பைசாவிலிருந்து ரூ. 1/- வரைதான் செலவு ஆகும். தங்களுக்கும் தங்கள் நண்பர்களுக்குமாகச் சேர்த்து அதிகப் பிரதிகள் தருவித்தால் இன்னும் பார்சல் செலவு கணிசமாகக் குறையும்.

ரயில்வே நிலையம் அருகில் இல்லாதவர்களுக்கு ரிஜிஸ்தர் தபால் மூலம் புத்தகம் அனுப்பிவைக்கப்படும். ரிஜிஸ்தர் தபாலில் அனுப்ப பேக்கிங், தபால் செலவு ரூ. 2/- ஆகும். ரூ. 5-75 மணியார்டரில் அனுப்பிவைத்தால் புத்தகத்தை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பிவைக்கிறோம்.

ஆங்காங்கு உள்ள எங்கள் கிளை நிலையங்களில் பார்சல் செலவுகளுக்காக 25 நயா பைசா சேர்த்து நான்கு ரூபாயாகத் தந்து புத்தகத்தை எளிதில் பெற்றுக்கொள்ளலாம்.

*மானேஜர்*

**ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனப் பிரசுராலயம்**

திருப்பராய்த்துறை போஸ்ட் :: திருச்சி ஜில்லா


# தர்ம சக்கரம்


மாத சஞ்சிகை

சக்கரம் 8 | விளம்பி ஹூ தை மீ | ஆரம் 1


## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிரார்த்தனை | 1 |
| 2. | அருள் விருந்து | 2 |
| 3. | பரமஹம்ஸர் புகட்டிய பெருநெறி விளக்கம் | 3 |
| 4. | பராபக்தி – தியாகம் | 6 |
| 5. | பரமஹம்ஸரும் சமய ஸ்தாபனங்களும் | 13 |
| 6. | மூவர் இராமாயணம் T. R. ராமநாத சாஸ்திரி, M. A. | 24 |
| 7. | சந்தேகம் தெளிதல் வித்வான் R. வேங்கடசாமி | 30 |
| 8. | தான வீரன் கர்ணன் | 33 |
| 9. | மாணவருக்கு ஒருசொல் | 38 |
| 10. | குறிப்புகள் | 39 |
| 11. | செய்திகள் | 40 |



வருட சந்தா : உள்நாடு ரூ. 4-00 வெளிநாடு ரூ. 5-00

தனி இதழ்: „ 45 ந. பை. „ 55 ந. பை.

வியாபார விளம்பரங்களையும், மதிப்புரைக்குப் புத்தகங்களையும் ஏற்பதில்லை.

தர்ம சக்கரம் ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியன்று வெளி வருகிறது. ஒவ்வொரு சந்தாதாரரின் விலாசமும் சரியாக எழுதப்பெற்றுள்ளதா என்று சரிபார்த்துப் பதிவு செய்துகொண்ட பின்னரே தபாலில் சேர்க்கப்படுகிறது. தமிழ் மாதம் பத்து தேதிக்குள் இதழ் கிடைக்கவில்லையேல் தபால் அதிகாரிகளுக்கு மனுச்செய்து கொள்வதுடன் அதன் நகலை அனுப்பி எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

சந்தாதாரர்கள் தங்கள் தபால்களில் சந்தா நம்பரைக் குறிப்பிடுதல் அவசியம்.

மானேஜர்,
தர்ம சக்கரம்

திருப்பராய்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தில்

# அந்தர் யோகம்

"குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் இடையிடையே மூன்று நாளைக்காவது தங்கள் உலக வியவகாரங்களை யெல்லாம் அடியோடு ஒதுக்கி வைத்துவிட்டு இரவும் பகலும் ஈசுவர சிந்தனையிலேயே காலங் கழிக்கவேண்டும்; அப்படிச் செய்வது அவர்களுக்குப் பெரு நன்மையை விளைவிக்கும்" என்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பகர்ந்தருளியுள்ளார். இந்த உபதேசத்தை அனுஷ்டானத்தில் கொண்டு வருவதற்கான வசதிகளை அன்பர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது இந்த ஸ்தாபனத்தின் அலுவல்களில் முக்கியமான தொன்றாகும்.

1959 ஸு பிப்ரவரி மாதம் 25, 26, 27, தேதிகளாகிய இந்த மூன்று தினங்களில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி இங்கு அந்தர்யோகம் நடைபெறும். இதில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் பிப்ரவரி மாதம் 24ம் தேதி இரவே நேரில் நாள் ஒன்றுக்கு ரூ. 1-25 வீதம் செலுத்தி, பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். தாய்மார்களுக்குத் தனி இடவசதி உண்டு. பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

## வாழ்க்கை முறை

### காலை

| | | | | |
|---|---|---|---|---|
| துயில் எழுந்திருத்தல் | | | 4-30 மணி | |
| எல்லோரும் ஒன்றுகூடி நாமஜபம் | 5 மணிமுதல் | | 5-30 மணிவரை | |
| காவேரி ஸ்நானம் முதலியன | 5-30 | ,, | 6-45 | ,, |
| காலை தியானம் | 6-45 | ,, | 7-15 | ,, |
| சிற்றுண்டி | 7-15 | ,, | | |
| காலை உபந்யாசம் | 8-30 | ,, | 9-30 | ,, |
| மௌனம் | 9-30 | ,, | 10-30 | ,, |
| பஜனை | 10-30 | ,, | 11-30 | ,, |
| பூஜை, அர்ச்சனை | 11-30 | ,, | 12-00 | ,, |

### மாலை

| | | | | |
|---|---|---|---|---|
| போஜனம், ஓய்வு | 12 மணி முதல் | | 2-30 மணிவரை | |
| மாலை உபந்யாசம் | 2-30 | ,, | 3-30 | ,, |
| தனியாக வாசித்தல் | 3-30 | ,, | 4-30 | ,, |
| பானம், யோகாசனம், உலாவல், நீராடல் முதலியன | 4-30 | ,, | 6-00 | ,, |
| நாம ஜபம் ஆரத்திரிகம் | 6-00 | ,, | 6-15 | ,, |
| தியானம் | 6-15 | ,, | 7-00 | ,, |
| இரவு போஜனம் | 7-00 | ,, | | |
| சத்சம்பாஷணை | 8-30 | ,, | 9-30 | ,, |
| நித்திரை | 10-00 | | | |

உபன்யாசங்கள்:— யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும்.
சத் சம்பாஷணையில் தங்கள் சந்தேகங்களை நீக்கிக் கொள்ளலாம்.

प्रज्ञानं ब्रह्म

# தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது.


| சக்கரம் 8 | விளம்பி ஸு தை ்மீ | ஆரம் 1 |
|---|---|---|


## பிரார்த்தனை

तत्पुरुषाय विद्महे वक्रतुण्डाय धीमहि ।
तन्नो दन्तिः प्रचोदयात् ॥

(विघ्नेश्वरगायत्री)

தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி
தன்னோ தந்தி: ப்ரசோதயாத்

அந்தப் புருஷனை நாம் அறிந்துகொள்வோமாக
அதற்கு வக்ரதுண்டனை தியானிப்போமாக
தந்தத்தையுடையவர் நம்மை லக்ஷியத்தின்கண் தூண்டுவாராக.

(வக்ரதுண்டன் — வளைந்த தும்பிக்கையன்)

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு

— ஔவையார்

158845

# அருள் விருந்து

N55.8-1-3

கொடைகளுள் பெரியது அன்பு என்னும் கொடை.

புறவுலகினின்று எதையும் வேண்டாதவனுக்குச் சாந்தியுண்டாகிறது.

கடவுளிடம் தன்னை அர்ப்பணம் செய்பவன் கடவுளோடு கலந்துவிடுகிறான்.

அண்டமனைத்துக்கும் விளக்காயிருப்பது எதுவோ அது என் உள்ளத்திலும் ஒளிர்ந்து கொண்டிருப்பதாகுக.

முடிவான நிலையை தக்ஷிணாமூர்த்தியே வாய்விட்டுப் பேசமுடியவில்லை. பின்பு அதை விளக்க முயலுபவர் யார்?

கட்டுப்பாட்டுடன் கூடியிருப்பது மெய்யறிவு. மயக்கத்தால் வரும் பற்றுதலோ நெறி வழுவுதற்கு இடம் தருகிறது.

காட்டு மிருகங்களை மனிதன் கட்டியாளுகிறான். ஆனால் தனது மனதையடக்கியாள அவன் கற்றுக்கொள்ளவில்லை.

நலன் எது என்பதைத் தெரிந்து கொள்ளுகிற மனிதன் அதைச் செய்யாவிட்டால் அவன் கேடு செய்பவன் ஆகிறான்.

ஊற்றினின்று உப்பு நீரும் நன்னீரும் மாறி மாறி வருவதில்லை. மனிதனுடைய நாவினின்று மட்டும் இன்சொல்லும் இன்னாத சொல்லும் மாறி மாறி வருவானேன்?

தன்னைத் தனி வியக்தியாகக் கருதுபவனுக்குத் துன்பமும் தௌர்ப்பாக்கியமும் உண்டு. தன்னையே பொதுவுடைமையாக்கி விடுபவனுக்குத் துன்பமும் தௌர்ப்பாக்கியமும் எங்கே?

மனிதனைக் கடவுள் சரியாக மதிப்புப் போடுகிறார். அவர் மதிப்பினைவிட அவன் எள்ளளவும் உயர்ந்தவன் அல்லன். அப்படியிருக்கத் தன்னைப் பற்றி மனிதன் வீண் கர்வம் கொள்வானேன்?

---

### பரமஹம்ஸர் புகட்டிய

# பெருநெறி விளக்கம்

பரமஹம்ஸதேவரோடு பக்தர்கள் சிலர் அவருடைய அறையில் அமர்ந்திருந்தனர். அவர்களுள் கேதார் ஒருவர். ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து கருத்து ஒன்றை எடுத்து அவர் பரமஹம்ஸரிடம் தெரிவித்தார். "வியாசபகவான் தாம் இழைத்த மூன்று குற்றங்களை முன்னிட்டு இறைவனிடமிருந்து அவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். மெய்ப்பொருளே! 'தாம் ரூபங்களை எல்லாம் கடந்தவர். ஆனால் தியானாவஸ்தையில் தம்மை ரூபத்தோடு கூடியிருப்பவராக நான் பாவிக்கலானேன். உருவமற்றவராகத் தம்மைக் கருத என் மனதுக்கு இயலவில்லை.' இது நான் செய்த முதல் குற்றம். 'தாம் சொற்பதங்களையெல்லாம் கடந்தவர். ஆயினும் தம்மை நான் சொற்களைக் கொண்டு போற்றி வணங்கினேன். வேண்டியவாறு அடைமொழிகளைச் சொரிந்து உம்மை வழுத்தினேன்.' இது நான் செய்த இரண்டாவது குற்றம். 'தாம் நீக்கமற எங்கும் நிறை பொருள். அதைப் பொருள்படுத்தாது தம்மைச் சேவித்தற்பொருட்டு நான் ஸ்தல யாத்திரை செய்தேன். தாம் ஸ்தலங்களில் சிறப்புற்று விளங்குகின்றீர் என்று அவைகளைச் சிலாகித்துப் பேசினேன்.' அது என்னுடைய மூன்றாவது குற்றமாகும். நான் செய்துள்ள இந்த மூன்று அபராதங்களையும் இறைவா, தாம் க்ஷமித்தருள்வீராக."

இக்கூற்றுக்குப் பரமஹம்ஸர் செவி சாய்த்தார். அவர் சற்று மௌனமுற்று இருந்தார். பின்பு அவர் பகரலானார்: "ஆம், இறைவனுக்கு வடிவம் கிடையாது. பின்பு வடிவம் எடுத்தவராகவும் அவர் இருக்கிறார். உருவம், அருவம் ஆகிய இரண்டுக்கும் அப்பாற்பட்டவராகவும் அவர் இருக்கிறார். அவர் இத்தகையவரென்று அவருக்கு எல்லை போட யாருக்குத்தான் இயலும்!"

அறையிலே குழுமியிருந்தவர்களுக்கிடையில் ராக்காலுடைய தந்தையும் ஒருவர் ஆவார். அப்பொழுது ராக்கால் என்னும் இளைஞன் பரமஹம்ஸரோடு தக்ஷிணேசுவரத்தில் வசித்து வந்தான். அந்த இளைஞனுடைய தாயார் கொஞ்ச காலத்துக்கு முன்பு காலமாய் விட்டார். ஆதலால் தந்தையார் இரண்டாந்தடவை மணம் புரிந்திருந்தார். தமது மைந்தன் ராக்கால் தக்ஷிணேசுவரத்திலேயே வசித்திருந்ததனால்தான் தந்தையார் அவரைப் பார்க்க இடையிடையே ஆங்கு வந்துகொண்டிருந்தார். மைந்தன் பரமஹம்ஸரோடு வசித்து வந்ததைக் குறித்து அவர் ஆக்ஷேபம் ஒன்றும் செய்யவில்லை. அவர் செல்வம் மிகப் படைத்தவர். ஆதலால் நியாயமன்றத்தில் அவருக்கு வழக்குகள் பல இருந்தன. பரமஹம்ஸதேவரைப் பார்க்கவந்த பக்தர்களுள் நியாயாதிபதிகளும் வழக்கறிஞர்களாகிய வக்கீல்மார்களும் பலர் இருந்தனர். அத்தகைய பெருமக்களைப் பரமஹம்ஸரின் முன்னிலையில் சந்திப்பதில் தமக்குப் பயன் மிக உண்டு என்று அவர் கருதினார். அந்த சூழ்நிலையில் இருந்து வக்கீல்மார்களோடும் மேஜிஸ்ட்ரேட் மார்களோடும் உரையாடிக் கொண்டிருந்தால் தமது கோர்ட்வியாஜ்யங்களுக்கு அத்தகைய உறவு நல்ல பலனை அளிக்குமென்பது அவருடைய கருத்து.

அத்தகைய எண்ணத்துடன் ஆங்கு வந்து அமர்ந்திருந்த ராக்காலின் தந்தையாரைப் பரமஹம்ஸர் இடையிடையே கடைக்கண் பார்வையிட்டார். ராக்கால் தக்ஷிணேசுவரத்தில் தம்முடனே நிலைத்து வசித்திருக்கவேண்டுமென்பது பரமஹம்ஸருடைய விருப்பம்.

ஆங்குக் குழுமியிருந்தவர்களைப் பார்த்து பரமஹம்ஸர் பகரலானார்: "ராக்கால், எத்தகைய நல்லியல்பு வாய்க்கப்பெற்றவனாக அமைந்திருக்கிறான். அவனுடைய முகத்தைச் சற்றுக் கவனியுங்கள். அவனுடைய உதடு இடையிடையே அசைந்துகொண்டிருக்கும். தனக்குள்ளேயே அவன் இறைவனுடைய திருநாமத்தை ஓதிக்கொண்டிருக்கிறான். ஆதலால் அவனுடைய உதடுகள் அசைகின்றன.

"ராக்கால் போன்ற இளைஞர்கள் நித்திய சித்தர் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகிறார்கள். தெய்வீக உணர்விலே ஊறியவர்களாக அவர்கள் மண்ணுலகில் பிறந்திருக்கிறார்கள். கொஞ்சம் வயதுவந்ததும் உலகத்தவர்களோடு மிகைபட்ட இணக்கம் வைப்பதிலுள்ள ஆபத்தை அவர்கள் நன்கு அறிந்துகொள்கின்றனர். வேதங்களிலே ஹோமா பக்ஷியைப்பற்றிய கோட்பாடு ஒன்று இருக்கிறது. அப்பறவை வானத்தில் மிக உயரத்தில் வாழ்ந்திருக்கிறது. அது கீழே நிலத்துக்கு இறங்கி வருவதில்லை. மிக உயரத்தில் வானத்திலேயே அது முட்டையிடுகிறது. அம்முட்டை கீழே விழ ஆரம்பிக்கிறது. மிக உயரத்தினின்று விழுகிற அம்முட்டை பூமியைத் தொடுதற்கு முன்பே குஞ்சு பொரித்துவிடுகிறது. அக்குஞ்சும் சிறிது நேரம் தரையை நோக்கி விழுந்துகொண்டிருக்கிறது. பூமிக்கும் அதற்கும் இந்நிலையிலும் நெடுந்தூரம் இருக்கிறது. பூமியில் வந்து விழுதற்கு முன்பே அதற்குச் சிறகுகள் முளைத்துக்கொள்கின்றன. கண்களும் திறந்துகொள்கின்றன. தனக்கு நிகழுதற்கு இருக்கிற ஆபத்தை அப்பறவை அறிந்துகொள்கிறது. இன்னும் சிறிது நேரத்துக்குள் தான் தரையில் மோதி மாய்ந்துபோய் விடும்படி நேரிடும் என்று அது உணருகிறது. பூமி அதன் கண்ணுக்குத் தெரிய ஆரம்பிக்கின்றபொழுது அது உயரத்திலிருக்கும் தாயை நோக்கி மேலே பறக்க ஆரம்பிக்கிறது. தாயின் இருப்பிடத்தைத் திரும்பவும் போய்ச்சேருவதே அச்சிறிய பறவைகொண்டுள்ள குறிக்கோள் ஆகும்.

"ராக்கால் போன்ற இளைஞர்களை அப்பறவையோடு ஒப்பிடலாம். சின்னஞ்சிறு வயதிலிருந்தே உலக பந்தபாசத்தைக் குறித்து அவர்கள் அச்சம்கொள்கின்றனர். இறைவனை அடைதல் எங்ஙனம் என்கிற ஒரே எண்ணம் சர்வகாலமும் அவர்களுடைய உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது.

"இத்தகைய இளைஞர்கள் உலகப்பற்றுடைய பெற்றோர்களுக்குப் பிள்ளைகளாக வாய்க்கின்றனர். உலகப்பற்றிலே ஆழ்ந்து அழுந்திக்கிடக்கும் மக்களுக்கிடையில் தான் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். அப்படியிருந்தும் அவர்களுக்குத் தெய்வப்பற்று எப்படி உண்டாகக்கூடும்? இக்கேள்விக்கு விடைகண்டு பிடிக்கமுடியும். மண்ணிலே மலக்குவியல் ஒன்று இருக்கிறது. அதன்மீது பட்டாணிக் கடலை ஒன்று விழுகிறது. அந்த இடத்திலேயே அது செடியாக முளைக்கிறது. அழுக்கினுள் அது முளைத்து வளர்கிறது எனினும்தானே அழுக்குப்படிந்து போய்விடுவதில்லை. பட்டாணிக்கொடியாகவே அது வடிவெடுக்கிறது. மலத்தினுள் வளர்ந்ததனால் பட்டாணிக்கொடிக்கு அந்நியமாக வேறு இனத்தைச் சேர்ந்த கொடியாக அது மாறிவிடுவதில்லை.

"ஆ! ராக்கால் இப்பொழுது என்ன இன்னியல்பு படைக்கப் பெற்றவனாக இருக்கிறான்! ஏன் அவன் அப்படி இருக்கலாகாது? நல்ல சேனைக்கிழங்கினின்று முளைத்துவருகிற சிறுசெடியும் நல்லதாகத் தானே இருக்கும்! தந்தைக்கு ஏற்றவனாகத் தானே மைந்தன் இருப்பான்!"

அன்று பிற்பகலிலே அன்பர்கள் எல்லோரும் பஞ்சவடியில் கூடினார்கள். ஆங்கு அவர்கள் பஜனை செய்யவும் ஆரம்பித்தார்கள். அத்திருக் கூட்டத்தில் பரமஹம்



ஸரும் போய்க் கலந்துகொண்டார். அம்பிகையைப் புகழ்ந்து அவர்கள் பாடஆரம்பித்தனர். 'காற்றாடி வானத்தில் உயரப் பறப்பதுபோன்று என் மனதும் அம்பிகையின் திருவடியை நாடி மேல் நிலைக்குப்போக ஆரம்பித்தது. அவ்வேளையிலே பாபம் என்னும் புயல் காற்று வேகமாக அடித்து அக்காற்றாடியைத் தரையின் கண் உந்தித் தள்ளியது. மாயை என்னும் மாருதம் அக்காற்றாடியை ஒரு பக்கத்தில் மோதித்தரையில் தள்ளிவிட்டது. அதைத் திரும்பவும் உயரப் பறக்கவிட எனக்கு இயலாது போய்விட்டது. சிறுவர்கள் காற்றாடிகளை ஒன்றோடு ஒன்று சண்டை போட்டும், பின்னல் போட்டும் கயிற்றை அறுத்துத் தள்ளி விடுகிறார்கள். அதே விதத்தில் அம்பிகையின் திருவடியை நாடி உயரப்பறந்த என் மனது என்னும் காற்றாடியின் கயிற்றை, மனைவி மக்கள்மீது வைத்த பற்றுதல் என்னும் போராட்டம் அறுத்துத் தள்ளிவிட்டது. மனது என்னும் இந்தக் காற்றாடி விவேகம் என்னும் தனது சூடாமணியை இழந்து விட்டது. அறுபட்ட கயிற்றை நானும் விட்டுவிட; அது தலைகீழாகப் பூமியில் பாய்ந்தது. அது கிழிந்து பின்னப்பட்டுப் போயிருக்கிறபொழுது திரும்பவும் பறப்பது அதற்கு எப்படிச் சாத்தியமாகும்! பக்தி என்னும் கயிற்றிலே கட்டி பறக்கவிட்ட காற்றாடி அது. ஆனால் இவ்வையக வாழ்வு என்னும் விளையாட்டில் அகப்பட்டுக்கொண்டதால் அக்கயிறு அறுந்துபோய்விட்டது. இனிக் காற்றாடி பறப்பது எங்ஙனம்! காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாச்சர்யம் என்னும் ஆறு பகைவர்கள் கூடி அக்கயிற்றைப் பாழ்படுத்திவிட்டார்கள். எல்லாம் அழிந்துபட்டுப் போனதை முன்னிட்டு மனதிலேயே ஒரு சலிப்புத் தட்டிவிட்டது. இத்தகைய விளையாட்டை எதற்காகத் துவக்கினோம் என்கின்ற எண்ணமும் வந்துவிட்டது. இன்ப துன்பங்களுக்கு இடையிலே ஊசலாடும் விளையாட்டு இது. இதை விளையாடாமலேயே விட்டிருக்கலாம்.' இக்கருத்துக்களடங்கிய பாடல்களைப் பக்தர்கள் பாடினார்கள். அப்பாடலுக்கு ஒப்பப் பரமஹம்ஸதேவர் ஆனந்தத் தாண்டவம் புரிந்தார்.

அவர்கள் திரும்பவும் பாடினார்கள். 'என் மனது என்னும் வண்டு அம்பிகையின் திருவடி என்னும் நீலோத்பலத்தினிடத்து ஆனந்தத்தின் மேலீட்டால் கவர்ந்திழுக்கப்பட்டது. உலக ஆசை என்னும் ஏனைய மலர்கள் இந்த வண்டுக்குச் சுவை ஒன்றும் அளிப்பதில்லை. மனது என்னும் வண்டும் நிறத்தில் கறுத்தது. அன்னையின் திருவடியும் நிறத்தில் கறுத்தது. சியாமள நிறமாயுள்ள ஒன்று சியாமள நிறமாயுள்ள மற்றொன்றோடு கலந்து விட்டது. இரண்டுக்கும் இடையில் வேற்றுமையில்லாது போய்விட்டது. அன்னையைப் பற்றியுள்ள அதிசயங்களுள் இச்சிறு பகுதியை மட்டும் எனது ஊனக்கண்கள் கண்டு களிக்கின்றன. அதற்கு மேல் எதையும் காண இயலாதவைகளாக அவைகள் தோல்வியடைந்து திரும்பி விடுகின்றன. ஆயினும் பக்தன் ஒருவன் எதிர்பார்த்திருப்பதெல்லாம் இறுதியிலே நிறைவேறப் பெறுகின்றன. பேரானந்தப் பெருங்கடலிலே அவன் நீந்தித் துள்ளி விளையாடுகிறான். வையக வாழ்வு என்னும் இன்பதுன்பங்கள் அவனைப் போய்த் தாக்குவதில்லை.' இத்தகைய கருத்துக்களடங்கிய பாடல்களை அன்பர்கள் பாடிக்கொண்டு இருந்தார்கள். ஆங்குக் குழுமியிருந்த மற்ற அன்பர்களும் பரமானந்தத்தில் மூழ்கியிருந்தனர்.

**ஜனவரி மாதம் 31ம் தேதி ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் ஜன்ம தினம்.**

# பராபக்தி - தியாகம்

(சுவாமி விவேகானந்தர் கருத்தைத் தழுவியது)

பக்தியின் ஆரம்ப நிலையைப்பற்றி நாம் இதுகாறும் ஆராய்ந்து வந்தோம். என்னென்ன சாதனங்களைச் செய்துவந்தால் அவைகள் சாதகனைப் பக்திக்குத் தகுதியுடையவனாக்கும் என்பதை இதுவரையிலும் விளக்கியுள்ளோம். பராபக்தி அல்லது பேரன்பைப்பற்றி இனி ஆராய்வோம். எடுத்த எடுப்பில்சாதகன் ஒருவனுக்கு பராபக்தி வாய்ப்பதில்லை. அதன் பொருட்டு அவன் தன்னைப் பக்குவப்படுத்துவது முற்றிலும் அவசியமாகிறது.எதை அளவையாகவைத்துக்கொண்டு மனிதன் பராபக்திக்குத் தகுதியுடையவனாகிறான் என்னும் கேள்வி எழலாம். மனது எவ்வளவுக்கெவ்வளவு புனிதமடைந்து வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவன் பராபக்தியின் எல்லையை அணுகுபவன் ஆகிறான். மனதைத் தூய்மைப்படுத்துவதற்கு உதவிய சாதனங்களைத் திரும்பவும் சுருக்கமாக எடுத்து இயம்புவோம். இறைவனுக்கு அமைந்துள்ள திருநாமங்களை இடையறாது ஜபித்து வருவது ஒரு சாதனம். கிரியா விசேஷங்களுடன் பூஜைகள் செய்வது மற்றொரு சாதனம். முறையாக நீராடுவது, நெற்றியில் சின்னங்கள் அணிவது, மேனியில் ருத்ராக்ஷம், துளசி, ஸ்படிகம் ஆகிய மாலைகளை அணிவது ஒரு சாதனம். ஆகம விதிப்படி மூர்த்திகளையமைத்து ஆலயத்தில் பிரதிஷ்டை பண்ணி அவைகளை ஒழுங்காக ஆராதிப்பது ஒரு சாதனம். புண்ணிய தீர்த்தங்களுக்கும், ஸ்தலங்களுக்கும் பக்தி விசுவாசத்தோடு யாத்திரை போவது ஒரு சாதனம். விழாக்கள் கொண்டாடுவது ஒரு சாதனம். நல்லார் இணக்கம் கொள்ளுவது ஒரு சாதனம். சிரத்தையோடு சாஸ்திர ஆராய்ச்சி செய்வது ஒரு சாதனம். பக்தி மார்க்கத்தில் மேன்மை அடைந்துள்ள மேலோர்களின் வரலாறுகளை உள்ளன்போடுஆராய்வது ஒரு சாதனம். பகவானுடைய மகிமைகளை ஒருவரோடு ஒருவர் பேசி ரசித்துக்கொண்டிருப்பது ஒரு சாதனம் — இவையாவும் சித்த சுத்தி அல்லது மனபரிபாகம் அடைதற்கென்றே அமைந்துள்ளவைகளாம். இத்தனை விதமான சாதனங்களுக்கெல்லாம் மேலாக மற்றொரு சாதனமிருக்கிறது. மிக முக்கியமான இந்தச் சாதனத்தை அனுஷ்டிக்காவிட்டால் பராபக்தியைப் பெறுவது யாருக்குமே இயலாது. தியாகம் ஒன்றே ஏனைய சாதனங்கள் எல்லாவற்றிற்கும் மேலானது. தியாகம் என்னும் சொல்லைக் கேட்கின்ற பொழுதே பலர் திகிலடையலாம். அவர்கள் அஞ்சுவதை முன்னிட்டு உண்மையை இயம்பாது விட்டுவிடலாகாது. பாரமார்த்திகப் பெருவாழ்வில் முன்னேற்றமடைதல் என்பது தியாகத்தாலன்றிச் சாத்தியப்படாது. வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவதற்குத் தியாகம் முற்றிலும் இன்றியமையாதது என்பதை இயற்கையே பல்வேறு விதங்களில் விளக்கிக் கொண்டிருக்கிறது. காய் ஒன்று மரத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிறது. மரத்தைப் பற்றிப்பிடித்துக்கொண்டிருந்தாலொழிய அம் மரத்தினின்று அது சத்தை வாங்க முடியாது. சத்தை வாங்கி அது முதிர்கிறது. முதிர்ந்த பின் அது கனி ஆகிறது. கனிந்த பின் தனக்கு உணவு ஊட்டிய மரத்தை அக்கனி தியாகம் பண்ணியாக வேண்டும். தியாகம் பண்ணாவிட்டால் அது உலகுக்கும் உதவாது; புதிய மரங்கள் உண்டாவதற்கு வித்து ஆக வெளியேகாமலும் நின்றுவிடும். தன்னைத் தாங்கி இருந்த மரத்தைத் தியாகம் பண்ணுவதன் வாயிலாகவே கனிக்குப் புதிய பெருவாழ்வு வாய்க்கிறது. தாய் கருத்தரிக்கிறாள், கர்ப்பத்தில் அது சிசுவாக உருவெடுக்கிறது. பிறகு தாயின் வயிற்றை அது தியாகம் பண்ணவேண்டும். அப்படித் தியாகம் பண்ணாவிட்டால் தாய், சேய் ஆகிய இருவருக்கும் ஆபத்து உண்டாகும். புது வாழ்வுக்கு பழையவாழ்வையும் சூழ்நிலையையும் தியாகம் செய்தாக வேண்டும்.



ஆத்ம சாதனங்களை நான்கு யோகங்களாக ஆன்றோர்கள் பிரித்து வைத்திருக்கிறார்கள். இந்த நான்கு விதமான யோகங்களிலும் தியாகம் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. வீட்டுக்குள் நுழைவதற்கு வாயிலில் படி இருப்பது போன்று பாரமார்த்திகப் பெருவாழ்வினுள் பிரவேசிப்பதற்கு தியாகம் இன்றியமையாத ஒரு படியாக இருக்கிறது. சாதனங்களனைத்துக்கும் நடுநாயகமாக இருப்பது தியாகம். உடல் வாழ்க்கைக்கு ஹிருதயம் முற்றிலும் அவசியமானதாக இருக்கிறது. ஆத்ம சாதனம் என்னும் பண்பாட்டுக்கு அங்ஙனம் தியாகமே ஹிருதயம் போன்றுஇருக்கிறது. அற்நெறியைப்பற்றி நாம் வேண்டியவாறு பேசுகிறோம். ஆத்ம சாதனத்தின் அவசியத்தைப் பற்றியும் ஆழ்ந்து ஆராய்ச்சி பண்ணுகிறோம். இவையாவும் தியாகத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. உலகப் பொருள்களோடு இணக்கம் வைத்து மனிதன் வாழ்ந்து வருகிறான். இவ்வுலகிலும் மேலானநிலை ஒன்றுக்கு மனிதன் போக முடியும். அந்த மேலான நிலைக்குப்போவதற்கு இவ்வுலகப்பொருள்களினின்று தனது மனதை மனிதன் பிரித்து எடுத்துக் கொள்ள வேண்டும். மனிதனுடைய உடலும் இவ்வுலகிலுள்ள ஏனையவைகளும் ஜடப்பொருள்கள் ஆகின்றன. இந்த ஜடப்பொருள்களோடு கலந்து தானும் ஒரு ஜடப்பொருள் ஆய்விடுவது மனிதனுடைய நிஜசொரூபமல்ல. மண்ணையும் மண்ணினின்று ஆகியுள்ள பொருள்களையும் நம்பி வாழ்வது மாயம். மண்ணை மனிதன் மிகைபட நம்பி அதில் கட்டுண்டு கிடந்தால் தானும் மண்ணாவது திண்ணம். மனிதன் உண்மையில் ஆத்ம சொரூபம். அறியாமையினால் தன்னை ஜகத்திலுள்ள ஜடப்பொருள்களோடு சம்பந்தப்படுத்திக் கொண்டிருக்கிறான். ஜட நிலையினின்று தன்னைப் பிரித்து எடுத்துக் கொள்ளுதல் தியாகம். அப்படிப் பிரித்து எடுத்துப் பழகுகின்ற பொழுதே அவன் சேதனப்பொருள், அல்லது ஆத்ம சொரூபம், அல்லது அறிவு சொரூபம் ஆகிறான். அந்த மேல் நிலையை அடைதல் பொருட்டு ஜடப் பொருள்களில் கட்டுண்டு கிடக்கின்ற கீழ் நிலையைத் துறப்பது அவசியம்.

கர்மயோகி ஒருவன் தன் இயல்புக்கும், சாதனத்துக்கும் ஒத்துள்ள முறையில் தியாகம் பண்ணுகிறான். தான் ஆற்றுகின்ற கர்மங்களின் பலன் அல்லது வினைப்பயன் தனக்குரியதல்ல என்று அவன் துறந்து விடுகின்றான். பேரூக்கத்துடன் அவன் பெருவினைகள் பல ஆற்றுகிறான். அவை யாவையும் இறைவனுக்குரிய தொண்டு என்று அவ் வினைப்பயன்களை அவன் துறந்துவிடுகின்றான். தான் செய்யும் செயல்கள் அனைத்தையும் ஈசனுக்குரிய ஆராதனையாக அவன் எண்ணுகிறான். எனவே தனது கருமத்தில் அவனுக்குப் பற்றுதல் இல்லை. இம்மையிலோ அல்லது மறுமையிலோ தனது வினைப்பயன் தனக்கு இன்பத்தை அளிக்கவேண்டுமென்று அவன் கனவிலும் கருதுவதில்லை. வினையில் பற்றற்று இருப்பதே அவன் புரியும் தியாகம் ஆகிறது. இனி, ராஜயோகி ஒருவனும் இன்னொரு விதத்தில் தியாகம் பண்ணுகிறான். ஜீவாத்மாவைப் பண்படுத்தி அதற்கு மெய்யறிவு புகட்டுவதற்காக இயற்கை முழுதும் அமைந்திருக்கிறதென்று அவன் உணர்கிறான். ஆத்மா வேறு, இயற்கை வேறு என்னும் மெய்யறிவை இயற்கையின் துணையைக் கொண்டேஅவன்பெற்றுவிடுகிறான். இயற்கையை விட்டுப் பிரிக்கமுடியாத விதத்தில்

ஆத்மா அதனோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. எனினும் உண்மையில் ஆத்மா இயற்கைசொரூபமல்ல என்பதை அறிந்தாக வேண்டும். பல கல்பகாலம் ஆத்மா தன்னை இயற்கையோடு சம்பந்தப்பட்டதென்று எண்ணிக்கொண்டிருந்த காலையிலும் உண்மையில் அது இயற்கையோடு சம்பந்தப்பட்டதன்று. ஏதோ சிறிது காலத்துக்குத் தன்னுடைய அறியாமையினால் இயற்கையின் சொரூபத்தையும் தன்னுடைய நிஜ சொரூபத்தையும் ஒன்றோடு ஒன்று குழப்பிக்கொண்டு நிலைதடுமாறி இருந்தது. புளியங்காய் பிஞ்சாய் இருக்கும்பொழுது மேல் ஓடும் உள்ளிருக்கும் விதையும் ஒன்றேபோல் தோன்றுகின்றன. முதிர்ந்து பழுத்துப் பழமான பிறகு மேல் ஓடுவேறு, சதைப்பற்று வேறு, விதைவேறு இப்படியெல்லாம் பிரிந்து விடுகின்றன. அப்பொழுது மேலோட்டை உடைத்து அப்புறப்படுத்தவேண்டும். யோகாரூடனாக இருக்கும் ராஜயோகிக்கு உடல் மேல் ஓடு போன்றது. அதினின்று விலகிக்கொள்வது அவன் செய்யும் தியாகம். இனி, ஞான யோகி ஒருவன் செய்கின்ற தியாகமே எல்லாவற்றிலும் மிகக் கடினமானது. எடுத்த எடுப்பிலேயே நாமரூபத்தோடு புலனாகும் பருப் பொருள்கள் மயமாயிருக்கிற இப்பிரபஞ்சத்தை வெறும் பொய்த்தோற்றமென்று புறக்கணிக்க அவன் கடமைப்பட்டிருக்கிறான். காணுதல், உணருதல், சிந்தித்தல் போன்று தென்படும் பேராற்றல்கள் எல்லாம் ஆத்மாவுக்கு உரியவைகள். ஜடப் பொருளாகிய பிரகிருதிக்கு அத்தகைய ஆற்றல் இல்லை என்பதை அவன் ஓர்ந்து உறுதியாக அறிந்துகொள்ள வேண்டியவனாகிறான். ஞானசாதனத்தைத் துவக்குகின்ற பொழுதே அறிவு அனைத்தும் அனுபவம் யாவும் ஆத்மாவுக்குரியவை இயற்கைக்கு உரியவையன்று என்னும் தெளிவு அவனுக்கு உண்டாகவேண்டும். இத்தகைய திடச் சித்தத்தாலும், ஞான விசாரத்தாலும் இயற்கையினிடத்திருந்து அவன் தன்னைப் பிரித்து எடுத்துக்கொள்ளவேண்டும். பட்டுப் பூச்சியைப் பட்டுநூல் மேல்கூடாக அமைந்து பந்த பாசத்தில் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டை உடைத்துத் தள்ளிவிட்டுப் பட்டுப் பூச்சி வெளியே வந்தாக வேண்டும். கடப்பதற்கரிய மாயா சக்தி மனிதனைப் பந்த பாசத்தில் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. ஞானயோகி ஒருவன் தன்னுடைய ஞானவாளால் அந்தப் பந்தங்களையெல்லாம் வெட்டித் தகர்த்துவிட்டுத் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். இயற்கையையும் அதற்குரிய வல்லமையனைத்தையும் அவன் உதறித் தள்ளுகிறான். கானல் நீர் தென்பட்டுக்கொண்டிருக்கிற வேளையிலும் அது நீர் அல்ல என்று புறக்கணிக்க வேண்டும். கால, தேச, நிமித்த சொரூபமாகப் பிரபஞ்சம் முழுத் தோற்றத்திலிருக்கின்ற வேளையிலும் இதெல்லாம் மனத்தின் வெறும் கற்பனை யென்று அவன் ஒதுக்கிவிட வேண்டும். ஆதலால்தான் ஞானயோகத்தில் செல்லுகிறவனுக்கு அமைந்துள்ள தியாகம் மிகவும் கடினமானது.

இனி, பக்தியோகியும் தியாகம் பண்ணக் கடமைப் பட்டிருக்கிறான். ராஜயோகியும், ஞானயோகியும் செய்வது போன்று பக்தி யோகி இயற்கையை எதிர்த்துப் போராட வேண்டியதில்லை. இயற்கையை முற்றிலும் அனுசரித்தே யிருப்பதால் பக்தன் செய்கின்ற தியாகம் இயற்கையின் இயல்புக்கு முற்றிலும் ஒத்ததாகிறது. பக்தனுடைய தியாகத்தில் எந்த விதமான போராட்டத்துக்கும் இடமில்லை. வெறுத்து விட்டுவிடுதல் என்னும் கசப்பு நிறைந்த செயலில் அவன் ஈடுபடுவதில்லை. தன்னைப் பலவந்தமாகப்பிரித்து எடுத்துக் கொள்ளுதல் என்பதையும் அவன் செய்வதில்லை. மண்ணுலகில் வாழ்ந்திருப்பவன் அதைவிட்டு விலகி வேறு எங்கேயோ போகமுயலுவதில்லை.



பக்தனுடைய போக்கும் அத்தகையது. விலகிக்கொள்ளுதல் என்னும் செயலுக்கு அவனுடைய உள்ளத்தில் இடமில்லை. தியாகம்பண்ணுகிறேன்என்கின்ற எண்ணமில்லாது அவன் எளிதாகவும் அமைதியாகவும் தியாக நிலையைப் பெற்றுவிடுகிறான். ஆற்று நீர் அமைதியாகப் பெருகிக் கடலை அணுகிவிடுகிறது. அது இயற்கையிலே நிகழ்கிற நிகழ்ச்சி ஆகிறது. பக்தனுடைய தியாகமும் அவ்வளவு சுலபமாய் அமைந்துவிடுகிறது. பக்தனுடைய தியாகத்துக்கும் தகுந்த சான்றுகளைப் பிரகிருதியின்கண் நாள்தோறும் நாம் காணலாம். அத்தகைய சான்றுகளோ பக்தனுடையதியாகத்துக்கு முற்றிலும் ஒத்திருக்க மாட்டா. எனினும் அச்சான்றுகளின் மூலமாகவே பக்தனுடைய தியாகத்தை நாம் அறிந்து கொள்ளமுடியும். ஆடவன் ஒருவன் மகளிர் ஒருத்தியிடம் காதல்கொள்ளுகிறான். கொஞ்ச காலத்துக்குப் பிறகு அவன் தன்னுடைய காதலை மற்றொருத்தியிடம் திருப்புகிறான். அது ஆமோதிப்புக்குரிய செயலன்று. எனினும் உபமானத்துக்கு அது உதவுகிறது. அவன் முதலில் காதலித்த மங்கையை விட்டுவிடுதலில் சிரமம் ஒன்றுமில்லை. முதல் காதலியைப் பற்றிய ஞாபகம் அவனுடைய மனதை விட்டு அமைதியாக மறைந்துபோய் விடுகிறது. அதில் போராட்டம் ஒன்றுமில்லை. அவளை விட்டுப் பிரிந்ததை முன்னிட்டுத் தனக்கு ஏதோ குறைபாடு வந்து விட்டதாக அவன் நினைப்பதில்லை. அந்த ஆடவன் செய்வது போன்று மகளிர் ஒருத்தி ஒரு மனிதனைக் காதலிக்கிறாள். சிறிது காலத்துக்குப் பிறகு மற்றொரு மனிதனை அவள் காதலிக்கிறாள். முதல் மனிதன் அவளுடைய மனத்தை விட்டு மறைந்து போவது மிக எளிது. அதில் துன்பத்துக்குச் சிறிதேனும் இடமில்லை. ஒரு மனிதன் முதலில் தன் சொந்த ஊரினிடத்து அன்பு கொண்டிருக்கிறான். நாளடைவில் தன் நாடு முழுதையும் அவன் நேசிக்க ஆரம்பிக்கிறான். அப்படி அவனுடைய அன்பு பரந்தது ஆகும்பொழுது சொந்த ஊரில் வைத்திருந்த பற்றுதல் தானாக எளிதில் மறைந்துபோய் விடுகிறது. அதன் பிறகு அதே மனிதன் உலக முழுதினிடத்தும் அன்பு கொள்கிறான். அப்பொழுது தன் சொந்த தேசத்தில் வைத்திருந்த ஆழ்ந்த, வெறிபிடித்த தேசாபிமானம் அவன் மனதினின்று அகன்று போய் விடுகிறது. தேசாபிமானம் அப்படித் தேய்ந்துபோவதால் அவனுக்குத் தீங்கு ஒன்றும் உண்டாவதில்லை. பலாத்காரமாக அது அவனிடத்திருந்து பறித்து எடுக்கப்பட்டதோவெனின் அப்படியும் ஒன்று நிகழ்ந்துவிடவில்லை. குறுகியிருந்த அன்பு தன்னையறியாது விரிந்த அன்பாக வடிவெடுத்து விட்டது.

கல்வியும் கேள்வியும் இல்லாத பாமரன் ஒருவன் பஞ்சேந்திரியங்கள் மூலமாகப் பெறுகிற இன்பங்களை ஆழ்ந்து விரும்புகிறான். சிறிது சிறிதாகக் கல்வியினின்றும், கேள்வியினின்றும் அவனுக்குப் பண்பாடு வர ஆரம்பிக்கிறது. மனபரிபாகத்தில் மேல் நிலை அவனுக்கு வந்து அமையுங்கால் அறிவுத் துறையில் அவன் ஆனந்தம் பெறுகிறான். அதற்கேற்றபடி பஞ்சேந்திரியங்கள் மூலமாகப் பெற்ற இன்பங்கள் குறைந்து போய்விடுகின்றன. இனி நாய், ஓநாய் முதலிய விலங்குகளிருக்கின்றன. உணவு உண்பதிலே அவைகள் பெறுகிற இன்பத்துக்கு அளவில்லை. உணவை அவைகள் ரசித்து உண்பதுபோன்று எந்தப் போஜனப் பிரியனும் ரசிக்கமாட்டான். உவந்து தீனி தின்னும் விஷயத்தில் மனிதன் எப்பொழுதும் விலங்கினத்துக்கு நிகராகமாட்டான். ஆனால் அறிவுத் துறையிலே நல்ல இலக்கியம் ஒன்றை அனுபவிப்பதினின்றும், அதை அமைப்பதினின்றும் மனிதன் அடைகின்ற ஆனந்தத்தை நாய் ஒன்று ஒருநாளும் பெற்றுவிட முடியாது.

இப்பொழுது உண்மை ஒன்று புலனாகிறது. பண்பாட்டிலே கீழ்நிலையிலிருக்கின்ற உயிர்வகைகள் கீழ்த்தரமான இந்திரியங்களிடத்திருந்தே சுகத்தைப் பெற்று வருகின்றன. பண்பாட்டில் மேல்நிலைக்கு வந்துவிடுகின்ற உயிர்வகைகள் கீழ்நிலையிலுள்ள இன்பங்களை ஆழ்ந்து நுகர்வதில்லை. அவ்வின்பங்களிலுள்ள நாட்டமும் தானாகக் குறைந்துவிடுகிறது. மக்களுக்கிடையிலே விலங்குகளுக்கு ஒப்பானவர்கள் இருக்கிறார்கள். அன்னவர்களைத்தான் மாக்கள் என்று மொழிகிறோம். ஐம்பொறிகளினின்று வருகின்ற இன்பங்களை மாக்கள் ஆழ்ந்து அனுபவிக்கிறார்கள். அத்தகைய இன்பங்களைப் பண்பாட்டில் மேல் நிலைக்குப் போகின்றவர்கள் சிற்றின்பங்களென்று ஒதுக்கி விடுகின்றனர். அறிவுத் துறையினின்று உதிக்கும் இன்பம் அவைகளைவிட உயர்ந்தது. அது அலாதியாக மனிதனுக்கே உரியது. பண்பட்ட மனமுடையவன் அறிவினின்று ஆனந்தத்தை வேண்டியவாறு எய்துகிறான். அறிவுத் துறையிலும் பண்பாட்டுக்குப் பல படித்தரங்கள் உண்டு. அப்பண்பாட்டிலே மேல் நோக்கிப் போகப் போக மனிதன் பெறுகிற இன்பமும் உயர்நிலைக்குப் போய்விடுகிறது. அறிவுத் துறைக்கும் மேம்பட்டது அருள்துறை என்பது ஒன்று உண்டு. மனதிலே எழுகின்ற எண்ணத்துக்கும் அப்பாற்பட்டது அது. தெய்விகம் திகழ்ந்து கொண்டிருக்கும் பெருநிலை அதுவேயாம். தெவிட்டாத பேரானந்தம் பொலிந்து கொண்டிருக்கும் பெருநிலம் அதுவேயாம். அதனோடு சீர்தூக்குகின்றவிடத்து அறிவுத் துறையினின்று உதிக்கின்ற இன்பம் கீழ்த்தரமானது ஆய்விடுகிறது. அறிவுத் துறையிலே விளங்குகிற இன்பத்தோடு சீர்தூக்குகின்ற இடத்து ஐம்பொறிகளினின்று வருகின்ற இன்பங்கள் கீழ்த்தரமானவைகளாய் விடுகின்றன. இங்ஙனம் இன்பத்துக்குப் பல படித்தரங்கள் உண்டு. வானவெளியிலே நிறைநிலா ஒளிர்கிறது. அப்பொழுது நக்ஷத்திரங்கள் தாமாக மங்கிப் போய்விடுகின்றன. அதன் பிறகு சூரியோதயம் உண்டாகிறது. சூரியனுடைய சான்னித்தியத்தில் சந்திரனும் ஒளி மங்கியது ஆய்விடுகிறது. உயிர்வகைகளிடத்து உண்டாகின்ற ஆனந்தமும் அத்தகையதேயாம்.

பக்தியைப் பெறுதற்கு தியாகம் தேவையாயிருக்கிறது. ஆனால் அந்தத் தியாகம் எதிர்மறைச் செயலை அடிப்படையாகக் கொண்டதன்று. மனிதனிடத்துள்ள இயல்புகளை அந்தத் தியாகத்தின் பொருட்டு நாசமாக்க வேண்டியதில்லை. சுடர்நிறைந்த சூழ்ஒளி தோன்றுமிடத்து, சுடர் குறைந்த சிற்றொளி இருக்குமிடம் தெரியாது தானாக மறைந்து விடுகிறது. சூரியனுடைய முன்னிலையிலே நக்ஷத்திரங்கள் இருந்தும் அவைகளின் வெளிச்சம் கட்புலனாகாது மறைந்துபட்டுப் போகின்றது. ஆனால் அது அழிந்துபட்டுப் போவதில்லை. சூரிய வெளிச்சத்துக்கு ஒப்பானது கடவுளிடத்து வைக்கும் பேரன்பு. சந்திர வெளிச்சத்துக்கு ஒப்பானது அறிவுத் துறையிலே மனிதன் பெறுகிற ஆனந்தம். நக்ஷத்திரங்களின் வெளிச்சத்துக்கு ஒப்பானவை ஐம்பொறிகளினின்று வருகின்ற இன்பங்கள். பெரிய வெளிச்சம் தோற்றத்துக்கு வரும்பொழுது சிறிய வெளிச்சம் இடம் பெறாது போய்விடுகிறது. பக்தி அல்லது கடவுள் அன்பு உதிக்கின்றபொழுது ஏனைய அன்புகள் எல்லாம் தாமாக ஓய்ந்துபோய் விடுகின்றன. இனி, கடவுளிடத்து வைக்கின்ற அன்பே பேரன்பாக வடிவெடுக்க வல்லது. அப்பேரன்பையே பராபக்தி என்கிறோம். நாம் அறிந்துள்ள பெருமக்களுள் கண்ணப்ப நாயனாருக்குப் பராபக்தி உருவெடுக்கலாயிற்று. அதன் விளைவு தன்னைத்தானே விளக்கவும் தொடங்கிற்று. ஆசார அனுஷ்டான முறைகளோ ஆங்குப் பொருளற்றவைகளாகப் போய்விடுகின்றன. பூஜாவிதிகளும், கிரியைகளைப் பற்றிய கோட்பாடுகளும் புறக்கணிக்கப்படுகின்றன. சாஸ்திரங்களைப் பற்றிய பேச்சு எழ இடமில்லை. வெறும் விக்கிரகங்களாக இருப்பவைகளெல்லாம் பராபக்தி வாய்க்கப்பெற்ற பக்தன் ஒருவனுக்கு ஈசுவர சைதன்யமாக மாறிவிடுகின்றன. இது புனிதம் வாய்ந்த கோயில், அது புனிதமற்ற வெறும் இடம் என்னும் பேதங்களும் அடிபட்டுப் போய்விடுகின்றன. சமயங்கள் என்பவைகளும், சம்பிரதாயங்கள் என்பவைகளும் பொருளற்றவைகளாய்விடுகின்றன. பராபக்தியில் ஊறியிருக்கிற பெருமகனுக்குச் சொந்த நாடு என்பது ஒன்று இல்லை. எந்த இனம், எந்தக்குலம், என்ன கோத்திரம் என்னும் கற்பனைப் பிரிவினைகளும் அவனுடைய மனத்தினின்று மறைந்துபோய் விடுகின்றன. சாதாரண மனிதன் ஒருவனுடைய வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகளாகத் தென்படும் இந்தக் கட்டுமானங்களெல்லாம் பேரன்பில் ஊறியிருக்கிற பக்தன் ஒருவனைக் கட்டிப் பிடிக்கும் பந்த பாசங்களாகின்றன. அத்தகைய தளைகளெல்லாம் தாமாகவே தளர்ந்து வீழ்ந்துவிடுகின்றன. பராபக்தியின் விளைவு அவ்வளவு பெரியதாகிறது. பரம பக்தன் ஒருவனை, இதுகாறும் இயம்பப்பெற்றுள்ள அனுஷ்டான நியமனங்களில் ஒன்றாவது கட்டுப்படுத்துவதில்லை. அவன் பெற்றுள்ள முக்திக்கு ஊறு விளைவிக்க எதற்கும் இயலாது. அவனுடைய பெருவாழ்வைக் கடலிலே செல்லும் மரக்கலம் ஒன்றோடு ஒப்பிடலாம். பரந்த ஆழ்கடலிலே கப்பல் ஒன்று போய்க் கொண்டிருந்தது. அது திடீரென்று கடலினுள்ளே மறைந்திருந்த ஒரு காந்தமலைக்குப் பக்கத்தில் வந்தது. அக்கப்பலின் அமைப்புக்கு ஆதரவாயிருந்த இரும்பு ஆணிகளும், சட்டங்களும் காந்தமலையினால்கவரப்பட்டு ஆழ்கடலிலே மூழ்கிப் போய்விட்டன. வெறும் மரப்பலகைகள் மட்டும் கட்டு இழந்தவைகளாக கடலின் மேற்பரப்பில் இங்கும் அங்கும் மிதந்து கொண்டிருந்தன. சர்வேசுவரனுடைய சாந்நித்தியத்தை உணர்ந்ததும் ஜீவாத்மன் பேரன்பு நிறைந்தவனாய் அப்பரமனோடு சேர்ந்து விடுகிறான். சாஸ்திரங்களும், உலகத்தவருடைய பழக்க வழக்கங்களும் ஒன்று கூடி சாதாரண மக்கள் மீது சுமத்தியிருக்கும் ஆசாரவிதிகளும், கட்டுப்பாடுகளும், நியமனங்களும் ஆகிய ஆணிகள் எல்லாம் தாமாகத் தளர்வடைந்து உருமாறி ஒடுங்கிப்போய்விடுகின்றன. பிரேமை பக்தியில் ஊறியிருக்கும் ஜீவன் பரத்துக்கே சொந்தமாய் விடுகின்றான். இதுதான் பிரேமை பக்தியினின்று உண்டாகிற தியாகம். ஜீவன் தன்னுடைய சிறுமைகளையெல்லாம் தியாகம் பண்ணினான். அப்படித் தியாகம் பண்ணிய உணர்வே அவனுடைய உள்ளத்தில் உண்டாகவில்லை. ஏனென்றால் பரமாத்மன் என்னும் பெரிய பொருளைப் பற்றிய பேருணர்வும் பேரன்பும் அவனுடைய உள்ளத்தில் பெருமிதமாக ஊற்றெடுத்தது. சிறுமைகளெல்லாம் அகன்று போனதைப்பற்றிய உணர்வு அவனுக்குச் சிறிதேனும் உண்டாகவில்லை. மற்ற தியாகங்களிலிருக்கின்ற கொடுமை, பராபக்தி உண்டுபண்ணுகின்ற தியாகத்தில் இல்லை. இரக்கமோ, ஈரமோ இல்லாத நெஞ்சம் படைத்தவர்களாக ஏனைய மார்க்கங்களில் செல்லுகின்ற சாதகர்கள் தென்படலாம். பராபக்தி மார்க்கத்தில் செல்லுகின்றவன் பேரன்பிலே சிறிய அன்புகளையெல்லாம் அடக்கி விடுகின்றான். மற்ற மார்க்கங்களில் செல்லுகிறவர்களுக்குத் துறவு என்பது ஒரு போராட்டமாயிருக்கிறது. உலகில் இருக்கலாமா, அல்லது உலகத்தவர்களை விட்டுப் பிரிந்து கொள்ளலாமா என்னும் போராட்டங்கள் அவர்களுக்கு வருகின்றன. பக்தி மார்க்கத்தில் செல்லுகின்றவனுக்குப் போராட்டம் ஒன்றும் கிடை

து. உள்ளத்திலே திரும்பத் திரும்ப திக்கின்ற வாஞ்சைகள், அபிமானங்கள், வாசனைகள் ஆகியவைகளை அகற்றுதல், தலையெடுக்கவொட்டாது அமிழ்த்திவைத் தல் ஆகிய திண்டாட்டங்களெல்லாம் மற்ற தியாகங்களில் பிணைக்கப்பட்டிருக் கின்றன. பராபக்தியின் விளைவாக வரு கிற தியாகத்தில் அத்தகைய திண்டாட் டங்கள் நிகழ்வதில்லை. தன் உள்ளத்திலே உதிக்கின்ற உணர்வுகளுள் எதையும் புறக் கணிக்க வேண்டிய அவசியம் பக்தனுக்கு ஏற்படுவதில்லை. உள்ளத்தில் எத்தனை விதமான உணர்வுகள் எல்லாம் உதிக்கின் றனவோ, அத்தனை விதமான உணர்வு களையும் பக்தன் பயன்படுத்துகிறான். அந்த உணர்வுகளுக்கு ஆழ்ந்த வேகத்தையும் அவன் கொடுக்கிறான். வேகம் நிறைந்த, வலிவு நிறைந்த உணர்வுகளை யெல்லாம் அவன் கடவுளிடத்துத் திருப்புகிறான். கடவுளுக்காகவே அவையாவையும் அவன் பயன்படுத்துகிறான். இது பக்தனுடைய தியாகத்தில்அமைந்திருக்கும்இனிமையாம்.

## பொங்கல் அழைப்பு

தெள்ளு தமிழ் நாட்டீர்! தேடரிய பெருஞ்செல்வம்
அள்ளும் தைத்திருநாள் அடுத்ததிது காணீரோ!
கள்ளப் புலக்கறள்கள் கசடுபல நிறைந்திட்ட
உள்ளப் புலந்தன்னை உழுதிட்டான் குருதேவன்

ஞானக் கலப்பை கொடு உழுதிட்ட பெருநிலத்தே
ஊனக் கண்காண உருவெடுத்த உழத்தியெம(து)
ஈனக் கருவொழிக்கும் எம்மன்னை சாரதையும்
வானப் பெருங்கருணை விதையொன்று வழங்கிட்டாள்

யாகப் பெருமுனிவர்க்(கு) எட்டாத பேரின்பப்
போகப் பயிர்தோன்றிப் பொங்கும் கதிரமுதை
தியாகப் பெருவீரன் விவேக ஆனந்தன்
தாகம் தணிவிக்கத் தருகின்றான் வாரீரோ!

—வித்வான் ரா. வேங்கடசாமி

# பரமஹம்ஸரும் சமய ஸ்தாபனங்களும்

**விளக்கம்**

சமய ஸ்தாபனங்கள் என்றால் என்ன என்பதை நாம் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். அத்தகைய ஸ்தாபனங்களை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் எவ்வளவு தூரம் தழுவி நடந்து கொண்டார் என் பதை அடுத்தபடியாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். மனிதனுடைய வாழ்வுக்கும், முன்னேற்றத்துக்கும் அத்தகைய ஸ்தா பனங்கள் எவ்வளவுதூரம் உதவி புரி கின்றன என்பதும், பிறகு எந்த வரம்புக்கு மேலே போய்விட்டால் அதே ஸ்தாபனங் கள் பாரமார்த்திகப் பெரு வாழ்வுக்கு இடைஞ்சலாக அமைந்துவிடும் என்பதும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாழ்விலிருந்தே நமக்கு நன்கு விளங்கும். இக்கோட்பாட்டை அவர் ஓர் உபமானத்தின் மூலம் தெரிவிக் கிறார். அரிசி, நெல்லினின்று பிரித்து எடுக் கப்படுகிறது. சமைத்து உண்பதற்கு அரிசி உதவுகிறது; ஆனால் நெல் உதவாது. பின்பு சாகுபடி செய்து நெல்லை உற்பத்தி பண்ணுவதற்கு நெல்லையே விதையாக விதைக்க வேண்டும்; அரிசியை விதைத் தால் அது முளைத்துப் பயிராகாது. ஆக, அரிசி எந்தக் காரியத்துக்கு உதவுகிறது, நெல் எந்தக் காரியத்துக்கு உதவுகிறது என்பதை யெல்லாம் நாம் நன்கு அறி கிறோம். அதே விதத்தில் சமய அனுஷ்டா னங்கள், அவ்வனுஷ்டானங்களில் முன் னேற்றம், முன்னேற்றத்தினின்று வாய்க் கும் அருட்பேறு ஆகியவைகளை ஆத்ம சாதகன் தெளிவுபட அறிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறான். இவையாவை யும் உண்பதற்கென்று ஆயத்தப்படுத்தி யுள்ள அரிசியோடு ஒப்பிடலாம். அடுத்த படியாக இந்த ஆத்ம சாதனவகைகளை மக்களுக்கிடையிலே எடுத்து வழங்கவேண் டும். அது எளிதில் எல்லார்க்கும் பிடிபடு வதில்லை. பிடிபடாத அக்கோட்பாட்டை பொதுமக்களுக்கு விளக்குதற்கான முறை களைக் கையாளவேண்டும். அவர்களுடைய உள்ளத்திலே இம்மேலாம் கருத்துக்களை செலுத்தியும் ஆகவேண்டும். ஆத்ம சாத னத்துக்குத் தகுதியற்றவர்களைப் படிப் படியாகப் பக்குவப்படுத்தித் தகுதி வாய்ந் தவர்களாகத் திருத்தியமைத்தாக வேண் டும். இத்தகைய செயல்களில் எல்லாம் ஈடுபட்டிருக்கும் இயக்கங்களுக்கு சமய ஸ்தாபனங்கள் (Religious organizations.) என்னும் பெயர் தருகிறோம்.

இக்கோட்பாடு நமக்கு இன்னும் நன்றாக விளங்குதற் பொருட்டு புத்த மதத்தில் அமைந்துள்ள ஏற்பாடு ஒன்றை ஆராய்ச் சிக்கு எடுத்துக் கொள்ளலாம். புத்தமதம் வேறு; ஹிந்து மதம் வேறு என்று நாம் எண்ணலாகாது. ஹிந்து மதத்தில் தோன்றி வந்துள்ள பல பிரிவுகளுள் புத்த மதம் என்பதும் ஒரு பிரிவு. தாய்க்கு என்றைக்கும் சேய் அந்நியமானதாய் விடாது. அங்ஙனம் புத்தமதம் ஹிந்து மதத்துக்கு அந்நியமாக முடியாது. மூன்று வாழ்க்கைத் தத்துவங்கள் புத்த மதத்தில் அடங்கியிருக்கின்றன. 'புத்தம் சரணம் கச்சாமி; தர்மம் சரணம் கச்சாமி; சங்கம் சரணம் கச்சாமி' என்பன அம்மூன்றுமாம். புத்தரை தஞ்சம் புகுகிறேன்; அறநெறியி னிடம் தஞ்சம் புகுகிறேன்; அடியார் கூட் டத்தில் அடைக்கலம் புகுகிறேன் என அம்மூன்றும் பொருள்படுகின்றன. ஈண்டு புத்தன் என்று குறிப்பிடுவது ஒரு தனி மனிதனையன்று. முடிவான பாரமார்த்தி கப் பெருநிலைக்கு இப்பெயர் இடப்பெற் றிருக்கிறது. அப் பெருநிலையை அடைவ தற்கான மார்க்கங்களனைத்துக்கும் தர்மம் என்பது பொதுப் பெயர். அந்த மார்க்கங் களை யெல்லாம் பாதுகாத்து வைத்து உல

குக்கு எடுத்து ஊட்டுகிறவர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களாகிறார்கள். இனி, இம்மூன்று தத்துவங்களையும் முறையே குறி, நெறி, கருவி எனலாம். பாரமார்த்திகப் பெரும்பேறு அடைவது குறி. அதன் பொருட்டுக் கையாளப்படும் சாதனங்கள் நெறி. அச்சாதன வகைகளைக் காத்தும், வழங்கியும் வருவது திருக்கூட்டம் அல்லது சங்கம். இந்தச் சங்கத்தைத்தான் சமய ஸ்தாபனம் எனப் பொருள்படுத்த வேண்டும். பரமஹம்ஸர் புகட்டிய நெல்லோடு சமய ஸ்தாபனத்தை ஒப்பிடலாம். சமய ஸ்தாபனங்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக சமுதாயங்களிலிருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அருள் விருந்தை ஏராளமாக மக்களுக்கிடையிலே வழங்கலாம். சமய ஸ்தாபனங்கள் தாம் வகுத்து வைத்துள்ள திட்டங்களுக்கு ஒப்ப அரும்பணி ஆற்றி வருமளவு சமுதாயத்திலே சமயம் தழைத்து ஓங்கும். அப்படி அருட்பணி ஆற்றுகின்ற ஸ்தாபனங்கள் உலகிலுள்ள எல்லாச் சமுதாயங்களுக்கும் வேண்டப்படுவனவாயிருக்கின்றன. கடவுள் வழிபாட்டுக்காகவென்று ஆலயங்களை எல்லாச் சமயத்தவர்களும் அமைத்து வைத்திருக்கின்றனர். அவரவர் சமயத்துக்கு ஒப்ப வழிபாட்டு முறைகளையும் வகுத்து வைத்திருக்கின்றனர். இந்த வழிபாட்டு முறைகளைக் கொண்டு செலுத்துதற்கான நன்மக்களையும் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கின்றனர். ஆக ஆலயங்கள், வழிபாட்டு முறைகள், அம்முறைகளை மக்களுக்கு எடுத்துப் புகட்டுகிறவர்கள்—இவையாவுக்கும், பொதுவாக சமய ஸ்தாபனங்கள் என்னும் பெயரை ஈண்டு வழங்கியுள்ளோம்.

## தாரதம்மியம்

குறி, நெறி, கருவி ஆகிய இம்மூன்றுக்குமிடையிலுள்ள தாரதம்மியம் அல்லது ஏற்றத் தாழ்வை மக்களில் பலபேர் அறிந்துகொள்வதில்லை. அத்தகைய அறியாமையினின்று குழப்பங்கள் பல வந்துவிடுகின்றன. பாரமார்த்திகத் தத்துவங்களை ஆராய்ச்சி பண்ணுகிறவர்கள் மனக்குழப்பத்துக்கு ஆளாய்விடலாகாது.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

இப்பொய்யாமொழி சமய ஆராய்ச்சிக்கும், சமய அனுஷ்டானத்துக்கும் முற்றிலும் பொருத்தமானது. உலகிலே இன்று நான்கு பெரிய மதங்கள் இருந்து வருகின்றன. அவைகளை ஹிந்துமதம், புத்தமதம், கிறிஸ்துவமதம், இஸ்லாமிய மதம் எனலாம். இந்த நான்கிலும் குறி, நெறி, கருவி ஆகிய மூன்று கோட்பாடுகளும் இடம் பெற்று இருக்கின்றன. கருவி என்னும் கோட்பாடு இஸ்லாமிய மதத்தில் முன்னணியில் இல்லை. ஆதலால் ஆராய்ச்சிக்கு ஈண்டு நாம் ஹிந்துமதம், புத்தமதம் ரோமன் கத்தோலிக் மதம் ஆகிய மூன்றை மட்டும் எடுத்துக் கொள்வோம். இம்மூன்றையும் சீர்தூக்குவது எம்மதம் பெரியது, எம்மதம் சிறியது என்று முடிவு கட்டுதற் பொருட்டு அல்ல; ஆனால் இம் மூன்று கோட்பாடுகளையும், இம் மூன்று மதங்கள் எப்படிக் கையாண்டு வருகின்றன என்று விளக்கிக் காட்டுதல் பொருட்டேயாம்.

மதங்களின் அடிப்படைத் தத்துவங்களை உள்ளபடி விளக்கிக் காட்டுதற்கென்றே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் உடல் வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அவருடைய ஜீவிதத்தை அறிந்துகொள்ளுதலும் மதங்களின் சாரத்தை அறிந்து கொள்ளுதலும் ஒன்றேயாம். மனிதன் எதற்காகப் பிறந்திருக்கிறான் என்பதை அவர் தமது ஜீவிதத்தின் மூலமாக விளக்கினார். பிறகு அவர் பேசிய பேச்சுக்களும் தமது ஜீவிதத்துக்கு விளக்கமாக வந்து அமைந்தன. கடவுளை அடைதலே மானுட வாழ்க்கையின் குறிக்கோள். அதை மறந்துவிட்டு ஏனைய துறைகளில் முயற்சி



எடுத்துக் கொள்ளுதல் மனிதனுக்குப் பொருந்தாது என்னும் கோட்பாட்டை ஐயம் திரிபு அற அவர் விளக்கியிருக்கிறார். இதைத்தான் எல்லா மதங்களும் வெவ்வேறு விதங்களிலே விளக்கியிருக்கின்றன. எனவே கடவுளை அடைதல் என்னும் ஒப்பற்ற லக்ஷியத்துக்கு முதன்மை கொடுக்க வேண்டியது அவசியம். அதற்குற்ற உபாயங்களை ஸ்ரீ ராமகிருஷ்ணர் தீவிரமாகக் கையாண்டார். அவருக்கும், மற்ற சமயாசாரியர்களுக்கும் இடையில் பெரிய வேற்றுமை ஒன்று உண்டு. கடவுளை அடைதற்கான ஏதேனும் இரண்டொரு நெறிகளைமட்டும் ஏனைய பெருமக்கள் கடைப்பிடித்திருக்கின்றனர். ஈசுவர சாக்ஷாத்காரம் செய்தானபிறகு தாங்கள் ஒழுகிய நெறிகளையே மற்றவர்களுக்கும் எடுத்துப் புகட்டியிருக்கின்றனர். ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரோ முக்கியமான சாதன வகைகளையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அனுஷ்டித்துப் பார்த்தார். ஒரு சாதனத்தை எடுத்துக்கொண்டுஅதில் முற்றிலும் வெற்றி பெற்றுவிடுவார். அதன் பிறகு மற்றொரு சாதனத்தில் புகுவார். இப்படிச் சாதனவகைகள் அனைத்தையும் சாதித்தவர் அவர். அவைகளையெல்லாம் முறையாக அனுஷ்டித்தால் ஒரே குறியின்கண் சேரலாம் என்று இயம்பினார். ஆக, நெறிக்கு இரண்டாவது ஸ்தானம் அளிக்கப் பட்டிருக்கிறது. கருவி அல்லது சாதனத்துக்கேற்ற சூழ்நிலை மூன்றாவது இடம் பெறுகிறது. ஓரூரிலிருந்து மற்றோர் ஊருக்குப் போகிற மனிதன் வசதிப்படும் வண்டி வாகனங்களில் ஊர்ந்து செல்லலாம். ஒரேவிதமான வாகனத்தில் தான் எல்லோரும் போகவேண்டும் என்னும் நியமனம் இல்லை. இது விஷயத்தில் சமயாசாரியர்க்கிடையில் ஒற்றுமை இருக்கிறதென்று இயம்ப முடியாது. ஒற்றுமையைவிட வேற்றுமையே முன்னணியில் வந்து நிற்கிறது எனலாம். வெவ்வேறு சமயாசாரியர்களைப் பின்பற்றிய பொது மக்களுக்கிடையில் முக்கியத்துவத்தில் மூன்றாவது இடம்பெறுகிற கருவியே முதல் இடம் பெறுவதாயிற்று. அதற்கு அத்தகைய மதிப்புக் கொடுத்துவிடலாகாது என்பதைத் தமது வாழ்க்கையின் மூலம் விளக்கிக் காட்டியது பரமஹம்ஸரின் தனிச்செயலாம்.

## குறி

கடவுளை அடைதலைக் குறி என்று வைத்துக்கொண்டோம். சமயங்களும், அதைத்தான் சாட்டுகின்றன. ஆனால் கடவுளை அடைதல் என்பதின் பொருள் யாது? இதைக்குறித்து சமயாசாரியர்களுக்கிடையில் கருத்துவேற்றுமை மிக உண்டு. பார்க்காத ஊர் ஒன்றைப்போய்ப் பார்ப்பதற்குப் பத்துப்பேர் புறப்படுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். பயணமாகின்றபொழுது இனிப்பார்க்க இருக்கும் ஊரை ஒவ்வொருமனிதனும் ஒவ்வொரு விதத்தில் மனதில் கற்பனை பண்ணிக் கொள்கிறான். இரண்டு பேருடைய கற்பனைகள் முற்றிலும் ஒத்திருக்க முடியாது. தன்னுடைய கற்பனையே மற்றவர்களுடைய கற்பனையைவிட மெய்யானதென்று ஒருவன் வாதிப்பதில் பொருள் இல்லை. தன் கற்பனையைத் தன்னோடு வைத்துக் கொண்டு குறியை நோக்கி அவன் போக வேண்டும். அடையவேண்டிய ஊரைப் போய்ச்சேர்ந்தான பிறகு அதன் உண்மைக்காட்சி உள்ளபடி விளங்கிவிடும். பந்தய ஓட்டங்களுள் நாய்களுக்குரிய பந்தய ஓட்டம் ஒன்று உண்டு. பல தடவைகளில் அவைகள் சேரவேண்டியஇடத்தில் ஓடி நிற்பதற்குப் பதிலாக வழியில் மற்ற நாய்களோடு குலைத்துக் கடித்துச் சண்டைபோட ஆரம்பித்துவிடுகின்றன. சமயவாதிகளில் சிலர் அத்தகைய பரிதாபகரமான நிலையிலிருக்கிறார்கள். அவரவர் கொள்கைகளை அவரவரோடு வைத்துக் கொண்டு சாதனத்தில் ஆழ்ந்து மூழ்க

வேண்டும் என்று பரமஹம்ஸர் ஆத்ம சாதகர்களுக்கு வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். சமயங்களுக்கெல்லாம் தாய் மதமாயிருக்கும் வேதாந்த தர்சனம் இங்ஙனம் முரசறைகிறது. ஐயங்களனைத்தும் பரம்பொருளைச் சாக்ஷாத்கரித்தான பிறகு அகன்று போய்விடுகின்றன. வேற்றுமைகளனைத்தும் பரத்தினை எட்டியான பிறகு அறுபட்டுப் போய்விடுகின்றன. மலைக்கு உச்சி ஒன்று. உச்சியை எட்டிய பிறகு அதைப்பற்றிக் கருத்துவேற்றுமையில்லை. குறியைப்பற்றி இங்ஙனம் தெளிவுபடப் பரமஹம்ஸர் பகர்ந்திருக்கிறார். அவர் பகர்ந்திருப்பதே வேதாந்தத்தின் சிகரம்.

## நெறி

ஓர் ஊரை எட்டுதற்கு வழிகள் பல இருக்கின்றன. குறி ஆகிய மெய்ப்பொருளை அடைதற்கோ எண்ணிறந்த உபாயங்களிருக்கின்றன. எத்தனை ஜீவர்கள் இருக்கிறார்களோ, அத்தனை மார்க்கங்களும் இருக்கின்றன என்று அவைகளைப் பரமஹம்ஸர் பெருமைப்படுத்திக் கூறியிருக்கிறார். ஒவ்வொரு நோயாளிக்கும் ஏற்ற முறையிலேயே சிகிச்சை செய்யவேண்டும். ஒரே சிகிச்சை முறை இரண்டுபேருக்கு முற்றிலும் பொருந்துமென்று உறுதிகூற முடியாது. ஒரேவித உணவு இரண்டுபேர் நாவுக்கு இனியதாயிருக்குமென்றோ உடலுக்கு ஒத்ததாயிருக்குமென்றோ இயம்ப முடியாது. ஆத்ம சாதனங்கள் அவரவர் மனபரிபாகத்துக்கு ஏற்பப் பலதரப்பட்டவைகளாம். பொதுப்பட அவையாவும் கர்மயோகம், ராஜயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்று நான்கு தலைப்புகளுள் அடக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

சமய ஸ்தாபனங்கள் இத்தனைவிதமான சாதனவகைகளுக்குப் பூரண ஆதரவு தருகின்றன என்று பகரமுடியாது. ஒவ்வொரு சமய ஸ்தாபனமும் ஏதோ சில சாதன வகைகளைச் சிறந்தவைகளாகத் தெரிந்தெடுத்துக்கொள்கின்றன. அதற்கப்பால் ஆராய்ச்சி செய்வதுமில்லை; ஆராய்ச்சிசெய்கின்ற சாதகர்களுக்கு உற்சாகமூட்டுவதும் இல்லை. தங்கள் திட்டத்தில் இல்லாத சாதனவகைகளில் செல்லுபவர்கள் எல்லாம் நெறிதவறிப் போய்விட்டவர்களென்றே அவர்களை அந்த ஸ்தாபனங்கள் ஒதுக்கிவைக்கலாயின. சமய ஸ்தாபனங்கள் ஆத்ம சாதகர்களுக்கு எவ்வளவு தூரம் பயன்படுகின்றன; வெவ்வேறு மதங்களில் அவைகள் எத்தகைய இடம் பெற்றிருக்கின்றன; அவைகளால் வரும் நலன்கள் யாவை; கேடுகள் யாவை என்று பரமஹம்ஸதேவரது ஜீவிதத்தை முன்மாதிரியாக வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்து பார்ப்போம்.

## சமய ஸ்தாபனம் பெற்றுள்ள இடம்

இன்றைக்கு உலகில் உள்ள மதங்களுள் ரோமன் கத்தோலிக் மதமே சமய ஸ்தாபனத்துக்கு (Church) சிறப்புகளனைத்தையும் வழங்கியிருக்கிறது. அதை ஆண்டவனுடைய மேனி என்றே அம்மதம் பகர்கிறது. அந்த ஸ்தாபனத்தை வளர்த்தலே ஆண்டவனுக்குச் செய்யும் அரும்பணி ஆகிறது என்றும் அம்மதம் புகட்டுகிறது. அந்த ஸ்தாபனத்தில் உறுப்பினனாயிருக்கும் மனிதன் ஒருவன் அதற்கு யாண்டும் கைங்கரியம் செய்யவேண்டும். தனது சொந்த வாழ்க்கையில் மனிதன் சிறிது நெறிதவறிப் போய்விட்டாலும் அதில் இழுக்கு ஒன்றுமில்லை. தன்னை ஆதரித்து வருவதும் இகபரம் இரண்டிலும் தனக்கு உறுதுணையாயிருப்பதுமாகிய ஸ்தாபனத்துக்கு ஒரு மனிதன் எந்த விதத்திலும் ஊறு செய்துவிடலாகாது. அப்படி ஊறு செய்கின்றவன்மீது தீவிரமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். குறியை அடைவதற்கு கருவியாயிருக்கும் ஸ்தாபனத்தை வளர்ப்பது ஒன்றே அந்த மதத்தின் குறிக்கோள் ஆய்விட்டது. அதைப்பற்றி அறிஞர் ஒருவர் கருத்து ஒன்றை வெளியிட்டார். 'வேண்டுமானால் ஏசுநாதரைப் புறக்கணிக்க கிறிஸ்துவர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆனால், ஸ்தாபனத்தை (Church) மீறிச் செல்லவோ அதைப் புறக்கணிக்கவோ அவர்கள் ஆயத்தமாயில்லை.' இக்கூற்றில் அடங்கியிருப்பது முற்றிலும் உண்மையென்றே இயம்பலாம். வெவ்வேறு தேசங்களிலிருக்கிற அரசாங்கங்கள் தற்பாதுகாப்புக்கும், வளர்ச்சிக்கும் வேண்டிய யத்தனங்களையெல்லாம் எடுத்துக் கொள்ளுவது போன்று இந்த ஸ்தாபனமும் முயன்று வருகிறது. உலக வியவகாரம் ஒன்றும் ஆத்ம சாதகனுக்கு இருக்கலாகாது என்று ஏசுநாதர் வற்புறுத்திக் கூறினார். ஆனால் இந்த ஸ்தாபனம் பண்ணுவது அதற்கு நேர் மாறானது. ஸ்தாபனத்தின் நடைமுறைத் திட்டம் மிக அற்புதமானது. கண்டு வியப்புறுமாறு உலகத்தவரை மயக்க வல்லது. ஆனால் ஆத்மசாதனத்தில் தனக்குகந்த எதை வேண்டுமென்றாலும் சாதகன் ஒருவன் செய்யலாம் என்கின்ற சுதந்தரம் ஈண்டு இல்லை.

புத்தமதம் செல்வத்தையோ, இகலோக சாம்ராஜ்யத்தையோ அதிகமாகப் பெருக்கவில்லை. அதற்குப் பதிலாகச் சங்கத்துக்கு அது பெரிய மதிப்புக் கொடுக்கிறது. ஆட்சி முறைக்குக் கிறிஸ்துவமதம் முழு மதிப்புக் கொடுக்கிறதென்றால் திருக்கூட்டத்தின் அபிப்பிராயத்துக்கு புத்தமதம் பெரிய மதிப்புத் தருகிறது. சங்கத்தின் அபிப்பிராயத்துக்கு முரண்பட்டுப் போகின்றவன் பெரிய குற்றவாளியாகிறான். அப்படி முரண்படுகின்றவனை சங்கத்தினின்று அவர்கள் விலக்கி விடுவதுமுண்டு. கிறிஸ்துவ ஸ்தாபனத்திலோ ஒரு மனிதனைச் சுலபத்தில் விலக்கிவைப்பதில்லை. ஸ்தாபனத்துக்கு ஏதேனும் ஒரு விதத்தில் அவனைப் பயன்படுத்துவதே அதன் நோக்கமாகும். புத்தமதத்திலோ கருத்து வேற்றுமையை முன்னிட்டு மனிதனை விலக்கிவிடுவார்கள். ஸ்தாபனத்தைவிட கொள்கை பௌத்தர்களுக்கு மேலானதாக இருக்கிறது. எனவே மனிதனுக்கு விதிக்கிற கட்டுப்பாடுகளில் கிறிஸ்தவர்களைவிட பௌத்தர்கள் கொஞ்சம் தாராள மனப்பான்மை யுடையவர்களாக இருக்கிறார்கள். தனி மனிதனுக்குச் செயலிலும் கொள்கையிலும் கிறிஸ்துவ மதத்தில் இருப்பதைவிட அதிக சுதந்தரம் பௌத்த மதத்திலுண்டு.

இனி ஹிந்துமதத்திலோ, சமய அனுஷ்டானத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் பூர்ண சுதந்தரம் உண்டு. மற்ற மதங்களில் ஏதேனும் ஒரு ஸ்தாபனத்தில் அங்கத்தினனாகாது ஒரு தனி மனிதன் இருக்க முடியாது. ஹிந்து மதத்திலோ எந்த ஸ்தாபனத்திலும் அங்கத்தினனாகாது மனிதன் இருக்கலாம். மதங்களுள் மிகப் பழையது ஹிந்து மதம். மேலாம் கொள்கைகளனைத்தையும் அது தன்னகத்து அணைத்து வைத்திருக்கிறது. ஆனால் ஹிந்து மதம் வரையறை வகுத்து வைக்கப் பட்டுள்ளதுஅல்ல.(It is not an organized religion) யார் எதைவேண்டுமானாலும் அனுஷ்டிக்கலாம். எந்தப் பெயருடைய தெய்வத்தை வேண்டுமானாலும் வணங்கலாம். எந்த ஸ்தாபனத்தை வேண்டுமானாலும் சேர்ந்தவனாக இருக்கலாம்; ஒரு ஸ்தாபனத்திலும் சேராதும் இருக்கலாம். ஹிந்து மதத்தின் போக்கு மிகப் பூர்வீக காலத்திலிருந்து இன்றுவரையில் இவ்விதம் இருந்து வருகிறது.

## சான்றோர் போக்கு

ஒரு மதத்தின் சிறப்பை அதில் தோன்றும் சான்றோர்களின் எண்ணிக்கையைக் கொண்டு தெரிந்துகொள்ளலாம். அவர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமளவு அந்த மதத்தின் உள் வலிவு வெளியாகிறது. ஹிந்துமதத்தில் சான்றோர் பலர் தோன்றியிருக்கின்றனர். அவர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர் ஸ்ரீ ராமகிருஷ்ண

பரமஹம்ஸர். இயல்பிலோ, வாழ்க்கை முறையிலோ அப் பெரியவர்களுக்கிடையில் வேற்றுமையில்லை. ஒருவர் வாழ்க்கையை உள்ளபடி அறிந்துகொள்ளுகிறபொழுது எல்லாருடைய வாழ்க்கையையும் நாம் நேராக அறிந்தவர் ஆகிறோம். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்போம். அதன் மூலம் ஹிந்துமதத்தின் அமைப்பும் நமக்கு விளங்கிவிடுகிறது. சமய ஸ்தாபனம் எதையும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சேர்ந்தவர் அல்லர். சமய ஸ்தாபனங்களைப் பற்றிய எண்ணமே அவருடைய மனதில் உதிக்கவில்லை. மனிதனாகப் பிறந்தவன் ஒருவன் எத்தகைய பெருவாழ்வு வாழவேண்டுமோ அதை அவர் வாழ்ந்து வந்தார். முளைத்து வளர்ந்து வருகிறசெடி தன் உள்வலிவுக்கேற்றபடி கிளைகளை வெளிப்படுத்துகிறது. கடவுள் வழிபாட்டை கையாளுவது ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் இயல்பாயிற்று. அந்த இயல்பைத் தமக்குத் தோன்றியபடியெல்லாம் அவர் வெளிப்படுத்தினார். மற்ற மதங்களில் கடவுள்வழிபாட்டை இப்படிச்செய், அப்படிச் செய்யாதே என்று புகட்டுவதும்,பயிற்சிகொடுப்பதும் நடைமுறையில் இருந்து வருகிறது. ஹிந்து மதத்தில் அந்தக் கட்டுமானம் கிடையாது. சிறு நெறி செல்லாது தடுப்பது ஒன்றே கட்டுமானம். பெருநெறியில் யாருக்கு என்ன தோன்றுகிறதோ அதைத் தங்கு தடையின்றி அனுஷ்டிக்கலாம். ஆதலால்தான் ஹிந்துமதம் சமுதாய சட்டதிட்டங்களோடு கூடிய மதமாகவில்லை. அதை இன்னதென்று விளக்குவதே கடினமானது. மனிதனுடைய நல்லியல்புகளின் தொகையை ஹிந்துமதம் எனலாம். மத அனுஷ்டானத்தைப் பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கு யாரும் பாடம் புகட்டவில்லை. பொதுப்பட ஹிந்து குழந்தைகளுக்கே சமய அனுஷ்டானப் பயிற்சி அவரவர் இயல்புக்கேற்றபடி அமைகிறது. ஒரே அச்சில் உருவங்களை வார்த்து விட்டது போன்று அவர்களுக்கு வழிபாட்டு முறை அமைவதில்லை. முதியோர்கள் தியானம் பண்ணுகிறார்கள். அவர்களைப் பார்த்துச் சிறுவர்களும் தியானம் பண்ணிப் பழகுகிறார்கள். தியான முறையில் பெரியவர்கள் சிறுவர்களுக்குப் பாடம் புகட்டுவதில்லை. தங்களுக்குத் தோன்றியபடி அதைச் செய்யுமாறு உற்சாகப்படுத்துகிறார்கள். விலங்குகளின் குட்டிகளை நீருக்குள் போட்டு விட்டால் அவை தாமாக நீந்த ஆரம்பித்து விடுகின்றன. அதில்பயிற்சிபெறுதல் அவசியமில்லை. சிறுவர்கள் தியானம் பண்ண முயலுவதும் அத்தகையது. அவரவருக்குத் தோன்றிய படி செய்ய விட்டுவிடுவது ஹிந்துமதத்தின் சிறப்பு. அத்தகைய ஆத்ம சாதனச் சுதந்தரம் ஹிந்து மதத்திலிருப்பதால் தான் எண்ணிக்கையிலடங்காத சாதன வகைகள் உருவெடுக்கலாயின. தமக்குத் தோன்றியபடியெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் இறை வணக்கத்தில் ஈடுபட்டார். தாம் எந்தச் சாஸ்திரத்தையும் பின்பற்றவில்லை யென்றும் அவர் பகர்ந்தருளினார். ஆயினும் அவர் கையாண்ட சாதன வகைகள் சாஸ்திரத்தோடு முரண்படவில்லை. மற்ற சான்றோர்கள் சென்ற செந்நெறியினின்றும் அவர் சிறிதும் பிறழவில்லை.

அவருடைய ஆயுட்காலம் முழுவதிலும் கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டு இருந்தது ஒன்றே அவருடைய வாழ்க்கைச் செயலாயிற்று. தம்மனதுக்குத் தோன்றிய சாதன வகைகளை அவர் செய்து கொண்டிருந்தார். பிறகு மற்றவர்கள் வந்து புகட்டிய பெருநெறிகளையும் அவர் பின்பற்றினார். ஆனால் அவர் எந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர் என்கின்ற கேள்வியைக் கிளப்புவதற்குமட்டும் இடமில்லாது போய்விட்டது. சமய ஸ்தாபனங்களனைத்தும் அவருக்குச் சொந்தமானவைகளே. பின்பு



எந்த ஸ்தாபனத்திலும் கட்டுப்படாதவராகவும் அவர் இருந்தார். சைவர்களுக்கிடையில் அவர் சைவராக இலங்கினார். வைஷ்ணவர்களுக்கிடையில் அவர் நல்லதொரு வைஷ்ணவர். சாக்தர்களுக்கிடையில் தீவிரமான சாதகராகவே விளங்கினார். நாளடைவில் மற்றுமொரு சிறப்பு அவரிடத்து வந்து அமைவதாயிற்று. முஸ்லீம்களுக்கிடையில் அவரை நல்லதொரு முஸ்லீம் என்று மொழியலாம். ஏனென்றால் இஸ்லாமிய மதத்தையும் அவர் முழு மனதோடு பழகினார். கிறிஸ்துவர்களுக்கிடையில் அவரை நல்ல கிறிஸ்தவர் எனலாம். அதற்கேற்ற காரணமும் உண்டு. கிறிஸ்து மதத்தையும் அவர் உள்ளன்போடு அனுஷ்டித்து மேன்மையடைந்தவர். ஹிந்து ஒருவன் இஸ்லாமிய சாதனங்களைச் செய்வதால் ஹிந்து மதத்துக்கு வேற்றான் ஆய்விடுவதில்லை. கிறிஸ்துவ மத சாதனங்களை அனுஷ்டிப்பதால் அவன் புறமதத்துக்குப் போனவன் ஆய்விடமாட்டான். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய வாழ்க்கையே அதற்குச் சான்றாகிறது.

நோயாளி ஒருவன் எந்த நாட்டிலே என்ன முறையிலே ஆயத்தப்படுத்திய ஔஷதத்தை வேண்டுமானாலும் அருந்தலாம். நல்ல மருத்துவர்கள் அதற்குத் தடைசொல்ல மாட்டார்கள். நோயாளிக்கும் அப்படிச் செய்வதே முற்றிலும் பொருத்தமானது. நல்ல கனி எந்த நாட்டிலே, எந்த மண்ணிலே வேண்டுமானாலும் உண்டானதாக இருக்கலாம். சுவை நிறைந்திருந்து உடல் வளர்ச்சிக்குப் பயன்படுகின்ற கனி எங்கிருந்து வந்தாலும் உண்ணலாம். அதை உற்பத்தி பண்ணிய நாட்டையோ, மக்களையோ முன்னிட்டு அதைப் புறக்கணிப்பது பொருந்தாது. ஆத்ம சாதனவகைகளை ஹிந்துமதம் அருமருந்தோடும் சுவை நிறைந்த கனியோடும் ஒப்பிடுகிறது. அவை உற்பத்தியாகும் இடங்களைப் பொருட்படுத்தாது அவை விளைவிக்கும் நலனையே கருத்தில் வாங்கி அவைகளை ஏற்றுக்கொள்கிறது. ஆதலால் தான் மனிதன் செயற்கையாகச் செய்து வைத்துள்ள வரையறைகளில் அது கட்டுப்படுவதில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய வாழ்வும் அத்தகைய வரையறைகளில் கட்டுப்படுவதில்லை.

### ஹிந்துமதத்தில் சமய ஸ்தாபனங்கள்

இப்பொழுது கேள்வி ஒன்று எழுகிறது. ஹிந்து மதத்தில் சமய ஸ்தாபனங்கள் (Organized institutions) இல்லையா என்பது அக்கேள்வி. ஹிந்து மதத்தில் உட்பிரிவுகள் ஏராளமாக இருக்கின்றன. சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம், கணபதீயம், சௌரம் என்னும் ஆறு சமயங்களுள் அப்பிரிவினைகளையெல்லாம் அடக்கிவிடலாம். அந்தந்த சமயத்துக்குரிய அனுஷ்டான முறைகளிருக்கின்றன; வழிபாட்டு முறைகளிருக்கின்றன; தத்துவ விளக்கப் பகுதிகளிருக்கின்றன; கிரியைகளை முறை பிறழாது செய்து வருவதற்கான ஏற்பாடுகளிருக்கின்றன; அந்தந்த சமயத்துக்கு ஏற்ற தீக்ஷா முறைகளிருக்கின்றன. இவைகளையெல்லாம் முறையாக மக்களுக்கிடையில் பரப்பி வருவதற்கான இயக்கங்களிருக்கின்றன. அத்தகைய இயக்கங்களில் தலைமை தாங்கியிருக்கிறவர்கள் மடாதிபதிகள் என்றும், ஆசாரியர்கள் என்றும், குருக்கள் என்றும், தீக்ஷதர்கள் என்றும், கோசுவாமிகள் என்றும் விதவிதமான பெயரிட்டு அழைக்கப்படுகின்றனர். விதவிதமான கொள்கைகளையும்,சம்பிரதாயங்களையும் மக்களுக்கிடையில் பரப்புதற்கென்றே இந்த ஸ்தாபனங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இவைகளில் பல செல்வம் மிகப்படைத்தவைகளாகவும் இருக்கின்றன. மக்களுடைய நன்கொடைகளும் இந்த ஸ்தாபனங்களுக்கு ஏராளமாக வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. சிறிய,சிறிய அரசாங்கங்கள் போன்று இந்த ஸ்தாபனங்கள் நாடெங்கும் இடம் பெற்று

இருக்கின்றன. பல்லாயிரம் ஆண்டுகளாக இவைகள் நாட்டினுள் அறத்துறையிலே அரும்பணி ஆற்றி வந்திருக்கின்றன. சமுதாயத்தில் சமயப்பண்பாடு மேல் நிலையிலிருப்பதற்கு இந்த ஸ்தாபனங்களே முக்கியமான காரணமாகின்றன. இவைகள் இல்லாதுபோய் விட்டால் சமய வளர்ச்சியும் குன்றிப் போய்விடும். தானியத்தை விளைவித்து விருத்தி பண்ணுவதற்கு வித்தாக நெல் இருப்பது போன்று சமய வளர்ச்சிக்கு இத்தனை விதமான ஸ்தாபனங்களும், இவைகளில் அமைந்துள்ள அறப்பணிகளும் முற்றிலும் தேவையாயிருக்கின்றன. இவைகளின் எண்ணிக்கை அதிகரிக்குமளவு சமயங்களின் வளர்ச்சிக்கும் வசதிகள் அதிகரிக்கின்றன. எனவே சமய ஸ்தாபனங்களை ஹிந்துமதம் முழு ஆதரவு கொடுத்து ஏற்றுக் கொள்கிறது.

ஆனால் இந்த ஸ்தாபனங்களின் அறச்செயல்கள் எவ்வளவு தூரத்துக்குப் பயன்படுகின்றன; எந்நிலையிலே அவைகள் பயன்படாது போய்விடுகின்றன; மேலும் எந்த நிலைகளில் அவைகள் ஆத்ம வளர்ச்சிக்கு இடைஞ்சலாய்ப் போய்விடுகின்றன' என்பனவற்றையும் ஹிந்துமதம் தெளிவுபடுத்தியிருக்கிறது. முளைத்து வளர்ந்து வருகிற செடிக்கு வேலிகட்டி அதைப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிடில் ஆடு மாடுகள் அவைகளைப் பாழ்படுத்தி விடும். செடி பெரிய மரமாய் வருகிறபொழுது அதற்கு இடைஞ்சலாக வேலி குறுக்கிட்டு நிற்கலாகாது. வேலியை நீக்காவிட்டால் செடி பெரிய மரமாகாது. சமய ஸ்தாபனங்கள் செய்துவருகிற அறப்பணிகள் யாவும் செடிக்கு வேலிகட்டுவதற்கு ஒப்பாகின்றன. பல தடவைகளில் சமய ஸ்தாபனங்களின் கட்டுப்பாடுகள் ஆத்ம சாதகனுடைய முன்னேற்றத்துக்குப் பெருந்தடையாய் விடுகின்றன. அத்தகைய தடையினின்று ஆத்ம சாதகன் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ண பரம்ஹம்ஸருடைய வாழ்க்கை நல்ல எடுத்துக்காட்டு ஆகிறது. திலகம், திருநீறு, திருமண் போன்ற சின்னங்களை சமயப் பற்றுடையவர்கள் நெற்றியில் அணிந்துகொள்ள வேண்டுமென்று சமய இயக்கங்கள் வற்புறுத்துகின்றன. அதில் ஓரளவு பயன் உண்டு. ஆனால் நெற்றியில் சின்னங்கள் அணியாதவர்கள் எல்லோரும் நாஸ்திகர்கள் என்றும், கடவுள் வழிபாட்டுக்குத் தகுதியற்றவர்கள் என்றும் சமய ஸ்தாபனங்கள் அவர்களைப் புறக்கணித்து விடுவதுண்டு. அது வரம்பு கடந்த செயலாகும். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சில வேளைகளில் நெற்றியில் ஏதாவது சின்னம் அணிந்திருப்பார்; வேறு சில வேளைகளில் வெறும் நெற்றியுடனும் இருப்பார். 'நீறு இல்லாத நெற்றி பாழ்' என்பது முற்றிலும் உண்மையல்ல. ஆலய வழிபாடு ஆத்ம சாதனத்துக்குப் பெருந்துணைபுரிகிறது. சமயங்களனைத்தும் தத்தமக்கேற்ற ஆலயங்களை அமைத்து வைத்திருக்கின்றன. ஆங்காங்கு முறையாக வழிபாடும் நிகழ்ந்து வருகிறது. பாமரர்களை சமய வாழ்க்கையில் நடாத்துதற்கு ஆலயம் பெருந்துணை புரிகிறது. ஆனால் மக்களெல்லாரும்வழிபாட்டின் பொருட்டு ஆலயத்துக்குப் போயே ஆகவேண்டும் என்று வரம்பு கடந்து வற்புறுத்துவது முறையன்று. அப்படி ஆலயத்துக்குப் போகாதவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்கின்ற ஸ்தாபனங்கள் உண்டு. ஆலய வழிபாட்டில் நலன் மிக இருக்கிறதென்றாலும் எல்லாரையும் அதில் பலவந்தமாகஈடுபடுத்துவது சமய ஸ்தாபனத்துக்குப் பொருந்தாது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்ஆலய வழிபாட்டிலேயேபெரிதும் ஈடுபட்டிருந்தார். ஆனால் மக்கள் எல்லோரையும் அதைச் செய்யஅவர்வற்புறுத்தியது கிடையாது. இஸ்லாமிய மதத்தை அவர் அனுஷ்டித்தபொழுது ஹிந்து ஆலயத்துக்குள் போகாதும் அவர் விலகியிருந்



தார். அப்படி அவர் செய்ததில் சீரிய கருத்து அடங்கியிருக்கிறது. ஒவ்வொரு சாதன முறையும் ஒரு அலாதிப் போக்குடையது என்பது வெளியாகிறது. சமரசம் என்கிற பெயரை வைத்துக்கொண்டு ஒரு சாதன முறையை மற்றொன்றோடு குழப்பிவிடலாகாது. அவைகளுக்கிடையில் உயர்வு தாழ்வு காண்பதும் பொருந்தாது.

சமய ஸ்தாபனங்கள் அவரவர்க்குரிய சம்பிரதாயங்களைப் புகட்டுதற்கென்றே அமைந்திருக்கின்றன. அவரவர் கோட்பாடுகளைத் தீவிரமாக மக்களுக்கிடையில் பரப்புதல்வேண்டும். ஆனால் ஒரு சம்பிரதாயம் மற்றொன்றை அலட்சியப் படுத்துவது அறிவும் அன்பும் படைத்தவர்களுடைய செயல் ஆகாது. விக்கிரக ஆராதனையை ஆமோதிக்கிற ஸ்தாபனமும் விக்கிரக ஆராதனையை நிராகரிக்கிற ஸ்தாபனமும் ஒன்றோடு ஒன்று சண்டை போட்டுக் கொள்கின்றன. யாருக்கு எது தேவையோ அதை எடுத்து வழங்குதல்தான் அறிவுடையார் செயல் என்று பரமஹம்ஸதேவர் தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார். ஜீரண சக்திக்கேற்றபடி உணவை அமைப்பது போன்று அவரவர் மனப் பான்மைக்கு ஏற்பக் கடவுள் வழிபாடு மாறி அமையவேண்டுமென்பது அவருடைய கருத்து. உலகிலுள்ள சமயக் கோட்பாடுகளையெல்லாம் துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என்னும் மூன்று சம்பிரதாயங்களில் அடக்கிவிடலாம். இம்மூன்றும் ஒன்றோடு ஒன்று முரண்படுபவைகள் என்று சமய ஸ்தாபனங்கள் பல கருதி வருகின்றன. ஒரு சம்பிரதாயம் மற்றொன்றைத் தாக்குவதில் பெரும்பாலும் வரம்பு கடந்து போய்விடுகிறது. ஆனால் இம்மூன்றும் ஆத்மசாதனத்துக்கு முற்றிலும் அவசியமானவைகள் என்பது பரமஹம்ஸரின் முடிவு. கொள்கை வேற்றுமையை முன்னிட்டோ, ஒரு ஸ்தாபனத்தின் நடைமுறைக்கு எதிரியாக மாறிவிட்டதாகச் சந்தேகப்பட்டோ சில சமய ஸ்தாபனங்கள் மக்களைக்.கொலை செய்திருக்கின்றன என்று கேள்விப் படுகிறோம். ஸ்தாபன நிர்வாகத்தின் பெயரால் மக்கள் அவ்வளவு வெறிபிடித்தவர்கள் ஆய்விடலாகாது. நடந்து செல்லுகிறவர்கள் ஊன்றுகோலைப் பயன்படுத்துவது போன்று சமய ஸ்தாபனங்களுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சிறிது இடம் கொடுத்துள்ளார். ஆனால்அவைகளை அவர் ஆத்ம சாதனத்தோடு இணைத்து வைக்கவில்லை.

## குரு ஒருவர் பெறுகிற இடம்

ஜீவாத்மனைப் பரமாத்மனோடு சேர்த்து வைக்கத் தகுதிவாய்ந்தவர் குரு என்று அழைக்கப்படுகிறார். சாதகன் ஒருவன் தனது குருவைச் சாதாரண மனிதனாகக் கருதலாகாது. சாக்ஷாத் பரம்பொருளே அந்த வடிவத்தில் வந்திருப்பதாக குருவை சிஷ்யன் கருதவேண்டும். இக்கோட்பாட்டை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் முற்றிலும் ஆமோதிக்கிறார். வேதாந்த தர்சனம் இக்கோட்பாட்டை முற்றிலும் ஆமோதிக்கிறது. ஆயினும் இவ்விதிக்கு விலக்கு ஒன்று உண்டு. வேதாந்த தர்சனத்தில் புருஷ தந்தரம், வஸ்து தந்தரம் என்னும் இரண்டு கோட்பாடுகள் உண்டு. புகட்டுகிற மனிதனுக்கு முதன்மைகொடுப்பது புருஷ தந்தரம். புகட்டப்படுகிற தத்துவத்துக்கு முதன்மை கொடுப்பது வஸ்து தந்தரம். சாதகர்களுள் பெரும்பான்மையோர் வஸ்து தந்தரத்தை ஏற்கத் தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள். புருஷ தந்தரத்தைப் பின்பற்றுவதற்கு மட்டும் அவர்களுடைய மனபரிபாகம் இடம் தருகிறது. அத்தகைய மந்த அதிகாரிகள் புருஷ தந்தரத்திலேயே பூரண நம்பிக்கைவைத்து இருந்துவிடலாம். அன்னவர்களுக்கு வாய்க்கும் குரு முற்றிலும் பரிபக்குவம் அடைந்திருந்தால் சிஷ்யர்

களும் பாக்கியவான்களாகிறார்கள். குருவிடத்துக் குறைபாடு இருந்தால் குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவதுபோன்று அவர் சிஷ்யனைச் சரியாகப் பக்குவப்படுத்த இயலாதவராய் விடுகிறார். குரு ஸ்தானத்திலிருக்கிற பலபேர் ஆத்ம சாதகர்களுடைய முன்னேற்றத்துக்குப் பேரிடைஞ்சலாய் விட்டனர். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய ஜீவிதத்திலும் இதற்குச் சான்று கிடைக்கிறது. அவருக்கு முதல் குருவாக வாய்த்தவர் பைரவி பிராம்மணி என்னும் பெண்பால். தந்தர சாதனவகைகளில் அந்த அம்மை தேர்ந்தவர். அறுபத்து நான்குவித சாதனைகளையெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் புகட்டியவர் அவர். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவைகளை வெற்றியுடன் நிறைவேற்றினார். தாயினிடத்து சேய் நடந்துகொள்வதுபோன்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பைரவி பிராம்மணியிடம் நடந்துகொண்டார். அருள் செல்வனாகிய அவரை அவ்வம்மையாரும் அருள் நோக்கத்துடன் பேணிவந்தார். பிறகு பரமஹம்ஸர் தோதாபுரி என்னும் ஞானியிடமிருந்து துறவறம் ஏற்றுக்கொண்டு அத்வைத சாதனம் செய்யவேண்டிய தருணம் வந்தது. அதற்குப் பைரவி பிராம்மணி பெருந்தடையாயிருந்தார். அத்தகைய சாதனம் அவருடைய உள்ளத்தினின்று பக்தியையெல்லாம் அகற்றிவிடும் என்பது அந்த அம்மையின் அபிப்பிராயம். அவர் முட்டுக்கட்டைகள் பலபோட்டார். ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணரோ அவைகளையெல்லாம் பொருட்படுத்தாது அவ்வம்மையின் கூற்றுக்களைக் காதில் போட்டுக்கொள்ளாது தோதாபுரியிடம் சிஷ்யராக அமர்ந்தார். அப்படியல்லாது அவ்வம்மையின் கருத்துக்கு அவர் உட்பட்டு நடந்திருந்தால் அவருடைய சாதனமும் சித்தியும் அரைகுறையாக நின்றிருக்கும். வேலியையும் தகர்த்துக்கொண்டு பெரிய மரம் வளர்வதுபோன்று அவர் தமது மேலாம் சாதனத்தில் ஈடுபட்டார். கொஞ்ச நாளைக்குப் பிறகு தமக்கு அத்வைத சித்தியை நிறைவேற்றி வைத்திருந்த தோதாபுரியிடத்திலும் கருத்து வேற்றுமையைப் பரமஹம்ஸர் வெளியிட வேண்டியதாயிற்று. பக்தி சாதனத்தை தோதாபுரி பெம்மான் எள்ளி நகையாடினார். ஆனால் அவருடைய கருத்தையே சிஷ்யராகிய ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிறிது மாற்றியமைக்க வேண்டி ஏற்பட்டது. பாரமார்த்திகப் பெருநிலையில் தோதாபுரியின் சித்தாந்தமே முடிவானது. ஆனால் வியவகாரிக நிலையில் இறைவனுடைய அருளைச் சார்ந்திருப்பதே சாதகன் செய்யும் செயல்களில் தலையாயது. தீவிர சாதகன் ஒருவன் எந்தவிதமான தடைக்கும் லௌகீகக் கட்டுப்பாட்டுக்கும் ஆளாய் விடலாகாது என்பதையே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஜீவிதம் விளக்குகிறது.

**வேதாந்தத்தின் சிகரம்**

மதங்களுக்கெல்லாம் தாய் மதமாயிருப்பது வேதாந்தம். சன்மார்க்கங்களனைத்தையும் அது தன்னகத்து எடுத்து அடக்கிக்கொள்கிறது. ஆத்ம சாதகனை முற்றத் துறந்த முனிவனாக்குவது வேதாந்தத்தின் குறிக்கோள். பூர்ண சந்நியாசம் பூண்டாலொழிய மனிதன் பரிபூரணன் ஆகான். அவன் எந்த நாட்டுக்கும் உரியவன் அல்லன்; எந்த இனத்தையும் சேர்ந்தவன் அல்லன்; எந்தச் சமயத்துக்கும் அடிமைப்பட்டவனல்லன்; சரீரத்திலும் கட்டுப்பட்டவனல்லன்; நல்லார் இணக்கத்திலும் தளைக்கப்பட்டவனல்லன். மனம், புத்தி, அகங்காரமாகிய அந்தக்கரணங்களையும் அவன் துறந்து விடுகின்றான். எஞ்சியிருப்பது அகண்ட சத், சித், ஆனந்தம். அந்த மேலாம் நிலையை ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடைந்தார். அவருடைய மற்றொரு சொரூபமாக இலங்கும் விவேகானந்த சுவாமிகளும் அப்பெரு நிலையை அடைந்தார்.

உயர்ந்த லட்சியம் சந்நியாசம் எனினும் ஆத்மசாதகர்களனைவரும் சந்நியாச ஆசிரமத்துக்குத்தகுதியுடையவர்களல்லர். அக்கோட்பாட்டின்படி பரமஹம்ஸரும் தமது சிஷ்யர்களையெல்லாம் துறவிகள் ஆகவேண்டுமென்று வற்புறுத்தவில்லை. நாளடைவில் பரிபக்குவத்தின் மூலம் அவர்கள் அதை அடைந்துவிடுவார்கள் என்னும் வேதாந்தக் கோட்பாட்டைப் பரமஹம்ஸர் முற்றிலும் கடைப்பிடித்தார். நெறி அல்லது சாதனவகைகளை அவரவர் இயல்புக்கேற்றபடி அவர்புகட்டி அருளினார். ஹிந்துமதம் புறமதத்தைப் பின்பற்றுபவர்களை மதம் மாற்றிப் புதிய மதத்துக்குக் கொண்டு வரும் முறையை (Proselytism) அங்கீகரிப்பதில்லை. பரமஹம்ஸரும் அக்கோட்பாட்டின் படியே நடந்துகொண்டார்.



இனி, கருவி அல்லது சமய ஸ்தாபனம் அமைக்கும் விஷயத்தில் பரமஹம்ஸர் யாண்டும் பராமுகமாயிருந்துவிட்டார். அவருடைய காலத்தில் பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், தியஸாபிகல் சொசைட்டி முதலிய நவீன சமய ஸ்தாபனங்கள் தத்தமக்கேற்ற சட்ட திட்டங்களுடன் உருவெடுத்தன. பரமஹம்ஸ தேவர் அத்தகைய முயற்சி ஒன்றும் எடுத்துக்கொள்ளவில்லை; ஆனால் தமது சிஷ்யர்களுக்கிடையில் நல்லிணக்கத்தை உண்டுபண்ணுவதில் மட்டும் கண்ணுங் கருத்துமாயிருந்தார். உடலைப்பற்றிய ஞாபகம் இல்லாது ஆத்ம சாதகன் ஒருவன் உடலில் வாழ்ந்திருப்பதுபோன்று சமய ஸ்தாபனம் ஒன்றில் சிறிதும் அடிமைப் படாதவனாக ஏதேனும் ஒரு ஸ்தாபனத்தில் அவன் சேர்ந்திருக்கலாம், அந்த ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்குப் 'பணிவிடை செய்யலாம், ஆனால் அதில் கட்டுண்டு கிடப்பது வாழ்வின் மேலாம் குறிக்கோள் அல்ல என்பதைப் பரமஹம்ஸர் தெளிவுபட விளக்கியுள்ளார். தமது இயக்கத்துக்குத் தேவையான சமய ஸ்தாபனத்தை உருவாக்கும் பொறுப்பை சிஷ்யர் விவேகானந்தரிடம் விட்டுவிட்டார்.

பரமஹம்ஸர் காலத்துக்குப் பிறகு சுவாமி விவேகானந்தர் இந்தியா முழுதையும் பரிவிராஜகராக இருந்து சுற்றிப் பார்த்தார். அதன் பிறகு மேல் நாடுகளிலும் சென்று மேலாம் வேதாந்த தத்துவங்களைப் புகட்டினார். அதற்கிடையில் புதியதொரு வாழ்க்கைத் திட்டத்தை மேல் நாட்டவர்களிடமிருந்து அவர் கற்றுக்கொண்டார். ஸ்தாபனங்கள் மூலமாகவே மேல் நாட்டவர்கள் இவ்வுலகுக்கான அரும் பெரும் காரியங்களைச் சாதித்து வந்தார்கள். அத்தகைய திறமை(Organizing genius) இந்தியர்களுக்கிடையில் இல்லை என்பதை அவர் நன்கு உணர்ந்தார். இந்தியாவில் ஸ்தாபனம் ஒன்றை நியமிக்க வேண்டுமென்றும் அது எந்தவிதத்திலும் மனிதனுடைய ஆத்ம சாதன சுதந்தரத்துக்கு இடைஞ்சலாய் விடலாகாது என்றும் அவர் வரையறுத்து வைத்தார். தாம் துவக்கி வைத்த ஸ்தாபனத்துக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண (மிஷன்) சங்கம் என்னும் பெயர் கொடுத்தார். 'ஆத்மனோ மோக்ஷார்த்தாய ஜகத் ஹிதாய ச'— தான் விடுதலையடைவதையும், உலகத்துக்கு நலன் செய்வதையும் அதன் சீரிய நோக்கமாக வைத்தார். சாதகர்கள் அனைவர்க்கும் எச்சரிக்கை ஒன்றும் அவர் செய்தார். It is good to be born in a church but bad to die there— ஒரு ஸ்தாபனத்தைப் பயன்படுத்திக் கொள்; ஆனால் அதனுள் கட்டுண்டு போய்விடாதே என்பது அதன் கருத்து. ஆத்ம சாதகனுடைய முன்னேற்றத்துக்கு எவ்விதத்திலும் முட்டுக்கட்டை போடாது ஸ்தாபனம் ஒன்று இருக்க வேண்டும் என்பதே அவரது நோக்கம். வேதாந்த தத்துவத்தின்படியே பரமஹம்ஸரும், அவருடைய சிஷ்யரும் இது விஷயத்தில் எச்சரிக்கையுடன் ஈடுபட்டனர்.



# மூவர் இராமாயணம்

## 81. ஸமநிலைப் போர்

[ T. R. ராமநாத சாஸ்திரி, M. A. வித்வான் R. வேங்கடசாமி ]

### வால்மீகி கண்டவிதம்

ஆதித்ய ஹிருதய மந்திரத்தை மும்முறை ஜபம் செய்த ராமரிடம் சூர்ய பகவான்மிகவும் மகிழ்வுற்றார். தன்வம்சத்தில்தோன்றிய ராமரின் நிகரற்றபோரைக் கண்டு களிப்பதற்காகச் சூர்யரும் தனி தேவ வடிவத்தை ஏற்றவராய் தேவர் குழாத்தின் இடையில் அமர்ந்திருந்தார். ராமரை அழைத்தார். "விரைவிற் செயலாற்று" என்று ஒரே சொல்லினால் ஊக்குவித்தார்.

இதற்கிடையில் சிறந்த குதிரைகள் பூட்டியதும் கந்தர்வ நகரம் என்று மதிக்கக் கூடியதும் இதுவரை பார்த்திராததும் ஆன விந்தையான தேரில் அமர்ந்து போரிட ஊக்கத்துடன் வந்திருந்த அஞ்சா நெஞ்சத்தினன் ராவணனைக் கண்டார் ஸ்ரீராமர். மாதலியிடம் கூறலுற்றார். "மாதலீ! நீ போர் முறைகளை நன்றாக அறிந்தவன். நான் சொல்லப்போகும் கருத்து உனக்குத் தெரிந்ததே. ஆயினும் நினைவில் வரச் செய்வதற்காகக் கூறுகிறேன். ராவணன் தேரை இடதுபுறமாகச் செலுத்தி வருவதைப் பார். அவன் போர்க்களத்தில் உயிர் துறக்கவே வருகிறான் என்பது புலனாகிறதல்லவா. ஆகவே இது நல்ல நேரம். தேரை அவன் அருகில் செலுத்து" என்று பகர்ந்தார்.

தன் தேரைப்போலல்லாமல், முறையுடன் தன்னை நோக்கி வருகின்ற ராமரதத்தை ராவணன் கண்டான். சினத்தை அவனால் அடக்க முடியவில்லை. ஏராளமான அம்புகளை ராமர்மீது எய்தான்.

ராமரும் பொறுமையை இழந்தார். இந்திரனுடைய வில்லைக் கையில் எடுத்தார். அம்புகளை எய்தார். முன்பெல்லாம் இருவீரரும் ஒருவர்க்கொருவருடைய முழுப் போர்த்திறனைக் காண்பதற்கு அவாக்கொண்டிருந்தனர். அதற்கேற்பப் போரிட்டனர். ஒருவர்க்கொருவருடைய வீரத்தையும் மெச்சினர். ஆனால் நிலைமை மாறி விட்டது. எதிரியைக் கொன்றே திரும்பவேண்டும் என்ற உறுதியை இருவரும் பெற்றிருந்தனர். இரு ஆண் சிங்கங்கள் எதிர்த்தாற்போல் அவர்கள் போரிட்டனர். இருவரும் உயிரைப் பொருட்படுத்தினரல்லர். பகைமையின் காரணத்தைக் கூட எண்ணாதிருந்தனர். சூழ் நிலையை மறந்தனர். தற்பாதுகாப்பு என்பதையும் மறந்தனர். போரிற்காகவே போரிட்டனர் என்று தோன்றும்படியாக ஓர் உயர்ந்த ரகத்தைச்சேர்ந்த போர் தொடங்கியது.

ராமருக்கு வெற்றி தரும் அறிகுறிகள் ஏற்பட்டன. ராவணனுக்கு மடியும் அறிகுறிகள் ஏற்பட்டன. சகுன முறையில் நம்பிக்கை கொண்ட ராமர் மகிழ்ந்தார். அச்சிறந்த போர் நடைபெறுவதைக் கண்ணுற்ற அரக்கரும் வானரரும் 'இதுவல்லவா போர்' என்று அசைவற்ற நிலையில் பார்த்த வண்ணம் இருந்தனர்.

ஓர் அரக்கனோ, வானரனோ, ஓர் அம்பையோ, பாறையையோ எறியாது போரைக் கண்டு களித்தனர்.

जेतव्यमितिकाकुत्स्थः मर्तव्यमितिरावणः ।
धृतौस्ववीर्यसर्वस्वं युद्धेऽदर्शयतांतदा ॥

'எப்பாடுபட்டாவது இன்று வென்றாக வேண்டும். இதைப் போன்ற சந்தர்ப்பம் மறுமுறை கிட்டாது' என்றும் கருதினார் ராமர். தன் முழுத்திறமையையும் காண்பித்து வெற்றி பெற விரும்பினார். ராவணனோ சாவை எதிர்பார்த்திருந்தான். ராமனைப் போன்ற எதிரியும் அதைப் போன்ற போரும் மறுமுறை கிடைப்பதரிது என்று நம்பியிருந்தான். சாவதற்கு முன் தன் முழுத்திறமையையும் காண்பித்து விட வேண்டும் என்று முரட்டு உறுதியுடன் போரிட்டான்.

ராவணன் இந்திர ரதத்தைக் குறிவைத்து அம்புகளை எய்தான். ஆனால் அவனுடைய அம்புகள் ரதத்தைத் தொடாமலேயே கீழே வீழ்ந்தன. ராமர் அதே செயலைத் தானும் செய்து காண்பிக்க விரும்பினார். ஒரே அம்பை எய்தார். அது விரைவிற் சென்றது. கொடித்தூணை துண்டித்தது. பூமியையும் பிளந்தது. அச்செயலால் ராவணன் சினந்தான். குதிரைகளைக் குறிவைத்து அம்புகளை எய்தான். இந்திர ரதத்தின் குதிரைகள் சிறிதும் தளரவில்லை, தடங்கலுறவில்லை, அசையவும் இல்லை. தாமரைத் தண்டுகளால் அடிபட்டவை போல் தென்பட்டன.

ராவணன் இவ்விழிவை எவ்வாறு பொறுப்பான்? உடனே மாயையைப் பயன்படுத்தினான். மாயையின் உதவியை நாடினான். அம்புகளும் வகை வகையான ஆயுதங்களும் குதிரைகள் மீதோ, ராமர் வீற்றிருந்த தேரின் மீதோ விழாமல் அவை வானர சேனையின்மீது விழலாயின. ராமர் அம்புகளும் ஆயுதங்களும் தன் தேரை அண்டவிடாது தடைசெய்து விட்டார். ராவணனும் சோர்வுற்றானல்லன். மேலும் அம்புகளை எய்தான். வானம் முழுதும் அம்புகளால் மறைக்கப்பட்டதெனலாம்.

இருவரும் சோர்வின்றி அம்புகளைத் தொடுத்தனர். அவை ஒன்றோடொன்று மோதித் தரையில் விழுந்தனவேயன்றி எதிரிகளின் உடல்களைத் தொடாதொழிந்தன. ஒருவர் தொடுத்த முறையை மற்றவர் பின்பற்றிச் செய்வதாகப் போர் நிகழ்ந்தது. ஏற்றத் [illegible] இயலாததாக இருந்தது.



ஆயினும் ராமர் செய்த தேர்க்கொடித்தூண் துண்டித்த செயலை ராவணனும் திருப்பிச் செய்து காண்பிக்க முயன்றான். முடியாதுபோகவே சினமுற்றான். ஆத்திரத்துடன் போரிட்டான். மழைபெய்யும் இரு கார்முகில்களைப் போல் அவர்கள் ஒருவர்க்கொருவர் அடித்துக் கொண்டனர். பின்னர் குதிரைகளைத் துன்புறுத்தினர். மறுபடி ஒருவர்க்கொருவர் தொடுமாறு தேர்கள் அருகில் நின்றன. ராமர் அம்புகளால் ராவணனின் குதிரைகளை நன்றாகத் துன்புறுத்தினார். ராவணன் அருகில் இருந்த ராமர்மீது எண்ணற்ற அம்புகளை எய்து விட்டான். நல்ல அடிகளைப் பெற்றும் ராமர் சிறிதும் முகத்தில் மாறுதலைக் காண்பியாமல் இருந்தார். பின்னர் ராவணன் மாதலியின் மீதும் அம்புகளை எய்தான். மாதலியும் மயக்கமடையாமல் அவற்றை ஏற்றான். ஆனால் ராமர் இதைப் பொறுத்தாரல்லர். எண்ணற்ற அம்புகளைத் தொடுத்து ராவணனைத் திரும்புமாறு செய்துவிட்டார்.

மறுபடியும் திரும்பினான் ராவணன். கதைகளையும் உலக்கைகளையும் ராமர்மீது மழை பெய்வதைப்போல் பொழிந்தான். போர்முறை உயர்வை எட்டியது. பூமியே நடுங்கலாயிற்று. சூர்யன் ஒளியிழந்தான். கடல் கொந்தளித்தது. பாதாளத்தில் வசிப்பவரும் அச்சமுற்றனர். வானில் குழுமியிருந்த தேவர்கள் கவலை கொண்டனர். "சாதுக்களும், முனிவர்களும், பசுக்களும் அழிவுறாதிருக்கட்டும். போரில் ராமர் ராவணனை வெல்லட்டும்" என்று வேண்டிக்கொண்டனர். எல்லோரும் உலகங்கள் அழிவுறாதிருக்கட்டும் என்றனர்.

என்றென்றும் காண முடியாததும் மயிர்க்கூச்சலளிப்பதுமான அப்போரைக் காண்பதற்குக் கூடியிருந்த எல்லாத் தேவ

ரும் முனிவரும் வியப்புற்றனர்.

गगनंगगना सागरस्सागरोपमः ।
रामरावणयोर्युद्धं रामरावणयोरिव ॥

'வானிற்கு நிகரானது வானே. கடலுக்கு நிகரானது கடலொன்றே. ராமராவணர்களுடைய போரிற்கு நிகரான வேறு போரைக் காணவேண்டுமாகில் ராமராவணர் போரைத்தான் காணவேண்டும்' என்று கூறிக்கொண்டு போரைப் பார்த்தனர்.

### துளஸி நோக்கியவிதம்

தேரில் அமர்ந்துள்ள ராமரைப் பார்த்ததும் வானரர் மிகுந்த ஊக்கம் பெற்றனர். அந்நிலையில் ராவணன் மாயையைச் செலுத்தினான். ராமரைத்தவிர மற்றவரை மாயை வசப்படுத்திவிட்டது. பல ராமலக்ஷ்மணர்கள் அரக்கருக்கிடையில் இருப்பதாகக்கண்ட வானரர் அச்சமுற்றனர். உண்மை ராமர் எவர் என்று அறியாது திகைத்தனர். ராமர் சிரித்துக்கொண்டே ஓர் அம்பை எய்தார். மாயை மறைந்தது.

"வீரர்காள்! நீங்கள் கடும்போரிற் கலந்து மிகவும் களைத்துப் போயிருக்கிறீர்கள். தக்க இடங்களில் அமைதியுடன் அமர்ந்து கொள்ளுங்கள். நாங்கள் இருவரும் போரிடுவதைக் கண்டு மகிழ்வடையுங்கள்" என்று தம் சேனைவீரர்களிடம் ராமர் கூறினார். பெரியோரை உள்ளத்தில் வணங்கினார். எதிரியை நோக்கித் தேரை செலுத்தச் செய்தார்.

கலங்காத நெஞ்சுடன் தேரில் அமர்ந்து தன்னை நோக்கி முன்னேறும் எதிரியைக் கண்டவுடன் சினங்கொண்டான் ராவணன். வீரகர்ஜனை செய்தான்; தேரை ராமரை நோக்கிச் செலுத்தச் செய்தான். இவ்வாறு இருவீரர்களும் சந்தித்தனர்.

ராவணன் ராமரைநோக்கி, "ஏ முனியே! நீ சில வீரரை வென்றிருக்கக்கூடும். நான் அவர்களைப் போன்றவனல்ல. நான் லோகபாலரைச் சிறைப்படுத்திய வீரனாவேன். நான் மக்களைக் கதறச் செய்பவன். ராவணன் என்று யாண்டும் புகழ் பெற்றவன். கரன், விராதன், வாலி, கும்பகர்ணன், மேகநாதன் முதலியவரைக் கொன்றமையினால் என் பகைமையைப் பெற்றுள்ளாய். உன்னைக் கொன்று அதைத் தீர்த்துக் கொள்வேன். போர்க்களத்தினின்று ஓடிவிடாதே" என்று கூறினான்.

ராவணனுடைய உள்ளத்தின் நிலையை ராமர் அறிந்திருந்தார். ஆதலால் சினங்கொண்டாரல்லர். சிரித்தார். "ராவணா! நீ சொல்வது முற்றிலும் உண்மை. செயல் புரிந்து உன் வீரத்தைக் காண்பி. வீண் பேச்சை நான் விரும்பேன். பேச்சினால் புகழை அழித்துக்கொள்ளாதே.

"பாதிரி, மா, பலா, என்று மூன்று மரங்கள் உண்டு. பாதிரி மலரை மாத்திரம் அளிக்கின்றது. மா மலரையும் கனியையும் அளிக்கின்றது. பலா கனியை மாத்திரம் தருகின்றது. மனிதரிலும் முவ்வகையினர் உண்டு. சிலர் பேசிக்கொண்டே இருப்பர். செயல்புரியவே மாட்டார். சிலர் பேசுவர். செயலையும் புரிவர். வேறு சிலர் பேசவே மாட்டார். செயலை மாத்திரம் புரிவர். என் கருத்தைத் தெரிந்து கொண்டிருப்பாய்" என்று கூறினார்.

ராவணன் உரக்கச் சிரித்தான். "ராமா! என்னுடன் பகைமைகொண்டபோது அஞ்சாதிருந்தாய். இப்போது உயிராசை வந்துவிட்டது போலும். எனக்கு அறிவு புகட்ட வந்துவிட்டாய்" என்று சொல்லிக்கொண்டே வஜ்ஜிரத்திற்கொப்பான ஓர் அம்பை எய்தான்.

அந்த ஓரம்பு பலவாகி ராமரிடம்வந்தது. ராமர் அக்னிபாணத்தைச் செலுத்தி அந்த அம்பைச் சாம்பலாக்கிவிட்டார். தீயோர் கட்டும் மனக்கோட்டைகளைப்போல் ராவணன் எய்த அம்புகளும், வீசிய ஆயுதங்களும் வீணாயின. பின்னர் ராவணன் மாதலியை அம்புகளால் துன்புறுத்தினான்.

'ராமா' என்று சொல்லிக்கொண்டு மாதலி தரையில் விழுந்தான். மாதலியை எழுப்பி அமரச்செய்தபின் ராமர் சினங்கொண்டார். அவருடைய வில்லின் நாணொலியினால் எல்லோரும் நடுக்கமுற்றனர். ராமர் தொடுத்த அம்புகள் இறக்கைகளைப்பெற்ற நாகங்களைப்போல் வானில் பறந்தன. ராவணனுடைய தேர்ப்பாகனையும் குதிரைகளையும் கொன்றன. தேர் சிதறிவிழுந்தது. கொடிமரம் தரையிற் சாய்ந்தது. துணியும் கிழிந்தது. ராவணன் வேறு தேரில் ஏறினான்.

உள்ளம் நடுக்கமுற்றது. அதைக் காண்பியாது கர்ஜனைசெய்தான். பிறருக்குத் தீமையை எண்ணுபவனுடைய முயற்சிகளைப்போல் ராவணனுடைய முயற்சிகளும் தோல்வியுற்றன. ராமருடைய தேர்க்குதிரைகளை ராவணன் வீழ்த்தினான். ராமர் அவற்றை எழச்செய்தார்.

ராமர் பல அம்புகளால் ராவணனின் தலைகளையும் கைகளையும் துண்டித்து வீழ்த்தினார். உதிரம் ஆறுகப்பெருக ராவணன் ஓடிவந்தான். மறு விநாடியில் தலைகளும் கைகளும் புதியவையாகக் கிளம்பின. பல முறைகள் இச்செயல் நிகழ்ந்தது. பல ராகு, கேதுக்கள் என்று எண்ணுமாறு ராவணனுடைய தலைகளும், முண்டமும் காட்சியளித்தன.

ஐந்து புலன்களால் இன்பங்களை நுகர்ந்தவாறே ஆசையை வெல்ல விரும்புகிற மனிதன் எவ்வாறு ஆசை வளருவதையே காண்பானோ, அவ்வாறு ராவணனுடைய தலைகள் தோன்றியவண்ணமே இருந்தன.

தலைகள் தரையில் வீழ்வதைக் கண்ணுற்ற ராவணன் சினத்துடன் அம்புகளைப் பொழிந்தான். இருளுக்கிடையில் கதிரவன் மறைந்திருப்பதைப்போல் ராவணனுடைய அம்புகளில் ராமர் மறைந்திருந்தார்.

மறுபடியும் தலைகள் தரையில் உருண்டன. ஒவ்வொன்றும் ராமர் எங்கே, லக்ஷ்மணன் எங்கே, சுக்கிரீவன் எங்கே என்று வினவியவாறு வானிற்பறந்து தரையில் வீழ்ந்தது. வானரர் அச்சமுற்றனர்.

தலை வீழ்ச்சியினால் ராவணன் சினந்தான். வேல் ஒன்றை எடுத்து திடீரென அதை விபீஷணன் மீது வீசினான். அண்டியவரைக் காக்கும் பிரபு விபீஷணனைத் தம் பின்னர் நிற்கச்செய்து வேலாயுதத்தைத் தாமே ஏற்று மூர்ச்சையுற்றார்.

பிரபுக்கு இது ஒரு விளையாட்டுத்தான். ஆயினும் தேவர்கள் கலக்கமுற்றனர். விபீஷணன் கதையை எடுத்து ஓடி வந்தான். "அதிர்ஷ்டமற்றவனே! நீ தேவர், மனிதர், முனிவரைப் பகைத்தாய். ஆயினும் சிவபிரானை வணங்கினாய். அதனால் இதுவரை தப்பினாய். இப்போது காலதேவன் உன்னை ஆட்கொண்டான். மடையா! ராமரை வெறுத்தபின் இன்பத்தை நாடுகின்றாயே!" என்று சொல்லிக்கொண்டு கதையினால் ஓங்கி அடித்தான். ராவணன் தரையில் விழுந்து எழுந்தான்.

ராமருடைய அருளைப் பெற்றமையினால் விபீஷணன் ராவணனுடன் போரிடவும் முற்பட்டான், என்கிறார் துளஸி.

விபீஷணன் களைப்புற்றான். ஹனுமான் மலையைத்தூக்கி ராவணன் மீது வீசினார். தேர், குதிரைகள், தேர்ப்பாகன் ஆகியோர் மலையால் அழிவுற்றனர். ராவணன் உடல் நடுக்கம் உற்றது. விபீஷணன் ராமரருகில் நின்றான். ராவணன் ஹனுமானை அடித்தான். ஹனுமான் வானில் கிளம்பினார். ராவணன் வாலைப் பிடித்து இழுத்தான். ராவணனையும் தூக்கியவாறு ஹனுமான் கிளம்பினார். இருமலைகள் வானில் போரிடுகின்றனவோ என்று எல்லோரும் எண்ணினர்.

ஹனுமான் ராமரைத் தியானம் செய்தார். ராவணனைத் தரையில் வீழ்த்தித் தானும் விழுந்தார். ராவணனுடைய வீரத் தன்மையைக்கண்டு வானரர் ஓட்டமெடுத்தனர். ராமர் அவர்களை அழைத்தார். வானரர் திரும்பினர்.

## கம்பன் கண்டவிதம்

### இரு பெரும் வீரர்

இராம இராவணப்போர் மிகப் பெரிய போராகும். போரிடும் வீரர் இருவரும் பேராற்றல் மிகப்பெற்றவர்கள்: போர்க் கலையில் தேர்ந்தவர்கள். இராமனுடைய போர்க் கலையைப்பற்றிக் கூறும்பொழுது கம்பன், "கலையனைத்தும் இவனிடம் வந்து அடைக்கலம் புகுந்தது" என்று குறிப்பிடுகின்றான். தாடகையைக் கொன்றதை விசுவாமித்திரன் "கைவண்ணம் அங்குக் கண்டேன்" என்று வியந்து பாராட்டுகின்றான். "சொல்லொக்கும்கடிய வேகச் சுடு சரம்" என்று அவனுடைய அம்பின் வேகம் பாராட்டப் படுகின்றது. சனகனுடைய அவையில் வைக்கப்பட்ட, யாராலும் தூக்கி நாணேற்ற முடியாத சிவ தனுசை இராமன் எடுத்து நாணேற்றும் பொழுது அவையிலுள்ளோர் "எடுத்தது கண்டனர் இற்றது கேட்டனர்" என்ற அளவிலே புகழப்படுகிறது இராமனது வில் திறம். இனி, இராவணனோ எனின், அவனுடையவீரம் சொற்களால் சொல்லும்தரமன்று. முனிவரும் தேவரும் அவனுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே அஞ்சி நடுங்குகின்றனர். அனைத்துலகையும் வென்று ஆளும் திறம் படைத்தவன்; போரிட எதிரிகள் இல்லாமையால் உலகம் தாங்கும் அஷ்டதிக் கஜங்களோடு போரிடுபவன். அவைகளின் தந்தங்கள் தன் பரந்த வலிய மார்பிலே தாக்கி அவை உண்டாக்கிய காயங்களின் வடுக்களே தனது சிறந்த அணிகலன்களாகக் கொள்ளும் பெருவீரன். "கறங்கு கால்புகா, கதிர்புகா" என்ற முறையில் ஐம்பெரும் பூதங்களும் அவன் சொற்கேட்டு தம் பணியாற்றும் கடப்பாடுடையன. இம்மாபெரும் வீரர்க்கிடையிலேதான் களத்தில் பெரும்போர் நடக்கிறது.

### பகைவரை மதிப்பிடுதல்

இராம இராவணப் போரைக்காண பல்லோர் குழுமியுள்ளனர். வானவரனைவரும் வானுலகில் கூடி போரின் நிகழ்ச்சிகளைக் கண் கொட்டாமல் கண்டு கொண்டிருக்கின்றனர். இப்போரிலே ராமன் வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்திய வண்ணமாக உள்ளனர். ஏனெனில் இராவண வெற்றி தங்கள் வாழ்வுக்கு இறுதியாகி விடுமன்றோ? தாங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இராமனது வெற்றியை விரும்புகின்றனர் வானவர். "வானவர்கள் வாழ்த்துவதும் தாம் வாழ்வான்" என்பதன்றோ மணி வாக்கு? தனது எதிரிகளாகிய இராமலக்குவர் சாதாரண மனிதர் என்று அறிந்த இர்ாவணன் முதலில் அலட்சியமாக இருந்து விட்டான். ஆனால் போர்க்களத்தில் தனது படைவீரர்கள் அழிந்து கொண்டு வருகின்றனர் என்ற செய்தியை அறிந்தபோது இராமலக்குவர் போர் செய்யும் திறமையுள்ளவர் என்ற அளவிலே மதிப்பிட்டான். பஞ்ச சேனாதிபதிகளும் களத்திலே தோற்கடிக்கப்பட்டபோது மனித வீரரைப் பற்றிய மதிப்பு சிறிது அதிகமாயிற்று இராவணனது உள்ளத்திலே. மூலபலப்படையும் தோல்வியடைந்த காலத்தில் எதிரிகளைப் பற்றிய அலட்சிய மனப்பான்மை இராவணனது உள்ளத்திலிருந்து சிறிது அகன்றது. அதிகாயன் பட்டொழிந்தபோது இராவணன் விழித்துக் கொண்டான். மாவீரனான கும்பகர்ணனும் இறந்து விட்டான் என்ற செய்தி அவனது காதில் நாராசம்போல் பாய்ந்தது. எதிரிகள் எளிதில் வெல்லப்படக் கூடியவர் அல்லர் என்பதை உணர்ந்தான். இறுதியாக யாராலும் வெல்லப்பட முடியாத, வலிமையே உருவெடுத்த தனது அருமருந்தன்ன மகன் இந்திரஜித்து உயிரிழந்தான் என்றபோது இராவணனது திகைப்பு எல்லை கடந்து சென்று விட்டது. இராமலக்குவரின் ஆற்றலைப்பற்றி மதிப்பிட்டதில் தான் இமாலயத்தவறு செய்து விட்டதனை உணர்ந்தான். பின்னர் போர்க்களத்திலே இராமலக்குவரைத் தான் நேரிலே சந்தித்த போது அவர்கள் எத்தன்மையவர் என்பதை உணரலானான். இராமனுடைய சுடுசரங்கள் தனது மேனியில் தாக்கும்போது இராமன் மூவரிலும் மேலானவன் என்பதை உணருகின்றனன். அதில் எல்லையற்ற மகிழ்வும் கொண்டு தான் தோல்வியடையினும் "எளிதினில் படுதலில்லேன்" என்று போர் வீரனுக்கே உரிய தற்செருக்குடன் கூறிக்கொள்ளுகின்றான்.



### இராவணன் தெளிவும் சினமும்

இராமனது அம்புகள் பட்டு இராவணன் மயக்கமடைந்தவுடன் தேரை அப்பாற் செலுத்தினான் சாரதி. இதைக் கண்டு தேவரனைவரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். ஆனால் அவர்களது மகிழ்ச்சி சிறிது நேரமே நீடித்தது. தேவர்களை அச்சத்தில் மூழ்கடிக்க இராவணன் தெளிவு பெற்று விட்டான்! தெளிந்த இராவணன் தன்னைச் சுற்றிலும் நோக்கினான்; சாரதி செய்த செயல் தனக்கு எத்துணைக் கேவலத்தை உண்டுபண்ணி விட்டது என்பதை உணர்ந்து சாரதியின்மேல் எல்லையற்ற சினம் கொண்டவனானான். சாரதியை நோக்கி "நீங்காத வசையை உண்டாக்கி விட்டாய்; என் எதிரியான இராமன் என்னைக்கண்டு நகைக்கும்படி செய்து விட்டாய்; உன்னை என் வாளுக்கிரையாக்காமல் விடேன்" என்று சினந்து கூறி வாளை உருவினான் இராவணன். இதனைக்கண்ட சாரதி அஞ்சி நடுநடுங்கி இராவணன் காலில் விழுந்து விட்டான். "ஐயனே, என்னை மன்னித்து விடுங்கள். உண்மையில் யான் தங்களை வஞ்சிக்கவே இல்லை. தங்கள் உயிரைக் காக்கவேண்டும் என்று எண்ணியே தேரைக் கொண்டு வந்து இப்பால் நிறுத்தினேன். தலைவனுக்கு ஆபத்துநேரும் பொழுதுகாப்பாற்ற வேண்டியது சாரதியின் கடமை என்று எண்ணியே இவ்வாறு செய்தேன்" என்று இரங்கிக் கூறினான். சாரதியின் இயல்பினை அறிந்த இராவணனும் சினம் தணிந்து அவனை மன்னித்து விட்டான்.

### சமநிலைப் போர்

சாரதியின்மேல்கொண்ட சினத்தினை நீக்கிய இராவணன் இராமன் முன்னின்று முன்னினும் கொடிய போரைத் துவங்கினான். வில்லினின்று கடும் வேகமாகக் கணைகள் பாய்ந்தன. ஆவேசத்துடன் அவன் செய்யும் போரினைக் கண்டவர் புதிய இராவணன் தோன்றிவிட்டானோ என்று வியப்பும் அச்சமும் கொண்டனர். தன்னை நோக்கிப் பாய்ந்த இராவண சரங்களையெல்லாம் தடுத்த இராமன் போரின் நீடிப்பை விரும்பவில்லை. அச்சம்பொருந்திய இராவணன் வில்லையே அறுத்துவிடத் துணிந்தான். உடனே இராமபாணம் ஒன்று சென்று இராவணனுடைய பயங்கரமானவில்லை அறுத்தெறிந்தது. இதைக் கம்பன் "வார்சிலை ஆரணங்கை இரு துணியாக்கினான்" என்று கூறுகிறான். இராமன் இத்துணை நில்லாமல் ஏராளமான அம்புகளைப் பொழியத் தொடங்கினான்.

மாறி, மாறி, வரிசிலை, வாங்கினான்
நூறி, நூறினொடு, ஐயிரு, நூறவை
வேறு வேறு திசையுற வெங்கணை
நூறி நூறி இராமன் நுறுக்கினான்.

இத்துணை விரைவாக எண்ணற்ற அம்புகளை எய்தும் போர் நின்றபாடில்லை; ஏனெனில் இராவணன் இராம பாணங்களுக்கெதிராக இருப்புலக்கைகளை வீசத் தொடங்கினான். இந்நிலையில் இராவணனை வெல்லும்வழி யாது எனச் சிந்திக்கத் தொடங்கினான் இராமன். இத்தனை அம்புகளைக்கொண்டும் அவனைவெல்ல இயலாது என்று முடிவு கட்டிய பின்னர் வேறு வழியைக் கையாள எண்ணலுற்றான்.

"இவை அனைத்தும் இவனைவெல் லாவெனா
நவை யனைத்தும் துறந்தவன் நாடினான்."

# சந்தேகம் தெளிதல்

*[அன்பர்கள் தமக்குற்ற சந்தேகங்களை ஆசிரியருக்கு எழுதி அனுப்பலாம். கேள்விகளுள் பொதுமக்களுக்குப் பயன்படாதவைகளும் நல்ல கருத்துக்கள் அமையப்பெறாதவைகளும் கவனிக்கப்படமாட்டா.]*

**கேள்வி : (272)** ***ஸ்ரீராமகிருஷ்ணர் கறுப்புப் பூனையை வெட்டி அதன் தலையை ஆசனம் அமைத்ததாக தந்தர சாதனத்தில் சொல்லப்படுகிறது. 'தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது இன்னுயிர் நீக்கும் வினை' என உள்ள அறநூலுக்கு இது முரண்படுகிறது. இதனை விளக்குக.*** ***சு. ஆ.***

ஸ்ரீ ராமகிருஷ்ணர் புரிந்த தந்தர சாதனத்துக்குத் தகுந்த ஆசனம் ஒரு ஸ்மசானத்தில் ஒரு வில்வ மரத்தடியில் அமைக்கப்பட்டது. தந்தர சாஸ்திரப் பிரகாரம் அந்த ஆசனத்தின் கீழ் பூமிக்குள் கறும் பூனையின் தலை, கறுங்குரங்கின் தலை, அகால மரணமடைந்த மனிதன் தலை போன்ற பல பொருள்கள் புதைக்கப்பட்டன. அவைகளை யெல்லாம் தந்தர சாஸ்திரம் சொல்லியுள்ளபடி அமைக்காவிட்டால் ஆசனம் சரியாக அமைக்கப்பட்டதாகாது. ஆசனம் சரியாக அமையப் பெறாவிடில் அதன்மீது புரிகின்ற சாதனமும் சித்தியாகாது. எனவே அந்த சாஸ்திரம் சொல்லியுள்ள பிரகாரம் உயிர்வகைகளின் தலைகளை வாங்கத்தான் வேண்டும். இன்னும் தந்தர பூஜையில் ஆடுபோன்ற உயிர் வகைகளைப் பலிகொடுப்பதற்கும் இடமுண்டு. உயிர்களைப் பலிகொடுத்து அத்தகைய பூஜை செய்ய விரும்பாதவர்கள் அதை ஒதுக்கி வைத்துவிடலாம். ஆனால் அந்தப் பூஜையில் விளைகிற அதிசயச் செயல்களையும், காட்சிகளையும் காண விரும்புகிறவர்கள் உயிர்களைப் பலிகொடுக்கத் தயங்கலாகாது. தந்தர சாஸ்திர பூஜை முறைகளில் இன்னும் உயர்ந்தபடி ஒன்று உண்டு. சாதகன் தன்னையே பலிகொடுக்க முன்வரும் பகுதி அதில் இருக்கிறது. அதை அவன் முறைதவறிச் செய்தால் அவனுக்கு உயிர் போய்விடும். முறையுடன் செய்தால் அவனிடத்துள்ள பாப புருஷன் என்னும் அக்ஞான இருள்தான் கொல்லப்படுகிறது. சாதகன் அம்பிகையின் அருளுக்குரிய ஞானியாக புதிய பிறவி எடுத்து விடுகிறான். அக் கோட்பாட்டின்படியும், பழைய மனிதன் கொல்லப்பட்டவன் ஆகிறான். தந்தர சாஸ்திர விதிப்படி சாதகன் தன்னையும் பலி கொடுக்க ஆயத்தமாயிருக்கிறான். சாஸ்திர விதிப்படி மற்ற உயிர்களையும் பலி கொடுக்க ஆயத்தமாயிருக்கிறான். தன்னுயிர் வேறு, மன்னுயிர் வேறு என்கின்ற வேற்றுமை அவனுக்குக் கிடையாது. தான் உட்பட எல்லா உயிர்களையும் ஒரே தரத்தில் வைத்து தேவிக்கு அவைகளைப் படைக்க முயலுகின்றவனுக்குப் பாபம் கிடையாது. அத்தகைய மனநிலையை அடையப் பெறாதவர்கள் அந்த சாதனத்தில் ஈடுபடவேண்டியதில்லை.

இனி, சாந்த முறையில் தெய்வ வழிபாடு செய்கிறவிடத்தும் மனிதன் தன்னையே பலிகொடுப்பதற்கு இடமுண்டு. ஒரு தேவாலயத்தினுள் நுழைந்தவுடனே வழிபடுபவனுடைய காட்சிக்கு முதலில் வருவது பலிபீடம். அந்தப் பலிபீடத்தில் அவன் வீழ்ந்து நமஸ்கரித்து சிற்றியல்போடு கூடிய தன்னை பலிகொடுத்துவிட்டதாக உணர வேண்டும். தெய்வப்பெற்றி வாய்ந்த புது மனிதன் ஆகி அவன் எழுந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் கடவுள் வழிபாட்டுக்கு அவன் முற்றிலும் தகுதியுடையவன் ஆகிறான். எந்த விதத்திலும் ஆத்ம சாதகன் தன்னைத் தெய்வத்துக்குப் பலிகொடுத்தாக வேண்டும். அப்பொழுதுதான் ஜீவபோதம் அழிந்துபோய் சிவபோதம் தலையெடுக்கிறது. உயிரில் வாஞ்சை வைத்திருப்பவனுக்கு உயரிய நிலை கிட்டாது. தன்னுயிரையே பலி கொடுக்க முன் வருகின்றவன் மற்ற உயிர்களையும் சாஸ்திர விதிப்படி பலி கொடுத்தால் அது குற்றமாகாது என்று தந்தர சாஸ்திரம் சொல்லுகின்றது. அப்படித் தந்தர சாஸ்திரம் சொல்லுவதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்கிற கட்டாயம் இல்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அந்தச் சாதனங்களைச் செய்தார். ஆனால் சுவாமி விவேகானந்தர் போன்ற தம் சிஷ்யர்களை அச்சாதனங்களில் ஈடுபட வேண்டாமென்று தடுத்துவிட்டார். தந்தர சாதனங்களிலும் உண்மையிருக்கிறதென்று நிரூபிப்பதற்குத் தாம் மட்டும் அவை யாவையும் செய்து முடித்தார்.



**கேள்வி : (273)** ***'எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு' என்பது 'உலகத்தோடு ஒத்து வாழ்' எனக் கருத்துப்படுகிறது. உலகத்தோடு ஒத்து வாழ்வதெப்படி? புலால் உண்ணும் பெரும்பாலோர் கூட்டத்தில் சிறுபான்மையோர் புலால் உண்ணாதவர்கள் இருந்தால் அப்பெரும் பான்மையரோடு இச்சிறு பான்மையர் பொருந்தி வாழ்வது எப்படி?*** ***கோ.***

உலகத்தோடு ஒத்து வாழுவது உணவு உண்பதில் அடங்கிவிடுவதில்லை. அவரவர் உடலுக்கும் இயல்புக்கும் ஒத்தபடி உணவை மாற்றியமைத்துக் கொள்ளலாம். புலால் உண்பது அவரவர் விருப்பப்படி தனிச் செயல். அது பொதுச் செயல் ஆகாது. புலால் உண்பவர்கள்எல்லாம் சிறு நெறி செல்லுபவர்கள் என்று பலர் கருதி வருகின்றனர். அப்படிக் கருதுதற்கு இயற்கையின் நடைமுறையில் ஆதாரமில்லை.

வாழ்க்கை முறையில் உலகத்தோடு ஒத்துப்போக வேண்டுமென்பதே இக்குறளின் கருத்து ஆகும். ஊரிலுள்ள ஆடவர்கள் எல்லாம் வேஷ்டி கட்டுகிறார்கள். மகளிர்கள் எல்லாம் சேலை கட்டுகிறார்கள். ஆடவன் ஒருவன் 'நான் வேஷ்டி கட்டமாட்டேன்; சேலைதான் கட்டுவேன்' என்றால் அது ஊருடன் ஒத்துப் போவதல்ல. ஊரார் எல்லாம் இந்தியர் போன்று உடை அணிகையில் தனி மனிதன் ஒருவன் பொருந்தாத அந்த இடத்தில் ஆங்கிலேயன் போன்று உடை அணிந்துகொள்வது சமுதாயத்துக்கு ஒத்த செயலாகாது. ஊரெல்லாம் கூடி ஒரு விழாவைக் கொண்டாட வேண்டும் அல்லது கொண்டாடக்கூடாது என்று முடிவு கட்டுகிறார்கள். இது விஷயத்தில் ஊரார் நிலைமையை அனுசரித்து நடப்பதே அறிவுடையவனுடைய செயலாகும். ஊரெல்லாம் கூடி ஏதேனும் ஒரு மனிதனை வரவழைக்க வேண்டும் அல்லது வரவழைக்கக்கூடாது என்று முடிவு கட்டுகிறார்கள். அந்த இடத்தில் தேவையானால் நமது கருத்தையும் தெரிவிக்கலாம். பிறகு பெரும்பாலோர் செய்த முடிவை அனுசரித்துப் போவதே அறிவு படைத்திருப்பதற்கு அறிகுறியாகும். ஊரை ஒத்துப் போதல் பெரும்பான்மையோருடைய வசதியையும், இயல்பையும், செயலையும் அனுசரித்துப் பொதுக் காரியத்தில் ஈடுபடுதலாம்.

**கேள்வி : (274)** ***ஆரண்ய காண்டத்தில் பரதன் ராமனைக்காண வரும்சமயம், லக்ஷ்மணன், 'பரதன்படையெடுத்து வருகிறான். அனுமதியளியுங்கள். சின்னாபின்னப் படுத்திவிடுகிறேன்' எனப் பகர்ந்தான். ஆனால் அதே ராம காரியத்திற்காக, சீதா 'ராமனது அலறல்' என்ற நினைவில் லக்ஷ்மணனை உதவிக்குப் போகும்படி கூறுகிறாள். அப்பொழுது அவன் மறுத்தது ஏன்?*** ***பா.***

லக்ஷ்மணன் எப்பொழுதும் ராமனுக்காக வென்றே வாழ்ந்திருந்தான். ராமனுடைய நலத்தைத் தவிர வாழ்க்கையில் அவனுக்கு வேறு லக்ஷியம் ஒன்றுமில்லை. தமையன் மீதுவைத்த பற்றுதலால் பரதனுடைய வருகையை அவன்முறைதவறிப் பொருள்படுத்தினான். அப்படித் தவறுதலாக நினைத்ததற்கு இடையில் ராமபக்தியே அவனிடத்து மிளிர்கிறது.

ராமன் அழகிய மானைப் பிடிக்கப்போன பொழுது சீதைக்குக்காவல் இருக்கவேண்டுமென்று லக்ஷ்மணனிடம் அவர் உத்தரவு இட்டார். தமையன் சொற்படி நடக்க அவன் முற்றிலும் கடமைப் பட்டிருந்தான். ராமனுடைய குரலோசை கேட்டபொழுதும் அவருக்கு ஆபத்து வந்து விட்டது என்று லக்ஷ்மணன் சந்தேகப்படவில்லை. ஆனால் சீதைக்குச்சந்தேகம் வந்துவிட்டது. ராமனுக்கு உதவிபுரியப் போகவேண்டுமென்று சீதை உத்தரவு பிறப்பிக்கிறாள். அப்பொழுது ராமனுடைய சொற்படி நடப்பதா, அல்லது சீதையினுடைய சொற்படி நடப்பதா என்னும் நெருக்கடி அவனுக்கு உண்டாயிற்று. ராமனுடைய சொற்படி நடக்க அவன் ஆயத்தமாயிருந்தான். சீதைக்கு ஆறுதலும் சொன்னான். ஆனால் அவள் கேட்கவில்லை. அவளுடைய கடுஞ் சொல்லுக்கு இலக்காகி மனவாட்டத்துடன் அவன் ராமரைத்தேடிச் சென்றான். இவ்வாறு தேடிவந்ததைக் குறித்து அவர் சீற்றம் கொண்டார். இருவர் மனவருத்தத்தையும் லக்ஷ்மணன் அமைதியாக ஏற்றுக் கொண்டான். அத்தகைய தர்ம சங்கடத்தில் அவனுடைய பண்பு உச்ச நிலைக்குப் போகிறது.

**கேள்வி: (275)** ***ஆண்டவனிடத்துப் பிரார்த்தனை பண்ணினால்தான் அவர் உன்னைக் காப்பாற்றுவார். அப்படிப் பிரார்த்தனை பண்ணாவிட்டால் அவர் உன்னை நரகத்தில் தள்ளிவிடுவார் என்று கிறிஸ்துமதம் சொல்லுகிறது. ஹிந்துமதம் இதைப்பற்றி என்ன சொல்லுகிறது?*** த. நி.

தன்னை வணங்காதவர்களை யெல்லாம் நரகத்தில் தள்ளுவது கடவுளுக்குப் பொருந்தாது. ஹிரண்யகசிபு என்னும் அரக்கன் ஒருவன் இருந்தான். அவனை வணங்காதவர்களை யெல்லாம் அவன் சித்திரவதை செய்தான். அப்படிச் செய்வது அரக்கனுடைய இயல்பு. அவன் செய்தது போன்று கடவுளும் தம்மை வணங்காதவர்களை யெல்லாம் நரகத்தில் போட்டுவிடுவாராகில் அவர் மற்றொரு கொடிய அரக்கன் ஆய்விடுவார். ஆனால் அவருக்குக் கருணாகரக் கடவுள் என்று பெயர். உயிர்களை நிரந்தரமாகத் துன்புறுத்துவது அவருடைய திட்டமல்ல.

ஹிந்துமதக் கொள்கையின்படி கடவுள், ஒரு கற்பக விருக்ஷமாகிறார். கற்பக விருக்ஷத்திற்குக் கீழிருந்து நாம் விரும்புவதையெல்லாம் அது கொடுத்துவிடுகிறது. கடவுள் இயற்கை சொரூபமாக இருந்து வேண்டியவருக்கு வேண்டியதையெல்லாம் வழங்கி வருகிறார். சிலர் பொருந்தாததை வேண்டுகின்றனர். அதுவும் அவர்களுக்குக் கிடைத்துவிடுகிறது. அதனால் வரும் துன்பத்தைச் சகிக்க அவர்களுக்கு இயலுவதில்லை. பிறகு வேறொரு பொருளை நாடுகின்றனர். இத்தகைய ஆராய்ச்சிகள் எண்ணிறந்த பிறவிகளில் நிகழ்ந்து வருகின்றன. இறுதியில் நல்லறிவு வாய்க்கப்பெற்ற பிறகு நல்லார் கடவுளையே நாடுகின்றனர். ஈசுவரப் பிராப்தி அவர்களுக்கு உண்டாகிவிடுகிறது. அது வாய்ப்பதற்கு முன்பு பலவிதமான இன்ப துன்பங்களில் உழன்று உயிர் வகைகள் பக்குவமடைகின்றன. ஹிந்து மதம் இங்ஙனம் புகட்டுகிறது.

**கேள்வி: (276)** ***சம்பூர்ண ராமாயணத்தில் குகன் என்னும் அரசன் ராமனைப் பார்க்க வருகிறான். அவன் யார்? எவ்வாறு ராமனின் ஐந்தாவது சகோதரன் ஆகிறான்?*** வே. த.

இக்கோட்பாடு கம்ப ராமாயணத்திலேயே இருக்கிறது. யாரெல்லாம் நெருங்கிய நட்புக் கொண்டாடுகிறார்களோ அவர்களெல்லாம் சகோதரர்கள் ஆகிவிடுகிறார்கள். 'நால்வராயிருந்த நாங்கள் நட்பால் உன்னுடன் சேர்ந்து ஐவர் ஆகிவிட்டோம்' என்று தசரத ராமன் படகோட்டி வேந்தன் குகனுக்குச் சொல்லுகின்றான்.

# தானவீரன் கர்ணன்

## காட்சி 1

### *பரசுராமரும் கர்ணனும்*

பரசுராமர்: *மாணவா! இன்று நாம் மிகத் தொலைவான இடத்திற்குச் சென்று திரும்பியுள்ளோம். கால்கள் நோகின்றன. இமைகள் மூடுகின்றன. உடல் செயலாற்ற மறுக்கிறது. உள்ளம் அமைதி நிலையை நாடுகிறது.*

கர்ணன்: *குருதேவா! தம் ஏவுதல் ஏதுவாகிலும் அதை, சிரத்தால் ஏற்க உறுதிகொண்டுள்ளேன். உத்திரவிடவேண்டுகிறேன்.*

பரசுராமர்: *மாணவா! நானும் எண்ணற்ற மாணவர்கட்கு அஸ்திர வித்தையைக் கற்பித்திருக்கிறேன். ஆயினும் அறிவும், ஆற்றலும், பணிவும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற உன்னைப் போன்ற மாணாக்கனை இதுவரையில் பெற்றதில்லை.*

கர்ணன்: *இறைவா, நான் ஏதேனும் வித்தையைப் பெற்றிருக்கிறேனாகில் அது எல்லாம் தங்கள் மகிமையே. தாம் மாணவனைப் புகழ்வது என்னை நாணச் செய்கிறது. தம் உள்ளத்தின் உயர்வே அதற்கு ஏதுவாகும். அக்னியைச் சார்ந்த விறகுக்கட்டை அக்னியாகத் தானே வேண்டும்.*

பரசுராமர்: *இளைஞா! அங்ஙனம் கூறுவதும் சரி. ஆனால் நான் பொறுமை, அன்பு, பணிவு இவற்றிற்கு மாறுபட்ட சினம், கடுமை, சீற்றம் ஆகிய குணங்கள் நிரம்பப்பெற்றவன் என்பதை அறியாயோ?*

கர்ணன்: *(சிறிது கலக்கத்துடன்)* சூரியனுடைய ஒளி பெற்று சந்திரன் விளங்குவதில்லையா? சந்திரனுக்குச் சுயமாக ஒளி உண்டா? குருதேவருடைய பெருமைதான் என்னிடம் பிரதிபலிப்பதாகத் தாம் காண்கிறீர்.

பரசுராமர்: *கதிரவனுடைய ஒளியைத்தான் சந்திரன் பெறுகிறான். ஆயினும் அவ்வொளியிடமிருந்து எரிக்கும்தன்மையை நீக்கிவிட்டுக் குளிர்ச்சியை யளித்து மக்களைச் சந்திரன் மகிழ்விக்கிறான். அதைப் போலவே நீயும் என்னிடம் மக்கள் வெறுக்கும் அம்சங்களை நீக்கி உயர் குணங்களை ஏற்று உன் வீரத்தன்மையை விளக்கப் போகிறாய். இது உறுதி.*

கர்ணன்: *பிரபோ! பெரியோர்கள் பேசுவதெல்லாம் வேதவாக்குகளாகும்; ஆசிகளாகும்; வரங்களாகும்.*

பரசுராமர்: *(பெருமூச்சு விட்டுக்கொண்டு) கர்ணா! நான் உனக்குப் பிறகு வேறொரு மாணாக்கனுக்கும் கல்வி பயில்விக்கப் போவதில்லை. பல்லாண்டுகட்கு முன்பு மிகச் சிறந்த ஒரு மாணவன் இருந்தான். அவனையும் வெல்லக்கூடிய மாணாக்கன் இருப்பானாவெனப் பல நாட்கள் ஏங்கினேன். இன்று உன்னிடம் அதிகச் சிறப்பைக் கண்டேன். இனி எவனுக்கும் கல்வி பயில்விக்கப் போவதில்லை. உனக்குத் தெரியாத எதுவும் என்னிடம் இனி யில்லை. (சோர்வுடன்) சிறுவா! போதும். சற்றுத் துயில் புரிகிறேன்.*

*(கீழே தலையை வைத்து உறங்கப்போகிறார்)*

கர்ணன்: ஆசார்யா! வேண்டாம். இங்கு *தலையணைக்காக வேண்டிய கட்டையில்லை. ஆதலால் தாம் என் தொடையில் சிரத்தை வைத்துத் துயில் புரிய வேண்டுகிறேன்.*

பரசுராமர்: *சரி.*

*(துயில் புரிகிறார்.)*

கர்ணன்: *(தனக்குள்)* குருதேவர் நன்றாகத் துயில் புரிகின்றார். இவருடைய பேச்சு என் உள்ளத்தில் அச்சத்தை ஊட்டுகிறதே. பீஷ்மரைக் குறித்துப் பேசியதும், குருதேவரின் முகத்தில் எவ்வளவு

சினக் குறிகள் தென்பட்டன. நான் குருதேவரிடம் பிரம்மாஸ்திரத்தையும் பெற்ருயிற்று. இனி விடைபெற்றுச் செல்லவேண்டியதுதான். வெண்ணெய் வருகையில் தாழி உடைவது போல் இன்று இவருடைய உள்ளத்தில், 'ஆ! என்ன!! தொடைக்கடியில்!!!' பீஷ்மருடைய நினைவு வரவேண்டியது ஏனோ? இதுவும் என் விதியோ! ஆ! வலி பொறுக்க முடியவில்லையே! தொடையைக் குடைகிறதே ஒரு பூச்சி. ஆ, ஆ! நசுக்கி எறிந்து விடட்டுமா! கூடாது, கூடாது. குருதேவரின் துயில் கலைந்துவிடும். இந்த வலியைப் பொறுத்துப் பழகாவிடின் பகைவனுடைய கூரான அம்புகளை எவ்வாறு தாங்குவேன். பார்க்கலாம். உயிரா போய்விடும்.

(பொறுத்துக்கொண்டு பல்லைக் கடித்த வண்ணம் இருக்கிருன். உதிரம் பெருக்கெடுத் தோடுகிறது. பரசுராமருடைய தலையிலும் உதிரம் படுகிறது.)

பரசுராமர்: (அரைத்தூக்கத்தில்) சீடா! என்ன தலையில் ஏதோ நீர் படுகிறதே!

கர்ணன்: (அஞ்சிக்கொண்டு) ஆசார்யரே! ஒன்றும் இல்லை. வியர்வையாயிருக்கலாம். துடைத்து விடுகிறேன்.

(ஆடையால் துடைக்கிருன்.)

பரசுராமர்: என்னப்பா! துயில் கலைந்து விட்டதே! உன் உடலில் மட்டும் இவ்வளவு வியர்வை ஏற்படக் காரணம் என்ன? மாலை நேரம் தானே!

(எழுகிருர். ரத்தப் பெருக்கைக் கண்டு திகைக்கிருர்.)

மாணவா! என்ன இது? இவ்வளவு உதிரம் பெருகியும் எவ்விதம் நீ பொறுத்துக் கொண்டிருக்கிருய். உனக்கு வலியேற்படவில்லையா? ஆ! என்ன பொறுமை!!

(ஒரு பூச்சியைக் கைகளால் வீசி எறிகிருர்.)

கர்ணன்: ஆசார்ய தேவா! மன்னியுங்கள். தம் துயில் கெடாதிருக்க வேண்டுமென்ற அவாவினுலேயே இவ்வளவையும் பொறுத்துக் கொண்டிருந்தேன். வலி அதிகம்தான். ஆயினும் பயன் இல்லை. தம் துயிலென்னவோ கலைந்து விட்டது.

பரசுராமர்: உன் பொறுமை என்னைத் திகைக்கச் செய்கிறது. அரக்கர்களும் செய்தற்கரிய செயல்களை ஆற்றி ஓய்ந்து போனஎனக்கே வியப்பேற்படுகிறதே! என்னுல் கூட இந்தவலியைப் பொறுக்க முடியாதே! என்ன மன உறுதி! அப்பா!! எவ்வாறு இதை நீ பெற்ருய். க்ஷத்திரிய இரத்தம்கலந்தமையினுல்தான்எனக்கே இந்தத் திறமை ஏற்பட்டுள்ளது. உனக்கு எப்படிப் பிரம்மதேவன் இவ்வுயர்வை யளித்தான்?

கர்ணன்: எல்லாம் தம் அருளினுல் தான்!

பரசுராமர்: ஒரு நாளும் இல்லை. என் அருளினுல் அஸ்திரங்கள் கிடைக்கும். மன உறுதி ஏற்பட முடியாது. (தனக்குள்) பீஷ்மனையும் மீறுவான் போலிருக்கிறதே! அந்தணனுக்கு எவ்வாறு இத்திறன் ஏற்படும்! (வெளிப்படையாக) மாணுக்கா! எழுந்திரு. முதலில் உன் பெற்ரேரை நேரில் கண்டு மகிழ்ந்தாக வேண்டும். புறப்படு.

(எழுந்திருக்கிருர்)

கர்ணன்: குருதேவா! அது மிகவும் தொலைவான கிராமம். தாம் அங்குச் செல்ல முடியாது.

பரசுராமர்: மாணவா! இருபத்தொரு முறை பூமியை வலம் வந்துள்ள பரசுராமன் பார்க்காத இடமோ, தொலைவான இடமோ, பூவுலகில் இல்லை. முதல் வேலை இது. பிறகுதான் எந்தச் செயலும். புறப்படு.

கர்ணன்: ஆசார்யா! என் பெற்ரேரை நானே நன்ருக அறியேன். தாம் எவ்வாறு அறிய முடியும்!

பரசுராமர்: அவர்கள் நீ சிறுவனுக இருக்கையிலேயே இறந்து விட்டனரா?

கர்ணன்: அதுவும் எனக்குத் தெரியாது.

பரசுராமர்: நீ பொய் பேசுகிருய்.

கர்ணன்: ஆசார்ய! அந்தப் பழக்கத்தையே நான் அறியேன்.



பரசுராமர்: அங்ஙனமாகில் நீ எங்குதான் வளர்ந்தாய்.

கர்ணன்: எவரிடமோ வளர்ந்தேன்.

பரசுராமர்: போகட்டும். நீ அந்தணன் என்று சொன்னுயே, அதாவது உண்மையா?

(பேசாது தலைகுனிந்து நிற்கிருன்.)

பரசுராமர்: ஓ! ஓ!! இதுதான் பொய் பேசாத லட்சணமோ! நன்ருய் இருக்கிறதே. இப்பொழுதாவது உண்மையைச் சொல். நீ அந்தணன் என்று உன் உள்ளத்திலாவது நம்பிக்கை யுண்டா?

கர்ணன்: நம்பிக்கை யில்லை.

பரசுராமர்: பின் ஏன் உறுதியாக அந்தணன் என்று சொன்னுய். என்னை ஏமாற்றி விட்டாயே? ஐயோ! ஒருமுறை க்ஷத்திரியனுன பீஷ்மனிடம் தோல்வியடைந்ததற்காகத்தானே க்ஷத்திரியர்கட்குப் போதிப்பதில்லை என்று ஆணையிட்டேன். என் பிரதிக்ஞை வீணுகி விட்டதே!

கர்ணன்: மன்னிக்கவும்.

பரசுராமர்: சீடா! மன்னிப்பதா? நான் பன்முறைகேட்டும், அந்தணன் என்றே கூறியது ஏன்? விடையளி. என் சினம் உள்ளத்தில் அடங்காமற் பொங்கியெழுகிறது.

ராகம் அடாணு. தாளம்: ஆதி

(பல்லவி)

நீயும் ஒரு அந்தணன்தானு நிஜந்தானு (நீ)

(அநுபல்லவி)

பொய்யும் புளுகுமே என்னிடம் புகன்ருய்<br>
பையா நீ கற்றதெல்லாம் மெய்யாகிப் போகுமடா(நீ)

(சரணம்)

பஞ்சை போல வந்து நீயும்<br>
நெஞ்சமதிலுள்ள தெல்லாம்<br>
வஞ்சமாகக் கற்றதுவும்<br>
ஏனோ உந்தன் கர்மம் தானே<br>
என்னிடமே யிருந்து உற்றதெல்லாம் அறிந்து<br>
கற்றதெல்லா மறந்து மற்றறப் போகுமடா (நீ)

கர்ணன்: ஆசார்யா! கல்வியைப் பெறுவதற்காக நான் உண்மையை மறைத்தேன். பொய்யையும் கூறினேன். உண்மையில் என் பிறவி ரகசியம் எனக்கே தெரியாது. குருதேவே! என் செயலை மன்னித்து எனக்கு விடை கொடுத்தனுப்பி விடக் கோருகிறேன்.

பரசுராமர்: மன்னிப்பா! தன் குரு தக்ஷிணைக்காகவே சமீபத்தில் ஏகலவ்யன் துரோணருக்குக் கை விரலை யிழந்தான். அவனல்லவா மாணுக்கன்! நீயும் அவனும் ஒன்ரு? ...... ஆ, உன்னை நொந்து என்ன பயன்? என் அறிவு எங்குச் சென்றது? என்னையே நொந்து கொள்ள வேண்டும்.

கர்ணன்: குருதேவா! என்னை மன்னித்து விடுங்கள். நான் ஏகலவ்யனுக்கு எந்த விதத்திலும் தாழ்ந்தவனல்லன். உயிர் முதல் என் வசமுள்ள எந்தப் பொருளையும் குரு தக்ஷிணையாக அளிக்க முடியும். நான் ஒருசுயநலப்பித்தன் அல்லன். வாழ்வதாயின் ஓர் லக்ஷ்ய புருஷனுக வாழ வேண்டும் என்ற ஒரே குறிக்கோள் என் உள்ளத்தில் உள்ளது.

பரசுராமர்: (சினந்தணிந்தவராய்) சீடா! மெச்சினேன். பூமி முழுதையும் தானமாகஅளித்த நானு உன்னிடம் குரு தட்சிணையை வேண்டுவேன். எனக்கு எதிலும் விருப்பமில்லை. சுயநலப்பித்தனல்ல என நீ கூறியது என் உள்ளத்தில் பொங்கிய சினக்கனலை அவித்துவிட்டது. நீ, தியாக உணர்ச்சி பெற்று வாழக்கூடும். ஆயினும் வினைப்பயன் எவனைத்தான் விட்டு அகலும். நீ கண்ணுடியில் காணும் உனது பிம்பம் உன்னைப் போன்றுதானே இருக்கிறது. உன் வினைப்பயனும் அத்தகையதே. ஏமாற்றிப் பெற்ற உயர்ந்த அஸ்திரங்கள் உன் உயிருக்குச் சோதனை ஏற்படுங் காலத்தில் மட்டும் உனக்குத் தோன்ரு தொழியும்.

கர்ணன்: (அமைதியுடன்) குருதேவா! வணங்குகிறேன். தாய் தந்தையரையும்

பிறந்த நாட்டையும் அறியாது வாழ்ந்த எனக்கு விதி அனுகூலமாக இருக்க முடியாது. அதிலெனக்குக்கவலையில்லை. வாழ்வில் பற்றையும் சாவில் வெறுப்பையும் இழந்த என் உள்ளத்தில் பிறருக்கு உதவவேண்டும் என்ற அவா ஒன்றே உளது. நற்காலத்தின் அடையாளமாக தாம் அளித்த சாபம் என் சுயநலத்தை மாத்திரம் அழிக்குமேயன்றிப் பிறருக்கு உதவுவதில் தடையைச் செய்யாது. இவ்வுதவிக்காக நான் தமக்கு என்றும் கடமைப்பட்டிருப்பேன். அருள் புரிக.

பரசுராமர்: (கண்களில் நீர் மல்க) மாணவா! உன் பணிவு என்னைக் கவர்ந்து விட்டதே! நான் என்ன செய்வேன். சொன்ன சொல்லை மாற்ற எனக்கே உரிமையில்லை. வாழ்விலும் சாவிலும் நீ ஆதர்சபுருஷனாக விளங்குவாய். உன் பாக்கியம் அவ்வளவுதான். சென்றுவா.

(பிரிகின்றனர்.)

## காட்சி 2

## வேதியரும் கர்ணனும்

(வேதியர் வீற்றிருக்கக் கர்ணன் எதிரில் நிற்கிறான்.)

கர்ணன்: பெரியோரே! வணக்கம். தீக்குழம்பைக் கக்க இருக்கும் எரிமலையின் அருகில் உள்ளவர் உள்ளம் போல் என் மனம் பதைக்கிறது. என் விண்ணப்பத்திற்குச் செவி சாய்த்து ஓர் பிராயச்சித்தத்தை விதிக்கவேண்டுகிறேன்.

வேதியர்: (கண்களில் நீர்பெருக) அன்பா! பாலைவனத்தின் மையத்தில் நீரைவேண்டினால் எவர்தான் கொடுக்க முடியும்? நீருள்ள இடத்திற்குப் போகுமாறு தான் சொல்லவேண்டும். மாலுமியை இழந்து நடுக்கடலில் ஊசலாடும் படகைப்போல் என் உள்ளம் பதறுகிறது. கன்றையிழந்து கதறும் பசுவின் துன்பத்தை நீக்க வகையறியாது வாடுகிறேன். எந்தப் பாபி இக்கொடுஞ் செயலைச் செய்தானோ! மனம் வாடியிருக்கும் என்னிடம் நீ உபதேசம் பெறுவதெங்ஙனம்? வேறெங்காவது செல்.

கர்ணன்: ஸ்வாமி! (நடுக்கத்துடன்) அத்தீச்செயலை ஆற்றிய கயவன்தான் தம்மெதிரில் மன்னிப்பை நாடி நிற்கிறான். வேண்டுமென்றே, அறிந்தோ அச்செயல் செய்யப்படவில்லை. இருள் நேரத்தில் அக்கன்று என் தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டு மாண்டது. என் தாபத்திற்கு எல்லையே இல்லை.

வேதியர்: (சினம் பொங்க) ஆ! நீயா அந்தப் பாபி! எப்படியடா அவ்வளவு கவனக் குறைவு ஏற்பட்டது! உன் போன்றோரிடம் அரசாங்கப் பாதுகாப்பு ஒப்படைக்கப்பட்டால் என்ன நிலை ஏற்படும்?

கர்ணன்: ஐயா! அறியாமற்செய்து விட்டேன். நான்படும் பச்சாத்தாபம் ஒன்றே எனக்குப் போதுமான தண்டனையாகும். அறியாது செய்த செயலுக்குப் பிராயச்சித்தம் இல்லையா?

வேதியர்: (இரக்கத்துடன்) அப்பா! உயர் குணங்களைப் பெற்றிருக்கின்றாயே! என் உயிருக்கு நீ தீங்கிழைத்திருந்தாற் கூட மன்னித்திருப்பேன். பேசுமாற்றலற்ற அப்பசுவின் துயரத்தை என்னாற் பொறுக்க முடியவில்லையே?

வைஷ்ணவ ஜனதோ என்றமெட்டு

மாயா உலகில் காய மெடுத்த
மானிடரே கேளுங்கள் (மாயா)
தாயும் சேயும் பிரிந்ததினாலே
சன்மார்க்க மில்லா சிநேகமதாலே
தீய எண்ணம் நிறைந்ததினாலே
தூய உள்ளம் துடிப்பதைப் பாரீர் (மாயா)

வினைப்பயனைப் பெறாதிருப்பது எவர்க்கும்முடியாது. நீயும் அதைப்பெறுவாய். இளங்கன்றின் உதிரம் தோய்ந்த அச்சக்கரம் உன் உயிருக்குச் சோதனையேற்படும்போது பூமியில் அழுந்திப் புதைந்து செயலற்றுப் போய்விடும்.

கர்ணன்: ஸ்வாமி! எந்தச் சாபத்தையும் நான் ஏற்க முடியும். என்னைத் தவத்தி



யினால் எரித்துவிடக் கூடாதா? அஃது உயர்வாயிருக்குமே! எல்லோரும் என் வாழ்வின் லக்ஷியங்களுள் ஒன்றாகிய போர்த்திறனையே அழிக்க முற்படுகின்றீர்களே! வேறு சாபம் அளிக்கக் கூடாதா?

வேதியர்: சொன்ன சொல்லை மாற்றுவதேது? ஆனால் ஒன்று மட்டும் உறுதி. எத்தவத்தாலும் நீக்க முடியாத இக்கொடும் பசுக் கொலையையும் (கோஹத்தி) சிசுக் கொலையையும் (ப்ரூணஹத்தி) நீ செய்தவனாகி விட்டாய். உன் உண்மைப் பச்சாதாபமே அதற்குவிமோசனம்அளிக்கும். நீ சிறந்த தியாகியாக விளங்குவாய். சென்றுவா.

(போகிறார்)

கர்ணன்: (ஏக்கங்கொண்டவனாய்) ஈசா! இதுவும் ஒரு சோதனையா! முயற்சிக்கும் முட்டுக் கட்டைக்கும் ஏற்பட்டுள்ள போராட்டத்தில் நானா உதாரணமாக அகப்பட்டுக் கொள்ளவேண்டும்? நானா இதற்கு ஆதர்ச புருஷனாகவேண்டும்? பார்க்கலாம். முயற்சியினால் எவ்வளவு தூரம் முன்னேறக்கூடும் எனப் பார்த்து விடுகிறேன்.

(செல்கிறான்)

## காட்சி 3

## துர்யோதனனும் கர்ணனும் துரோணரும்

இடம்: விசாலமான மைதானம்.

(துரோணர், அர்ஜுனன், கர்ணன், துர்யோதனன், மற்றும் பலர் வீற்றிருக்கின்றனர்.)

துரோணர்: சபையோரே! உங்களுக்கு இதோ ஒரு அறிவிப்பு. உங்கள் மூலமாக வெளியினருக்கும் இதுவே அறிவிப்பாகும். நான் பல்லாண்டுகளாக ஓர் மாணவனைத்தேடிக் கொண்டிருந்தேன். அவனைக்காணாது வருந்தினேன். இன்று அவனைக்கண்டுவிட்டேன். நன்கு காய்ச்சிய பொன்னைப்போல், அவனை நன்கு சோதனை செய்து, மன உறுதி பெற்று இன்று வெளிப்படையாக அறிவிக்க முன் வந்தேன். எவனிடம் நான் அதிகமான, அளவிற்கு மீறிய, அன்பைப் பொழிவதாக நீங்கள் குற்றச்சாட்டைக் கூட என்மீது சாட்டினீர்களோ, அதே அர்ஜுனனையே நான் குறிப்பிடுகிறேன். எனக்குத்தெரிந்த எல்லாவற்றையும்அர்ஜுனன் அறிவான். அவனுக்கு நிகரானவரோ, அவனை வெல்லக் கூடியவரோ, உலகிலேயே இல்லையென்பது உறுதி. என் மகன் அச்வத்தாமனுக்கே இது பிரியமாயில்லாமல் இருக்கலாம். உண்மையை நெடுநாளைக்கு மறைத்துவைக்க முடியாது. உண்மையைக் கேட்கச் சிலருக்குப் பிடிக்காது. அதற்கு நான்என்ன செய்வது? சூரிய வெளிச்சத்தையும் காற்றின் பரவுதலையும் எவர் தடை செய்யக்கூடும்?

துர்யோதனன்: (சினத்துடன்) அன்பு அறிஞரையும் குருடராக்கிவிடுகிறது. உம் மாணவனை எவ்வளவு வேண்டுமானாலும் புகழலாம். தடையில்லை. வேறெவரும் இல்லையென்று தாம் எவ்விதம் கூறுவீர்கள்?

துரோணர்: இதையே அச்வத்தாமன் பன்முறை என்னிடம் கேட்டிருக்கிறான். நான் அவனுக்குக்கூட இன்னும் பல அஸ்திரங்களை உபதேசிக்கவில்லை.

துர்யோதனன்: ஆசார்யரே! நீர் நன்கு சொன்னீர். பெற்றெடுத்த மகனுக்கே த்ரோகம் நினைக்கும் நீர், சம்பளம் கொடுக்கும்அரசனுடைய குமாரனுக்குச் சொல்லிக் கொடுக்காமல் இருந்ததில் என்னவிந்தை! உம்மைச் சொல்லி என் செய்வது! புறக்கண்களிலும், அகக் கண்ணான அறிவிலும் குருடரான என் தந்தையைத்தான் திட்டவேண்டும்.

(தொடரும்)

# மாணவருக்கு ஒருசொல்

(35)

**நிமிர்ந்து நில்**

உயிர் வாழ்பவைகளை நிலைத்திணை, இயங்குதிணை என இரண்டாகப் பிரிக்கிறோம். மரம்செடி கொடிகள் நிலைத்திணை. முளைத்த இடத்திலேயே அவைகள் நிற்கவும், படுத்துக் கிடக்கவும், படர்ந்துபோகவும் செய்கின்றன. நிலைத்திணையை ஸ்தாவரம் என்றும் சொல்லுகிறோம். இயங்குதிணைக்கு ஜங்கமம் என்பது மற்றொரு பெயர். இடம் மாறிப் போக வல்லது இயங்குதிணை. நடப்பன, பறப்பன, நீந்துவனயாவும் இயங்குதிணையைச் சேருகின்றன. நீந்துபவைகளுக்கு நிற்கத் தெரியாது. நடப்பவைகளும், பறப்பவைகளும் நிற்க வல்ல உயிர்களாகின்றன.

மனிதனுக்கு மட்டும் எப்பண்பும் இயல்பாக அமைவதில்லை. மற்ற உயிர்வகைகளுக்கு இயல்பாக நீந்தத்தெரியும். மனிதனோ நீந்தக் கற்றுகவேண்டும். மற்ற உயிர் வகைகளுக்கு இயல்பாக நன்கு நிற்கத் தெரியும். மனிதன் நன்கு நிற்கக் கற்பது கல்வியில் முக்கியமான இடம் பெற்றிருக்க வேண்டும். மனிதன் எப்பொழுதுமேகுதிரை போன்றோ, யானை போன்றோ நின்று கொண்டிருப்பவனல்லன். நிற்க வேண்டிய வேளைகளில் அவன் எப்படி நிற்பது என்பதுதான் கேள்வி. மாணவர்கள் நன்கு நிற்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். நன்கு நிற்கத் தெரிந்து கொண்டவனே நல்ல மாணாக்கன். மாண்பு உடையவனைத் தன்னை ஆக்குபவன் மாணாக்கன். நிற்பதில் ஒரு மாண்பு உண்டு. உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் நேர் கோடாக நிமிர்ந்து நிற்பதுபொதுவிதி. சிலர் தலையை வளைத்துக் கொண்டு நிற்பர். சிலர் கூன் விழுந்து நிற்பர். இன்னும் சிலர் உடலைப் பின்புறம் வளைத்துக் கொண்டு நிற்பர். வேறு சிலர் இடுப்பை முன்னுக்கோ, பின்னுக்கோ, வலதுமருங்கிலோ, அல்லது இடது மருங்கிலோ வளைத்துக்கொண்டு நிற்பர். மற்றும் சிலர் கால்கள் இரண்டையும் பின்னிக்கொண்டு நிற்பர். சிந்தித்துப் பாராத ஒரு சிலர் உடல் பாரம் முழுதையும் ஒரு காலின்மீது போட்டுக்கொண்டு மற்றொரு காலை வளைத்துக்கொண்டு நிற்பர். மேலும் ஒரு சிலர் பாதம் முழுதும் பூமியில் படியும்படிசெய்யமாட்டார்கள்; குதிகால் அல்லது பாதத்தின் விரல் பகுதியைத்தூக்கியவாறு நிற்பார்கள். ஒருசிலர் பாதங்கள் இரண்டையும் மிகைபட அகற்றிக் கொண்டும் கால்களைவளைத்துக்கொண்டும் நிற்பர். இது காறும் இயம்பிய குறைபாடுகள் நிற்பதில் நுழைந்து விடலாகாது. நிமிர்ந்து நிற்கிற மாணாக்கன் கடவுள் வணக்கம் செய்கின்ற பொழுது பாதங்கள் இரண்டும் ஒன்றோடு ஒன்று ஒட்டியிருக்கச் செய்யவேண்டும். மற்றவேளைகளில் பாதங்கள் இரண்டுக்குமிடையில் சிறிது இடைவெளி இருக்க வேண்டும். பெரியோர்களிடம் பேசும் பொழுது சிறிது தலைவணங்கி நின்று பேச வேண்டும். தெய்வத்தையும், மக்களையும் வணங்குகின்றபொழுது தலை வணங்குவது முற்றிலும் அவசியம். நின்றுகொண்டு ஓய்வு எடுக்கிறபொழுது உடல் உறுப்புகள் சிறிது தளர்வுற்று இருக்கலாம். ஓய்வு எடுப்பதைவிட முறையாக நின்றுகொண்டு இருப்பது அன்றாட வாழ்க்கையில் திரும்பத் திரும்ப நிகழும் நிகழ்ச்சியாகும். அப்படி நிற்கின்ற வேளைகளில் எல்லாம் உடல் அசையாது நிமிர்ந்து அடக்க ஒடுக்கத்துடன், அமைதியுடன், முகமலர்ச்சியுடன் உறுதியாக நிற்க மாணாக்கன் கடமைப்பட்டிருக்கிறான். நெடுநேரம் உறுதியாக அசையாது மாண்புடன் நிற்கக் கற்றுக் கொண்டவன் நன்கு வாழக் கற்றுக் கொள்பவன் ஆகிறான்.

# குறிப்புகள்

**ஏசுகிறிஸ்துவின் ஜயந்தி**

டிசம்பர் மாதம் இருபத்து நான்காம் தேதி நள்ளிரவிலும் இருபத்தைந்தாம் தேதி விடியற்காலத்திலும் ஏசுநாதர் பிறப்பெடுத்த நேரமாகிறது. அவ்வேளையில் அவருடைய ஜயந்தி கொண்டாடப் பெறுகிறது. கொண்டாடுகிற நேரம் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியை ஒத்திருக்கிறது. ஏனென்றால் இருவரும் நள்ளிரவில் பிறந்தவர்கள். கிறிஸ்துவின் ஜயந்தி ஆங்கில மொழியில் கிறிஸ்மஸ் எனப்படுகிறது. கிறிஸ்மஸ் பண்டிகை என்று அது தமிழ் மொழியில் வழங்கிவருகிறது. ஹிந்துக்களுடைய வீடுகளில் பொதுவாக கிறிஸ்மஸ்பண்டிகை கொண்டாடப்படுவதில்லை. ஆனால் இப்பொழுது ஸ்தாபனங்களில் ஏதேனும் ஒருவிதத்தில் அதைக் கிறிஸ்துவர்கள் அல்லாதவர்களும் கொண்டாடுகிறார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் பல ஸ்தாபனங்களில் அது பக்தி விசுவாசத்துடன் கொண்டாடப்படுகிறது. அதில் ஹிந்துக்களே பெரிதும் கலந்துகொள்கின்றனர். இத் தபோவனத்தைச் சார்ந்த ஸ்ரீ விவேகானந்த வித்யாவனம் உயர்நிலைப் பள்ளியில் ஹிந்து ஐதிகத்துக்கு ஒப்ப அது அனுஷ்டிக்கப்படுகிறது. ஏசுநாதரின் படம் ஒன்று அலங்கரித்துக் கொலுவில் வைக்கப்படுகிறது. ஹிந்துமத ஐதிகத்துக்கு ஒப்ப வந்தனை வழிபாடு நிகழ்கிறது. பஜனை, அர்ச்சனை முதலியன அவ் வழிபாட்டில் இடம் பெறுகின்றன. ஏசுநாதர் பிறப்பைப் பற்றி பைபிளினின்று வாசிப்பது அவருடைய ஜீவிதத்தின் மகிமையைப் பற்றி இரண்டொருவர் சுருக்கமாகச் சொற்பொழிவாற்றுவதுபோன்ற நிகழ்ச்சிகளும் அவ்விழாவில் இடம்பெறுகின்றன.

இங்ஙனம் நாம் ஏசுநாதரைப்போற்றும் முறையை நம்மவரில் ஒருவர் கிறிஸ்துவர் கூட்டம் ஒன்றில் எடுத்துப் பேசினார். அதற்குக் காது கொடுத்துக்கொண்டிருந்தவர்களுக்கிடையில் ஒருவர் எழுந்திருந்து அதற்குத் தடைகூறத் தொடங்கினார். "நீங்கள் செய்துவருவது ஏதோ ஒரு விதத்தில் ஆராதனை போன்று தென்படலாம். ஆனால் உண்மையில் அது கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாட்டமாகாது. ஏசுநாதரும் அதைத் தமது ஆராதனையாக அங்கீகரிக்கமாட்டார். நீங்கள் செய்துவருவது விக்கிரக ஆராதனைக்குஒப்பானது. உண்மையான கடவுள் வழிபாடு கிறிஸ்தவர்களாகிய எங்களிடத்தில்தான் இருக்கிறது. மற்ற மதஸ்தர்களுக்கு அந்த வழிபாட்டுமுறை ஒன்றும் தெரியாது". இப்படியெல்லாம் அவர் பேசி முடித்தார்.

ஈண்டு இரண்டு விஷயங்கள் ஆராய்ச்சிக்கு உரியவைகள் ஆகின்றன. ஒரு வழிபாட்டு முறையை வெறும் விக்கிரக ஆராதனை என்று மேற்பூசலாக யாரும் முடிவு கட்டலாகாது. ஆராதனை முறைகளின் எண்ணிக்கைக்கு ஒரு முடிவு இல்லை. அத்தனை விதமான வழிபாடுகளுள் கடவுளுக்கு ஏற்புடையது எது, விலக்கப்படுவது எது என்று மனிதன் முடிவுகட்டலாகாது. செய்யும் வழிபாட்டுக்கு அடிப்படையாயிருக்கும் எண்ணத்தையும் பக்தியையுமே கடவுள் அங்கீகரிக்கிறார். சடங்கு எத்தகையது என்பது முக்கியமானதல்ல. அதன் மூலம் எத்தகைய உணர்வு வெளியாகிறது என்பதே முக்கியமானது. கிறிஸ்தவர்கள் அல்லாதவர்க்கு கிறிஸ்து நாதரிடம் பக்தி வரமுடியாது என்று பகர்வது விவேகி ஒருவனுடைய கூற்று ஆகாது. நல்ல பக்தன் ஒருவன் எப்பெரியவரை வேண்டுமென்றாலும் மனமாரப் போற்றலாம். ஹிந்துக்கள் அத்தகைய ஐதிகத்தில் ஊறி வளர்ந்தவர்கள். கிறிஸ்தவர்களோ தங்களுடைய கர்த்தரை மட்டும் போற்றுவார்கள். உலகில் தோன்றியுள்ள எல்லா பெரு

மக்களைப் புறக்கணிப்பதும் அலட்சியப் படுத்துவதும் அவர்களுடைய மதக்கோட்பாடு. ஹிந்துக்களோ பெருமக்கள் யாரையும் அப்படி அலட்சியப்படுத்துவதில்லை.

இந்தியாவில் கிறிஸ்துவ மதம் ஆங்கில அரசாட்சிக்கு உரியதாய் இருந்து வந்தது. அவ்வரசாட்சி முடிவுக்கு வந்தபிறகு அப் பதவியினின்று கிறிஸ்துவமதம் தானாக இறங்கி விட்டது. ஆனால் இந்தியப் பண்பில் மேலாம் மதங்களெல்லாம் முறையாக இடம் பெறுவது இந்த நாட்டின் ஐதிகமாக இருந்து வந்திருக்கிறது. வேறு ஒரு விதத்தில் பகருங்கால் உலகிலுள்ள சமயங்கள் அனைத்தும் இந்தியாவில் இடம் பெற்று இருக்கின்றன. அதுதான் இந்தியப் பண்பு. மேன்மை தங்கிய சமயங்களை யெல்லாம் அங்கீகரிப்பது இந்திய மக்களின் இயல்பு. அத்தனை விதமான மதங்களுக்கு இடம் கொடுப்பது ஹிந்து மதத்தின் மகிமை. எனவே இனி எக்காலத்திலும் கிறிஸ்துவ மதம் இந்தியாவில் நிலைத்திருக்கும். அதை அழித்துவிட நன் மக்கள் யாரும் முயற்சி எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அது அழிந்துபட்டுப் போக வேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் வழிபாட்டு முறைகளில் மேல்நாட்டவர்கள் கையாளுபவைகளைவிட இந்தியர்கள் கையாளுபவைகள் பலவிதங்களில் மேலாம் தத்துவங்களோடு பொருந்தியவைகளாய் இருக்கின்றன. முறையாக ஆராய்ச்சி செய்பவர்களுக்கே அது நன்கு விளங்கும். ஏசுநாதரின் வழிபாடு இனி இந்தியாவில் படிப் படியாக மாறியமைந்து விடும். இப்பொழுதே இந்தியக் கிறிஸ்துவர்களுக்கிடையில் பலபேர் இந்தியாவின் ஐதிகத்துக்கு ஒப்பஏசுநாதரைவணங்கவும், விழாக்களும், உற்சவங்களும் கொண்டாடவும் ஆரம்பித்திருக்கின்றனர். இனி, நாளடைவில் அவ்வழிபாடு முற்றிலும் இந்தியாவுக்கு ஒத்ததாக மாறிவிடும். அப்பொழுது கிறிஸ்துவ மதமும் மதங்களுக்கெல்லாம் தாய்மதமாக இருக்கிற ஹிந்து மதத்தில் பொருத்தமான ஓர் இடம் பெற்றுவிடும். தன்னிடத்து வரும் மதக்கொள்கைகளையும், கோட்பாடுகளையும் தனக்குரியவைகளாக்குவதுதான் ஹிந்து மதத்தின் இயல்பு. அதனிடத்து உள்வலிவு மிக இருப்பதால் தனது பரந்த வடிவத்தை அது இழந்து விடுவதில்லை. தன்னோடு தொடர்பு கொள்ளும் மற்ற மதங்களையும் சிறிது சிறிதாகத் தன்மயம் ஆக்குகிறது. எனவே எதிர்காலத்தில் கிறிஸ்துவ மதமானது ஹிந்து மதத்தினுள் லயமாகிவிடும். அதனால் கிறிஸ்துவ மதத்தின் வியக்தி அழிந்துபட்டுப்போகாது. தாய நிலையில் ஹிந்துமதத்தினுள் அதுபாதுகாத்து வைக்கப்படும். இந்தியக் கிறிஸ்தவர்கள் இதை விரைவில் அறிந்துகொள்வது அவசியம்.

## செய்திகள்

**நிகழ்பவை**

ஜனவரி மீ 18ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கோயமுத்தூருக்கு அருகிலுள்ள திருப்பேரூர் சிவாலயத்தில் காலை 10 மணி முதல் மாலை 4-30 மணிவரையில் அந்தர்யோகமும், தாயுமானவர்பாடல் விரிவுரையும் ஸ்ரீமத் சித்பவானந்த சுவாமிகள் நிகழ்த்துவார்கள். 22ம் தேதி வியாழக்கிழமை விவேகானந்த உயர்நிலைப்பள்ளி பொங்கல் விடுமுறைக்குப்பின் திறக்கப்படும். 28ம் தேதி புதன்கிழமை ஸ்ரீ சாரதா வித்யாலய நிர்வாக சம்பந்தமாக சுவாமிகள் சேலத்திலிருப்பார்கள். 29ம் தேதியன்று சேலம்ஜில்லா கோழிக்கால் நத்தம் என்னும் கிராமத்தில் நிகழும் சமுதாய க்ஷேம நலச் சங்கத்தின் ஆண்டு விழாவில் சுவாமிகள் கலந்துகொள்வார்கள்.

பிப்ரவரி மாதம் 25, 26, 27 ஆகிய மூன்று தினங்கள் தபோவனத்தில் அந்தர்யோகம் நடைபெறும். இதுபற்றிய விவரம்இவ்விதழில் பொருளடக்கத்துக்குப் பின்புறம் வெளிவந்துள்ளது. மார்ச்சு மாதம் 1ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜயந்திவிழா கொண்டாடப் பெறும். அதுபற்றிய நிகழ்ச்சிமுறை அடுத்த மாத தர்மசக்கரத்தில் வெளிவரும்.


ஸ்ரீ ராமகிருஷ்ண

# தபோவனப் பிரசுராலயம்

திருப்பராய்த்துறை போஸ்ட், திருச்சி ஜில்லா

## எங்கள் கிளை விற்பனை நிலையங்கள்

1. ஸ்ரீ T. P. மாரிமுத்து பிள்ளை, கோணமண்டபம், தாயுமானசுவாமி கோவில், திருச்சி.
2. ஸ்ரீ ச. சு. நடராஜன், 51, அம்மன் சந்நிதி, மதுரை.
3. ஸ்ரீ T. ராமலிங்கம் பிள்ளை, கதர் ஸ்டோர்ஸ், கடைவீதி, பொள்ளாச்சி.
4. பாரத் கேப், பவானி.
5. ஸ்ரீ R. பூவராகவ மூர்த்தி, பஸ் ஸ்டாண்ட், பவானி.
6. ஸ்ரீ ராமலக்ஷ்மண & கோ., அருணாசல ஆசாரி தெரு, சேலம் டவுன்.
7. தி கோயமுத்தூர் மெட்டல் மார்ட், பாத்திரக்கடை, 26|265 பெரியகடைவீதி, கோயமுத்தூர்.
8. சண்முகவிலாஸ் புக்ஸ்டால், ஸ்ரீ சுப்ரமண்யசுவாமிகோவில், திருச்செந்தூர்.
9. வெங்கடேஸ்வரா லாட்ஜ், அடிவாரம், பழனி.
10. ஸ்ரீ A. S. K. சங்கரலிங்க நாடார், வியாபாரம், விருதுநகர்.
11. ஸ்ரீ S. K. S. ராஜமணி நாடார், 65 C. தெற்கு ராஜவீதி, தூத்துக்குடி.
12. ஸ்ரீ K. C. S. அண்ணாமலைநாடார், தி பிரிலியண்ட் டிரேடிங்கார்ப்பரேஷன் LTD. 4-A, பேஸின் பிரிட்ஜ் ரோடு, போன் 3876, சென்னை-1
13. ஸ்ரீ P. K. மாதவன், 7, ஷண்முகராயபிள்ளை வீதி, புரசவாக்கம், சென்னை-7
14. ஸ்ரீ சி. ஜம்புலிங்கம் பிள்ளை, டிரங்கு ரோடு, திருவானைக்காவல்.
15. காந்தி ஆசிரமம் காதிபந்தர், கடைவீதி, சேலம்.
16. ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், 70, நெல்லுக்காரத்தெரு, காஞ்சீபுரம்.
17. ஸ்ரீ R. நாராயணசாமி ரெட்டியார், மாடர்ன் கேப், திருவண்ணாமலை.
18. ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம், பசுவங்குடி, பெங்களூர்—4.
19. ஸ்ரீ C. G. ராமாநுஜம் செட்டியார் சன்ஸ், மேல சன்னதி, சிதம்பரம்.
20. ஸ்ரீ மே. ச. மாணிக்கவாசகம் பிள்ளை, புஷ்பவியாபாரம், தென்காசி.
21. பூபதி நியூஸ் மார்ட், ராஜபாளையம்.
22. அரசன் & கோ., 24–514, பாலாமோர் ரோடு, டெலிபோன் நெ. 33. [நாகர் கோவில்.
23. அரசன் & கோ., திருநெல்வேலி ஜங்ஷன்.
24. ஸ்ரீ A. R. அருணாசல நாடார், பஞ்சு வியாபாரம், சிவகாசி.

### இலங்கையில் கிடைக்குமிடங்கள் :

25. ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன், ராமகிருஷ்ண மிஷன் ரோடு, கொழும்பு-6.
26. ஸ்ரீ P. கந்தையா, 'தனசக்தி' திரிகோணமலை, சிலோன்.
27. ஸ்ரீ T. தம்பித்துரை, 226, ஆஸ்பத்திரி ரோடு, யாழ்ப்பாணம்.

DHARMA CHAKRAM Regd. No. M 6022

## ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் இயற்றிய நூல்கள்

| | |
|---|---|
| ஸ்ரீமத் பகவத்கீதை தேவநாகரியில்மூலம் - பதவுரை பொழிப்புரை - விளக்கமான விரிவுரை - மூன்றும்பதிப்பு (அனுப்பும் செலவு தனி) பிரசாரவிலை | ரூ. 3-75 |
| ஞானயோக விளக்கம் காலிகோ பைண்டு | ... 6-00 |
| கர்மயோக விளக்கம் காலிகோ பைண்டு | ... 5-00 |
| கடவுளின் வடிவங்கள் | ... 2-00 |
| எதிர்கால இந்தியா | ... 1-50 |
| அநுஷ்டான வேதாந்தம் | ... 1-50 |
| தாயுமானவர் இயற்றிய பரிபூரணானந்தம் | ... 1-50 |
| தாயுமானவர் இயற்றிய சின்மயானந்த குரு | ... 1-50 |
| தாயுமானவர் இயற்றிய மௌனகுரு வணக்கம் | ... 1-50 |
| பரமஹம்ஸர் புகட்டிய பெருநெறி விளக்கம் பாகம் 1 & 2 (தனித்தனி) | 1-50 |
| சந்தேகம் தெளிதல் | ... 1-50 |
| ஸ்ரீ சாரதா தேவியாரது சரிதம் | 1-25 |
| திருக்கயிலாயகிரி யாத்திரை | ... 1-12 |
| உலகுக்கு உயிர்கொடுத்த உத்தமன் | ... 1-00 |
| கண்ணன் என்னும் கடவுள் | ... 1-00 |
| சகோதரி நிவேதிதை | ... 1-00 |
| Introducing the Gita | ... 1-00 |
| அறம் வளர்த்த நம்பி | ... 0-95 |
| *கயிலைமலை யாத்திரை | ... 0-95 |
| உலகை உய்வித்த உத்தமன் | ரூ. 0-95 |
| சுவாமி விவேகானந்தர் | ... 0-90 |
| தேவரகசியம் முதலிய கதைகள் | 0-90 |
| ஸ்ரீராமகிருஷ்ண சரிதம் | ... 0-75 |
| நன்மக்களைப் பெறுதல் | ... 0-50 |
| தாயுமானவர் இயற்றிய பரசிவ வணக்கம் | ... 0-50 |
| பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்) | 0-50 |
| *ஸ்ரீமத் பகவத்கீதை முன்னுரை | ... 0-40 |
| *ஆத்ம சக்தி | ... 0-40 |
| இராவண தத்துவம் | ... 0-40 |
| மார்க்கண்டேயன் (நாடகம்) | ... 0-35 |
| தபோபலன் (நாடகம்) | ... 0-35 |
| கவிச்சக்கரவர்த்தி கம்பன் | ... 0-35 |
| *மனிதனது நிஜ சொரூபம் | ... 0-25 |
| *சக்தி தத்துவம் | ... 0-25 |
| *ஆலய வழிபாடு | ... 0-25 |
| *ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் | 0-20 |
| *சூரிய நாராயணன் | ... 0-20 |
| *சிவதத்துவம் | ... 0-20 |
| இந்து மதமும் கிறிஸ்துவ மதமும் | 0-20 |
| *வர்ணாச்ரம தர்மம் | ... 0-15 |
| *கணபதி | ... 0-15 |
| *முருகக் கடவுள் | ... 0-15 |
| *விஷ்ணு தத்துவம் | ... 0-15 |
| திருக்குறளில் கடவுள் வாழ்த்து | 0-15 |
| அருள் விருந்து 1 முதல் 6 வரை (ஒவ்வொன்றும்) | ... 0-15 |
| *அன்னை சாரதா தேவியார் வரலாறு | ... 0-15 |

* எல்லாப்புத்தகங்களையும் வாங்கவிரும்புபவர்கள் இக்குறியிட்ட புத்தகங்களை வாங்கத் தேவையில்லை. ஏனென்றால் இவை ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.


முன்பணம் அனுப்புவோர்க்குத் தபால் செலவின்றி புத்தகங்கள் அனுப்பப்படும். நான்கு ரூபாய்க்குக் குறைந்த ஆர்டர்களுக்கு புக்போஸ்டில்தான் புத்தகங்கள் அனுப்பப்படும்.

**தபோவனப் பிரசுராலயம்**
திருப்பராய்த்துறை போஸ்ட், எலமனூர் ஸ்டேஷன்
திருச்சி ஜில்லா

Edited by SWAMI CHIDBHAVANANDA,
Printed & Published by Br. RAMUDU at Tapovanam Press, Tirupparaitturai, Tiruchi Dt.

711

# தரமசககரம




விளம்பி ஞு மாசி மீ சக்கரம் 8 ஆரம் 2

**ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்**
திருப்பராய்த்துறை, எலமனூர் ஸ்டேஷன், திருச்சி ஜில்லா.

# ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

## இயற்றிய நூல்கள்

| | |
|---|---|
| ஸ்ரீமத் பகவத்கீதை தேவநாகரியில்மூலம் - பதவுரை பொழிப்புரை - விளக்கமான விரிவுரை - மூன்றும்பதிப்பு (அனுப்பும் செலவு தனி) பிரசாரவிலை ரூ. | 3-75 |
| ஞானயோக விளக்கம் காலிகோ பைண்டு | ... 6-00 |
| கர்மயோக விளக்கம் காலிகோ பைண்டு | ... 5-00 |
| கடவுளின் வடிவங்கள் | ... 2-00 |
| எதிர்கால இந்தியா | ... 1-50 |
| அனுஷ்டான வேதாந்தம் | ... 1-50 |
| தாயுமானவர் இயற்றிய பரிபூரணானந்தம் | ... 1-50 |
| தாயுமானவர் இயற்றிய சின்மயானந்த குரு | ... 1-50 |
| தாயுமானவர் இயற்றிய மௌனகுரு வணக்கம் | ... 1-50 |
| பரமஹம்ஸர் புகட்டிய பெருநெறி விளக்கம் பாகம் 1 & 2 (தனித்தனி) | 1-50 |
| சந்தேகம் தெளிதல் | ... 1-50 |
| ஸ்ரீ சாரதா தேவியாரது சரிதம் | 1-25 |
| திருக்கயிலாயகிரி யாத்திரை | ... 1-12 |
| உலகுக்கு உயிர்கொடுத்த உத்தமன் | ... 1-00 |
| கண்ணன் என்னும் கடவுள் | ... 1-00 |
| சகோதரி நிவேதிதை | ... 1-00 |
| Introducing the Gita | ... 1-00 |
| அறம் வளர்த்த நம்பி | ... 0-95 |
| *கயிலைமலை யாத்திரை | ... 0-95 |
| உலகை உய்வித்த உத்தமன் | ரூ. 0-95 |
| சுவாமி விவேகானந்தர் | ... 0-90 |
| தேவரகசியம் முதலிய கதைகள் | 0-90 |
| ஸ்ரீராமகிருஷ்ண சரிதம் | ... 0-75 |
| நன்மக்களைப் பெறுதல் | ... 0-50 |
| தாயுமானவர் இயற்றிய பரசிவ வணக்கம் | ... 0-50 |
| பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்) | 0-50 |
| *ஸ்ரீமத் பகவத்கீதை முன்னுரை | ... 0-40 |
| *ஆத்ம சக்தி | ... 0-40 |
| இராவண தத்துவம் | ... 0-40 |
| மார்க்கண்டேயன் (நாடகம்) | ... 0-35 |
| தபோபலன் (நாடகம்) | ... 0-35 |
| கவிச்சக்கரவர்த்தி கம்பன் | ... 0-35 |
| *மனிதனது நிஜ சொரூபம் | ... 0-25 |
| *சக்தி தத்துவம் | ... 0-25 |
| *ஆலய வழிபாடு | ... 0-25 |
| *ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் | 0-20 |
| *சூரிய நாராயணன் | ... 0-20 |
| *சிவதத்துவம் | ... 0-20 |
| இந்து மதமும் கிறிஸ்துவ மதமும் | 0-20 |
| *வர்ணாச்ரம தர்மம் | ... 0-15 |
| *கணபதி | ... 0-15 |
| *முருகக் கடவுள் | ... 0-15 |
| *விஷ்ணு தத்துவம் | ... 0-15 |
| திருக்குறளில் கடவுள் வாழ்த்து | 0-15 |
| அருள் விருந்து 1 முதல் 6 வரை (ஒவ்வொன்றும்) | ... 0-15 |
| *அன்னை சாரதா தேவியார் வரலாறு | ... 0-15 |

* எல்லாப்புத்தகங்களையும் வாங்கவிரும்புபவர்கள் இக்குறியிட்ட புத்தகங்களை வாங்கத் தேவையில்லை. ஏனென்றால் இவை ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

முன்பணம் அனுப்புவோர்க்குத் தபால் செலவின்றி புத்தகங்கள் அனுப்பப்படும். நான்கு ரூபாய்க்குக் குறைந்த ஆர்டர்களுக்கு புக்போஸ்டில்தான் புத்தகங்கள் அனுப்பப்படும்.

**தபோவனப் பிரசுராலயம்**

திருப்பராய்த்துறை போஸ்ட், எல்மனூர் ஸ்டேஷன்

திருச்சி ஜில்லா

# தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 8 | விளம்பி ஞு மாசி மீ | ஆரம் 2

## பொருளடக்கம்

பக்கம்

1. பிரார்த்தனை 41
2. அருள் விருந்து 42
3. பரமஹம்ஸர் புகட்டிய பெருநெறி விளக்கம் 43
4. பக்தனது பற்றற்ற நிலை 46
5. பரமஹம்ஸரின் நிறை நிலை 53
6. மூவர் இராமாயணம் — T. R. ராமநாத சாஸ்திரி, M. A. வித்வான் R. வேங்கடசாமி 60
7. சந்தேகம் தெளிதல் 66
8. நாரதர் கலகம் — சுவாமி ஸ்ரீதானந்தர் 69
9. மாணவருக்கு ஒருசொல் 76
10. குறிப்புகள் 77
11. செய்திகள் 80

வருட சந்தா : உள்நாடு ரூ. 4-00 வெளிநாடு ரூ. 5-00

தனி இதழ் : „ 45 ந. பை. „ 55 ந. பை.

வியாபார விளம்பரங்களையும், மதிப்புரைக்குப் புத்தகங்களையும் ஏற்பதில்லை.

தர்ம சக்கரம் ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியன்று வெளிவருகிறது. ஒவ்வொரு சந்தாதாரரின் விலாசமும் சரியாக எழுதப்பெற்றுள்ளதா என்று சரிபார்த்துப் பதிவு செய்துகொண்ட பின்னரே தபாலில் சேர்க்கப்படுகிறது. தமிழ் மாதம் பத்து தேதிக்குள் இதழ் கிடைக்கவில்லையேல் தபால் அதிகாரிகளுக்கு மனுச்செய்து கொள்வதுடன் அதன் நகலை அனுப்பி எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

சந்தாதாரர்கள் தங்கள் தபால்களில் சந்தா நம்பரைக் குறிப்பிடுதல் அவசியம்.

மானேஜர்,
தர்ம சக்கரம்

# ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை போஸ்ட்

(எலமனூர் ரயில்வே ஸ்டேஷன், திருச்சிராப்பள்ளி)

அன்புடையீர்,

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தி விழா இவ்வாண்டு மார்ச்சு மீ முதல் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5–30 மணி முதல் 8–30 மணிவரை இங்கு கொண்டாடப்பெறும். நீங்கள் அனைவரும் அதில் கலந்துகொண்டு திருவருளுக்குப் பாத்திரமாவீர்களாக.

இங்ஙனம்,
சித்பவானந்த

## நிகழ்ச்சி முறை

1—3—59 ஞாயிறு மாலை

5–30 மணி முதல் 7 மணிவரை பள்ளிமாணுக்கர் ஆடல், பாடல், பேச்சு முதலியன

7 மணி முதல் 8–30 மணிவரை உயர்நிலைப்பள்ளி மாணுக்கர்களால்
தவப்புதல்வர்கள் என்னும் நாடகம்

தாய்மார்களுக்குத் தனி இடவசதி உண்டு. சிற்றுண்டிச்சாலை உண்டு.

**ரயில் வண்டி வசதி**

திருச்சிக் கோட்டையிலிருந்து மாலை 2-40 மணிக்குப் புறப்படும் ரயில் எலமனூருக்கு 3–16க்கு வந்து சேருகிறது.

கரூரில் பகல் 1–02 மணிக்கு புறப்படும் ரயில் எலமனூருக்கு 3–26க்கு வந்துசேருகிறது.

அன்பர்கள் இவ்வண்டிகளில் வந்து சேருக.

எலமனூரிலிருந்து திரும்பிப்போகும் நேரம் :—

இரவு 9–30க்கு திருச்சிக்குப் போகும் பாஸஞ்சர்

இரவு 10–46க்கும் இரவு 12–36க்கும் ஈரோடுக்குப் போகும் வண்டிகள் உள்ளன.


प्रज्ञानं ब्रह्म

# தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது.

| சக்கரம் 8 | விளம்பி ஸ்ரீ மாசி மீ | ஆரம் 2 |
|---|---|---|


## பிரார்த்தனை

तत्पुरुषाय विद्महे महादेवाय धीमहि ।
तन्नो रुद्रः प्रचोदयात् ॥

(रुद्रगायत्री)

தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய தீமஹி
தந்நோ ருத்ர: ப்ரசோதயாத்

அந்தப் பரம புருஷனை நாம் அறிந்து கொள்வோமாக
அதற்கு மஹாதேவனை தியானிப்போமாக
அந்த ருத்திரன் நம்மை லக்ஷியத்தின்கண் தூண்டுவாராக.

மையார் கண்டத்தினுய் மதமாவுரி போர்த்தவனே
பொய்யா(து) என்உயிருட் புகுந்தாய் இன்னம் போந்தறியாய்
கையார் ஆடரவா கடவூர்தனுள் வீரட்டத்தெம்
ஐயா என் அமுதே எனக்(கு) ஆர்துணை நீயலதே.

— சுந்தரர்

# அருள் விருந்து

[illegible]தற்கு அறிகுறியா யிருப்பது நாவடக்கம்.

சத்தியமே பேசுதல் ஆயிரம் அசுவமேத யாகத்தைவிட மேலானது.

பதவியில் மோகம் கொள்ளாதவனை உலகம் அடிபணிந்து வணங்குகிறது.

சாந்தத்தில் உறுதி பெற்றிருப்பவர்கள் மற்றவர்களையும் சாந்த மூர்த்திகளாக்குகின்றனர்.

ஜனக்கூட்டத்துக்கு இடையில் ஏகாந்தத்தை உணர்பவன் மனபரிபாகம் அடைந்தவன் ஆகிறான்.

மனிதனுடைய சிந்தை, சொல், செயல் ஆகிய மூன்றையும் கடவுள் ஓயாது கண்காணித்து வருகிறார்.

பற்றற்றிருப்பது எல்லார்க்கும் சாத்தியமல்ல. வலிவு படைத்திருப்பவனே பற்றற்றிருக்க வல்லவனாகிறான்.

இயற்கையில் உள்ளதெல்லாம் மனிதனிடத்து இருக்கிறது; மேலும் மனிதனுக்குத் தனி மகிமையும் ஒன்று உண்டு.

உயர்ந்தவை தாழ்ந்தவை என்பன இயற்கையில் இல்லை. அந்த வேற்றுமை மனிதனுடைய கற்பனையில் இருக்கிறது.

நலத்தையே நினைந்து, நலத்தையே நவின்று, நலத்தையே நிறைவேற்றி வருபவனுக்கு யாரும் தீங்கு செய்யமாட்டார்கள்.

ஒரு மனிதனிடத்து அச்சம் இருக்குமாகில் அவனிடத்து ஏதோ குறைபாடு இருக்கிறது என்று அதினின்று வெளியாகிறது.

தன்னை முக்த புருஷனாகக் கருதுபவன் முக்தியடைகிறான். தன்னை பந்தத்தில் இருப்பவனாகக் கருதுபவன் பந்தத்துக்கு உட்படுகிறான்.

பரமஹம்ஸர் புகட்டிய

# பெருநெறி விளக்கம்

தக்ஷிணேசுவரத்தில் பரமஹம்ஸ தேவரோடு கூடியிருந்த பக்தர்கள்பஜனைக்குரிய பாடல்கள் சிலவற்றைப் பாடினர். அவர்கள் பாடிய பாடல் ஒன்றில்அடங்கியிருந்த கருத்துக்கள் வருமாறு:"தாயே! நீ அமைத்திருக்கும் இந்த யந்த்ரம் என்ன விநோதமானது! இந்த யந்த்ரம் மூன்றரைமுழம் உயரமுள்ளது. இதை வைத்துக் கொண்டு நீ வித விதமான பொம்மலாட்டங்களை விளையாடுகின்றாய். இந்தப்பொம்மைக்குள்ளேயே நீ ஒளிந்து கொண்டிருக்கிறாய். இதை ஆட்டுதற்கான கயிறுகளையும் நீதான் கட்டிப்பிடித்துக்கொண்டிருக்கிறாய். ஆனால் இந்த யந்த்ரம் உன்கைவசத்திலிருக்கிறது என்பதை அது அறிந்து கொள்ளாதிருக்கிறது. தன் சுயப்பிரயத்தனத்தினால் விரும்பியவாறெல்லாம் இயங்குவதாகஅது எண்ணிக் கொண்டிருக்கிறது. அதனுள்ளிருக்கும் தெய்வமாகிய உன்னை, தாயே! அறிந்து கொள்ளுகிறவன் பிறகு யந்த்ரமாக இருப்பதில்லை. தாயே! உன்னை அறிந்துகொண்ட பக்தர்களில் சிலர் யந்த்ரங்களாக இருப்பதற்கிடையில் தங்களுடைய பக்திவலையால் உன்னையே கட்டிப் பிடித்திருக்கிறார்கள்."

பஜனை முடிந்தான பிறகு பரமஹம்ஸர் மஹேந்திரருடன் பஞ்சவடியினின்று தமது அறைக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தார். அப்பொழுது பிரம்ம சமாஜத்து அங்கத்தினர் ஒருவராகிய திரைலோக்கியரை ஆங்குச் சந்தித்தார். அவரும் பரமஹம்ஸருடைய பாதங்களில் வீழ்ந்துவணங்கினார். மாலையில் மணி ஆறு ஆய்விட்டது. தமது அறையின் தென்கிழக்குத் திண்ணையில் பக்தர்கள் பலருடன் பரமஹம்ஸர் அமர்ந்திருந்தார். பரமஹம்ஸர் பகர்வாராயினர்: "உலகத்தை நீத்துவிட்ட துறவி ஒருவர் இறைவனுடைய திருநாமத்தையே உச்சரித்துக்கொண்டிருப்பார். அப்படிச் செய்வதுதான் அவருடைய இயல்பு ஆகும். அதைத் தவிர வேறு கடமை ஒன்றும் உலகில் அவருக்குக் கிடையாது. அவர் கடவுளைக் குறித்துத் தியானம் பண்ணிக் கொண்டிருப்பதைப் பார்த்து யாரும் வியப்படைவதில்லை. அதற்கு மாறாக அவர் கடவுளுடைய திருநாமத்தை ஓதாது இருந்தாலும் அவரைக்குறித்துத் தியானம் பண்ணுவதை நிறுத்திவிட்டாலும் உலகத்தவர் அவரைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொள்ளமாட்டார்கள்.

"ஆனால் குடும்பி ஒருவன் தனது பெரிய குடும்ப பாரத்துக்கிடையில் கடவுளைக் குறித்துத் தியானம் பண்ணுவானாகில் அது பாராட்டுதற்குரிய பெரிய செயலாகும். ஜனக மஹாராஜரைப்பற்றி எண்ணிப்பார். அவர் எத்தகைய துணிச்சல் நிறைந்தவராக இருந்தார்! இரண்டு கூரிய வாள்களைவைத்துக்கொண்டு அவர் கத்தி விளையாட்டு விளையாடினார். ஞான வாளை ஒரு கையில் அவர் ஏந்தியிருந்தார்; கர்மயோகம் புரிதல் என்னும் வாளை மற்றொரு கையில் ஏந்தியிருந்தார். பிரம்மஞானத்தை அவர் பூரணமாக அடையப் பெற்றவர். அதற்கிடையில் உலகத்துக்கு அவர் புரிய வேண்டிய கடமையையும் முறைபிறழாது ஆற்றி வந்தார். நெறி வழுவிய மாது ஒருத்தியின் மன நிலையையும் இதற்குச் சான்றாக எடுத்துக்கொள்ளலாம். தனது வீட்டுக் காரியங்களின் ஒவ்வொரு சிறுபகுதியையும் அவள் ஒழுங்காகச் செய்து முடிக்கிறாள். அதற்கிடையில் அவளுடைய மனது கள்ளக்காதலன் மீது பாய்கிறது. பக்தன் ஒருவன் அதுபோன்று தனது உலகக் கிருத்தியங்களுக்கிடையில் கடவுளை

மறவாதிருக்கவேண்டும். சத்சங்கம் அல்லது நல்லாரிணக்கம் ஆத்மசாதகன் ஒருவனுக்கு முற்றிலும் அவசியமானது. சாதகன் ஒருவனை சர்வேசுவரனுடைய சாந்நித்தியத்துக்கு அழைத்துச்செல்ல வல்லது சத்சங்கம் ஒன்றேயாம்."

ஆங்கு அமர்ந்திருந்த கேதார் இப்பொழுது பேசலானார்: "ஆம் ஐயனே! மஹாபுருஷர் ஒருவர் உலகை உய்வித்தற்பொருட்டே பிறப்பெடுக்கிறார். பெரிய நீராவி யந்திரம் போன்றவர் அவர். இருப்புப்பாதையின் மீது அந்த யந்திரம் தான்மட்டும் ஓடுவதில்லை. பெரிய வண்டித்தொடரைத் தன்னோடு இழுத்துக்கொண்டு அது ஓடுகிறது. சான்றோர்களும் அங்ஙனம் உலகத்தவர் பலரைத் தங்களோடு சேர்த்து நன்னெறியில் செல்லும்படி செய்கின்றனர். அம்மஹா புருஷரை மேலும் ஒருநதியோடு அல்லது பெரிய தடாகத்தோடு ஒப்பிடலாம். கணக்கற்றபேர் நீர் அருந்தி தாக சாந்தி செய்துகொள்ளுதற்கு அவைகள் பயன்படுவது போன்று பெருமக்கள் பாரினுள் இருப்பவர்களுக்கு உண்டாகும் அருள்தாகத்தை அகற்றி வைக்கின்றனர்."

குழுமியிருந்த பக்தர்களில் பலர் அவரவர் வீட்டுக்குப் புறப்பட ஆரம்பித்தனர். ஒருவர்பின் ஒருவராகப் பரமஹம்ஸரின் முன்னிலையில் வீழ்ந்து வணங்கி விட்டு விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டனர்.

பவநாதர் என்னும் பக்தரும் அவர்களுள் ஒருவராயிருந்தார். புறப்பட எண்ணிய அவரைப் பார்த்துப் பரமஹம்ஸர் பகரலானார்: "இன்று நீ போகவேண்டாம். உன்னைப் பார்க்கும் பொழுதே நான் ஆனந்த பரவசமடைகிறேன்."

பவநாதர் இவ்வையக வாழ்வு என்னும் பவசாகரத்தில் இன்னும் நுழையவில்லை. அவருக்கு வயது இருபது. கட்டழகோடு கூடிய மேனி. இறைவனுடைய திருநாமத்தைக் கேட்கும் பொழுதும், உரைக்கும் பொழுதும் அவருக்குக் கண்களினின்று ஆனந்த பாஷ்பம் பொழியும். அவ்விளைஞனை நாராயண மூர்த்தியே அவ்வடிவெடுத்து வந்திருப்பதாகப் பரமஹம்ஸர் கருதினார்.

மற்றும் ஒருநாள் பிற்பகலிலே அன்பர்கள் பலர் தக்ஷிணேசுவர ஆலயத்தில் வந்து கூடினார்கள். அமிர்தரும், பிரம்ம சமாஜத்தில் கீர்த்தி பெற்ற பாடகர் திரைலோக்கியரும் அன்று பிற்பகல் அங்கு வந்து சேர்ந்தனர். ராக்காலுக்கு உடல் நிலை திருப்திகரமாயில்லை. சிறிது நோய்வாய்ப்பட்டிருந்தார். அதைப் பரமஹம்ஸர் தமது கருத்தில் வாங்கியவராக இருந்தார். ஆங்குக் குழுமியிருந்த அன்பர்களிடத்திலும் அவர் அதைப்பற்றிப் பகர்ந்தார். "ராக்கால் உடல் நலம் குன்றியவனாக இருக்கின்றானே! அதற்கு என்ன செய்யலாம்? ஏதாவது ஔஷதம் தரவேண்டியது அவசியமா? பூரி ஜகந்நாதர் பிரசாதம் வந்திருக்கிறது. ராக்கால், அதில் சிறிது நீ ஏற்றுக்கொள்வாயாக!" இப்படியெல்லாம் அவர் பகர்ந்தார். அப்பொழுது அவரிடத்து ஒருவித மனமாறுதலேற்பட்டது. தாயின் உள்ளம் படைத்தவராக அவர் மாறிவிட்டார். குழந்தையினிடத்து பெற்ற தாய் காட்டுகிற உள்ளக்கசிவு அவரிடத்துத் தென்படுவதாயிற்று. ராக்காலைப் பார்த்த வண்ணம் 'கோவிந்தா' என்னும் திருநாமத்தை அவர் உச்சரித்தார். பரமஹம்ஸதேவருக்கு ராக்கால் நாராயண சொரூபமாகவே தென்பட்டார் போலும்! அவ்விளைஞன் தூய உள்ளம் படைத்தவன்; உலகப்பற்று எல்லாம் அவனுடைய உள்ளத்தினின்று விலகிப்போய் விட்டது. காமத்தையும், காசு ஆசையையும் அறவே துறந்தவனாக அவன் திகழ்ந்தான். இனி, பரமஹம்ஸதேவரோ அல்லும் பகலும் ஈசுவர சிந்தையிலேயே மூழ்கியவராக இருந்தார். ராக்காலைப் பார்த்த பொழுதெல்லாம் அவருக்குத் தாயின் இயல்பு தானாகவே வந்துவிட்டது. பாலகிருஷ்ணனைப் பார்த்த



பொழுதெல்லாம் தாய் யசோதைக்கு உண்டான உள்ளக் கசிவு பரமஹம்ஸரிடத்திலும் இருப்பது போன்று தென்பட்டது. அத்தகைய உணர்வுடன் அவருடைய உள்ளம் சமாதியில் மூழ்கிவிட்டது. அந்தப் பரவச நிலையைப் பார்த்த பக்தர்கள் யாவரும் வியப்படைந்தனர். அவருடைய உள்ளம் பாரமார்த்திகப் பெருநிலையில் சென்று புதைந்து விட்டது. உடல் அசைவற்று நின்றுகொண்டிருந்தது. அவருடைய கண் பார்வை மூக்கின் நுனியைப் பார்த்துக் கொண்டிருப்பது போன்று தென்பட்டது. ஆயினும் அவர் ஊனக்கண்கொண்டு எதையும் பார்த்த அறிகுறி ஒன்றும் தென்படவில்லை. சுவாசிப்பதும் பெரிதும் நின்றுவிட்டது.

முன்பு அறிமுகம் ஆகாதிருந்த ஒருவன் காவியுடை யணிந்துகொண்டு பரமஹம்ஸருடைய அறைக்குள்ளே வந்து அமர்ந்தான். பரமஹம்ஸருடைய மனது அதீத நிலையிலிருந்து உலக ஞாபகத்துக்குச் சிறிது சிறிதாகக் கீழே இறங்கிவந்தது. அவரடைந்திருந்த சமாதி நிலை இன்னும் முற்றிலும் கலைந்துபோய்விடவில்லை யெனினும் அவர் ஏதோ பேச ஆரம்பித்தார். அவருடைய கண் பார்வை காவியுடை யணிந்து வந்திருந்தவன் மீது சென்றது. அவர் மொழியலானார்: "இக் காவியுடை எதற்காக? வெறும் வெளிப் பகட்டுக்காக இதை ஏன் அணியவேண்டும்? கொஞ்ச காலம் ஒரு மனிதன் தேவி மஹாத்மியம் என்னும் நூலை வைத்திருந்தான். பிறகு அவன் அதை யாருக்கோ கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக தம்பட்டம் ஒன்றை வாங்கிக் கொண்டான்.

"தியாகத்திலே இரண்டு மூன்று தரங்கள் இருக்கின்றன. வீட்டிலிருக்கிற தொல்லைகளையும், துயரங்களையும் சகிக்கமுடியாதவனாய் ஒருவன் காவியுடை யணிந்துகொண்டு வெளியில் புறப்பட்டு விடுகிறான். அது ஒருவிதத் துறவு. ஆனால் அது நெடு நாளைக்கு நீடித்திருப்பதில்லை. தனது உத்தியோகத்தை இழந்துவிட்ட ஒருமனிதன் காவியுடையணிந்துகொண்டு காசிக்குப் புறப்பட்டு விடுகிறான். கொஞ்ச நாளைக்குப் பிறகு அவனிடமிருந்து கடிதம் ஒன்று வருகிறது. 'எனக்கு இங்கே உத்தியோகம் ஒன்று கிடைத்திருக்கிறது. என்னைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம். இன்னும் சில தினங்களில் உங்களைக்காண ஊருக்குத் திரும்பி வருகிறேன்.' இத்தகைய செய்தியை அவன் சொந்தக்காரர்களுக்கு எழுதி யனுப்புகிறான். மற்றொரு மனிதன் இருக்கிறான். அவனுக்கு உலக சம்பத்துக்கள் எல்லாம் நிறைந்திருக்கின்றன. ஆயினும் அவைகளிடத்து அவனுக்குப் பற்றுதல் ஒன்றும் கிடையாது. கடவுளைக் காணவேண்டும் என்னும் அவா உடையவனாக அவன் இருக்கிறான். அருள்தாகம் பிடித்தவனாய் அவன் கண்ணீர் சிந்தி கசிந்து உருகுகிறான். இதுதான் உண்மையான தியாகம்.

"எவ்விதத்திலும் மனிதன் பொய்பேசலாகாது. காவியுடை தூயது எனினும் அதை வெறுமனே அணிந்துகொள்ளுதல் ஒரு மனிதனுக்கு ஒவ்வாது. அவன் போட்டிருக்கின்ற வெளிவேஷம் உள்ளக்கிடக்கையோடு ஒத்திராவிட்டால் அதனால் அம்மனிதனுக்குப் பெருங்கேடுவிளையும். பொய் பேசிக் கொண்டிருப்பதாலும், பொருந்தாத செயல்களில் ஈடுபடுவதாலும் ஒருவன் சிறிது சிறிதாகக் கேடு செய்வதைக் குறித்துள்ள அச்சத்தை இழந்துவிடுகிறான். தகுதி வாய்க்காத ஒருவன் காவியுடையணிவதைவிட வெள்ளை வஸ்திரத்தை அணிந்துகொள்வது பன்மடங்கு மேலானது. உலகப்பற்று ஒரு புறமிருக்கிறது. திரும்பத் திரும்ப உயர்ந்த லக்ஷியத்தினின்று வழுவி கீழ்மைக்கு ஒருவன் வந்துவிடுகிறான். அதற்கிடையில் காஷாயத்தையும் அவன் அணிந்துகொள்ளுகிறான். இதிலும் பெரிய விபரீதம் யாது உளது?"

# பக்தனது பற்றற்ற நிலை

*(சுவாமி விவேகானந்தர் கருத்தைத் தழுவியது)*

இயற்கை முழுதிலும் ஊடுருவி நிறைந்திருப்பது அன்பு. நீக்கமற எங்கும் வியாபகமாயிருப்பது அன்பு ஒன்றே. சமுதாயத்தில் நலன் தருபவைகளைக் காண்கிறோம். பெருமை படைத்தவைகளும் இருக்கின்றன; போற்றுதற்குரிய பண்பு நிறைந்தவைகளும் தென்படுகின்றன. இவையாவும் எப்படித் தோற்றத்துக்கு வந்துள்ளன என்று விசாரித்துப் பார்க்க வேண்டும். அன்பினால் தூண்டப்பெற்றே இவை யாவும் வடிவெடுக்கலாயின. இவைகளுக்கு மாறான காட்சிகளையும் சமுதாயத்தில் காணலாம். கேடானவைகள் ஆங்கு உண்டு. பேய்க்கோலம் தாங்கிய கேடுகளையும் அதனுள் காணலாம். வேண்டப்படாத புல்லியவைகள் சமுதாயத்தினுள் எப்படி நுழையலாயின என்று நாம் கேட்கலாம். அவைகளும் அன்பினால் ஏவப்பட்டே தோற்றத்துக்கு வருவனவாயின. ஆனால் அவைகள் பொருட்டுக் கையாளப்பட்ட அன்பானது முறைக்கு மாறுபட்டுவிட்டது. அன்பைத் தவறுதலாகக் கையாண்டால் அது கீழ்மையை விளைவித்துவிடும். அன்பின் சீரிய தோற்றத்தைச் சமுதாயத்தினுள் காணலாம். கணவனும், மனைவியும் பரஸ்பரம் தூய உள்ளன்போடு நேசித்துக் கொள்கின்றனர். அன்பின் பண்பட்ட நிலையை அவர்களுக்கிடையில் காண்கிறோம். இனி, ஆடவர் மகளிர் ஆகிய இருபாலார்க்கிடையில் தூர்த்தர்களும் சமுதாயத்திலிருக்கிறார்கள். அவர்களிடத்திருக்கும் காமவெறி விலங்குகளிடத்தில் இருக்கும் வெறிக்கு ஒப்பானது. மிகக் கீழ்த்தரமான உடல் இன்பத்திலேயே அவ்வுணர்வு உழன்று கிடக்கிறது. ஈண்டு மேன்மை, கீழ்மை ஆகிய இரண்டுக்கும் சான்று எடுத்துக் கொண்டோம். அதினின்று இரண்டுவிதமான உணர்வுகள் உலகில் இருக்கின்றன என்று நாம் முடிவு கட்டலாகாது. அன்பு என்னும் ஒரே உணர்வுதான் இயற்கை முழுதிலும் நிறைந்திருக்கிறது. இந்த அன்பானது வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமான தோற்றங்களை எடுத்துக் கொள்கிறது. யாண்டும் உலகுக்கு நலமே செய்யவேண்டும் என்னும் எண்ணம் ஒரு மனிதனுக்கு வருகிறது. தன்னிடத்திருக்கும் பொருள்களையெல்லாம் ஏழை எளியவர்களுக்கு எடுத்து வழங்க வேண்டும் என்னும் உள்ளக்கசிவு அவனுக்கு உண்டாகிறது. இனி, அவனுக்கு மாறாக மற்றொரு வித மனிதன் இருக்கிறான். அவன் பிறருடைய கழுத்தை அறுக்கத் தயங்குவதில்லை. கொலை புரிந்தாவது பிறரிடமிருக்கும் பொருள்களையெல்லாம் தனக்கு உரியவைகள் ஆக்கிக்கொள்ள அவன் பெரும்பாடுபடுகிறான். ஜீவகாருண்யம் படைத்தவன், கொலையாளி ஆகிய இருதரத்தார் உள்ளத்திலும் இருப்பது அன்பே. ஜீவகாருண்யம் படைத்தவன் அன்பை முறையாகக் கையாண்டவன் ஆகிறான். கொலையாளியோ அன்பை முறை தவறிக் கையாண்டவன் ஆகிறான். நல்லவன் மன்னுயிர்களை எவ்வளவு ஆழ்ந்து நேசிக்கின்றானோ அவ்வளவு ஆழ்ந்து மற்றவன் தன்னையே நேசித்துக் கொள்கிறான். நேசித்தல் என்னும் செயல் இருவரிடத்திலுமிருக்கிறது. பிறரைத் துன்புறுத்துகிற முறையில் தன்னையே நேசித்துக் கொள்ளுதல் தகாதது. தனக்குத் துன்பமே நேர்ந்திடினும் பிறரிடத்துப் பேரன்பு கொண்டிருப்பது முற்றிலும் பாராட்டுதற்குரியதாகிறது.

இயற்கையில் இன்னொரு சான்று எடுத்துக் கொள்வோம். சுடும் தன்மையுடையது தீ. அந்த நெருப்பைக் கொண்டு



நமக்கு நாம் உணவு சமைக்கலாம்; அதே நெருப்பு குழந்தை ஒன்றைப் பொசுக்கிவிட வல்லது. சிசு ஒன்றைச் சுட்டுவிட்டதால் நெருப்பு தீங்கு செய்துவிட்டதென்று பகரலாகாது. சுடுதல் என்னும் தோஷம் தீயினிடத்து இருக்கிறதென்று கூறுவது சரியன்று. தீயை நாம் பயன்படுத்தும் முறையிலேதான் நலன், கேடு என்னும் வித்தியாசமிருக்கிறது. சுடுகிற தீ எப்படி நலன் கேடு ஆகிய இரண்டினுள் கட்டுப்படாது இருக்கிறதோ அங்ஙனம் அன்பும் அவ்விரண்டினுள் கட்டுப்படாது இருக்கிறது. அன்பின் செயல் யாது என்று ஆராய்ந்து பார்ப்போம். இணக்கம் வைப்பதில் பேரார்வம் கொண்டிருப்பது அன்பு. இரண்டாகப் பிரிந்திருப்பவைகள் ஒன்றுபட்டு விடுவதில் கொண்டுள்ள உறுதியான ஊக்கம் அன்பு என்னும் பெயர் பெறுகிறது. இயற்கையில் பலதரப்பட்ட பொருள்களும், உயிர்களும் இருக்கின்றன. எண்ணிறந்தவைகளாக இருப்பவைகள் யாவும் ஒன்றுபட்டுவிட ஓயாது முயன்று வருகின்றன. இப் பெருமுயற்சியே அன்பு என்னும் பெயர் பெற்றுள்ளது. ஒன்றுபடுவதற்கான முயற்சி தூயவைகளும் மேலானவைகளுமான துறைகளில் திகழ்கிறது. அதே முயற்சி தீயவைகளும், தாழ்ந்தவைகளுமான துறைகளிலும் திகழ்ந்து கொண்டிருக்கிறது. எத்துறையில் அது எப்படித் திகழ்ந்து கொண்டிருந்தாலும் அன்பு என்னும் ஒரே சக்தியின் பலதரப்பட்ட தோற்றங்களாக அவையாவும் அமைந்திருக்கின்றன. பக்தியோகம் என்னும் சாஸ்திரத்துக்கு ஈண்டு நாம் விளக்கம் கொடுக்கமுடியும். அன்பை மேலான துறையில் விளக்குதற்கு எது வழிகாட்டித் தருகிறதோ அது பக்தியோக சாஸ்திரமாகிறது. அன்பை எத்துறையிலே எப்படிச் செலுத்துவது என்பதை அது காட்டித் தருகிறது. அன்பைச் சிறுநெறியிலே செல்லாது எப்படித் தடுத்து வைக்க வேண்டும் என்பதையும் அது காட்டித்தருகிறது. அன்பை எங்ஙனம் கையாண்டு கொண்டிருக்க வேண்டுமென்பதையும் அது தெளிவுபடுத்துகிறது. அன்பை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்றும் அது எடுத்து உரைக்கிறது. புதியதும், மேலானதுமாகிய வடிவத்தை அன்புக்கு எப்படிக் கொடுக்கமுடியும் என்பதையும் பக்தியோகம் எடுத்தியம்புகிறது. நல்ல துறையிலே, நல்ல முறையிலே அன்பைப் பயன்படுத்தினால் தெய்வீகம் நிறைந்த என்னென்ன மேன்மைகளையெல்லாம் மனிதன் பெறக்கூடும் என்பதையும் அப் பெருநூல் எடுத்துப் புகட்டுகிறது. சுருங்கச் சொல்லின் அன்பைத் துணையாகக் கொண்டு தெய்வீக சம்பத்தை நாம் எப்படிப் பெறமுடியும் என்பதை அது விளக்கிக் காட்டுகிறது. மனிதனிடத்துள்ள எதையும் அவன் துறந்துவிட வேண்டுமென்று பக்தியோகம் பகர்வதில்லை. "நேசித்துப் பழகு; யாவற்றிலும் உயர்ந்ததை நேசித்துப் பழகு" என்று பக்தியோகம் போதிக்கிறது. அனைத்துக்கும் மேலானது ஒன்றைப் பேரன்போடு நேசிக்கக் கற்றுக்கொள்ளுபவன் ஒருவனுடைய உள்ளத்தினின்று கீழ்மைகளெல்லாம் தாமாக உதிர்ந்து போய்விடுகின்றன. அனைத்துக்கும் மேலானதை நேசிக்கக் கற்றுக்கொள்ளுதலே வாழ்க்கையின் குறிக்கோள். அனைத்துக்கும் மேலானவராயிருப்பவர் பரம்பொருள். அவரிடத்து அன்பு செலுத்துமளவு பக்தனுடைய உள்ளத்திலே சிறுமை என்பன எதற்கும் இடமில்லாது போய்விடுகிறது.

"இறைவா, நான் உம்மைப்பற்றி ஒன்றும் பகரவல்லேன் அல்லேன். ஆயினும் ஒன்று நான் நவிலுவேன். உம்மை எனது அன்பு என்று சொல்லுவேன். தாம் அழகே வடிவெடுத்தவர். பூமிமேல் புகழத் தக்க பொருளே! உம்மை அழகன் என்று அல்லாது வேறு எங்ஙனம் நவிலுவேன்!

முடிவாக உம்மை அழகு என்று இயம்பி விடுவேன்." இயற்கையில் எதெல்லாம் அழகு நிறைந்ததாக இருக்கிறதோ அது இறைவனுடைய அழகேயாம். அப்பேரழகு இயற்கைப் பொருள்களின் மூலம் வெளியாகிறது. இயற்கையில் தென்படும் அழகை நாடுவது நமது இயல்பு. அழிந்துபட்டுப்போம் இயற்கையிலுள்ள பொருள்களில் அழகைக் கண்டு அதில் வசப்படுகிற நாம் அழகு அனைத்துக்கும் இருப்பிடமாகிய கடவுளிடத்து நமது மனதைத் திருப்பவேண்டும். ஏனென்றால் உண்மையில் அவர் ஒருவர்தான் அழகன். அவருடைய பேரழகு பிரபஞ்சமெங்கும் விதவிதமான வடிவங்களிலே பொலிந்துகொண்டிருக்கிறது. இவ்வுண்மையைத்தான் பக்தியோகம் நமக்கு எடுத்துப் புகட்டுகிறது. அழகை நாடி அலைகிற நாம் அவ்வழகுக்குப் பிறப்பிடமாகவும், மூலப்பொருளாகவும் இருக்கும் பரமனிடத்து நமது மனதைத் திருப்பவேண்டும். மானுடர் முகத்திலே நாம் அழகைக் காண்கிறோம். வெட்ட வெளியிலே அழகு வேறொரு வடிவெடுத்திருக்கிறது. நக்ஷத்திரங்களிடத்து அழகு இன்னொரு விதத்தில் பொலிகிறது. சந்திரனிடத்து மற்றுமொரு விதத்தில் அது மிளிர்கிறது. எனினும் இயற்கையினூடு உள்ள சௌந்தர்யம் எத்தகையது? அழகான வடிவம் ஒன்றன் நிழலிலும் ஓரளவு அழகு தென்படுகிறது. நிழலில் உள்ள அழகுக்கு ஒப்பானது பிரபஞ்சப் பொருள்களிடத்துள்ள சௌந்தர்யம். முழு அழகும் இயற்கையின் மூலம் வெளியாவதில்லை. இறைவன் ஒருவரே தெய்வீக அழகு அனைத்துக்கும் உறைவிடம். அவருடைய சௌந்தர்யத்துக்கு அழிவு கிடையாது.

तमेच भन्तमनुभाति सर्वं ।
तस्य भासा सर्वमिदं विभाति ॥

தமேவ பந்தமனுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி

"அவருடைய பிரகாசத்தால் யாவும் ஒளிர்கின்றன. அவருடைய ஒளியினின்று யாவும் அவ்வவைகளுக்குரிய ஒளியைப் பெறுகின்றன." இப்பேருண்மையினின்று பக்தி பெருக்கெடுக்கிறது. இதற்கு ஒப்ப அன்பைப் பெருக்குகின்றவர்களுக்கு சிற்றுயிர்களின் சிறிய தோற்றங்களைப்பற்றிய உணர்வுகளெல்லாம் உள்ளத்தினின்று விரைவில் மறைந்துபோய் விடுகின்றன. பேருயிரிடத்திருக்கிற பெருமையை உணருங்கால் சிற்றுயிர்களைப்பற்றிய எண்ணமே நொடிப்பொழுதில் அகன்றுபோய் விடுகின்றது. உலகப் பொருள்களிடத்து மனிதனுக்குப் பற்றுதல் இயல்பாக வந்து விடுகிறது. இப்பற்றுதல் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டது. இறைவனைப் பற்றிப்பிடிக்குங்கால் இச்சிறிய பற்றுதல்களெல்லாம் நழுவி விடுகின்றன. வாழ்க்கையில் எதன் எதனிடத்தோ மனிதன் ஊக்கம் காட்டுகிறான். மானுடர் விஷயங்களில் கருத்தைச் செலுத்துவது மேலானதெனக் கருதப்படுகிறது. மானுடர் விஷயங்களிலும் அவர்களுக்கு நன்மை பயக்கக்கூடியவைகளில் ஊக்கம் காட்டுவது உயர்ந்த நோக்கம் என்றும் கருதப்படுகிறது. இதன் அடிப்படைத் தத்துவத்தை அறிந்துகொள்ளுதல் அவசியமாகிறது. மானுடவர்க்கத்தினிடத்து அபிமானம் காட்டுவது முடிவான லக்ஷியமல்ல. வாழ்வுக்கு மூலஸ்தானமாகவோ, நடுநிலையாகவோ இருப்பது மானுட சமுதாயமன்று. சிருஷ்டியிலுள்ள மற்றபொருள்களுக்கும் உயிர்களுக்கும் மேலானதாயிருப்பது மானுடசமுதாயமே. ஆனால் அதனிடத்தும் பக்தன் ஒருவன் தனது நாட்டத்தையெல்லாம் செலுத்திவிடலாகாது. இயற்கையின் நிகழ்ச்சிகளனைத்துக்கும் பக்தன் ஒருவன் சாக்ஷியாகவோ அல்லது அந்நிகழ்ச்சிகளினின்று பாடம் கற்றுக்கொள்ளும் மாணாக்கனாகவோ இருந்து பழகவேண்டும். அவைகளனைத்தையும்



கவனித்துப் பார்த்து அவைகளின் மெய்ம்மையை உணரத் தெரிந்துகொள்பவனே நல்ல பக்தனாகிறான். மனிதனிடத்து மனிதன் பற்றுவைக்கும் இயல்பு அவனுக்கு உண்டாய்விட்டது. அப் பற்றுதலினின்று அவன் விலகியிருந்து பழகவேண்டும். பற்றுதலினின்று விலகியிருக்க வல்லவனுக்கே இவ்வுலகைப் பற்றிய பேருண்மை ஒன்று உள்ளபடி விளங்கும். அன்பு என்னும் பேருணர்வு ஒன்றே உலகம் முழுதிலும் ஊடுருவிப் பாய்ந்திருந்து அதை இயக்கி வருகிறது. அன்புக்கு அந்நியமாக அதை இயக்கவல்ல சக்தி வேறு ஒன்றும் இல்லை. அதன் நடைமுறைக்கு ஆங்காங்குச் சிற்சில வேளைகளில் தடையோ, தடுமாற்றமோ உண்டாவதைக் காணலாம். ஆனால் அத்தகைய இடைஞ்சல் நிலைத்திருப்பதில்லை. பக்தியில் உயர்ந்த நிலைக்குப்போக எடுத்துக் கொள்ளும் முயற்சியால் அத்தகைய தடுமாற்றம் வருகிறது. இன்னும் சிலவேளைகளில் உலக அன்பின் காரணமாகச் சிறுசண்டை சச்சரவுநிகழ்வதுண்டு. வேறு சில வேளைகளில் அதன் பொருட்டு சிறிதளவு வீழ்ச்சியும் நிகழ்ந்து விடுவதுண்டு. ஆனால் அத்தகைய இன்னல்கள் அன்பின்வழியில் முன்னேற்றம் அடைந்துகொண்டிருப்பவனுக்கு பெருந்தீங்கு எதையும் விளைவிப்பதில்லை. அவைகள் சிந்தையில் எடுத்துக்கொள்ளத் தகுதியற்ற மிகச்சிறிய செயல்களாம். பக்தி மார்க்கத்தில் செல்லுகின்றவன் அச்சிறு நிகழ்ச்சிகளுக்குசாக்ஷியாய் இருந்துகொண்டு அவைகளை வேடிக்கை பார்க்கவேண்டும். வாழ்க்கையில் பற்றுவைத்திருப்பவனுக்கேஅவைகள் பெருஞ் செயல்களாகத் தென்படும். உலக பந்தபாசங்களினின்று விலகியிருப்பவனுக்கு அச்சிறு செயல்கள் வேறொரு விதத்தில் காட்சி கொடுக்கும். உண்மையில் அவையாவும் ஈசனுடைய திருவிளையாடல்களாம். பக்தன் ஒருவன் தன்னைத் துன்புறுத்துபவைகள் என அவைகளைக் கருதலாகாது. உலகக் கிருத்தியங்கள் என்னும் விளையாட்டுக்கு அவன் சாக்ஷியாக இருக்க வேண்டும். அல்லது அவ் விளையாட்டுகளினின்று விளையும் நல்ல பாடங்களைக் கற்கும் மாணாக்கனாக அவன் இருக்க வேண்டும். அத்தகைய மனபரிபாகத்தைப் பெற்றிருப்பவன் ஈசனுடைய விளையாட்டைக் கண்டு ரசிக்க வல்லவனாகிறான். தான் அன்பு சொரூபம் என்பதைக் கோடிக்கணக்கான முறைகளிலே ஈசன் விளக்கிக் கொண்டிருக்கிறான்.

இயற்கை முழுதிலும் ஆனந்தத்தின் காட்சியே தென்படுகிறது. இந்திரிய சுகங்கள் என்பன பல இருக்கின்றன. அவைகள் நிலைத்திருப்பதில்லை யாதலால் அவைகளைச் சிற்றின்பம் என்கிறோம். அச்சிற்றின்பத்திலும் மிகவும் கீழ்த்தரமானவைகள் உண்டு. அக்கீழான இன்பத்துக்குப் பிறப்பிடம் யாது என்னும் கேள்வி எழலாம். நித்யானந்த சொரூபியாக இருப்பவர் பரமாத்மா. அவருடைய ஆனந்தத்துக்கு அந்நியமாகப் பிரபஞ்சத்தில் ஒன்றுமில்லை. மிகக் கீழ்த்தரமான இன்பமும் அப்பேரானந்தத்தின் ஒரு சிறு தோற்றமாம். பொருள்களும், உயிர்களும் ஒன்றனிடத்து ஒன்று கவரப் பெறுகிறது. ஓர் உயிர் மற்றோருயிரிடத்து இணக்கம் வைக்கிறது. அவ்விணக்கம் மிகப் புல்லியதாய்ப் போய்விடுவதுமுண்டு. நடு நிலையினின்று பார்ப்பவர்க்கு மிகக் கீழ்த்தரமான இணக்கமும் தெய்வீக அன்பின் சிதைவுபட்ட தோற்றம் என்பது வெளியாகும். பரமாத்மாவுக்கு அமைந்துள்ள எண்ணிறந்த பெயர்களுள் ஹரி என்பது ஒன்று. இச்சொல்லுக்குப் பொருள் ஒன்று உண்டு. பிரபஞ்சத்திலுள்ள யாவையும் தன்பால் கவர்ந்து இழுப்பவன் என்பது இதன் பொருள். உயிர்களனைத்துக்கும் காந்தமாக இருப்பவன் அவன் ஒருவனே. மானுட நெஞ்சைக் கவர்வதற்குத் தகுதி வாய்ந்தவன் அவன் ஒருவனேயாம். எதற்கும்

வசப்படாத நெஞ்சை முற்றிலும் தனக்கே உரியதாக்கிக்கொள்ள வல்லவன் அவனல்லாது வேறுயாராக இருக்கமுடியும்! உண்மையில் அவனே உள்ளம் கவர்கள்வனுகிருன். பிணமோ, அல்லது பிணம் போன்ற ஜடப்பொருளோ எப்பொழுதாவது உள்ளத்தைக் கவர வல்லதாகிறதா? ஜடப்பொருளுக்கு அத்தகைய திறன் இல்லை. ஒரு பொழுதும் அது உள்ளத்தைத் தனக்கு உரியது ஆக்கிக் கொள்ளாது. சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். அழகு நிறைந்த முகம் ஒன்று தென்படுகிறது. தன்னையறியாது மானுடன் ஒருவன் அம்முகவிலாசத்துக்கு ஆட்படுகிருன். அவ்வழகிய முகமாக அமைந்த தோலும், சதையும், ரத்தமுமா உண்மையில் அம்மனிதனுடைய உள்ளத்தைக் கவர்ந்தவைகள்! அவை அழிந்துபட்டுப் போகக்கூடியவைகள். நாற்றமெடுக்கும் அவை அருகில் போகத் தகுதியற்றவைகள். அவையல்ல மனிதனுடைய உள்ளத்தைக் கவர்ந்தவை. பஞ்ச பூதங்களால் ஆகிய இப்பொருள்களினுள் ஊடுருவிப் பாய்ந்து தெய்வீக அன்பு ஒன்று இலங்கிக் கொண்டிருக்கிறது. அந்த அன்பின் விளையாட்டே அழகிய முகமாக வடிவெடுத்திருக்கிறது. மானுட உள்ளத்தைக் கவரவல்லது அப்பேரன்பு ஒன்றேயாம். அதன் ஆதிக்கமே யாண்டும் செல்லுகிறது. அறிவிலி ஒருவன் இப்பேருண்மையை அறிந்துகொள்ளுவதில்லை. அவன் உண்மையைத் தெரிந்திருந்தாலும், தெரியாதிருந்தாலும் அவனுடைய உள்ளம் கவர்கள்வனுயிருப்பது இப்பாரமார்த்திகப் பேரன்பு ஒன்றேயாம். ஒன்றையொன்று ஈர்த்திழுக்கும் சக்தியுடையதாய் இயற்கையிலுள்ள யாவும் அமைந்திருக்கின்றன. ஜடப்பொருள்களிடத்தும் ஈர்ப்புச் சக்தி இருக்கிறது. எல்லாப் படித்தரங்களிலுமிருக்கிற இந்த ஈர்ப்புச் சக்தியானது ஹரியினிடத்துள்ள பெருங்கவர்ச்சியின் புறத்தோற்றமாம்.

न वा अरे पत्युः कामाय पतिः प्रियो भवति
आत्मनस्तु कामाय पतिः प्रियो भवति ।
न वा अरे जायायै कामाय जाया प्रिया भवति
आत्मनस्तु कामाय जाया प्रिया भवति ।
न वा अरे पुत्राणां कामाय पुत्राः प्रिया भवन्ति
आत्मनस्तु कामाय पुत्राः प्रिया भवन्ति ।

ந வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி
ஆத்மனஸ்து காமாய பதி: ப்ரியோ பவதி
ந வா அரே ஜாயாயை காமாய ஜாயா ப்ரியா பவதி
ஆத்மனஸ்து காமாய ஜாயா ப்ரியா பவதி [பவந்தி
ந வா அரே புத்ராணும் காமாய புத்ரா: ப்ரியா-
ஆத்மனஸ்து காமாய புத்ரா: ப்ரியா பவந்தி

"கணவனுடைய வெறும் உடலமைப்பின் பொருட்டுக் கணவனை நேசிக்கும் காதலி இல்லை. கணவனுடைய வடிவத்தில் இருக்கும் ஆத்மாவே கணவனுகக் கருதி நேசிக்கப்படுகிறது." அன்பே வடிவெடுத்துள்ள மனைவிமார்கள் இக்கோட்பாட்டை அறிந்திருக்கலாம், அல்லது அறியாதிருக்கலாம். ஆயினும் அவர்களுடைய அன்புக்கு அடிப்படையாயுள்ள உண்மை இதுவேயாம். "மனைவியின் உடலமைப்பின் பொருட்டு மனைவி ஒருத்தி ஒருநாளும் நேசிக்கப்படுவதில்லை. ஆனல் மனைவி வடிவத்தில் இலங்கும் ஆத்மாவே நேசிக்கப்படுகிறது." இதேகோட்பாடுதான் ஏனைய உயிர் வகைகளுக்கும் பொருந்துகிறது. "குழந்தை ஒன்றை நேசிப்பவன் அக்குழந்தை வடிவத்திலுள்ள ஆத்மாவை நேசிக்கிருன்." உலகிலுள்ள ஏதேனும் ஒன்றை மனிதன் நேசிப்பானுகில் அவ்வடிவத்திலுள்ள ஆத்மாவைத்தான் உண்மையில் அவன் நேசிக்கிருன். பெரிய காந்த மலையாயிருப்பவர் கடவுள். அம்மலையைப் பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கும் இரும்புத்தூள்கள் போன்றவர்கள் நாம் அனைவரும். அவர் ஓயாது நம்மைக் கவர்ந்து இழுத்துக் கொண்டிருக்கிருர். அவரைப் போய் அடைதற் பொருட்டே விதவிதமான முறைகளில் நாம் அனைவரும் முயன்று கொண்டு இருக்கிறேம். உயிர் வகைகளாகிய நாம் எல்லோரும் எடுத்துக் கொள்ளுகின்ற முயற்சிக்கு ஒரு முடிவு இல்லை. இப்பிரயத்தனங்களை யெல்லாம் துருவித் துருவி ஆராய்ந்து பார்க்குங்கால் இவையாவும் ஒரே குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன என்பது வெளியாகும். சுயநலமாகத் தென்படுவதும் முடிவில் சுயநலமல்ல. பரம்பொருளை யடைதற் பொருட்டு முறை தவறிமனிதன் எடுத்துக் கொள்ளும் முயற்சியானது சுயநலமாகக் காட்சி கொடுக்கிறது. முடிந்த நிலையைக் கணக்கில் எடுத்துக்கொள்ளுமிடத்து சுயநலத்துக்காக வென்று பாடுபடுதலில் பொருள் ஒன்றுமில்லை. ஆனல் அறிவிலிகள் இதை அறிந்து கொள்வதில்லை. தாங்கள் எதன் பொருட்டு எக்கர்மத்தில் ஈடுபட்டிருக்கிருர்களென்பதும் அவர்களுக்கு விளங்குவதில்லை. வாழ்க்கையின் முடிவான குறிக்கோள் யாது என்பதை அறிந்துகொள்ளாததினுலேயே அவர்கள் தவறுதல்கள் இழைத்து விடுகிருர்கள். நதிகளெல்லாம் ஓயாது ஓடிக்கொண்டிருக்கின்றன. எத்திசையில் எப்படிப் பாய்ந்தாலும் கடலைப் போய்ச்சேருவதே அவைகளின் குறிக்கோள். காந்தமலையில் போய்ச்சேருவது இரும்புத் தூள்களின் குறிக்கோள். கடவுளைச் சென்றடைவது ஜீவர்களின் குறிக்கோள். உயிர்வகைகள் பெரும் பெரும் போராட்டங்களைச் செய்துகொண்டிருக்கின்றன. வாழ்வு என்பதே ஒரு மகாயுத்தமாகக் காட்சி கொடுக்கிறது. இத்தனை விதமான இயக்கங்களெல்லாம் முடிவில் பரமாத்மாவைச் சென்றடைந்து அவரோடு ஒன்றுபட்டு இருத்தல் பொருட்டேயாம். இந்த ஒரு குறியை நோக்கியே அண்டங்களில் உள்ள அனைத்தும் இயங்கி வருகின்றன.

பக்தன் ஒருவனுக்கோ, வாழ்க்கையின் கண் அமைந்துள்ள போராட்டங்களெல்லாம் எதற்காக வென்பது நன்கு விளங்குகிறது. அதைக்குறித்து, அவனுக்கு ஐயம் ஒன்றுமில்லை. முன்பு அவன் எடுத்திருந்த எண்ணிறந்த பிறவிகளில் அவன் புரிந்த போராட்டங்களுக்கு முடிவு இல்லை. எதன் பொருட்டு அவையாவும் நிகழ்ந்தன என்பதைஇப்பொழுதுஅவன் உணரவல்லவனுகிருன். எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமானே, மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடு உற விரும்புகிறேன் என்பது அவன் புரியும் இறுதியான பிரார்த்தனையாகும். இத்தகைய எண்ணம் கொண்டிருப்பவனுக்கு வாழ்க்கையில் மேலும் தடைகள் ஒன்றும் உண்டாவதில்லை. அவைகளினின்று அவன் விடுதலையடைந்து விடுகிருன். போராட்டம் என்னும் செயல் அவனுக்கு ஒழிந்து விடுகிறது. ஹரி என்றே, ஹரன் என்றே அழைக்கப்படும் பெரிய பொருளுக்குப் பக்கத்தில் அவன் வந்துவிடுகிருன். மெய்ப்பொருளின் பொருட்டு பொய்த்தோற்றங்களையும், பொய்யான முயற்சிகளையும் அவன் புறக்கணித்து விடுகிருன். பக்தன் ஒருவன் பண்ணுகிற தியாகம் இதுவேயாம். கடவுளிடத்து உண்டாகின்ற மகத்தான பற்றுதல் ஏனைய பற்றுதல்களை யெல்லாம் தகர்த்துத் தள்ளி விடுகிறது. 'பற்றுக பற்றற்ருன் பற்றினை' என்னும் மறைமொழிக்கு பக்தன் ஒருவனே நல்ல எடுத்துக்காட்டு ஆகிருன். இறைவன்பால் அவன் கொண்டுள்ள பேரன்பு உள்ளும், புறமும் அவனைச் சூழ்ந்து கொள்ளுகிறது. அப்பேரன்புக்கு அந்நியமாக சிறிய பற்றுதல் எதுவும் அவன் உள்ளத்தினுள்ளே நுழைதற்கு அவகாசம் இல்லாது போய் விடுகிறது. 'உற்றேமேயாவோம் உமக்கே நாம் ஆட் செய்வோம்' என்னும் கோட்பாடு அவனுக்கே உரியதாகிறது. இதைத் தவிர வேறு எத்தகையதாக பக்தனுடைய இயல்பு இருக்கமுடியும்? அன்புக்கடலின்

158845

சுகவாரி பக்தனுடைய உள்ளத்தில் புகுந்து அதைப் பூரண கும்பமாக்கி விடுகிறது. கடவுள் ஒருவரே அக்கும்பம் முழுதிலும் நீக்கமற நிறைந்திருக்கும் பெரிய பொருள் ஆகிறார். சிறிய பொருள்களிடத்துப் பற்றுதல் வைக்க இனி இடமில்லை. உலகப் பொருள்களிடத்து வைக்கும் பற்றுதலுக்கு ராகம் என்று பெயர். ராகத்தை அறவே அகற்றுதற்கு விராகம் அல்லது வைராக்கியம் என்று பெயர். கடவுளிடத்து வைக்கின்ற பற்றுதல் அல்லது ராகத்துக்கு அனுராகம் என்று பெயர். பக்தனுடைய உள்ளத்தில் நிறைந்திருப்பது அனுராகம். வேறு உலகப்பற்று ஒன்றும் அதனுள் தலை காட்டுதற்கு இடமில்லையாதலால் வைராக்கியம் அல்லது பற்றற்ற நிலை பக்தனுக்கு இயல்பாக அமைந்து விடுகிறது. கடவுள் ஒருவரைத்தான் அவன் அறிகிறான், அங்கீகரிக்கிறான், அவரிடத்துப் பற்றுதல் வைக்கிறான், அதாவது அவன் அனுராகமே வடிவெடுத்தவன்.

பக்தியின் மேலாம் நிலையை எட்டுதற்குப் பக்தன் ஒருவன் இம்முறையிலே பரிபாகம் அடைந்து வரவேண்டும். கடவுள் பற்று உச்சநிலைக்கு வருகின்றபொழுது உலகப்பற்று தானே நழுவி விடுகிறது. பராபக்தி என்னும் பெரிய மாளிகைக்குள்ளே பிரவேசிப்பதற்கு பக்தன் அப்பொழுது தகுதியுடையவனாகிறான். அப்பெரு மாளிகையின் வாயில் அவன் பொருட்டு அப்பொழுதே திறக்கப்பெறுகிறது. பேரன்புப் பெரு மாளிகைக்குள் பிரவேசித்தான பிறகே பராபக்தி இன்னதென்று விளங்குகிறது. இப்பெருங்கோயிலின் உட்பகுதிக்குள்ளேயும், செல்ல அப்பொழுது பக்தனுக்கு இயலுகிறது. அதனுள் நடுநாயகமாக இலங்கும் கர்ப்பக்கிரகத்தையும் அவன் எட்டி விடுகிறான். 'மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று இன்புற்றேன்' என்று அவன் இயம்புகின்றான். பின்பு அவனுக்கு விக்கிரகங்கள் தேவையில்லை; வழிபாட்டுச் சின்னங்களுக்கும் அவசியமில்லை. இவைகளையெல்லாம் பொருளற்றவைகள் என்று புறக்கணிப்பதற்கு அப்பரம பக்தன் ஒருவனுக்கே உரிமையுண்டு. ஏனையவர்கள் கோயில் வேண்டாம், மூர்த்தி வேண்டாம், சமயச் சின்னங்கள் வேண்டாம் என்று பகர்வதெல்லாம் வெறும் பிதற்றுதல்களேயாம். பராபக்தியை சுவானுபூதியில் அடையப்பெற்றவனே எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டிருத்தல் என்னும் பெரும்பேறு பெற்றவன் ஆகிறான். மற்றவர்களோ அன்பைப் பற்றிய வெறும் பேச்சாளர்களேயாம். பிரேமை பக்தியை அடையப்பெற்றவன் உயிர்வகைகளுக்கிடையில் பேதம் காண்பதில்லை. உயர்வு, தாழ்வு என்னும் எண்ணத்துக்கு அவன் உள்ளத்தில் இடமில்லை. கரைகாணாத பிரேமை சாகரம் அவனுள் புகுந்து விட்டது. அதன் விளைவாக மனிதனை அவன் மனிதனாகக் காண்பதில்லை. தனது பேரன்புக்குரிய பரமனையே மனிதவடிவில் காண்கிறான். ஒவ்வொரு முக விலாசத்திலும் பரமாத்மாவே மிளிர்ந்திருக்கிறார். சூரியனுடைய ஒளியிலிருப்பது பரமாத்மாவின் ஒளி; சந்திரனுடைய ஒளியில் ஒளிர்வதும் பரமாத்மாவின் ஒளி. சுந்தரேசனுடைய சௌந்தர்யமே யாண்டும் பிரகாசிக்கிறது. பரம்பொருளின் தேஜஸே யாண்டும் தேஜோமயானந்தமாகத் திகழ்கிறது. பராபக்தியை அடையப்பெற்றுள்ள பக்தர்களை இன்றைக்கும் உலகில் காணலாம். இத்தொல்லுலகில் அன்னவர்கள் தென்படாத காலம் இல்லை. அன்னவர்களின் சான்னித்தியமே இவ்வையக வாழ்வுக்கு இனிமை தருகிறது. பிரேமை பக்தி பூண்டிருக்கும் ஒருவனை நல்ல பாம்பு தீண்டிவிட்டது என்று வைத்துக் கொள்வோம். இறையவனது மேனியை அலங்கரித்துக் கொண்டிருக்கும் தூதன் ஒருவன் தன்னை

(59ம் பக்கம் பார்க்க)

# பரமஹம்ஸரின் நிறைநிலை

## மதங்களின் கொள்கை

கடவுள் மனிதனாக அவதரித்து வருகிறாரா என்னும் கேள்விக்கு உலகிலுள்ள மதங்கள் விதவிதமான விடைகளை அளிக்கின்றன. பெரிய பொருளாகிய அவரை 'அல்லா' என்று இஸ்லாமிய மதம் அழைக்கிறது. அப்பெரிய பொருளுக்கு ஏற்ற பரந்த விளக்கமும் அம்மதத்திலிருக்கிறது. வேதாந்தம் பகர்கிற நிர்குணப் பிரம்மமும் அல்லாவும் ஒன்றே என்று நாம் இயம்பலாம். அல்லா ஆனவர் மானுடராக உலகில் அவதரிப்பதில்லை. கீழ்நிலைக்கு அவர் இறங்கி வருவது கிடையாது என்பது இஸ்லாமிய மதக்கோட்பாடு. ஆனால் தீர்க்கதரிசிகள் கடவுளை மக்களுக்கு அறிமுகப் படுத்துவதற்கு உலகில் வருகிறார்களென்றும் அம்மதம் புகட்டுகிறது. கிறிஸ்துவமதப் பிரகாரம் ஏசுநாதர் ஒருவர் மட்டும் கடவுளின் அவதாரமாகிறார். அவருக்கு முன்போ, பின்போ அவதார புருஷர் யாருமில்லை என்பது அம்மதக் கொள்கை. ஹிந்து மதத்தின் கொள்கைப்படி கடவுள் திரும்பத் திரும்ப அவதரிக்கிறார். சகுணப் பிரம்மத்தின் சீரிய தோற்றம் அவதாரம் என்று அழைக்கப் படுகிறது. நிர்குணப் பிரம்மமோ தோற்றத்தையெல்லாம் கடந்தவர். அவதரித்தல் என்னும் பேச்சுக்கு ஆங்கு இடமில்லை. புத்தமதக் கொள்கைப்படி போதிசத்வம் . அடைந்தவர்கள் எல்லோரும் புத்தர் ஆகின்றனர். அப் பெருமக்களனைவரும் போற்றுதற்குரியவராகின்றனர். நிர்வாணம் என்னும் பாரமார்த்திகப் பெருநிலையில் ஜீவபோதத்தை இழந்துவிடுவது வாழ்க்கையின் குறிக்கோள். புத்தர்கள் எல்லாரும் இறுதியில் நிர்வாண நிலையை அடைந்து விடுகின்றனர். இது வேதாந்தத்துக்கு சம்மதம். ஆனால் பௌத்தர்களில் பலர் கருதுவதுபோன்று இந்த முடிவான நிலை சூன்யமல்ல; மெய்ப்பொருள்தான் ஆங்குஇருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுதற்கு இப் பெருநிலையை பிரம்ம நிர்வாணம் என்று வேதாந்தம் பகர்கிறது. மோக்ஷ சாம்ராஜ்யம் என்றும் இது இயம்பப்படுகிறது. பரிபூரணத்தை அடைந்துள்ள பெருமக்களை உபாசிப்பதே பரிபூரணத்தை அடைதற்கு உற்ற உபாயமாகிறது. அப் பெருமக்களுக்கு விதவிதமான பெயர்கள் வழங்கப்படுகின்றன. அவதார புருஷர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் முதன்மை பெறுகின்றனர். ஏனென்றால் அவர்களிடத்துக் குறையொன்றும் இல்லா நிறைவாழ்வு தென்படுகிறது.

## தசாவதாரங்கள்

உயிர் வகைகளின் பரிணாமம் யாவும் தசாவதாரத்தில் அடங்கி விடுகிறது. ஐம்பெரும் பூதங்களுள் நீர் தோற்றத்துக்கு வரும்பொழுது உயிர்வகைகள் அதனுள் உருவெடுக்கின்றன. நீர் வாழ்வன அனைத்துக்கும் மத்ஸ்யாவதாரம் என்பது பொதுப் பெயர். இயற்கையில் இது ஓயாது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. நீர் வாழ்வன, பிறகு நிலத்துக்கும் வர முயலுகின்றன. ஆமை, நண்டு, தவளை, முதலை ஆகியவைகளெல்லாம், நீர், நிலம் ஆகிய இரண்டிலும் வசிக்கின்றன. இவையாவுக்கும் கூர்மாவதாரம் என்பது பொதுப் பெயர். பிறகு பெரிதும் நிலத்தில் வாழ்ந்து இடையிடையே நீரையும் சதுப்பு நிலத்தையும், சேற்றையும் நாடிச் செல்லும் உயிர் வகைகளிருக்கின்றன. அவையாவுக்கும் வராக அவதாரம் என்பது பொதுப் பெயர். அடுத்தபடியாக மானுட இயல்பும், விலங்கு இயல்பும் சேர்ந்து அமைந்துள்ள உயிர் வகைகள் நரசிம்ம அவதா

ரம் என அழைக்கப் படுகின்றன. மக்களில் பெரும்பாலர் இன்றைக்கும் அந்நிலையிலிருக்கின்றனர். அடுத்துவருவது வாமன அவதாரம். வடிவத்திலும் இயல்பிலும் மனிதன். ஆனால் முன்னேற்றம் ஒன்றும் ஏற்படவில்லை. அத்தகைய மக்கள் எல்லோரும் வாமனர் ஆகின்றனர். முன்னேற்றம் அடைந்திருப்பதற் கிடையில் சில குறைபாடுகளோடு கூடியிருப்பவர்களெல்லோரும் பரசுராம அவதாரத்தில் சேருகின்றனர். அடுத்தபடியாகக் குறையொன்றுமில்லாத நிறைமனிதன் ஆகின்றவன் நரோத்தமன் என்று அழைக்கப்படுகிறான். அத்தகைய நன் மக்களுக்கு முன் மாதிரியாயிருப்பவன் தசரத ராமன். அந்த ரகுபதி ராமனை உபாசித்து அவன் போன்று வாழ்வில் பக்குவமடைய முயலுபவர் எண்ணிக்கையில் அடங்காதவர்கள். இனி தோற்றத்தளவில் நல்ல மானுட சரீரம். அதனுள் கட்டிலடங்காது இலங்குவது பூரண தெய்வீகம். அது கிருஷ்ணாவதாரம். பூரணாவதாரம் என்று ஸ்ரீ கிருஷ்ணன் பகரப்பெறுகிறான். அவனை அறிந்துகொள்ளுதலும் தெய்வத்தை அறிந்து கொள்ளுதலும் ஒன்றேயாம். மனிதன் சுயப்பிரயத்தனத்தால் அந்தப் பரிபூரண நிலையைப் பெற்றுவிடலாம். அதற்கு நல்ல எடுத்துக்காட்டாயிருப்பது புத்த அவதாரம். தாம் அடைந்த போதிசத்துவத்தை உலக மக்கள் அனைவரும் அடைய வேண்டுமென்று அவர் பரிந்து அழைக்கிறார். பிறகு பிரளய காலத்தில் உயிர்கள் யாவும் ஒடுங்கிவிடுகின்றன. அதற்கு உருவகமாக அமைந்திருப்பது கல்கி அவதாரம். அதாவது இயற்கையில் உள்ள சம்ஹார சக்தியே கல்கியென்று அழைக்கப்படுகிறது. இங்ஙனம் தசாவதாரத்தில் உயிர்கள் தோன்றுவது, பரிபூரண நிலையையடைவது, அண்டத்தின் ஒடுக்கம் ஆகிய எல்லாம் வந்துவிடுகின்றன.

## அம்ச அவதாரங்கள்

சமுதாயத்தை நல்வழியில் நடாத்துவதற்கு எப்பொழுதெல்லாம் தேவை ஏற்படுகிறதோ அத்தகைய நெருக்கடிகளில் எல்லாம் சர்வேசுவரனுடைய சம்பத்துகளுடன் அம்ச அவதாரங்கள் உலகில் திரும்பத் திரும்ப வருவதுண்டு. இது ஹிந்து மதத்தின் கோட்பாடு. ஹிந்து மதத்திலும் இதைப் புராணக் கோட்பாடு என்று சொல்ல வேண்டும். ஹிந்து மதத்தின் சிகரமாகிய வேதாந்தம் அவதார புருஷர்களையும் பண்பட்ட ஜீவர்களோடு சேர்த்துவிடுகிறது. இத்தத்துவங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டே பண்பாடடைந்துள்ள பெருமக்களை நாம் வகைப்படுத்த வேண்டும்.

பெருமக்களை வகைப்படுத்துதலில் ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒருதனி இயல்பு இருக்கிறது. இந்தியா முழுதுக்கும் ஹிந்து மதம் பொது எனினும் மாகாணந்தோறும் அதன் சிறப்புப் பகுதி ஒன்று முன்னணியில் வந்து நிற்கிறது. ஆறு சமயங்களுள் தமிழ் நாட்டில் சைவம், வைஷ்ணவம், கௌமாரம் ஆகிய மூன்று சமயங்கள் மட்டும் முன்னணியில் வந்து நிற்கின்றன. இங்கே சைவ சித்தாந்தம் வேதாந்தத்தோடு சம அந்தஸ்து பெறுகிறது. அவதார புருஷர்களைப் பற்றிய பேச்சு அவ்விரண்டினுள் இல்லை. வைஷ்ணவ மதமோ தச அவதாரங்களுக்கு அங்கீகாரம் கொடுக்கிறது. அந்தப் பத்தினுள் உபாசனைக்குரிய மூர்த்திகள் தசரதராமனும், கிருஷ்ணனும் மட்டுமே. நரசிம்மனை உபாசிப்பவர் ஒரு சிலர் உண்டு. ஏனைய ஏழுபேர் பின்னணியில் வைக்கப்படுகின்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தோன்றியுள்ள வங்காளத்தின் ஐதிகம் வேறு விதமானது. பெரியார் ஒருவரை அவதாரபுருஷர் என்று சொல்லுவதுதான் அந்த மாகாணத்தின் இயல்பு. என்றைக்கு வேண்டுமென்றாலும் அந்தப் பிராந்தியத்தில் ஐந்தாறு அவதார மூர்த்தி



களைப் பொதுமக்கள் சிருஷ்டி செய்து வைத்திருப்பதைக் காணலாம். அத்தகைய சூழ்நிலையில் தோன்றி வந்துள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவரை ஒரு அவதார மூர்த்தி என்று வங்காளத்தவர்கள் வகைப்படுத்தி வருகிறார்கள் என்றால் அதில் வியப்பொன்றுமில்லை. பொதுவாக வங்காளிகள் அல்லாத இந்தியர்களும் சிறப்பாகத் தமிழ் மக்களும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஓர் அவதார மூர்த்தியா என்பதைப் பற்றிப் பலகாலும் நம்மோடு சர்ச்சை செய்து வந்திருக்கின்றனர். மகாபுருஷர் ஒருவருடைய மகிமைகளையெல்லாம் முற்றிலும் ஆராய்ச்சிபண்ணுவது மிகக் கடினமானது. எனினும் வேதாந்த தத்துவத்தை அளவையாக வைத்துக்கொண்டு அவர்களின் மகிமைகளை அளக்க முயலுவதின் மூலம் நமது அறிவைத் தெளிவடையப் பண்ணுகிறோம். அதன் மூலம் அம்மகா புருஷருக்கும் நமது வந்தனை வழிபாட்டைச் சமர்ப்பிக்கிறோம். இத்தகைய மனப்பான்மையுடன் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஓர் போற்றுதற்குரிய பரிபூரணர் என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.

## பிறந்தது முதல் பரிபூரணர்

வேதாந்தக் கோட்பாட்டின்படி அக்ஞானத்திலிருக்கின்ற பொழுதும் ஜீவர்கள் பரப்பிரம்மத்துக்கு அன்னியமானவர்களல்லர். புராணக் கோட்பாட்டின்படி கர்மத்துக்கு வசப்பட்டுப் பிறப்பெடுப்பவர்களெல்லாம் அக்ஞானத்தில் உழலும் ஜீவர்கள். கர்மத்தையும், மாயா சக்தியையும் வசப்படுத்தி அவைகளுக்கு அதிபதியாகப் பிறப்பெடுப்பவர் அவதாரமூர்த்தி. பிறந்தது முதற்கொண்டு மாயப்பிரபஞ்சத்தில் அவதார புருஷர் ஒருவர் கட்டுப்படாதிருக்கிறார். தோற்றத்தளவில் கட்டுப்பட்டவர் போன்று தம்மை நமக்குக் காட்டிக்கொள்கிறார். ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸரிடத்து இத்தகைய மகிமை இருப்பது வெளிப்படையாகிறது. பாலகனாக இருந்தது முதற்கொண்டு அவர் செய்த செயல்களெல்லாம் தர்மத்துக்கு நல்ல விளக்கங்கள் ஆகின்றன. மறந்தும் அவர் தமது வாழ்க்கையில் குற்றம் எதையும் செய்துவிடக்கிடையாது. விளையாட்டுக்காகவென்று அவர் செய்த வினைகளிலும் அறநெறியே விளக்கம் பெற்றுள்ளது. உடல் கூற்றில் அவர் கட்டுப்பட்டவரல்லர். குடியிருக்கும் வீடும், அழிவுக்கு அரங்கமாயிருக்கும் சுடுகாடும் அவருக்கு ஒன்றே. வாழ்வு, சாவு ஆகிய இரண்டுக்குமிடையில் அவருக்கு வேற்றுமையில்லை. செயல்புரிவது, செயலற்றிருப்பது ஆகிய இரண்டும் சமனாக அவரால் கருதப்படுகின்றன. அறிவிலி போன்று தென்படும் இளைஞனாயிருக்கும்பொழுதே அறிவுத்திறனும், தெளிவும் அவர்பால் திகழ்கின்றன. எனவே பிறந்தது முதற்கொண்டு பூலோக லீலை முழுதிலும் அவர் மாயையில் கட்டுப்பட்டவரல்லர் என்பது நன்கு வெளியாகிறது.

## யுகதர்மத்துக்கு விளக்கம்

வினையில் வசப்படாத பரம புருஷர் ஒருவர் எந்த வினையால் தூண்டப்பெற்றுப் பிறப்பெடுக்கிறார் என்பது கேள்வி. அவதார மூர்த்திக்குச் சொந்த வினையில்லை. சமுதாயத்தின் வினைத் தொகையைத் தமது வினையாக அவர் ஏற்றுக்கொள்கிறார். எத்தகைய கர்மத்தைச் செய்தால் மேன்மையுறலாம், எத்தகைய கர்மம் மனிதனைக் கீழ்மையில் ஆழ்த்துகிறது என்னும் மதிமயக்கம் ஒவ்வொரு காலத்திலும் மக்களுக்கிடையில் உண்டாகிறது. அந்த நெருக்கடியில்தான் அவதார மூர்த்தி ஒருவர் வருகிறார். அவர் செய்கின்ற செயலின் மூலமாகத் தவிர்க்க வேண்டிய வினை எது, ஒழுக வேண்டிய வினை எது என்பது நன்கு வெளியாகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய வாழ்வில் இக்காலத்துக்குத் தேவையாயிருக்கும் யுக தர்மம் நன்கு விளக்கம் பெறுகிறது. சிறுவர்

களுக்கும் அது விளங்கக் கூடியதாக இருக்கிறது. மானுடப் பிறவி அலாதியாக கடவுள் வழிபாட்டுக்கென்று அமைந்தது என்னும் கோட்பாட்டை அவருடைய வாழ்வு விளக்குகிறது. கல்வி கற்பது மக்களுக்கிடையில் ஜீவனத்தின் பொருட்டுப் போட்டியையும் பொறாமையையும் உண்டு பண்ணுவதற்காக அல்ல என்பதை அவர் நன்கு விளக்குகிறார். ஜாதி வேற்றுமை என்பது மனதைப் பிடித்துக் கொண்டிருக்கும் ஒருவிதமான மயக்கம் என்பதையும் அவர் தெளிவுபடுத்துகிறார். தீண்டாமை என்னும் நோய் அக்ஞானத்தில் பிறந்தது என்பதும் அவர் மூலம் வெளியாகிறது. உலகத்திலுள்ள மக்கள் அனைவர்க்கிடையிலும் ஒற்றுமையை உண்டு பண்ண வல்லது பாரமார்த்திக வாழ்வு. அவ்வுண்மையை வெளிநாட்டவர்களுக்கு எடுத்துக் காட்டுதற்கு விவேகானந்த சுவாமிகளை திக்விஜயம் செய்யும்படி ஏவியது இந்த யுகத்துக்கேற்ற தர்மமாகும். நவீன உலகம் பணத்தினிடத்து மிகைப்பட்ட மதிப்பு வைத்துள்ளது. அது மனிதனுடைய மேன்மைக்குப் பொருந்தாது என்பதை விளக்கிக் காட்டுதற்குப் பரமஹம்ஸர் பணத்தைத் தீண்ட மறுத்துவிட்டார். இக்காலத்துக்கு எத்தகைய மனப்பான்மையும் வாழ்க்கை முறையும் தேவையோ அதைப் பரமஹம்ஸரது ஜீவிதத்தில் காண்கிறோம். யுக தர்மத்தைத் தெளிவுபட விளக்கிக் காட்டியது அவருடைய சிறப்பியல்பு ஆகும்.

பஞ்சமகா யக்ஞத்தில் நரயக்ஞத்தினுடைய உயர் நிலையைப் பரமஹம்ஸ தேவர் விளக்கிக் காட்டியிருக்கிறார். மற்ற உயிர்களைக் கண்ணியப் படுத்தும் இக்காலத்திய மாந்தர் மக்களைக் கண்ணியப்படுத்த மறந்து விட்டனர். மக்கள் எல்லோரையும் கடவுள் சொரூபமாகக் கருதி அவர்களோடு இணக்கம் கொள்ள வேண்டுமென்பதைப் பரமஹம்ஸர் தாமே அனுஷ்டித்துக் காட்டுகிறார். கானகத்துக்குச் சென்று விலங்குகளுக்கிடையில் தவம் புரிவதைவிட மக்கள் சமுதாயத்திலிருந்து அவர்களோடு நல்லிணக்கம் கொள்ளுதல் சீரிய தபசு என்று அவர் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

### சநாதன தர்மம்

பரமாசாரியர் ஒருவர் உலகில் வருகிறபொழுது அந்தந்தக் காலத்துக்குரிய யுக தர்மத்தை விளக்கிக் காட்டுவது போன்று எக்காலத்துக்கும் பொதுவாயிருக்கிற சநாதன தர்மத்தையும் அவர் தெளிவுறுத்துகிறார். காமத்துக்கு வசப்படுவதால் வரும் கேட்டை விளக்கிக் காட்டுதற்கென்றே தசரத ராமன் அவதரித்தார். பொருளிலும், மண்ணாளுதலிலும் வைக்கிற பற்றுதலால் வரும் கேடுகளை விளக்கிக் காட்டுதற்குக் கிருஷ்ண பரமாத்மா அவதரித்தார். போகம், பொருள் ஆகிய இரண்டுக்கும் மனிதன் வசப்படலாகாது என்பதை ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய ஜீவிதம் விளக்குகிறது. நல்லான் ஒருவனுக்கு உலகப்பற்றைவிட தெய்வப் பற்றே அதிகமாக இருக்கவேண்டும் என்பதையும் அவருடைய வாழ்வு விளக்கிக் காட்டுகிறது. பரமாசாரியர்கள் பலர் வேதாந்த சாஸ்திரங்களுக்கு பாஷ்யம் அல்லது விளக்கம் எழுதிவைத்தார்கள். இச்செயலைப் பரமஹம்ஸ தேவர் புதியதொரு முறையில் நிறைவேற்றி யிருக்கிறார். வேதாந்த தத்துவங்களை எழுத்தின் மூலம் விளக்குதற்குப் பதிலாகத் தமது வாழ்க்கையின் மூலம் அவர் விளக்கியிருக்கிறார். பாஷ்யங்களுள் வாழ்வு என்னும் பாஷ்யமே மிகச் சிறந்தது என்னும் முடிவுக்கு வரச் சமய வாதிகள் கடமைப்பட்டிருக்கின்றனர். பாஷ்யக்காரர்கள் அனைவர்க்கும் பரமஹம்ஸர் விடுத்துள்ள தனிச் செய்தி இதுவேயாம்:

ஆண், பெண் ஆகிய இருபாலார்க்கிடையில் எத்தகைய இணக்கம் இருக்கவேண்டு



மென்பது சநாதன தர்மத்தின் ஒரு முக்கியமான பகுதியாகும். துறவியர்களனைவரும் பெண்பாலர்களிடத்திருந்து ஒதுங்கியிருந்து இப்பிரச்னையைத் தீர்த்து வைத்தார்கள். அவதார புருஷர்களுள் பெண்பாலர்க்கு உயர்ந்த ஸ்தானத்தை நல்கியவர் தசரத ராமன். ஜீவர்களனைவரும் பிரகிருதி அல்லது பெண்பால் சொரூபமென்றும் தாம் ஒருவரே அண்டங்களனைத்துக்கும் நாயகனாயுள்ள புருஷன் என்றும் கிருஷ்ண பரமாத்மா விளக்கியிருக்கிறார். இருபாலாருடைய இணக்கத்தின் உச்சநிலையைத் தொட்டுக் காட்டியவர் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒருவரேயாம். ஆண்பாலுக்குரிய பெருமையனைத்தும் பெண்பாலுக்கும் இருக்கிறது. பெண்பால் ஒருத்தி தன் கணவனைத் தெய்வமாகக் கருதுவது போன்று ஆடவன் ஒருவன் மணந்து கொண்ட மனைவியைத் தெய்வமாகக் கருதவேண்டும் என்னும் கோட்பாட்டைப் பரமஹம்ஸர் உலகுக்கு அளித்திருக்கிறார். பெண் ஒருத்தி விதவை ஆய்விடுவதில் அமங்கலம் ஒன்றுமில்லை என்பதும் நிரூபிக்கப்படுகிறது. உண்மையில் ஆத்ம சொரூபம் ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலியுமல்ல. இவையாவையும் கடந்தது அது. அத்தகையதைப் பால் வேற்றுமையுடன் பாராட்டுகின்ற இடத்து ஆண்பால், பெண்பால் ஆகிய இருபால்களுக்கும் மேலான சம அந்தஸ்து அளிப்பதே சநாதன தர்மத்தின் முடிவானநிலை என்பதை அவர் தெளிவு படுத்தியிருக்கிறார். ஆண் பெண் இணக்கத்தில் இதைவிட உயர்ந்த லட்சியத்தை எடுத்துக்காட்ட எந்தப் பரமாசாரியருக்கும் இயலாது. இச்சீரிய கோட்பாட்டை மக்களுக்குத் தெளிவுறுத்தி யிருப்பதை முன்னிட்டுப் பரமஹம்ஸரை அவதார வரிஷ்டர் என்றுரைக்கலாம். வேறுபடு சமயங்களுக்கிடையில் உண்மையில் வேற்றுமையில்லை. அடிப்படைத் தத்துவங்களில் அவையாவும் ஒன்றுபட்டிருக்கின்றன என்பதையும் பரமஹம்ஸர் தமது சாதனங்கள் மூலமாக விளக்கியிருக்கிறார். இறுதியாக சமயங்களில் கட்டுண்டு கிடப்பது மனிதனுக்கு லக்ஷியமல்ல, சாஸ்திரச் சண்டையில் உழன்று கிடப்பது சாதகனுக்குப் பொருந்தாது, பிரபஞ்ச வாழ்க்கையில் கட்டுண்டிருப்பதும் அவனுக்கு ஒவ்வாது — இவை யாவையும் துறந்து பரத்தினுள் இரண்டறக் கலத்தலே வாழ்க்கையின் முடிவான குறிக்கோள் என்பதை அவர் நன்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

### தத்துவ ஆராய்ச்சி

உலகை உய்விக்க வந்த பெருமக்களுள் முடிவான தத்துவத்தை உள்ளபடி இயம்பியவர்கள் புத்தர் பெம்மானும், ஜகத்குரு சங்கரரும் ஆவர். புத்தர் எதிர்மறையிலும் சங்கரர் உடன்பாட்டிலும் அவ்வுண்மையை உரைத்திருக்கின்றனர். புத்தரிடத்து அலாதியான தெய்வீக சக்தி இருந்ததாக சிஷ்யர்கள் அவரைச் சிறப்பித்துப் பேசினார்கள். ஆனால் அதற்கு அவர் விடுத்த விடை கவனிப்பதற்குரியது. மற்ற உயிர்களிடத்து இல்லாத தனிச் சிறப்பு தம்மிடத்து ஒன்றும் இல்லவே இல்லையென்று அவர் மறுப்புக் கூறிவிட்டார். புத்தரைச் சரியாக அறிந்து கொள்ளாதவர் அவரை நிரீசுவரவாதி என்று பகர்கிறார்கள். உண்மையில் அவர் ஈசுவரவாதியுமல்லர், நிரீசுவரவாதியுமல்லர். மனிதனை மேலோனாக்கும் மார்க்கத்தை எடுத்து விளக்குதலிலேயே அவர் கண்ணுங் கருத்துமாயிருந்தார். உலக வாழ்வு துன்பம் நிறைந்தது; ஜீவிதம் எரியும் தீபத்துக்கு ஒப்பானது; கர்மம் என்கின்ற எண்ணெய் இல்லாது செய்துவிடு; வாழ்வு என்னும் தீபம் அணைந்துபட்டுப் போம்; அத்துடன் துக்கமும் முடிந்து விடுகிறது என்பதே அவர் போதனையின் சாரம். வேதாந்தத்தின் சிகரத்தை ஐயம் திரிபுஅற உலகுக்கு எடுத்துப் புகட்டியவர் சங்கரர். பிரம்மத்துக்கு

அந்நியமாக ஒன்றுமில்லை. ஜீவன் என்பதும் பிரம்மமே என அவர் உறுதி கூறியுள்ளார். இவ்விருவர் பகர்ந்த அபேதநிலைதான் வேதாந்தத்தின் முடிவு. உலகத்துக்கு உயர்ந்த செய்தியைக்கொண்டு வந்தவர்களுள் புத்தருக்கும் சங்கரருக்குமே முதன்மை கொடுக்கவேண்டும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரோ சங்கரருடைய போதனையையும் புத்தருடைய போதனையையும் சமரஸப்படுத்துகிறார். கடவுளுடைய பக்தனாகும் வரையில் மனிதன் அடைகின்ற துன்பத்துக்கு முடிவில்லை. பக்தி ஓங்குமளவு துன்பம் தானே தேய்கிறது. பக்தியின் விளைவாக மெய்ப்பொருளாகிய கடவுளை ஆத்ம சாதகன் தன் உள்ளும் புறத்திலும் காண்கிறான். அம்மெய்ப்பொருள் உபாசனையில் ஆனந்தம் அதிகரிக்கிறது. வாழ்வு நிறை நிலை எய்துகிறது. ஐயங்களனைத்தும் அப்பொழுதுதான் அகன்று போய்விடுகின்றன. தம்மை அணுகிய பக்தர்களுடைய மனநிலையைப் படம் பிடிக்கும் கண்ணாடி போன்று பரமஹம்ஸர் திகழ்ந்தார். எனவே அவரோடு தொடர்பு வைத்து நலன் ஒன்றும் அடையப்பெறாது போனவன் யாருமில்லை. சாதகன் ஒவ்வொருவனும் தனக்குத் தேவையானதைப் பரமஹம்ஸரிடம் கண்டான். அதற்குமேல் தான் புதியதாகப் பெறுதற்கான பெரு நிலையும் அவரிடத்து இருப்பதை ஒவ்வொரு சாதகனும் உணர்ந்தான். தானும் அப்பெருநிலையை எட்டவேண்டுமென்று முயன்றான். பாரமார்த்திகம் எல்லாருடைய பொதுவுடைமை யென்று ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் போதித்துள்ளார். ஆத்ம சாதகர்களனைவருக்கும் பொருந்திய அருள் விருந்தை அவர் அள்ளி வழங்கிக் கொண்டிருந்தார். இறைவனுடைய திருநாமத்தை ஓதுதல் என்னும் எளிய சாதனத்தில் துவக்கி அத்வைத சித்தியடையும் பரியந்தம் உள்ள ஆத்மீகப் பேறுகளனைத்தும் அன்பர்களுக்குப் பரமஹம்ஸ தேவரிடமிருந்து போய்ச் சேருவனவாயின.

**பரம்பொருள் சொரூபம்**

அண்டத்திலுள்ளதெல்லாம் அணுவிலும் இருக்கிறது. அணு ஒன்றைச் சரியாக அறிந்துகொண்டால் அண்டம் முழுவதையும் நாம் அறிந்தவர் ஆகிறோம். ஓர் அணுவைச் சரியாக அறிந்துகொள்ளுதற்கு மற்றோர் அணுவின் ஆராய்ச்சி தேவையில்லை. ஒவ்வொன்றும் தன்னளவில் பூரணமாகவே இருக்கிறது. மகா புருஷர்களைப்பற்றிய உண்மையும் இதுவே. ஒரு மகாபுருஷரை உள்ளபடி அறிந்துகொள்ளுதற்கு அம் மகாபுருஷரிடத்திலேயே வேண்டிய ஆதாரமெல்லா மிருக்கிறது. ஸ்ரீ ராமனைச் சரியாக அறிந்துகொள்ளுதற்கு அவனுடைய வரலாறே போதுமானது. அவனை அறிதற்கு ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதத்துக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை. அதேவிதத்தில் ஸ்ரீ கிருஷ்ணனும் தன்னிடத்துள்ள பரிபூரணத்தையெல்லாம் தானே விளக்குகிறான். புத்தர் பெம்மானைப்பற்றிய உண்மையும் இதுவே.

இக்காலத்தில் அரிய மூர்த்திகள் மூவர் இம் மண்ணுலகில் தோன்றிவந்துள்ளார்கள். அவர்களை முறையே ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் என்றும், அன்னை சாரதா தேவியார் என்றும், சுவாமி விவேகானந்தர் என்றும் பகரலாம். பரம்பொருள் ஒருவரே யாண்டும் இருக்கிறார். தோற்றங்களனைத்தும் அவரிடத்திருந்து வந்தவைகள். தோன்றியுள்ள மக்களுள் நிறை மக்களும் இருக்கின்றனர். நிறை மக்களை நேராகத் தெரிந்துகொண்டால் நாம் பரம்பொருளைத் தெரிந்துகொண்டவர் ஆகிறோம். அவர்களை அறிந்துகொள்வதும், பிரம்ம ஞானத்தைப் பெறுவதும் ஒன்றேயாம்.

त्वं स्त्री त्वं पुमानसि

த்வம் ஸ்த்ரீ த்வம் புமானஸி

'பெண்ணாக வந்திருப்பவரும் நீயே, ஆணாக வந்திருப்பவரும் நீயே' என்பது உபநிஷத் வாக்கியம். பரப்பிரம்மமே நிறை நிலையிலிருக்கும் பெண் வடிவெடுத்து வந்தால் அது எத்தகைய வாழ்க்கையை வாழ்ந்துவரும் என்பதெல்லாம் அன்னை சாரதா தேவியாரின் வாழ்க்கையில் பூர்த்தியாகி விடுகிறது. பெண் வடிவத்தில் இலங்குவதும் பரம்பொருளே என்பதை அவருடைய சொரூபமும், அவருடைய ஜீவிதமும் சேர்ந்து விளக்குகின்றன.

பரப்பிரம்மமே ஒரு நிறை மனிதனாக உருவெடுத்து உலக வாழ்க்கையை நடாத்தினால் அது எதையெல்லாம் செய்யவல்லதாகும் என்னும் கேள்விக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய ஜீவிதமே விடை கொடுக்கும். அவரை முற்றிலும் அறிந்து கொள்ளுதற்கு அவருடைய வாழ்வே போதுமான ஆதாரமாகிறது. அவரை உள்ளபடி அறிந்து கொள்ளுதலும் பரப்பிரம்மத்தை அறிந்து கொள்ளுதலும் ஒன்றேயாம். மற்றொரு உபநிஷத் வாக்கியம் உண்டு.

आसीनो दूरं व्रजति शयानो याति सर्वतः ।

ஆஸீனோ தூரம் வ்ரஜதி சயானோ யாதி ஸர்வத:

என்பது அந்த உபநிஷத் வாக்கியம். 'இருந்தபடி இருந்துகொண்டு அவர் நெடுந்தூரம் போக வல்லவர். கிடக்கினும் அவர் யாண்டும் வியாபகமாக வல்லவர்.' இது பரம்பொருளைப்பற்றிய கூற்று. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரையும் சுவாமி விவேகானந்தரையும் இணைத்து வைத்துக்கொண்டு ஒரு புருஷனுடைய இரண்டு விதமான தோற்றங்கள் அவர்களிருவரும் எனலாம். அவர்களுடைய வரலாறுகளைச் சரியாக அறிந்துகொண்டால் இக்கூற்றின் உட்கருத்தும் நமக்கு விளங்கிவிடும்.


புராணத்தில் புகட்டியுள்ள சோமாஸ்கந்த சமேத பரமேசுவர தத்துவத்துக்கும் நல்ல விளக்கமாக இம் மும்மூர்த்திகள் அமைகிறார்கள். உமாதேவியாரோடும் ஸ்கந்தனோடும் கூடியவராய் சிவபெருமான் உற்சவமூர்த்தியாக எழுந்தருளும் காட்சியைத் தமிழ்நாட்டில் வேண்டியவாறு காண்கிறோம். பரம்பொருள் மானுட வடிவெடுத்து நரலோக லீலையில் தமது சொரூபத்தை விளக்குகிறதென்றால் அந்த விளக்கம் முழுவதையும் பரமஹம்ஸ தேவர், அன்னை சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியவர்களின் பூலோக விஜயத்தில் காணலாம். இங்ஙனம் நேரே அவர்களுடைய பெருமைகளை யெல்லாம் அவர்களிடத்திருந்தே அறிந்து கொள்ளுகிறோம். பரமஹம்ஸரின் பெருமைக்குப் பரமஹம்ஸரே சான்று.

---

**பக்தனது பற்றற்ற நிலை** (52ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்விறைவனிடம் அழைத்துச் செல்ல வந்திருக்கிறானென்று, கொட்டிய பாம்பை பக்தன் பொருள்படுத்துகிறான். உயிர்கள் அனைத்தையும் நேசிக்க வேண்டுமென்று நவிலுதற்கு இத்தகைய பக்தர்களே தகுதி வாய்ந்தவர்கள். மானுட வர்க்கம் முழுதினிடத்தும் சகோதர பாவனை வேண்டுமென்று சொல்லுதற்கும் இத்தகைய பக்தர்களே தகுதி வாய்ந்தவர்கள். ஏனென்றால் இயற்கையில் நிகழ்கின்ற எச்செயலுக்கும் அவர்கள் மறுப்புக் கூறுவதில்லை; எச் செயலையும் அவர்கள் வெறுப்பதில்லை. யாரைக் குறித்தும் அவர்கள் பொறாமைப்படுவதில்லை. பஞ்சேந்திரியங்கள் மூலமாகப் புலப்படும்புறவுலகக் காட்சி அவர்களுக்கு மறைந்துபோய் விடுகிறது. அதன் தோற்றம் அவர்களுக்கு ஒருபொழுதும் திரும்பி வருவதில்லை. அதற்குப் பதிலாகப் பார்க்குமிடமெங்கும் பரமன் ஒருவனே அவர்களுடைய காட்சியில் இருப்பதால் அவர்கள் எங்ஙனம் கோபித்துக்கொள்ள முடியும்? பேரன்பு சொரூபமாகிய அவர்களுக்கு பேரன்பு வடிவினனாகிய பரமாத்மனே நீக்கமற எங்கும் நிறைந்திருக்கிறான்.

---




## 82. ராவண வதம்

[T. R. ராமநாத சாஸ்திரி, M. A. வித்வான் R. வேங்கடசாமி

### வால்மீகி கண்டவிதம்

அந்த நிலையில் ராமர் செயல் புரிய முற்பட்டார். கூர்மையான ஓர் அம்பை எடுத்தார். வில்லை நன்கு வளைத்து முழு வலிமையுடன் தொடுத்தார். கடுக்கன்களால் திகழும் ராவணனுடைய தலையைத் துண்டித்துத் தரையில் வீழ்த்தினார். அடுத்த வினாடியில் அதற்கு நிகரான மற்றொரு தலை உடலில் தோன்றியது. ராமர் வியப்புறாமல் அதையும் துண்டித்து வீழ்த்தினார். மறுபடியும் மற்றொன்று தோன்றியது.

एवमेकशतंछिन्नं शिरसां तुल्यवर्चसाम् ।
नचैवरावणस्यान्तोदृश्यते जीवितक्षये ॥

ராமர் சிறிதும் சோர்வுறாமல் நூறு முறைகள் தலைகளைத் துண்டித்தார். ராவணன் மடியும் அறிகுறி தென்படவில்லை. ஏதும் நடைபெறாத நிலையில் ராவணன் வீற்றிருந்தான். ராமர் வியப்புடன் ஆராயலுற்றார். "மாயாவியான மாரீசனையும், மகாவீரன் கரனையும், சாகா வரம் பெற்ற விராதனையும், கபந்தனையும், சிறந்த வீரன் வாலியையும் கொன்றவையும், பூமியைத் துளைத்தவையும், கடலைக் கலக்கமுறச் செய்து புகழ் பெற்றவையும் ஆன அதே அம்புகளை ராவணனைக் குறித்தும் எய்கின்றேன். ஆனால் ராவணனிடம் மாத்திரம் அவை பயனற்றுப் போவதற்குக் காரணம் யாதாக இருக்கக்கூடும்?" என்று ராமர் ஆராய்ந்தார். மேலும் எண்ணற்ற அம்புகளைத் தொடுத்தார். ராவணனும் ஆயுதங்களை வீசிய வண்ணம் இருந்தான். இவ்வாறு ராமராவண யுத்தம் பகலிலும் இரவிலும் ஓய்வின்றி நடந்து கொண்டிருந்தது.

"நேரம் கழிகின்றது. ராமர் வெற்றி பெறும் அறிகுறி காணாமல் இருக்கின்றதே" என்று கவலை கொண்டான் மாதலி. ராமரை அழைத்தான். "வீரரே! உங்கள் வசத்தில் பிரம்மாஸ்திரம் இருப்பதை மறந்து போனீரா?. ராவணன் சாக வேண்டிய நேரம் இது என்று தேவர் குறிப்பிட்டுக் கூறிய அந்த நேரம் வந்து விட்டதே! பிரம்மாஸ்திரத்தைப் பயன்படுத்துமே. உங்களுக்குத் தெரியாத ஒன்றை நான் எடுத்துக் கூறவில்லை. தெரிந்ததை நினைவுக்குக் கொண்டுவருகின்றேன்" என்று பணிவுடன் தெரிவித்தான்.

உடனே ராமர் ஓர் அம்பை எடுத்துக் கொண்டார். அந்த அம்பைத்தான் அகஸ்திய முனிவர் தம் ஆசிரமத்திற்கு விஜயம் செய்கையில் ராமருக்கு எடுத்து வழங்கினார். அந்த அம்பைத்தான் பிரம்மதேவர் ஆசியுடன் அளித்திருந்தார். அதைத்தான் உபயோகித்து இந்திரன் மூவ்வுலகங்களின் தலைமையைப் பெற்றான். அதன் இறக்கைகளில் வாயுதேவர் அமர்ந்திருந்தார். முனையில் சூரியனும் அக்னியும் இருந்தனர். வானமே அதன் உடலாக இருந்தது. மேருமந்த்ரமலைகளின் வலிமை அவ்வம்பிற்கு இருந்தது. எல்லாச் சிறந்த ஒளிகளின் சாரப்பொருளை எடுத்துச் செய்யப்பட்டது என்று சொல்லுமாறு அம்பு திகழ்ந்தது. வான் மையத்தில் விளங்கும் கதிரவனோ, புகையும் பிரளய காலத் தீயோ, சீறி வரும் நாகமோ என்று அந்த அம்பு ஐயத்தை அளித்தது. மலைகளையும் கோட்டைகளையும் பெயர்க்கும் திறமை



அதற்கிருந்தது. உதிரமும், கொழுப்பும் பூசியிருந்த அந்த அம்பு வஜ்ஜிரத்தைப் போல் ஓசையைப் பரப்பியது. வானரரை மகிழ்விக்கவும் அரக்கரை வருத்தவும் திறமை கொண்டிருந்தது. அச்சிறப்புற்ற அம்பை ராமர் கையால் எடுத்து விட்டார். வேத மந்திரத்தை ஓதினார். வில்லின் நாண் கயிற்றில் அதை வைத்தார். ராவணன் மீது குறி வைத்துத் தொடுத்தார்.

அம்பு தொடுக்கப்பட்டவுடன் எல்லா ஜீவராசிகளும் அச்சமுற்றன. பூமி நடுக்கமுற்றது. மர்மஸ்தானத்தில் குறிவைத்துத் தொடுக்கப்பட்ட அந்த அம்பு இந்திரனுடையகையினால் வீசப்பட்ட வஜ்ஜிராயுதத்தைப்போல் முன்னேறியது. யமதர்மராஜனைப்போல் சீறிவரும் அந்த அம்பைத் தடைசெய்வதென்பது இயலாத செயலாக இருந்தது. அது நேராக ராவணனுடைய மார்பைப் பிளந்தது. உதிரத்தைப் பூசிய வண்ணம் ராவணனுடைய உயிரை அபகரித்தது. வெளியேறியது. பூமியைப் பிளந்த வண்ணம் பாய்ந்தது.

सशरो रावणं हत्वा रुधिरार्द्रीकृतच्छविः ।
कृतकर्मानिभृतवत्स्वतूणीं पुनरागमत् ॥

மறுபடியும் தன் பணியைச் செம்மையாக நிறைவேற்றிய பணியாள் என, அவ்வம்பு தன் செயலை முடித்து ராமருடைய அம்புறாத்தூணியில் போய்ப் பள்ளி கொண்டது.

மறுவினாடியில் ராவணனுடைய கையில் இருந்து வில் நழுவியது.

गतासुर्भीमवेगस्तु नैर्ऋतेन्द्रोमहाद्युतिः ।
पपातस्यन्दनाद्भूमौ वृत्रोवज्रहतोयथा ॥

சிறந்த ஒளியும், உயர்ந்த பராக்கிரமம் உடையவனும் ஆன ராவணன் எதிரியும் மெச்சும் மாபெரும் போரைச் செய்து முடித்த பின்னர் உயிர் துறந்தான். இந்திரனின் வஜ்ஜிராயுதத்தால் கொல்லப்பட்ட விருத்திர அசுரனைப்போல் தேரை விட்டுத் தரையில் விழுந்தான்.

அதைப் பார்த்த அரக்கரனைவரும் கதறியவாறு போர்க்களத்தை விட்டு ஓடினர். அச்சமுற்ற அரக்கர்களைத் தொடர்ந்து கொண்டே வானர வீரர்கள் ஓடினர். ராமருடைய வீரப் பிரதாபங்களையும் போர் பெருமையையும் புகழ்ந்தனர். தேவவாத்தியங்கள் ஒலியைப் பரப்பின. மணமுள்ள காற்று எங்கும் வீசத் தொடங்கியது. வானிலிருந்து நறுமண மலர்மாரி தரையில் வீழ்ந்து ராமரையே மறைத்தது.

வானிலும் ராமருடைய புகழ்ப் பாடல்கள் பாடப்படுவதை எல்லோரும் செவிகளாற் பருகினர். தேவர்கள் தம் மகிழ்வை எவ்வாறு அறிவிப்பது என்று அறியாமல் திணறினர்.

சுக்கிரீவனும் அங்கதனும் தம் விருப்பம் நிறைவேறியமையினால் பெருமகிழ்வுற்றனர். ராக்ஷஸத் தலைவன் விபீஷணனுக்களித்த தஞ்சம் நிறைவேறிற்று என்று ராமர் மகிழ்ந்தார்.

சூழ்நிலையும் மாறியது. திசைகள் தெளிவுற்றன. பேய்க்காற்று ஓய்ந்து மெதுவாக வீசலாயிற்று. கதிரவன் இயற்கையொளியுடன் திகழ்ந்தான். பூமி அசையாதிருந்தது. சுக்கிரீவன், விபீஷணன், அங்கதன் முதலியோர் ராமரை நல்லுரைகளால் வாழ்த்தினர். அவர்கட்கிடையில் வீற்றிருந்த ராமர் தேவர்கட்கிடையில் வீற்றிருந்த இந்திரனென விளங்கினார்.

### துளசி நோக்கியவிதம்

ராவணன் மறுபடி மாயை முறையை ஏற்றான். தன்னை மறைத்துக் கொண்டான். பல ராவண வடிவங்களை ஏற்றான். ஒவ்வொருவர் அருகிலும் நிற்கலானான்.

வானரர் கதறினர். தேவரோ நடுங்கினர். பிரபு ராமரின் பெருமையை அறிந்திருந்த சிலரைத் தவிர மற்ற வானரர் ஓடலுற்றனர். வீரர் ஹனுமான், அங்கதன், நலன், நீலன் முதலியவர் எண்ணற்றிருந்த ராவணர்களைக் கொல்லத்தொடங்கினர்.

எல்லோருடைய நடுக்கத்தைக் கண்ட

ராமர் சிரித்தார். ஓர் அம்பைத் தொடுத்தார். மாயை ராவணரனைவரையும் கொன்றார். கதிரவன் தோன்றியதும் இருள் மறைவதைப்போல் மாயை ராவணர்கள் மறைந்தனர். ஒரே ராவணன் நின்றதைக்கண்ட வானரர் ஆரவாரித்தனர். தேவர் பூமாரி பொழிந்தனர். ராமரைத் துதி செய்தனர்.

தேவர் துதி செய்வதனால் ராவணனுடைய ஆத்திரம் பெருகியது. நான் 'ஒரு ராவணனாகிவிட்டேன்,' என்று மகிழ்ச்சியோ' என்று கூறிக்கொண்டே தேவர்கள் மீது பாய்ந்தான். அவர்கள் ஓடத் தொடங்கினர். அந்நிலையில் அங்கதன் ராவணனுடைய கால்களைப் பிடித்துப் பூமியில் அறைந்தான். ராமரிடம் சென்றான். ராவணன் பத்து விற்களில் அம்புகளைத் தொடுக்கலுற்றான்.

ராமர் ராவணனின் தலை, கைவில் அம்புகளைத் துண்டித்தெறிந்தார். தூய ஸ்தலங்களில் செய்யப்பட்ட தீய செயல்கள் வளர்ந்து பன்மடங்கு தீய பயன்களை அளிப்பதைப்போல் தலை, கைவில், அம்புகள் மறுபடியும் தோன்றின. வீர வானரர் மரங்களையும் மலைகளையும் ராவணன் மீது வீசலாயினர். ராவணன் அவற்றைக் கையினால் பெற்று வானரர்மீதே திருப்பினான். பின்னர் வானரர் அவன் உடலில் அமர்ந்து துன்புறுத்தலாயினர். உதிரம் பெருகியது. ராவணன் அவர்களைப் பிடிக்க முயன்றான். ஆனால் அவர்கள் நழுவினர். இருவரைப் பிடித்துத் தரையில் அறைந்தான். அவர்கள் தரையிற் படாமலே ஓடினர். அம்புகளால் அவர்களைக் குற்றுயிராக்கினான். மாலை நேரம் வரவே ராவணன் ஆறுதலுற்றான். ஜாம்பவான் கடும்போர் புரிந்தார். தரையில் ராவணனை வீழ்த்தினார். தேர்ப்பாகன் தேரில் தலைவனைப் படுக்கச்செய்து பணி புரிந்தான். அரக்கர் தேரைச் சூழ்ந்து காத்தனர். ஜாம்பவான் ராமரிடம் சென்றார்.

இதற்கிடையில் திரிஜடை போர் வரலாறுகளை ஸீதையிடம் சொல்லிக்கொண்டிருக்கையில் அறுபட்ட ராவணன் தலை வளருவதைப் பற்றியும் சொன்னாள். ராமபாணத்தின் பெருமையை ஸீதை நன்கு அறிவாள். ராமபாணத்தால் சாகாதவன் வேறெதனால் சாவான், எனக் கவலையுற்றாள். அப்போது திரிஜடை கூறினாள். "தேவீ! நீ ராவணனுடைய உள்ளத்தில் வாஸம் செய்கின்றாய். உன் உள்ளத்தில் பிரபு ஸ்ரீ ராமர் வாஸம் செய்கின்றார். பிரபுவின் வயிற்றில் மூன்று லோகங்களும் வாழ்கின்றன. ஆகவே ராவணன் மார்பில் விழும் அம்பினால் உலகங்கள் அழிந்துவிட்டால் என்செய்வது, என்று அச்சங்கொண்டு பிரபு ராவணனைக் கொல்லாதிருக்கக்கூடும். ஆதலால் தலைகளை மாத்திரம் துண்டிக்கிறார். தலை அறுபடுவதனால் ராவணன் திகிலடைவான். அப்போது உன்னை மறந்துவிடுவான். அந்த நேரத்தில் பிரபு ராவணனைக் கொல்வார்" என்று ஆறுதல் கூறினாள். ராமருடைய பெருந்தன்மை புகழப்படுவதைக் கேட்டு ஸீதை ராமருடைய பிரிவைத் தாங்கமாட்டாமல் கதறி விட்டாள். அப்போது ஏற்பட்ட நல்ல அறிகுறிகளால் தேவி மகிழ்வுற்றாள்.

நள்ளிரவில் ராவணன் மயக்கந்தெளியப் பெற்றான். தேர்ப்பாகனைத் திட்டினான். காலையில் போர்க்களத்திற்கேகினான். மறுபடியும் ராவணன் வந்தமையினால் வானரர் நடுங்கிவிட்டனர். ஆயினும் மரங்களை வீசினர். அரக்கர் ஓடவே ராவணனைச் சூழ்ந்துகொண்ட வானரர் கையால் அறைந்தும் பற்களால் கடித்தும், நகங்களால் கீறியும் அவனை வதைத்தனர்.

ராவணன் மாயையைச் செலுத்தினான். பேய் பிசாசுகள் தோன்றின. தீச்சுடரையும், மண்மாரியையும் இறைத்தன. அடி, வெட்டு, குத்து, கொல், என்ற ஒலிகள் செவிகளில் வீழ்ந்தன. வானரர் 'ராமா!



ராமா!' என்று கதறினர். மறுபுறத்தில் ஆயிரம் ஹனுமான்கள் பாறைகளை ஏந்தி நின்றனர். அவர்களிடையில் வேறொரு ராமர் தென்பட்டார். உண்மை ராமர் ஓர் அம்பை எய்ய மாயை மறைந்தது. மறுபடியும் ராவண சிரங்கள் தரையில் உருண்டன. பயனென்ன! ராவணன் சாகாதிருந்தான்.

பிரபு, ஸ்ரீராமரே சிறிது கலக்கமுற்றார். வரவு பெருகப்பெருக வியாபாரியின் பேராசை வளருவதைப்போல் ராவணனுடைய தலைகள் வளருகின்றனவே என்று எண்ணினார். ராவணன் சாகமாட்டானோ என்று கருதினார் ராமர். உடனே விபீஷணன் பக்கத்தில் பார்வையைத் திருப்பினார்.

எந்தத் தலைவருடைய எண்ணத்தினால் மாத்திரம் காலதேவனே எரிந்துபோகக் கூடுமோ, அந்தத் தலைவர் ஸ்ரீராமர் தன் பணியாளிடம்மதிப்புவைத்து நடைமுறையைப்பற்றி வினவும்பண்பை என்னென்று சொல்வேன், என்று வியக்கிறார் துளஸி.

விபீஷணன் பணிவுடன் அருகில் வந்தான். "எல்லாமறிந்த தலைவரே, தஞ்சமடைந்தவரைக் காக்கும் பிரபுவே! நல்லோரை ஆதரிப்பவரே, ராவணனுடைய தொப்புள் உட்புறத்தில் அமிருதம் உள்ளது. அதன் வலிமையினாலேயே அவன் வாழ்கிறான்" என்று பகர்ந்தான்.

ராமர் பயத்தை விளைவிக்கும் அம்பை எடுத்தார். தீய அறிகுறிகள் தென்பட்டன. கழுதை, நரி, நாய்கள் ஊளையிட்டன. பறவைகள் தீக்குரலை ஒலித்தன. கதிரவன் நிமித்தம் இல்லாமலேயே கிரகணத்திற்குள்ளானான். மந்தோதரி உள்ளம் நடுங்கிற்று. பதுமைகளின் விழிகள் நீரைப்பெருக்கின. இடி வீழ்ந்தது. புயல் வீசிற்று. பூமி அசைந்தது. முகில் உதிரத்தைப் பெய்தது. மயிரும் மண்ணும் வீழ்ந்தன. இத்தீய அறிகுறிகள் எதை அறிவிக்கின்றன என்பதை அறிய முடியாமல் தேவர் கலங்கினர். 'ராமா! வெற்றி பெறு' என்று கூவினர்.

தேவர் அஞ்சுவதைக் கண்ணுற்ற ராமர் அம்புகளைத் தொடர்ந்து எடுத்தார். முப்பத்தொரு அம்புகளைத் தொடுத்தார். கால ஸர்ப்பங்களைப்போல் அவை பாய்ந்தன. முதல் அம்பு அமிருதகுண்டத்தை வற்றச்செய்தது. பத்து அம்புகள் பத்துத் தலைகளை வீழ்த்தின. இருபது அம்புகள் இருபது கைகளைத் துண்டித்தன. தலைகளற்ற முண்டம் ராமரைநோக்கி ஓடி வந்தது. ராமர் மற்றொரு அம்பைத் தொடுத்து உடலை இரு துண்டங்களாக்கினார். "ராமன் எங்கே? நான் அவனைக்கொல்வேன்" என்று கூறியவாறு தரையில் சாய்ந்தான் ராவணன்.

பல வானரர் நசுங்கிவிட்டனர். பூமி நடுக்கமுற்றது. மலைகளே ஆடின. கடல் கொந்தளித்தது. ராமருடைய முப்பது அம்புகளும் ராவணனுடைய இருபது கைகளையும் பத்துத் தலைகளையும் மந்தோதரியின் முன்னிலையில் வைத்து ராமருடைய அம்புறாத்தூணியில் நுழைந்துகொண்டன.

ராவணனுடைய உடலினின்று கிளம்பிய ஓர் ஒளி ராமருடைய முகத்திற் புகுந்து மறைந்தது. பிரம்மனும் சிவபிரானும் மகிழ்ந்தனர்.

"கருணைக்கடலே! மோக்ஷமளிக்கும் முகுந்தா! பிறவி சாவுகளை அழிக்கும் வள்ளலே! தஞ்சமடைந்தோருக்கு அஞ்சாமை யளிப்பவரே, நல்லோரைக் காப்பவரே, காரணங்கட்கும் காரணரே, எங்கும் நிறைந்தவரே, வெற்றி வெற்றி" என்று கோஷமிட்டனர்.

மலர் தூவிய சடைகளைப்பெற்ற தலையோன், வில்லும்அம்பும் ஏந்திய கையோன், உதிரத்திவலைகள் பெற்ற நீலமேனியுடையோன், ஸ்ரீராமப் பிரபு தன் பார்வையைச் செலுத்தி தேவருக்கும், வானரருக்கும் அஞ்சாமை எனப்படும் அருமருந்தை அளித்தார். 'இன்பமளிக்கும் வள்ளலே, வெற்றி' என்றுவானர் வானதிரக்கூவினர்.

### கம்பன் கண்டவிதம்

**இராமன் பிரமாஸ்திரம் விடுதல்**

இராமன் ஏற்கனவே பல்வேறு நுண்ணிய வலிமை வாய்ந்த அம்புகள் பலவற்றை இராவணன்மீது எய்துள்ளான். அவ்வம்புகள் எதிரியின் கண்களூடும் புகுந்து செல்லும் ஆற்றல் வாய்ந்தன. அறிஞரின் எண்ணத்திலும் புகுந்து செல்லும் நுட்பம் வாய்ந்தவை. ஆனால் அவற்றால் இராவணனுடைய உயிரினூடு மட்டும் புகுந்து செல்ல இயலவில்லை. ஆதலின் சிந்தித்த இராமன் பிரமாஸ்திரம் விடத் தீர்மானித்து விட்டான். அந்த அஸ்திரம் முன்பே பல்வேறு அருஞ் செயல்கள் செய்து புகழ் பெற்றதாகும்.

புரஞ்சு டப்பண்(டு) அமைத்தது; பொற்பனை
மரந்து ளைத்தது; வாலியை மாய்த்துளது
அரஞ்சு டச்சுடர் நெஞ்சன் அரக்கர்கோன்
உரஞ்சுடச்சுட ரோன் மகன் உந்தினான்.

திரிபுரங்களைச் சுட்டெரிப்பதற்காக இவ்வாளி அமைந்ததாகும். சுக்கிரீவன் வேண்டுகோளின்படி இவ்வம்பு கொண்டு இராமன் ஏழு மராமரங்களை எய்துள்ளான். அதுவுமன்றி உரம்படைத்த வாலியின் மார்பில் பாய்ந்து கொன்றதும் இவ்வம்பேயாகும். இத்தகைய பேராற்றல் பெற்ற அஸ்திரத்தை மாற்றார் படைக்கு அஞ்சாத இராவணனுடைய நெஞ்சிலே செலுத்தினான் இராமன்.

**அஸ்திரம் செய்த செயல்**

இராமன் அஸ்திரத்தை விடும்பொழுது பிரம மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே விட்டனன். அது காற்றினும் கடியதாக கனவினும் கொடியதாகச் சென்றது. அத்துடன் நான்கு முகங்களையும் கொண்டு சென்றது. அவ்வமயம் பேரொளியையும் கக்கிக்கொண்டு சென்றது. அதன் ஒளி யுகாந்த காலத்துச் சூரியனையும் மின்மினி என்னும்படி செய்துவிட்டது. இந்நிலையில் அவ்வம்பு இராமனுடைய சக்கரப்படையையும் சேர்த்துக்கொண்டு பேராற்றல் பெற்ற இராவணனுடைய மார்பிலே புகுந்தது. அங்ஙனம் புகுந்த அதிர்ச்சியினால் பூமியே அதிர்ந்தது. திசைகளும் திசை மாறின. விசும்பும் நிலை மாறிற்று. இங்ஙனம் இயற்கையையே மாறும் தன்மையைப் பெறச் செய்துவிட்டது இராவணன் சாவு.

அக்க ணத்தி னயன்படை யாண்டகை
சக்க ரப்படை யோடுந் தழீஇச்சென்று
புக்க தக்கொடி யோனுரம் பூமியும்
திக்க னைத்தும் விசும்புந் திரிந்தவே.

இராமன் விட்ட அம்புக்குப் பெரும்பசி எடுத்து விட்டது. ஆதலின் அது இராவணனுடைய உடைமைகளை யெல்லாம் தின்னத் தொடங்கிவிட்டது. இராவணன் மூன்றுகோடி நாள் வாழும் நீண்ட ஆயுள் வலிமையைப் பெற்றவன். முதற்கண் அவ்வாயுளைத் தின்று தீர்த்து விட்டது இராமனுடைய அம்பு. இராவணனுடைய அடுத்த செல்வம் பெருந்தவம். இராவணன் பெரிய தவ சிரேஷ்டன். அவன் தவமிருந்து சேர்த்த தவத்தை யெல்லாம் அள்ளி விழுங்கிக் கொண்டது அவ்வம்பு. இராவணன் பெற்ற பின்னுமொரு செல்வம் வரம் ஆகும். "இராவணா! நீ முப்பத்து முக்கோடி தேவர்கள் யாராலும் வெல்லப்பட மாட்டாய்" என்று கூறி வரம் அளித்தான் பிரம்மன். அந்த அழிக்க முடியாத பெரும் வரத்தை இந்தச் சிறு மனிதன் விட்ட அம்பு மாய்த்து விட்டது. இராவணன் எல்லாத் திசைகளிலுமுள்ள உலகங்களனைத்தையும் வென்றவன். போர் செய்து செய்து பெரும்புய வலிமை பெற்றவன். இப்பெரு வலிமையையும் மென்று தின்று விட்டது பிரமாஸ்திரம். இத்தனையும் தின்றதனால் நீர் வேட்கை எடுத்து விட்டது அவ்வம்பிற்கு. ஆதலின் இராவணனுடைய உயிரிலே வாயை வைத்தது; அதனை ஆவலோடு பருகியது; திருப்தியாக வெளியே கிளம்பி விட்டது இராமன் விட்ட பிரமாஸ்திரம்.



முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக் கொடுத்த வரமும் ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று மார்பிற்
புக்கோடி உயிர்பருகிப் புறம்போயிற்(று)
இராகவன்தன் புனித வாளி.

ஒரு வேந்தனுடைய உடைமைப் பொருள்களை யெல்லாம் அழித்து அவனுடைய உயிரையும் பருகிச் செல்லுதலாகிய அழிவைச் செய்த அவ்வம்பையும் கவிஞன் 'புனித வாளி' என்று குறிப்பிடுகிறான். ஆம், உண்மையில் அது புனித வாளிதான். நல்லதை ஆக்குதல் எத்துணைப் புனிதச் செயலோ அதே அளவு புனிதச் செயலாகும் தீயதை அழிப்பது. இத்துணை நாள் இராவணன் அமரரை அடக்குவதும் முனிவரை வருத்துவதுமான தீச் செயலையே செய்துவந்தான். அவனுடைய உடைமைகளெல்லாம் அத்தீச் செயலுக்கே பயன்பட்டு வந்தன. ஆதலின் அவற்றை அழிக்க வேண்டியது நல்லறம் நாடி வளர்க்கத் தோன்றிய நாயகனான இராமனுடைய கடமையாகிறது. அப்புனிதன் விட்ட அஸ்திரம் புனிதச் செயலைச் செய்த காரணத்தால் புனிதத் தன்மையையே பெற்றது எனலாம்.

**வானவர் மகிழ்ச்சி**

மறம் மடிந்தது; அறம் பெருகுகிறது என்பதைக் கண்ட வானவரும் முனிவரும் எல்லையற்ற மகிழ்ச்சியை அடைந்தனர். அன்று தாங்கள் பாற்கடலிலே பள்ளி கொண்ட பரந்தாமனிடம் வேண்டிய வேண்டுகோள் இன்று நிறைவேறிவிட்டது என்று நினைக்கும் பொழுதெல்லாம் அவர்கள் உள்ளம் களிததும்பிற்று. அக்களிப்புக்குக் காரணமான அவ்வஸ்திரத்தை வாழ்த்தியவண்ணம் இருந்தனர். மகிழ்ச்சியின் ஆரவாரமும் ஆசி ஒலிகளும் எங்கும் நிறைந்திருந்தன. அவ்வஸ்திரத்தின் மேல் ஏராளமான மலர்களை வாரி வாரி இறைத்தனர். அக்காட்சி வானவரும் முனிவரும் தங்கள் இதயங்களைப் பிடுங்கி எறிவது போன்றிருந்தது. இத்தகைய பெரும் பெருமையைப் பெற்ற அம்பு பாற்கடல் நோக்கிச் சென்றது. நன்கு நீராடியது. பின்னர் திரும்பியது. திரும்பும் பொழுது இராவணனுடைய இரத்த வெள்ளத்தின் மேலாக வந்தது. கார்நீல வண்ணனுடைய அம்பறாத் தூணியுட் புகுந்து தன் கடமையைச் செய்த திருப்தியுடன் அமைதி பெற்றது.

**இராவணன் வீழ்ச்சி**

இராம இராவணப்போரில் இராவணன் வீழ்ந்தான். அவனது வீழ்ச்சி அரக்க உலகத்திற்கு ஓர் பேரிழப்பாகும். கவிஞனே இராவண வீழ்ச்சியைப் பேரிழப்பாகக் கருத கற்றோருடைய உள்ளத்தில் ஒரு அவலச்சுவையைத் தோற்றுவிக்கின்றான். இராவணன் தரையில் விழுவதையே கவிஞன் சுவைபடத் தெரிவிக்கிறான். இராம இராவணப் போரிலே பெரும்பங்கு கொண்டது அரக்கரினம். எத்தனையோ ஆற்றல் மிக்க சேனாதிபதிகள்! வன்மை மிக்க அதிகாயன் முதலிய பெருவீரர்கள்! எண்ணும்போழ்தே வானவர் குலம் நடுங்கும் இந்திரஜித்து! இத்தகைய பெருவீரர்களுக்கெல்லாம் சிகரம் போன்றவன்! இவன் வீழ்வதென்றால் அதுஒரு சாதாரண இழப்பாகுமா?

இராவணன் தரையில் வீழும் போது அவனுடைய வலிமை பொருந்திய தோள்களினின்றும் ஆபரணங்கள் பேரோசையுடன் கீழே விழுகின்றன. எவர்க்கும் புறமுதுகிடாத தோல்வியே பெறாத இராவணன் குப்புற வீழ்ந்தான் என்ற கருத்திலே "சிகரம் போல்வான் நெடு நிலத்துச் சிரமுகம் கீழ்ப்பட விழுந்தான்" என்று கண்ணீர் விட்டுக் கூறிவிடுகின்றான் கவிஞன்.

# சந்தேகம் தெளிதல்

*[அன்பர்கள் தமக்குற்ற சந்தேகங்களை ஆசிரியருக்கு எழுதி அனுப்பலாம். கேள்விகளுள் பொதுமக்களுக்குப் பயன்படாதவைகளும் நல்ல கருத்துக்கள் அமையப்பெருதவைகளும் கவனிக்கப்படமாட்டா.]*

**கேள்வி: (277)** ***இவ்வுலகில் பெரிய மதமாக உள்ளது கிறிஸ்துவ மதம். அதனுடைய அடிப்படைக் கொள்கைகள் சரியல்ல என்று நமது சக்கரத்தில் சுவாமிகள் எழுதி இருக்கிருர்கள். ஆனால் நமது இந்து மதத்திலும் இன்னும் பலர், கோயில் (அம்மன்) முன் ஆடு, கோழி, மாடுகளைப் பலியிடுகிருர்கள். மற்றும் பெரிய தெய்வ பூஜை என்று பன்றிகளைப் பலியிடுகிருர்கள். இவைகள் எல்லாம் நமது மதக் கோட்பாட்டிற்கு ஒவ்வுமா? இவைகள் எப்படிப் புகுந்தது என்பதையும், இவைகள் சரியான வழிபாட்டு முறைகளா என்பதையும் விளக்க வேண்டுகிறேன்.*** ஆ. ந.

உலகிலுள்ள பெரிய மதங்களில் ஒன்று கிறிஸ்துவ மதம். ஆனால் அதில் புகட்டியுள்ள கோட்பாடுகள் எல்லாம் தத்துவத்துக்குப் பொருந்தியவைகள் என்று சொல்ல முடியாது. திருஷ்டாந்தமாக செத்தவர்கள் எல்லோரும் கடவுளுடைய தீர்ப்புத் தினம் வரையில் தூங்கிக் கொண்டிருக்கிருர்கள், தீர்ப்புத் தினத்தன்று அவர்கள் எல்லாம் ஏககாலத்தில் எழுந்திருப்பார்கள், கடவுளுடைய தீர்ப்புக்கு உட்பட்டு சொர்க்கம் அல்லது நரகத்துக்குப் போவார்கள், அதன் பிறகு அவர்களுக்குப் புதிய முயற்சிக்கு இடமில்லை, சாசுவதமான இன்பம் அல்லது துன்பத்தில் உழன்று கொண்டிருப்பார்கள் என்று அம்மதம் புகட்டுகிறது. இக்கொள்கை யுக்திக்கும் இயற்கையினுடைய நடைமுறைக்கும் பொருந்தியதன்று. ஹிந்துமதம் புகட்டுகிறபடி செத்த ஜீவர்கள் கொஞ்ச காலத்துக்குப் பிறகு மறுபிறப்பு எடுப்பது தான் அவர்களுடைய முன்னேற்றத்துக்கு முகாமையாகும். வினைக்கு ஏற்ப அப்போதைக்கப்போது அவர்களுக்கு உண்டாகும் இன்பதுன்பங்களையே வினையின் தீர்ப்பு என்று மொழியவேண்டும். கடவுளின் தீர்ப்பு என்று பகரலாகாது.

ஹிந்துமதத்தில் மிக மிகக் கீழ்த்தரமான மூட நம்பிக்கை, கண்டனத்துக்குரிய பழக்க வழக்கங்கள் ஆகியவைகளுக்கெல்லாம் இடமிருக்கிறது. பண்பட்ட மேலான ஆத்ம சாதனங்களுக்கும் இடமிருக்கிறது. அத்வைத வேதாந்தம் வரையிலுள்ள சீரிய கோட்பாடுகளுக்கும் இடமிருக்கிறது. பிரபஞ்சத்திலுள்ள நலம் கேடு அனைத்தையும் ஹிந்து மதத்தில் காணலாம். ஆடு, கோழி, பன்றி ஆகியவைகளைப் பலியிட்டு திருப்தியடைகின்ற மக்கள் அச்செயல்களைச் செய்தே ஆகவேண்டும். அவைகளைச் செய்யாவிட்டால் தாங்கள் கடவுள் வழிபாடு செய்ததாக உணர மாட்டார்கள். அத்தகைய மிகக் கீழ்த்தரமான வழிபாட்டு முறைகளில் துவக்கி மனபரிபாகம் அடைந்து படிப்படியாக அவர்கள் மேலான வழிபாட்டு முறைக்கு வருவதற்கு ஹிந்துமதம் இடம் கொடுத்திருக்கிறது. நமக்கு வேண்டாத பகுதிகளை நாம் வேண்டியவாறு கண்டிக்கலாம். ஆயினும் அத்தகைய புல்லிய வழிபாட்டு முறைகளை வேண்டுமென்று நாடுகின்றவர்களுக்கும் ஹிந்துமதம் இடம் கொடுத்திருக்கிறது. இவையாவும் மனித இயல்போடு ஒட்டியிருப்பதால் இவைகள் மதத்தில் எப்படிப் புகுந்தது என்று யாராலும் பகரமுடியாது.

**கேள்வி: (278)**

***"நெஞ்சமே யினிப் பாவரு தீதமாய்***
***நின்றிடின் றெனினிற்பா***
***வெஞ்சு ருதகல் புரணபா வனையையோர்ந்***
***திலையெனி னுலகெல்லா,***
***மஞ்சனக்களன் மேனியென் ரேர்ந்திலை***
***யெனினருள் சுரந்தெம்பால்***



***வஞ்ச மற்றிடும் படிக்கிவண் அடைந்ததோர்***
***வடிவையோர்ந் துய்வாயே"***

***என்ற வைராக்கிய சதகப் பாடலில் கூறியுள்ள நான்கு வகையான உபாசனைகளையும் அவைகளை அனுஷ்டிக்கும் முறையையும் விளக்க வேண்டுகிறேன்.*** ந. பெ.

சாதகன் ஒருவன் பரமானந்தத்தைப் பெறுவதற்கு மனதற்றவனுகவேண்டும். அது முடிந்தநிலை. அந்நிலையிலிருப்பதற்கு சாதகன் தன் சாதனையை ஆழ்ந்து செய்து வரவேண்டும். மனம் பண்பட்டு ஆத்ம ஞானத்தில் திளைத்திருக்கும் சாதகனுக்கு அந்நிலையிலிருப்பது சாத்தியம். அப்படி மனதற்ற நிலையிலிருக்கச் சாத்தியப்படாத சாதகன் 'அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய்' இருக்கும் பரம்பொருளை அகண்டாகாரமாய்ப் பார்த்துப் பழக வேண்டும். 'அலைகளைப் பார்க்காதே, சமுத்திரத்தைப்பார்' என்று சுவாமி விவேகானந்தர் கூறுவதுபோல் நாம ரூபங்களை மறந்து இப் பிரபஞ்சம் முழுதையும் ஒரே பொருளாகப் பார்த்துப் பழகவேண்டும். இந்த நிலையிலே இருந்து பழகும் மனதுக்கு ஏகாக்ரசிந்தை மிக விரைவில் கிட்டுகிறது. இந்த முறையை அனுஷ்டிப்பது கடினமாகத்தோன்றிஞல் பரம்பொருளைச் சாதகன் அஷ்டமூர்த்தியாகப் பார்த்துப் பழக வேண்டும். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களும், மனம் புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களும் சேர்ந்து அஷ்டமூர்த்தி என்று அழைக்கப்படுகின்றன. பரம்பொருள் இப் பஞ்சபூதங்களாகவும் மனம், புத்தி, அகங்காரமாகவும் ஆகியுள்ளார் என்று மனதை இவைகளினிடத்து நிறுத்திப் பழகுவது மூன்ருவது உபாசனை முறையாகிறது. இந்த முறையும் அனுஷ்டிக்கக் கடினமாக இருந்தால் சாதகன் தன் குருவிடத்தில் தன்னை முழுதும் ஒப்படைத்து அவரிடத்தில் அடிபணிந்து விடவேண்டும். இதுவே சாதகன் கையாளவேண்டிய நான்காவது உபாசனை முறையாகும். குருவிடத்தில் அடிபணிந்து விடுவதென்பது குரு வார்த்தையில் நம்பிக்கைவைத்து மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்ருலும் குருவுக்குத் தொண்டுபுரிந்து வருதலாம். தன்குருவைச் சாதாரண மனிதவடிவம் என்றுகருதாது, பரம்பொருளே தன்னை உய்விக்கும் பொருட்டுத் தனக்கு உதவிபுரிய இக்குரு வடிவத்தில் இலங்குகிருர் என்று சாதகன் தன்குருவைக் கருதவேண்டும். இத்தகைய நம்பிக்கையோடு குருவுக்குத் தொண்டு புரிந்து வருவது குரு உபாசனை ஆகிறது.

மேற்கூறிய பாடலில் இந்த நான்குவித உபாசனை முறைகளும் அமைந்திருக்கின்றன. இவைகளுள் தன் மன இயல்புக்கு ஒத்த உபாசனை முறையைச் சாதகன் அனுஷ்டித்து வரலாம்.

**கேள்வி: (279)** ***கையில் பொருளும் இருந்து முயற்சியும் செய்கிறபொழுது ஒரு காரியம் ஆகிறதில்லை. கையில் பொருளும் தீர்ந்து முயற்சி செய்யவும் மனதில்லாமல் இருக்கும்போது எதிர்பாராது அக் காரியம் நிறைவேறி விடுகிறது. 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' 'முயற்சி திருவினையாக்கும்' என்பவைகளின் பொருள்தான் என்ன?*** K. K.

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பதும் முயற்சி திருவினையாக்கும் என்பதும் கர்மயோகத்தைப் பற்றிய கோட்பாடுகள் ஆகும். ஆத்மசாதகன் ஒருவன் வாழ்க்கையில் தான் எடுத்துக் கொண்டுள்ள லக்ஷியத்தில் இடையருது முயன்று வருகிருன். இன்னல்கள் வருவதைப் பற்றியும் அவன் கவலைப்படுவதில்லை. அப்பர் சுவாமிகள் உழவாரப் பணிவிடை செய்ததையே அதற்குச் சான்ருக எடுத்துக் கொள்ளலாம். கடவுள் காட்சி கிட்டாவிட்டாலும் தமது முயற்சியை நிறுத்தி விடுவதில்லை, இடையருது முயலுதல் என்கின்ற உறுதிப்பாடே ஆத்மசாதகன் பெறுகிற பெரிய பேறு ஆகிறது.

பொருளை முகாமையாக வைத்துக் கொண்டு செய்கிற முயற்சிகளெல்லாம்

ஆத்மசாதனத்துக்கு உகந்த தலையாய சாதனங்கள் ஆகமாட்டா. ஏராளமாகச் செல்வம் சம்பாதித்திருக்கிற ஒருவன் நாள்தோறும் நூறு பேருக்கு அன்னதானம் பண்ணுகிறான். கைப்பொருள் ஒன்றுமில்லாத கடவுளுடைய தொண்டன் ஒருவன் அன்னக்காவடி வைத்துக்கொண்டு பத்து வீடுகளில் அன்னமேற்று வந்து சதா நிஷ்டையிலிருக்கிற மற்றொரு ஆத்மசாதகனுக்கு அமுது பண்ணி வைக்கிறான். இத் தொண்டனுடைய செயல் மனபரிபாகம் உண்டு பண்ணுதற்குப் பணக்காரனுடைய செயலைவிடப் பன்மடங்கு மேலானது. முயற்சி யாவும் முக்கியமாக மனநிலையைப் பொருத்ததாகும்.

**கேள்வி: (280)** *இறந்துபோனவர்களுடைய ஆத்மாக்களோடு சிலர் தொடர்பு கொண்டுள்ளனர் என்று ஒரு புலவர் குறிப்பிட்டு, நான்காம் படிவ மாணவன், சுவாமி விவேகானந்தருடைய ஆன்மாவோடு தொடர்பு கொண்டிருந்தான் என்றும், அந்த ஆன்மாவினுடைய உதவியினால் ஆங்கிலப் பாடப் பரீக்ஷையின்போது மிக உயர்ந்த நடையில் எழுதி முதலாவதாகத் தேறினான் என்றும் குறிப்பிட்டார். இது எப்படி சாத்யமாகும்? இதை நாமும் பின்பற்றலாமா? ஆத்மீக முன்னேற்றத்துக்கு இதனால் தடையேற்படுமா?* தா. கி.

இது நம்புதற்குரிய விஷயமல்ல. முறையாக இதை ஆராய்ச்சி செய்து பார்த்தால் இது வெறும் பொய்ப் பிரசாரம் என்பது வெளியாகும். ஆவி உலகத்தோடு நாம் தொடர்பு வைக்கலாகாது என்னும் விஷயம் பல தடவைகளில் தர்ம சக்கரத்தில் விளக்கப் பட்டிருக்கிறது. ஆவி உலகத்தோடு தொடர்பு வைத்துப் பழக முயலுகின்றவனுக்குப் படிப்படியாக மன உறுதி போய்விடுகிறது. ஒருவிதமான மதி மயக்கத்துக்கு அவன் வசமாகிறான். இதற்கு மாறாக ஆத்ம சாதனமோ மன உறுதியை உண்டுபண்ணுகிறது. தன் திறமையினால் பாடத்தையும், மொழியையும் நன்றாகக் கற்று நேர்மையாகப் பரீக்ஷையில் எழுதி வெற்றி பெறுகிறவனே நேர்மையான மாணாக்கன் ஆகிறான். யாரோ ஒருவருடைய வசீகரத்துக்கு உட்பட்டு விடை எழுதுபவன் அல்லது பேசுபவன் உண்மையான ஆண்மகன் ஆகான். விவேகானந்த சுவாமிகள் அகண்ட சச்சிதானந்தத்தில் கலந்துவிட்டார். ஆவி உலகில் உலவித்திரியும் சிற்றுயிராக அவர் இப்பொழுது இல்லை. "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு." பிறர் சொல்லுவதையெல்லாம் நம்பிக் கொள்வது விவேகம் படைத்தவர்களுடைய செயல் ஆகாது.

**கேள்வி: (281)** *ஒருவர் ஒரு கொள்கையைப் பொது மக்களுக்கு போதிக்கின்றார். ஆனால் அவர் மனைவி அக்கொள்கைக்கு நேர்மாறாக நடக்கின்றாள். ஆதலால் அவருடைய மனைவியே அவ்வாறு நடந்துகொள்ளும் பொழுது அவர் பொது மக்களுக்குப் போதிப்பது தகுமா?* மா. க.

பிறருக்குப் போதிப்பதற்கு முன்பு ஒரு கொள்கைக்கு ஒப்ப ஒரு மனிதன் தானே ஒழுகவேண்டும். பேச்சின்மூலம் புகட்டுகிற கொள்கையைவிட வாழ்க்கைச் செயலின் மூலம் புகட்டுதலே சிறந்தது. பிறகு எடுத்துக்கொண்ட கொள்கையும் வாழ்க்கையை மேலானதாக மாற்றக்கூடிய சீர்படைத்ததாக இருக்கவேண்டும். தன் சொந்த வாழ்க்கையில் ஒருவனுடைய கொள்கை முற்றிலும் ஒன்றுபட்டு விடுமாகில் அதைச் சார்ந்து மனைவியும் கணவன் வழிக்குத் திரும்புவது திண்ணம். ஏனென்றால் சீரிய இல் வாழ்க்கையில் கணவனும் மனைவியும் வடிவில் இருவர் எனினும் கருத்தில் ஒன்றுபட்டவர்களாக இருக்கவேண்டும். கருத்து வேற்றுமை இருக்கும்வரை இல்வாழ்வில் இனிமை இராது. வீட்டுக்குத் தலைவனாக இருப்பவன் தனது திண்மையினால் மனைவியின் மனப்பான்மையை மாற்ற வல்லவனாகவேண்டும். பிறகு உலகத்தவர்களையும் தன் வழிக்குத் திருப்புவது அவனுக்குச் சாத்தியமாகும்.

# நாரதர் கலகம்

## 8. ருக்மணி, கருடன் கர்வபங்கம்

சுவாமி ஸ்ரீதானந்தர்

நாரத மகரிஷியின் உள்ளத்தில் ஓர் சந்தேகம். துவாரகையில் பள்ளிகொண்டருளும் கண்ணபிரானுக்குத் தாரங்கள் பதினாறாயிரத்துஎட்டுஎன்கிறார்களே! இரண்டு பெண்டாட்டிக்காரன் திண்டாட்டம் பிரசித்தி பெற்றது. எனவே பகவான் திண்டாட்டம் எப்படிபட்டதாயிருக்கவேண்டும்? எண்ணிக்கையில் பட்டாளத்திற்கொப்பான தாரங்களை இல்லத்திலமர்த்தி பாரபட்சமின்றி பாதுகாப்பளிக்க ஒருவரால் இயலுமா? கடவுளானால்தான்என்ன? சந்தேக நிவர்த்திக்கென நாரதர் துவாரகைக்கு விஜயம் செய்தார். துவாரகையின் நேர்த்தியான அமைப்பைக் கண்டு வியந்தார் முனிவர். அம்சங்கள் யாவும் பொருந்தி யிருந்த சிற்பநுட்பங்கள் அவர் மனதிற்கு அமோகமான விருந்தளித்தன. கவிகளின் கற்பனை உலகில் புகுந்தோமோ என்று ஐயங்கொண்டார். கபட மானுடக்கோலம் பூண்டதிருமாலின் விபூதியென்று முனிவர் அப்புரியைப் பார்வையிடலானார். வெளித்தோற்றம் வெற்றிமேல் வெற்றிபோல் முனிவருக்கு உற்சாகமூட்டியது. அகக்காட்சி எத்தகையதென்று பார்க்கப் பேரவாக் கொண்டார்.

கதிரவன் மறைந்தான். அமைதி நிலவியது. வானளாவி நின்ற மாளிகைகள் நிலவின் மங்கிய ஒளியில் கனவின் ஓவியங்கள் போல் காட்சியளித்தன. மக்கள் வந்தனை வழிபாடுகளில் ஈடுபடலாயினர். நாரதர் ஓர் இல்லத்தில் நுழைந்தார். அதனுள் மணித் தீபம் போன்று விளங்கிய கண்ணன் திருவடிகளைக் கண்டதும் பேசாமலேயே முனிவர் வெளியேகினார். அண்டையிலிருந்த இன்னொரு இல்லத்தில் எட்டிப்பார்த்தார் நாரதர். ஆங்கு பகவான் நித்திய கர்மானுஷ்டானத்தில் ஈடுபட்டிருந்ததைக் கண்டு முனிவர் திகைத்துப் போனார். ஒரே சமயத்தில் இரண்டகங்களிலும் சாந்நித்தியமா என்று அயல்வீட்டிற்கு விஜயம் செய்தார். பகவான் அதிதி பூஜை செய்வதைக் கண்ணுற்றார் முனிவர். முனிவர் ஆச்சரியம் எல்லை கடந்தது. அடுத்த வீட்டில் புகுந்தார். கிருஷ்ணபரமாத்மா குடும்ப அலுவல்களைக் கவனித்துக்கொண்டிருப்பதைக் கண்டார். பக்கத்துக் கிரஹத்தில் பகவான் வேதாந்தச் சர்ச்சை செய்வதாகக் காட்சியளித்தார். நாரதர் ஒவ்வொரு வீடாகச் சோதனை செய்தார். கண்ணன் சாந்நித்தியமில்லாத இல்லமே இல்லை. அது மட்டுமா? வீட்டுக்கொரு தோற்றமும் அளிக்கிறாரே! ஒவ்வொரு இல்லத்திலும் அமைதியும் திருப்தியும் நடமாடும் காட்சி நாரதரைக் களிப்புறச் செய்தது. கடவுளின் ஐசுவரியத்தை நினைக்க நினைக்கக் கண்களில் ஆனந்த ஜலம் நிறைந்தது. கடைசியாக அவர் பகவானைத் தரிசித்து வழிபட்டு ஆசியும் பெற்றுத் திரும்பினார். ருக்மணியின் இல்லத்தின் வழியாக நடந்தார். ருக்மணியின் உள்ளத்திலாவது அதிருப்தி ஏதாவது மறைந்து கிடக்குமா? துவாரகையென்றால் பாலும் தேனுமா! சந்திரனுக்கும் களங்கமுண்டே! ருக்மணி, பகவானது ஆதரவிற்கும் மதிப்பிற்கும் தனிப்பட்ட உரிமை படைத்தவள்தானே! அவளிடம் ஆங்காரமும், அதன் விளைவான பொறாமையும் இல்லாமற் போகுமா? அக்கினிக்குப் புகையுண்டு. பெண்ணுக்குப் பொறாமை உண்டு. கலகத்திற்கு அவள் இடந்தரமாட்டாளா பார்ப்போம் என்று நாரதர் உள்ளே புகுந்தார்.

ருக்மணிதேவி நாரதரை எதிர்கொண்டழைத்தாள். முனிவரின் பாத தீர்த்

தத்தை தன் சிரசில் வாங்கிக் கொண்டாள். "தேவரீர் எழுந்தருளக் காரணமேனோ?" என்று வினவினாள்.

நாரதர்: விசேஷமொன்றுமில்லை. துவாரகைக்கு வந்தேன். சுற்றிப் பார்த்தேன். எல்லாம் அமைதியாகவும் ரம்மியமாகவும் இருக்கின்றன. இந்திரன் தலைநகரமான அமராவதியையும் வெல்லும் துவாரகையைப் பெற்ற உங்கள் புண்ணியமே புண்ணியம்.

ருக்மணி: எல்லாம் பகவான் விபூதி.

நாரதர்: ஆமாம். பகவான் விபூதி ஓங்கி வளர்ந்து துளிர்த்து பூ விட்டுக் காய்த்து கனிந்து நிற்கிறதை சத்ய பாமையின் இல்லத்தில் நான் பார்த்தேன். அது தான் என்னை மலைக்கச் செய்த காட்சி.

ருக்மணி: அங்கே என்ன விசேஷம்?

நாரதர்: அம்மா உனக்குத் தெரியாதா? ஆங்குதான் பாரிஜாத விருக்ஷம் இருக்கிறது. அந்தச் சீரும் செழிப்பும் என்னவென்று சொல்லுவேன்! சாது ஜனங்களுக்கு சத்யபாமா அளிக்கும் உபசாரங்கள் எத்தகையதென்று அனந்தனாலும் விளக்கிக் கூற முடியாது. அவள்தான் வள்ளல் என்கிறார்கள் மக்கள்.

ருக்மணி: இங்கு எல்லா இல்லங்களிலும் பகவான் அருளால் ஒரே மாதிரிதான் இருக்கிறது. எங்கும் ஒரு குறைவும் இல்லையே!

நாரதர்: இல்லையம்மா. நான் கண்கூடாகக் கண்ட காட்சி இது. மக்கள் எவராயினும் பாரிஜாதத்தினிடமிருந்து தங்கள் விருப்பங்களை நிறைவேற்றலாம். அந்தப் பேறு உனக்கில்லையே என்பதுதான் என் வருத்தம்.

ருக்மணி: பாரிஜாதம் அங்கேயிருந்தாலென்ன! இங்கே இருந்தாலென்ன! எல்லாம் துவாரகையில்தானே!

நாரதர்: கண்ணபிரானது பதினாறாயிரத்தெட்டுத் தாரங்களுள் எட்டுப்பேர் முதன்மை பெற்றவர்கள். எட்டுப்பேர்களுள் நீயும் பாமையும் ஹரிபக்தியில் ஈடு இணையற்றவர்கள். எனினும் உன்னைத்தான் முதல்வி என்கின்றார்கள் மக்கள். எனக்கும் அதுதான் அபிப்பிராயம். இருந்தும் பாரிஜாதத்தை உன் முற்றத்தில் வைக்கவில்லையே ஹரி. அது தான் ஆச்சர்யம்! பகவானுக்கு சத்ய பாமையிடம் அன்பு ஜாஸ்தி யிருக்குமா? நீ ஏமாந்துபோயிருக்கத்தான் வேண்டும். நீயே யோசித்துப்பார்.

நாரதரின் கோள் இலட்சியத்தில் தைத்தது. ருக்மணியின் மனதில் பொறாமையென்னும் கல்லொன்று விழுந்தது. அதன் பாரம் அவளைத் தலைதூக்கமுடியாமல் சிறுமைத் தனத்திற்கு அடிமையாக்கியது. அவள் கண்கள் சிவந்தன. கோபம் பேய் போன்று அவளைப் பாதித்தது. அமைதியற்றவளாக அவள் தோற்றமளித்தாள். கலகத்திற்கு அடிகோலி விட்டு நாரதர் விண்ணுலகை நோக்கிச் சென்றார்.

அடுத்த முறை பகவான் ருக்மணியைச் சந்தித்தபோது அவள் சோர்வுற்றிருந்தாள். உற்சாகமும் ஊக்கமும் அவள் செயல்களில் தென்படவில்லை. பகவான் இதைக் கவனித்தார். மிகவும் அன்புடன் அவள் சோகத்தின் காரணத்தை விசாரித்தார்.

பகவான்: "ருக்மணி உன் உடம்பு நலம் தானே?"

ருக்மணி: "ஆமாம்."

பகவான்: "உன் முகமலர்ச்சி எங்கு போயிற்று?"

ருக்மணி: "சத்யபாமாவின் பாரிஜாத மலர்கள் பிடுங்கி விட்டன."

ருக்மணியின் துக்கத்துக்குக் காரணம் பகவானுக்கு விளங்கியது. அவள் மனதில் பொறாமை வேரூன்றியதைத் தெரிந்து கொண்டார். கடவுளுக்குத் தொண்டு செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கும் அடியார்களையும் மாயையின் சோதனையால் ஆங்காரம், பொறாமை முதலிய தோஷங்கள் தீண்டுவது அபூர்வமன்றோ! கண்ணபிரானின் தொண்டர்களுள் தான் சிறந்தவள் என்ற எண்ணம் ருக்மணியின் மனதின் ஆழத்தில் மறைந்து கிடந்தது. அதுவே நாரதர் கிளப்பி விட்டது. அடியில் சேறில்லாத குளத்தில் யானை புரண்டாலும் ஜலம் கலங்காது. வியாதியில்லா விடத்திற்கு மருத்துவர் எதற்கு? களங்கமில்லாத இடத்தில் நாரதர் சூழ்ச்சி செல்லுமா?

தம் பிரிய பத்தினியான ருக்மணியின் ஆங்காரத்தைத் துடைத்து அவளை ஆட்கொள்ள திருமால் திருவுள்ளம் கொண்டார். பகவான் கருடனை நினைத்தார். கருடன் விரைவில் அங்கு விஜயம் செய்தான். பகவானை வணங்கி நின்றான். "கருடா, நீ ஹனுமாரென்பவரைப் பற்றிக் கேட்டிருப்பாய். ஸ்ரீ ராமபக்தர் அவர். ஒரே குதியாய்க் கடல் தாண்டி இலங்கைக்குச் சென்றவர். அமராவதிக்கு ஒப்பான இலங்கையை நெருப்புக் கொளுத்தி அழித்தவர். அரக்கரை கூட்டம் கூட்டமாக மாய்த்தவர். இராவணனின் மைந்தன் அட்சகுமாரனை ஒடுக்கியவர். ஸ்ரீ இராமச்சந்திரனுக்கு சலிப்புறாமல் தொண்டாற்றியவர். எப்பொழுதும், இராமனுடைய கோமள உருவத்தை நினைத்துக் கொண்டிருப்பவர். கந்தமாதன பர்வதத்தின் பள்ளத்தாக்கில் கதளீவனமொன்று இருக்கின்றது. நீ அவரை அங்கே சந்திக்கலாம். ஹனுமாரைப் பார்க்க நாம் மிகவும் அவாக் கொண்டுள்ளோம். இச்செய்தி கிடைத்தால் அவர் உடன் புறப்பட்டுவருவார். உன் முதுகில் ஏற்றி அவரை இங்குக் கொண்டுவா" என்று கட்டளையிட்டார். கருடன் புறப்பட்டான்.



நாரதர் ஹனுமானிடம் சென்று கருடனின் வருகையைப் பற்றிய செய்தி தந்தார். "கருடன் தான் பகவானுடைய வாகனம் என்னும் செருக்குடையவன். வேகத்தில் வாயுவுக்கொப்பானவனென்று பெருமிதம் கொண்டவன். பக்தனுடைய கர்வம் எத்தகையதென்று நீங்கள் அவனிடம் பார்க்கலாம். அவனைப் பகவான் தடுத்து ஆளப்போகிறார். இந்த விஷயத்தில் உங்களுக்கும் ஒரு பங்கு உண்டு" என்று கூறிவிட்டு மறைந்தார்.

கருடன் வானில் உயரப் பறந்தான். ஆறுகளும், மலைகளும், வயல்களும், காடுகளும், கரம்புகளும், மேடுகளும், பள்ளத்தாக்குகளும் அவனால் கடக்கப்பட்டன. கார்முகில்களையும் துளைத்துக் கொண்டு பறந்தான் வினதாசுதன். கந்தமாதன பர்வதத்தை எட்டினான். வானவீதியிலிருந்தே மாருதியை வணங்கினான். கதளீவனத்தை நோக்கி இறங்கினான். அவ்விடத்தின் அமைதியை கலைக்கக்கூடாதென்று தன் இறக்கைகளை ஒடுக்கிக் கொண்டான். மெள்ள நடந்து சென்றான். மாருதியின் தவ ஒளிபெற்ற இடத்தைத் தெரிந்து கொள்ள சிரமம் ஏற்படவில்லை கருடனுக்கு. மாருதியின் அடிமலர்களை வணங்கலாயினன். மாருதி கருடனுக்கு நல்வரவு கூறினார்.

"தம்பி, நீ யார்? எத்திசையிலிருந்து வந்தாய்?" என்று வினவினார் மாருதி.

"நான் புகழ்பெற்ற வினதாசுதன். கருடன் என்பது என் பெயர். பறவை குலத்திற்கு அரசன் நான். சூர்யன் சாரதியான அருணன் என் தமையன். நான்திருமாலின் வாகனமென்பதே என் வினயத்திற்கு எடுத்துக் காட்டாகும். துவாரகையில் பள்ளிகொள்ளும் எம்பிரானின் தூதனாக நான் வந்துள்ளேன். யதுகுல நாதன் கண்ணன் திருவடிகளின் சாஸனத்தை எடுத்து வந்தேன். அஞ்சனா புத்திரரான உங்களைப் பார்க்கக் கண்ணன் பேரவாக் கொண்டுள்ளார். உம்மை அழைத்துவர பகவான் கட்டளை விடுத்துள்ளார். வாரும். என் முதுகின்மேல் ஏறி விஜயம் செய்வீராக" என்று கருடன் தன்னை அறிமுகப்படுத்திக்

கொண்டு ஹரியின் செய்தியையும் வெளியிட்டான்.

எம்பிரானாகிய இராமர் போற்றுதற்குரிய ரகுகுலத்திலகம். தூய்மையுற்றத் திருவுள்ளம் படைத்தவர் அவர். அவரிட்ட ஆணையை சமுத்திரமும் மீறாது. மனிதர்களும் தேவர்களும் இராட்சஸர்களும் கந்தர்வர்களும் அடிபணியும் திவ்ய மூர்த்தி அவர். ஆனால் உன் சுவாமியோ, கோலங்கள் பலதரம் பூண்டு பெண்கள் முன் ஆடியும் பாடியும் காலங் கழிக்கும் இடைப்பையன். வெண்ணெயும் பாலும் திருடிப் புசிக்கும் கோபாலன். சத்தியபாமா முதலிய பெண்களின் ஏவலாளாக தேவலோகம் முதலிய இடங்களில் பாரிஜாதம் போன்ற பொருள்களைத் தேடியலையும் திண்டாட்டக்காரன். அவனை யார் பார்க்க விரும்புவார். அடியார்களால் சூழப்பட்டு பரதாதிகளால் சேவிக்கப்பட்டுக் கொலு மண்டபத்தில் மணிமயாஸனத்தில் வீற்றிருக்கும் இராமபிரான் என் சுவாமி. மற்றொருவரை நான் பூஜிக்கமாட்டேன். உன் கோபாலனைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?" என்று இடித்துப் பேசினார் ஹனுமான்.

மாருதி கண்ணபிரானை இகழ்ந்து பேசிய மொழிகள் காதில்வீழ்ந்ததும் விழாததுமாகக் கோபங்கொண்ட கருடன் சீறி எழுந்தான். "ஏய் மூடக் குரங்கே! நீ எம்பிரானைப்பற்றி என்ன பேசினாய்? ஜாக்கிரதை. உன் மண்டையை நசுக்கி விடுவேன். பிரம்மதேவரும் இந்திரனும் வந்து தாள் பணியும் எம்பிரானை நீ தூஷிக்கலாகாது. கடல் வண்ணன் கோபாலன் உலகை அடக்கியாளும் பிரபு. அவர் என் குலதெய்வம். காட்டு மரங்களின் கனிகள் புசித்து மதம் முற்றிய அசட்டுக்குரங்கே! மரங்களின் கிளைகள் மேல் தாவிக்குதிக்கும் விலங்கே! உன் ஆங்காரம் மிகப்பெரிது. உன் குத்தலான பேச்சுக்களைக் கண்ணன் தொண்டன் நான் சகியேன். கிழட்டு வானரமே, உன் வாலைப் பற்றிச் சுற்றி தரைமேல் அறைவேன். வள்ளிகளால் சுற்றிக்கட்டி உன்னைக் கிணற்றில் தள்ளுவேன். காலால் மிதிப்பேன். தடியா! உன் திமிரை அடக்காமல் என் கோபம் தணியாது. உன்னிடம் பழிவாங்காமல் ஹரிதாஸன் திரும்பமாட்டான்" என்று எச்சரிக்கை செய்தான் கருடன்.

ஹனுமானும் விட்டுக் கொடுக்கவில்லை. "தம்பி! நீ ஏன் சினம் கொள்கின்றாய்? பதறாதே. கேள். என்னை வெல்லத் தகுதியுடையவர் மண்ணுலகிலும் விண்ணுலகிலும் இது பரியந்தம் பிறந்தாரில்லை. மேலும் பிறக்கப் போவாருமில்லை. என்னிடம் சண்டைக்குப் புறப்பட்டால் நீயும் உன் அண்ணனைப்போல் தொடையற்றவனாவாய். முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தவனுக்கும் தாய் பெற்றெடுத்தவனுக்கும் வித்தியாசம் அப்பொழுது தெரியும். தைரியமும் வீரமும் இருந்தால் போர் செய். நான் இலங்கையில் காட்டியுள்ள பௌருஷம் இன்னும் ஆறிப் போகவில்லை. வம்பு பேசாமல் முன்வா. ஆனால் நான் உன்னைக் கொல்லலாகாது. நீ திருமாலின் வாகனம். உனக்கு ஒருவிதமான கெடுதியும் விளைவிக்க நான் இசையமாட்டேன். உன் அகங்காரத்தை மட்டும் தவிர்ப்பேன். உனக்கு அலகும் நகங்களும் இறக்கைகளும் எல்லாம் இருக்கின்றன. ஒரு கை பார்."

கருடனுக்குக் கோபம் தாங்கமுடியவில்லை. போருக்கு ஆயத்தமானான். மாருதியின்மேல் பாய்ந்தான். அலகால் கொத்திக் கிழித்தான். இறக்கைகளால் அடித்தான். நகங்களால் கிள்ளிக் கீறினான். மாருதியின தலையில் மோதினான். தள்ளினான். பிடித்திழுத்தான். மாருதியும் முஷ்டி கொண்டிழுத்தும் காலால் மிதித்தும் வாலால் கட்டியும் பற்களால் கடித்தும் போர் செய்தார். இருவரும் தாம் கற்ற போர்முறைகளை எல்லாம் காட்டி ஒருவரை



யொருவர் தாக்கினர். இருவர் மெய்யிலிருந்தும் இரத்தம் ஒழுகிற்று. கருடன் கத்தினான். மாருதி கர்ஜித்தான். கோர அரவம் முழங்கிற்று. காடுகள் ஆடின. மலைகள் குலுங்கிற்று. விலங்குகள் நடுங்கின. கொடிய யுத்தத்தைப் பார்த்து நாரதர் மகிழ்ந்தார். ரசிகர் ரசித்தனர். தேவர்கள் புஷ்பவிருஷ்டி செய்தனர். இறுதியில் கருடன் சோர்வுற்றான். வானில் பறந்து விலகினான்.

மாருதி கருடன் மீது அன்பு கொண்டு பேசலானார். "என் தம்பி, கருடா, நீ கவலையுற வேண்டாம். என்னிடம் தோற்றமையால் உனக்கு இழுக்கேதேனும் ஏற்படமாட்டாது. என்னை வெல்லக்கூடியவர் உலகில் யாரும் தோன்றினாரில்லை. தவிர, இராமர் என் சுவாமி. அவர் அருள் என்மீது உண்டு. ஆகவே இத்தோல்வியை முன்னிட்டு நீ வருந்தாதே. உனக்கு நலமாகுக. நீ உன் சுவாமியிடம் ஒரு வார்த்தை சொல். சீதாபதியின் கட்டளையென்றால் நான் இந்த நிமிஷமே புறப்பட்டு வருகிறேன். அவர் எத்திசையிலிருந்து திருவுள்ளம் கொண்டாராயினும் நான் மறுப்பேனில்லை. அவர் ஆணையை நான் எந்நாளும் மீறுவேனில்லை."

கருடன் பதில் சொல்லாமலே திரும்பிப் போனான். உடம்பில் வலி இருந்தது. மனதில் துயரம். ஒரு குரங்கினிடம் தோற்றதில் அளவற்ற மானக்கேடு. இது மட்டுமா? தோற்றவன் கருடன். ஹரியின் வாகனம். பறவைகள் வேந்தன். இதையெல்லாம் நினைக்க நினைக்கக் கருடனின் விசனம் பெருகியது. கஷ்டப்பட்டு பறந்து துவாரகையைச் சேர்ந்தான். துக்கமே வடிவெடுத்தவனாக பகவான் முன்னிலையில் நின்றான்.

"கருடா, நீ திரும்பிவந்தாயா! மிகவும் சந்தோஷம். ஹனுமான் வரவில்லையா? பிறகு வருவாரா? ஏன் உன்னுடன் வரவில்லை? கோபுரத்தில் சமயம் பார்த்து நிற்கிறாரா? அப்படியானால் நீ அவரை உடன் அழைத்துவா" என்று சொன்னார் பகவான் கருடனிடம்.

கண்ணபிரானின் வார்த்தைகள் கருடனுக்குப் புண்ணில் தைத்த அம்புபோல் பட்டது. மிகவும் வெட்கத்துடன் செய்திகளைப் பகவானிடம் வெளியிட்டான்.

"யான் உமது கட்டளையை அந்தக்குரங்குக்கு எடுத்துரைத்தேன். அந்த விலங்கு கொஞ்சமாவது ஆதரவுதராமல் கேவலமாகப் பேசினான். அவன் சொன்ன குத்தலான மொழிகளை உமது சந்நிதியில் உணர்த்த எனக்கு மிகவும் வெட்கமாக இருக்கின்றது. நினைப்பதே சங்கடமானது. இடையர் நடுவில் வசிக்கும் மூடசிகாமணியின் ஏவலாள். தடியன் நானென்று என்னையும் கடிந்தான். புத்திகெட்ட பெண்களுக்குப் பணிவிடை செய்யும் கயவன் உன்சுவாமியென்றும் என்னைக் கேலிசெய்தான். உன் சுவாமிக்கு நான் பயப்படமாட்டேன் என்று குமுறினான் அந்த முட்டாள் குரங்கு. ஆனால் என் சுவாமி சீதாபதி விரும்புவாரேயானால் உடன் வருவேனென்றான். இப்படி உம்மைப் பழித்ததினால் பொறுக்க முடியாத கோபத்திற்கு நான் ஆளாயினேன். அவனிடம் நான் சண்டை போட்டேன். தீவிரமாகப் போர் புரிந்தேன். ஆனால் அவன் பராக்கிரமம் என்னதானென்று சொல்வேன்! அடியேன் தோல்வியுண்டு பின் வாங்கத்தான் நேர்ந்தது. முன்பொரு நாளும் அடியேன் இங்ஙனம் அவமானம் அடைந்தது கிடையாது. இனி அடியேனது ஒரு விண்ணப்பம்: யாதவசேனையை அனுப்பும். அந்த மர்க்கடத்திற்குப் புத்திபுகட்ட வேண்டும். திருவடிகளை நிந்தனைசெய்த அந்தவானரத்தை விட்டுவைப்பது உசிதமன்று" என்று கூறிமுடித்தான் கருடன்.

"கருடா! நீ இன்னலுற வேண்டாம். மாருதியிடம் போர் செய்து வெற்றிபெற ஒருவராலும் இயலாது. யாதவசேனை இருக்

கட்டும் அசுரரும் தேவர்களும் மனிதரும் ஒன்று சேர்ந்தாலும் மாருதியை வெல்ல முடியாது. அவர் இராமபக்தர். ஆகவே நீ சோகம் அகன்று சந்தோஷமாக இரு. இதனுல் உனக்குக் குறைவு ஒன்றும் ஏற்படாது. நீ இன்னும் ஒருமுறை மாருதியைச் சந்தித்து வரவேண்டும். ஸ்ரீ ராமச்சந்திரன் துவாரகையில் எழுந்தருளியிருக்கிருர். உங்களைக் காண விரும்புகிருரென்று கூறு. அவர் வருவார்; சந்தேகம் வேண்டாம்" என்று கருடனைத் தேற்றிவிட்டு இரண்டாமுறையும் பகவான் அவனைக் கந்தமாதன பர்வதத்திற்கு அனுப்பினுர்.

நாரதர் ஹனுமாரைத் திரும்பவும் சந்தித்தார். "உங்களை அழைத்துச் செல்ல கருடன் திரும்பவும் அனுப்பப் பட்டுள்ளான். சீதாபிராட்டியோடு கூடாத இராமரை நான் பார்க்கமாட்டேனென்று கருடனிடம் சொல்லி விடுங்கள். வேடிக்கை பார்க்கலாம்" என்று கூறி மறைந்தார்.

கருடன் ஹனுமாரை அணுகினுன். பணிவுடன் ஹரியின் செய்தியை எடுத்து உணர்த்தினுன்.

மாருதி: எம்பெருமான் துவாரகைச்கு விஜயம் செய்தாரேயானுல் அவருடன் அவர் அருமைத் தம்பிமார்கள் இருக்கின்ருர்களா? இல்லையேல் சீதாபிராட்டியாவது இருக்கின்ருரா?

கருடன்: மாருதியாரே! ஸ்ரீ ராமச்சந்திரனுடன் இலட்சுமணுதிகள் இல்லை; சீதாதேவியும் இல்லை.

மாருதி: சீதாபிராட்டியோடு கூடாத அவதாரம் செய்த இராமரை நான் பார்க்கலாகாது. தம்பீ நீ திரும்புவாயாக.

கருடனுக்குச் சலித்துப் போயிற்று. இந்தக் குரங்கின் பிடிவாதம் என்னதானென்று எண்ணியவனுக துவாரகைக்குத் திரும்பினுன். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடம் செய்தியை ஒப்புவித்தான்.

ஹனுமாரின் எண்ணத்தைக் கண்ணபிரான் மெச்சினுர். ஸ்ரீ இராமச்சந்திரன் சீதா பிராட்டியுடன் துவாரகைக்கு விஜயஞ் செய்துள்ளார் என்றும் தகவல் எடுத்துச்செல்ல கருடன் மூன்ருவது முறையும் பகவானுல் ஏவப்பட்டான். அடியானும் பகவானின் ஆணையைச் சிரமேற்கொண்டு புறப்பட்டுவிட்டான்.

பகவான் அந்தப்புரத்திற்கு விஜயஞ் செய்தார். தம்மங்கையர்கள் பதினுருயிரம் பேர்களையும் அழைத்தார். "ஸ்ரீ இராம பக்தரான ஹனுமார் நம்மால் அழைக்கப் பட்டுள்ளார். அவர் விரைவில் வந்துவிடுவார். நாம் இராமரின் தோற்றம் பூண்டு அவருக்கு நல்வரவு கூறவேண்டும். உங்களுள் ஒரு மங்கையாவது விரைவில் சீதா தேவியின் தோற்றமளித்து அந்த பக்தனை வரவேற்கவேண்டும்," என்று கூறினுர்.

எல்லோரும் அச்சங்கொண்டு தலை குனிந்து நின்ருரே யொழிய ஒருவரும் அதற்குத் துணிந்தாரில்லை. அனந்தரம் திருமால் தம் முதல் பத்தினிமார் எட்டுபேர்களுள் ருக்மணி – சத்யபாமாவை விட்டு மற்று ஆறுபேர்களையும் அழைத்துத் தம் இங்கிதத்தை வெளியிட்டார். அவர்களும் பயந்து பின்வாங்கினர். அடுத்ததாகக் கண்ணன் ருக்மணியை வேண்டினுர். "ஹனுமார் வருமுன் நீ சீதாதேவியின் வடிவம் பூண்டு நிற்க வேண்டும். இல்லையெனில் நாம் மானம் இழக்க நேரிடும். நாம் இராமரூபம் தரிக்கிருேம்," என்ருர்.

ருக்மணி அதற்கிசைந்தாள். அறைக்குள்ளே நுழைந்தாள். சீதாதேவியாரின் அனுகரணம் பலவாறு செய்து பார்த்தாள். ஆடை அலங்காரங்களைக் குறைவின்றிப் பயன்படுத்தினுள். அவள் தோழிகளும் மும்முரமாக வேலைசெய்தனர். ஆனுல் பெருத பிள்ளைக்குக் கலியாணம்போல் சீதாதேவியின் திருமேனி தோன்ருது போனதினுல் ஆடம்பரங்களும் அலங்காரங்களும் பயனற்றுப் போயின. மிகவும் லஜ்ஜையுடன் அவள் பகவானருகில்



சென்று "மன்னியுங்கள். இந்த வேலையை விட்டு தேவரீர் எந்தக் கட்டளையானுலும் இடுங்கள், செய்கிறேன்" என்று பணிவுடன் சொன்னுள்.

பகவான் புன்னகை பூத்தவாறு சத்யபாமாவின் இல்லத்திற்கு விஜயம் செய்தார். பதினுருயிரத்தேழு மங்கையர்கள் தோல்வியுண்ட அச்செயலை இயற்ற அவளை வேண்டினுர். சத்யபாமை தம் நாதரின் அடிகளை வணங்கி விட்டுத் தம் அறைக்குள் புகுந்தாள். அவள் கண்ணுடியின் முன் நின்று துணிமணிகளைச் சரி செய்து காலங்கழிக்கவில்லை. தோழிகளின் உதவியையும் நாடவில்லை. ஓர் ஆசனத்திலமர்ந்தாள். சீதாபிராட்டியை மனதில் நினைத்துத் தியானம் பண்ணினுள். தேவி அருள் புரிந்தார். சத்யபாமை வெளியே வந்தபோது சீதாதேவியின் உருவத்தில் காட்சியளித்தாள். பகவான் இராம பிரானின் தோற்றமளித்து சத்யபாமாவின் அருகில் திகழலானுர்.

கருடன் கதளீவனத்தை யடைந்தான். அனுமாரைச் சந்தித்து ஸ்ரீராமச்சந்திரனும் சீதாதேவியும் மாருதியைப் பார்க்க விரும்பினராய்த் துவாரகையில் வசிக்கிருரென்று தகவல் கொடுத்தான். ஹனுமான் மகிழ்ந்தார். கருடனைத் தடவிக் கொடுத்து அன்புடன் பேசினுர். "தம்பீ! நான் சீக்கிரம் புறப்பட்டு வருகின்றேன். நீ முன்னுலேயே பறந்து சென்று எம்பிரானிடம் செய்தி சொல். திருமால் அமர்ந்து சவாரி செய்யும் உன் முதுகில் நான் ஏறமாட்டேன். உனக்கு மங்களம்," என்ருர்.

கருடன் திரும்பினுன். உடனே மாருதியும் புறப்பட்டுக் கணப் பொழுதில் ஓரே குதியாகத் துவாரகையைப் போய்ச் சேர்ந்தார். ஸ்ரீ ராமபிரானையும் சீதா பிராட்டியையும் பார்த்து வழிபட்டார். மனமாரப் புகழ்ந்தார். ஆசி பெற்றுத் திரும்பினுர்.

கொஞ்சநேரங் கழித்து கருடன் துவாரகைக்கு வந்து சேர்ந்தான். ஹனுமார் பின்னுலே வருகிருர் என்ற செய்தியைத் தந்ததும் பகவான் உரக்கச் சிரித்தார். "கருடா, உன் வேகத்தைப்பற்றி உனக்குள்ள பெருமிதத்தை அடக்குக. உனக்கின்னும் மாருதியைச் சரியாகத் தெரியவில்லையே; அவர் வாயு வேகத்தையும் மிக்க வாயுபுத்திரர். பலத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர். இறக்கை பெற்றுள்ள நீயும் அவரிடம் போட்டியிட முடியாது என்று தெரிந்துகொள். அனுமான் இங்கு வந்து தரிசனம் பெற்றுத் திரும்பிப் போய் ஒருமணி நேரம் ஆகிவிட்டது. நீ வைகுண்டத்திற்குத் திரும்பும்போது மறுபடியும் அவரைச் சந்தித்து அவரிடம் மன்னிப்புக்கேட்டுப் போவாயாக. உனக்கு நலமாகுக."

கருடன் பகவானைத் தொழுது வைகுண்டத்திற்குத் திரும்புகையில் அனுமாரைப் பார்த்து ஆசியும் பெற்றுக்கொண்டான். அங்ஙனம் கருடன் கர்வம் அடங்கிப் பணிவு பெறலானுன்.

ருக்மணி தேவி தான் மிகச் சிறந்தவளென்னும் எண்ணத்தை அறவே துறந்தாள். பின்னர் அவள் சத்யபாமையிடம் பொருமை கொண்டாளில்லை. கர்வம் அடங்கிய ருக்மணி பகவானுக்குப் பிரியப் பட்டவளாகத் திகழ்ந்தாள்.

ஒருவன் தன்னுள்ளிருக்கும் அகங்காரத்தைத் துறப்பது மிகவும் கடினம். உள்ளிப் பூண்டு அல்லது வெங்காயத்தை ஒரு பாத்திரத்தில் வைத்திருந்தோமானுல், அப்பாத்திரம் பலமுறை கழுவப்பட்ட போதிலும், சிறிதாவது பூண்டு அல்லது வெங்காயத்தின் நாற்றம் இருக்கிறது. அதுபோலவே ஒவ்வொருவரிடமும், என்னதான் அகற்ற முயன்ருலும், சிறிது அகங்காரமாவது இருக்கும்.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# மாணவருக்கு ஒருசொல்

(36)

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலும் மாணவருக்கு ராணுவப் பயிற்சி அளிப்பதைப் பற்றி ஒரு சாரார் தவறான கருத்துக் கொண்டுள்ளனர். அத்தகைய பயிற்சி பெறும் இளைஞர்கள், சமயப்பற்று, குலாசாரம், பழைய பண்பாடு, சாந்த சுபாவம், மென்மைக்குணம் ஆகியவற்றை இழந்து ஏதோ உடல் திறன் மட்டுமே பெற்றுள்ள காளைகளாகத் திரிவர் என்று அவர்கள் கருதுகின்றனர். ராணுவப் பயிற்சி என்பதை இம்சைப் போர்ப்பயிற்சியுடன் இணைத்து எண்ணுவது காரணமாக அவர்களுக்கு இத்தகைய அபிப்பிராயம் எழுகின்றது. ஆனால் போரில்கூட அறப் போர் என்று ஒன்று உண்டு. போர் வீரன் வெறும் கொலைகாரனாக இன்றிப் பெரியதொரு சமூக நலப் பணியாளனாக இருப்பது சாத்தியமே என்பதைச் சரித்திரத்தில் மீண்டும் மீண்டும் காண்கின்றோம். இராமனுடைய கோதண்டமும் கிருஷ்ணனுடைய சக்கரமும் சமுதாய நலக்கருவிகளேயாம்.

மாணவர் ராணுவப் பயிற்சி பெறுவதன் மூலம் அவர்கள் தினசரி சமுதாய வாழ்க்கையைத் திறம்பட நடாத்தக் கற்றுக் கொள்ளுகின்றனர். மனிதனது வாழ்க்கையில் இரு புறங்கள் உள்ளன. ஒன்று அவனது தனித்த வாழ்வு. தன்னைப்பற்றிய வரையிலும் தனக்கும் தன்னை ஆக்கிய தலைவனுக்கும் உள்ள உறவைப்பற்றிய வரையிலும் அவன் கைக்கொள்ளும் முயற்சியெல்லாம் இந்தப் பகுதியைச் சாரும். மனிதன் மற்ற மனிதருடன் சேர்ந்து உழைத்துப் பொது சமூகமொன்றில் ஒரு உறுப்பினனாக அமைவது மற்றொரு புறமாகும். இந்தக் கூட்டு வாழ்வில் தனது பங்கைச் சரிவரச் செய்யத் தெரியாதவன் நல்ல குடிமகன் ஆகான். பக்குவமுற்ற பிரஜையென அவனை ஏற்க முடியாது. உடல் என்பது ஒரு கூட்டு ஆக்கம். கை, கால் முதலிய உறுப்புக்கள் உடலின் அங்கங்களாம். அங்கம் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஸ்தானம், ஒரு கடமை, ஒரு முறை, ஒரு பொறுப்பு, ஒரு உரிமை உண்டு. இதை மீறி அந்தந்த அங்கம் எதையும் செய்யலாகாது. அதே போன்று சமுதாய உறுப்பினனான குடிமகனும் தனது ஸ்வதர்மத்தைச் செவ்வனே செய்வதன் மூலம் தான் சமுதாய க்ஷேமத்தை அபிவிருத்தி செய்ய முடியும். இதற்கான பயிற்சியைத் தருவதுதான் ராணுவப்பயிற்சியின் இலட்சியம். உடல் திட்பம், அறிவுக் கூர்மை, சமயோசித புத்தி, ஆற்றலை வேண்டிய அளவு மட்டும் பயனுறப் பயன்படுத்துதல், பலர் ஏகோபித்து ஒரு தலைமைக்கு இணங்கி ஒரே சமயத்தில் பெரு முயற்சி செய்து பெரும் செயலாற்றுதல், பிறருக்கு ஊறு செய்யாத வகையில் தனது உரிமையைப் பெற்று அனுபவித்தல் — ஆகிய நற்பண்புகளை வளர்ப்பதுதான் ராணுவப் பயிற்சி.

இராணுவப் பயிற்சி அழிவு வேலைக்கு அல்லாது ஆக்க வேலைக்குப் பெரிதும் பயன்படுகின்றது என்பதைச் சமீபத்தில் செய்து காட்டினர் நமது இந்தியப் படையினர். இப்படையினரின் ஒரு பகுதிக்கு இடவசதி போதவில்லை. இதற்கான திட்டமொன்று தயாரித்து அதை அரசாங்கத்தின் கட்டிட இலாகாவுக்கு அனுப்பி வைத்தால் அந்தக் கட்டிட இலாகாக்காரர் தமது போக்குப்படி காலக்கிரமத்தில் அதைக் கட்டி முடிப்பர். இதற்குள் பல ஆண்டுகள் கழிந்துவிடலாம். எனவே இந்தத் தாமத முறையைத் தவிர்க்க ராணுவத்தினர் தமது விடுதிகளைத் தாமே நிர்மாணித்துக் கொள்ளத் தீர்மானித்தனர். அவர்களுள் ஒரு சாரார் க்ஷத்திரியப் பரம்பரையிலே வந்துள்ள தாம் கொத்தனார் பணியில் ஈடுபடுவது குலதர்மத்திற்கு ஊறு செய்வதாகும் என்று முதலில் தயங்கினர். ஆனால் படைத்தலைவர்களாயிருந்த பெருமக்கள் தாமே முன்மாதிரியாக நின்று மண்வெட்டி, கரண்டி, சட்டி இவற்றைக் கையாள ஆரம்பித்ததும் யாவரும் பேருக்கத்துடன் பணிபுரியத் தொடங்கினர். செயல் எதுவாயினும் அதில் தாழ்வு கிடையாது என்ற படிப்பினையை உணர்ந்தனர். விடுதிகளெல்லாம் துரிதமாகக் கட்டி முடிக்கப்பட்டன. கட்டிய விடுதிகளைத் திறந்து வைக்கும் வைபவம் ஒன்றுக்கு அவர்கள் ஏற்பாடு செய்தனர். அந்த வைபவம் நடைபெற்ற பான்மையிலும் அவர்கள் தமது பயிற்சியின் தரத்தை நன்கு காட்டினர். ஆயிரக்கணக்கான மக்கள் ஆங்குக் குழுமியிருந்தனராயினும் ஒரு விதமான குழப்பமும் இன்றி வைபவம் நடந்தேறியது. வந்திருந்த மக்கள் அனைவருக்கும் விருந்து அளிக்கப்பட்டது. உணவுக் கூடத்திலும் உணவு பரிமாறப்பட்ட முறை ஒழுங்குக்குப் பெரியதொரு எடுத்துக் காட்டாக இருந்தது. ஆயிரக் கணக்கான பேர் தம்தம் இடத்தில் அமர்ந்து உணவு பரிமாறப் பெறுவதற்கு ஏழு நிமிஷங்கள்தான் ஆயிற்று. இருபதுநிமிஷத்திற்குள் அத்தனை பேரும் உண்டு எழுந்தாயிற்று. சாதாரணமாக நமது நாட்டில் கோயில் விழாக்களிலும் ரயில் பிளாட்பாரங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் மக்கள் ஒன்று கூடும்பொழுது காணப்படும் இரைச்சலையும், பரபரப்பையும், குழப்பத்தையும், ஒழுங்குக் குறைவையும், அலங்கோலத்தையும் எண்ணும் பொழுது ராணுவத்தினரின்சாதனை எத்துணை மாட்சியுடையது என்பது விளங்கும். இந்த சாதனையை நேரிற்கண்டு ரசித்தார் நமது பிரதமர் பண்டித நேரு. அதைப் பாராட்டிப் பேசி ராணுவத்தினரை சிலாகித்துக் கொண்டார்.

கூட்டு வாழ்வைத் திறம்பட நடத்துவதில் உயர் நிலையடைந்துள்ளது மேனாட்டுப் பண்பு. தனி மனிதனது ஆத்மீய வாழ்வைச் சீராக வாழ்வதில் வெற்றிகண்டுள்ளது இந்தியப் பண்பு. இவ்விருபண்புகளும் இணைந்து ஒன்றுபட்டால் செயற்கரியன செய்யவல்ல சமுதாயத்தை ஆக்குவது எளிதாகும். இதற்கு இந்தியா மற்ற நாடுகளுக்கு வழிகாட்டவேண்டும்.

---

# குறிப்புகள்

**பர்மாவின் மாஜி முதல்மந்திரி**

திருவாளர் நு என்பவர் இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பு சுதந்தரநாடு ஆகிய பர்மாவுக்கு முதல் மந்திரியாக இருந்தார். அப்பதவியிலிருந்த பொழுது அவர் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். அவருடைய ஸ்தானத்துக்குரிய மதிப்புடன் இந்திய அரசாங்கம் அவருக்கு வரவேற்பும் உபசாரமும் அளித்தது. பக்கம் பக்கமுள்ள நாடுகளாகிய இந்தியாவுக்கும், பர்மாவுக்குமிடையில் நல்ல இணக்கம் நிலைத்திருக்க வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினார். பிறகு இந்திய அரசாங்கத்தின் சார்பில் நமது ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்களும், பிரதமர் ஜவஹர்லால் நெஹ்ரு அவர்களும் பர்மாவுக்குப் போயிருந்தபொழுது திருவாளர் நு தக்க முறையில் அவர்களை வரவேற்று உபசரித்தார். இரண்டு நாடுகளுக்கிடையில் நட்பைப் பெருக்குதற்கு அத்தகைய நிகழ்ச்சிகள்

நன்கு பயன்பட்டன. அம்முறையிலே நல்லிணக்கத்தை வளர்த்து வருவது நாடுகளுக்கு நலன் தரும்.

அரசாட்சியில் பிரதமர் ஸ்தானம் வகித்திருந்ததற்கிடையில் திருவாளர் நு அவர்களுக்கு இவ்வையக வாழ்க்கையில் மோஹம் எதுவும் ஏற்படவில்லை. பர்மா நாடு அநுஷ்டித்து வருவது புத்த மதம். அம்மதத்தில் அவர் ஊறி வளர்ந்தவர். அம்மதக் கோட்பாடுகளுக்கு ஒப்ப அவர் மனநிலை படைத்திருந்தார். துறவறம் எல்லா மதங்களாலும் போற்றப்படுகிறது. ஆனால் புத்தமதத்தில் மட்டும் அது அலாதியான சிறப்பு அடைந்திருக்கிறது. பெருவாழ்வு வாழ விரும்புகிற மனிதன் ஒருவன் சிறிது காலத்துக்காவது துறவியாக இருந்து பழகவேண்டும் என்று புத்தமதம் போதிக்கிறது. அக்கொள்கைக்கு ஒப்ப புத்தமதம் திகழ்கிற நாடுகளில் பௌத்த பிக்ஷுக்களையும் அவர்களுக்குரிய மடாலயங்களையும் வேண்டியவாறு காணலாம். பர்மா தேசம் அதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகிறது. திருவாளர் நு அவர்கள் நாட்டின் அரசாட்சியை நடாத்திக் கொண்டிருந்த பொழுதே மடாலயங்களுக்கும் அடிக்கடி போய்வருவதுண்டு. அதற்கேற்றபடி உலகப் பற்றும் அவருக்குக் குறைந்து கொண்டே வந்தது. பெரிய பதவியிலிருந்தபொழுதே அவர் அதைத் துறந்துவிட்டார். பொறுப்பு வாய்ந்த மற்றொருவரிடம் அப் பதவியை ஒப்படைத்தார். பிறகு அவர் ஒரு துறவி ஆகி இப்பொழுது மடாலயம் ஒன்றில் பிக்ஷுவாக வாழ்ந்து வருகிறார்.

இரண்டு மூன்று மாசங்களுக்கு முன்பு இப் புதிய துறவி தனது ஆசிரம தர்மத்திற்கு ஒப்ப இல்வாழ்பவர்களுடைய வீட்டுவாயில்களுக்கு வந்து பிக்ஷை ஏற்கும் காட்சியின் படம் ஒன்று இந்திய சமாசாரப் பத்திரிகையில் வந்தது. அப்படத்தில் அமைந்துள்ள நூதனத்தை யாரோ சில அன்பர்கள் எண்ணிப்பார்த்திருக்கலாம். பலபேர் அதில் சிறப்பு ஒன்றும் காணாது புறக்கணித்திருக்கலாம். ஆனால் அவர் செய்துள்ள செயல் அம் மதத்தின் ஸ்தாபகராகிய புத்தர்பெம்மானை முற்றிலும் பின்பற்றுவதாகிறது. புத்தர்பெம்மான் சித்தார்த்தன் என்னும் பெயர் படைத்த ராஜகுமாரனாயிருந்தபொழுது நாடாளும் பெரிய பதவியைத் துறந்துவிட்டு அருள் நாட்டம் கொண்டவராக வெளியேகினார். அன்று முதல் இன்று வரையில் அந்த மதத்தினுள்ளே அந்தச் சிறந்த ஐதிகம் தொடர்ந்து அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. துறவியர்களுக்குச் சீரிய மதிப்புக் கொடுப்பது புத்தமதக் கோட்பாடாகும். அந்த மதிப்பை எதிர்பார்த்து திருவாளர் நு துறவியாகவில்லை. வாழ்க்கையில் கொண்டிருந்த லக்ஷியத்தை முதன்மையாக வைத்துக்கொண்டே அவர் லௌகிக வாழ்க்கையைப் புறக்கணித்தார். வயதில் அவர் இன்னும் இளையவர். உடல் கட்டும், திட்பமும் வாய்க்கப்பெற்றவர். கல்விமான். சமுதாய நலத்தில் கருத்துமிக வாய்க்கப்பெற்றவர். இத்தனை விதமான பண்புகளெல்லாம் அவரிடத்து அமைந்திருப்பதற்கிடையில் அவர் துறவறம் பூண்டிருப்பதுதான் பாராட்டுதற்குரிய செயலாகிறது. அந்த அளவில் உண்மையாகவே அவர் புத்தர் பெம்மானுடைய வழிமுறையைப் பின்பற்றுபவர் ஆகிறார்.

துறவியர் மூலம் ஒரு சமுதாயத்தைப் பற்றிய உண்மையும் அந்தச் சமுதாயம் அனுஷ்டிக்கும் சமயத்தைப் பற்றிய உண்மையும் வெளியாகின்றன. செழித்து வளர்ந்துள்ள மரம் ஒன்று தரவேண்டிய கனிகளைத் தருணத்தில் தருவதே அதற்குரிய செயலாகும். நல்லக்னிகள் வந்துகொண்டிருக்குங்கால் மரத்தின் சிறப்பு அதன் மூலம் வெளியாகிறது. சமுதாயம் ஒன்றில் மேன்மக்கள் பலபேர் தோன்றிக் கொண்டிருப்பார்களாகில் அந்தச் சமுதாயத்தின் சிறப்புக்கு அதுவே அறிகுறியாகும். அம்மேன்மக்கள் பிறகு துறவு பூணுவார்களாகில் அவர்கள் அனுஷ்டிக்கும் மதத்தினுடைய சிறப்பு அத்துறவறத்தின்மூலம் வெளியாகிறது. மனிதன் எதற்குப் பெரிய மதிப்புத் தருகிறானோ அதன் பொருட்டே தன் உயிரையும் அவன் பயன் படுத்துகிறான். அவனுடைய லக்ஷியம் இன்னதென்று அவன் வாழுகின்ற வாழ்க்கையினின்று வெளியாகிறது. நூல்களினின்றும், பிரசுரங்களினின்றும், பிரசங்கங்களினின்றும் ஒரு மதத்தின் சிறப்பு ஒரு நாளும் வெளியாகாது. மதக் கோட்பாட்டுக்கு ஏற்ப வாழ்க்கையை வாழுபவர்கள் மூலமாகவே அதன் சிறப்பு வெளியாகிறது. நல்ல சமுதாயம் ஒன்றில் துறவறத்தின் மகிமையை நன்கு விளக்கிக் காட்டக் கூடிய மேன்மக்கள் பலபேர் தோன்ற வேண்டும். அவர்களின் பெருவாழ்வின் மூலம் சமயக்கோட்பாடுகளும் சிறப்புற்று விளங்கவேண்டும். இதற்கெல்லாம் அடிப்படையாயிருப்பவர் மக்கள். மக்களுடைய தரத்தைப் பல்வேறு துறைகளில் கணக்குப் போட்டுப் பார்க்கின்றனர். கற்றவர் எத்தனைபேர், மற்றவர் எத்தனைபேர், செல்வம் சேகரிப்பதில் பல்வேறு படித்தரங்களில் இருப்பவர் எத்தனைபேர், உடல் திட்பம் வாய்த்துள்ளவர் எத்தனைபேர், பலதரப்பட்ட நோய்களுக்கு ஆளாகி இருப்பவர்கள் எத்தனைபேர் என்றெல்லாம் கணக்குப் பார்க்கிறார்கள். சமுதாயத்திலுள்ள நல்ல துறவியர்களையும் கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும். பதினாயிரம் பேரில் ஒருவன் நல்ல துறவியாக வாய்ப்பானாகில் அந்தச் சமுதாயம் தலைசிறந்ததாய் விடும். திருவாளர் நு உடைய தியாகமும், துறந்த பிறகு அவர் வாழ்ந்து வருகிற நல்வாழ்க்கையும் எல்லாச் சமுதாயங்களுக்குமே வாழ்க்கையின் குறிக்கோளைப் பற்றி நல்லறிவு புகட்டுவதாகும்.



## வெளிநாட்டவர்க்கு வரவேற்பு

இன்றைக்கு நம் நாட்டிலே ஓர் அதிசயத்தைக் காண்கின்றோம். நாம் சுதந்தரம் பெற்றான பிறகு வெளி நாடுகளிலிருந்து நம் நாட்டைப் பார்க்க வரும் மக்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. வெளி நாடுகளை ஆண்டு வருபவர்களும் அரசாட்சி புரிந்து வருபவர்களும் ஒருவர் பின் ஒருவராக வந்துகொண்டேயிருக்கின்றனர். அப்படி வருகின்றவர்களை நமது அரசாங்கம் முறையாக வரவேற்றுக் கொண்டேயிருக்கிறது. ஒரு விதத்தில் இது பாராட்டுதற்குரிய செயல். ஏனென்றால் உலக மக்களுக்கிடையில் நட்பைப் பெருக்கி வருவது உலக நன்மைக்கு வேண்டியவாறு இடம் கொடுக்கும். ஆனால் இவ்வரவேற்பு என்னும் செயல் வரம்பு கடந்து போய்விட்டால் அது இடைஞ்சலாகவும் மாறிவிடும். வரவேற்பு அளிப்பதில் பொருளும், காலமும், முயற்சியும் ஏராளமாகச் செலவாகின்றன. அதற்கேற்ற அளவு சொந்த அலுவல்களைச் சரியாகக் கவனிக்க நேரமில்லாது போய்விடுகிறது. பொருளை உற்பத்தி பண்ணுவதற்கும், ஓரளவு தடை உண்டாகிறது. நம்மை விருத்திபண்ணுவதற்குப் பதிலாக நம்மிடத்திலிருப்பதை மற்றவர்களுக்குக் காட்டித் தருவதிலேயே காலமுழுதும் கழிந்து விட்டால் இருப்பதுவும் தானாகக் குறைய ஆரம்பித்துவிடும். ஆகு கூழ் என்பது போகு கூழ் ஆக மாறிவிடும்.

மேற்பூசலான நட்பு வெளி நாட்டவர்கள் பல பேர்க்கிடையில் வைத்துக்கொள்வதில் நலன் அதிகம் விளைந்து விடாது. ஒருவரை ஒருவர் சந்திக்கின்றபொழுது உற்சாகமாக இன்சொல் சொல்லுதல், ஒருவரை ஒருவர் பாராட்டிப் பேசுதல் முதலிய வெளி ஆடம்பரங்கள் நிகழ்கின்றன. பிரிந்துபோனதும் அந்த நட்பும், மறைந்து போகக்கூடியதாகும். கணக்கற்ற பேருக்கு அறிமுகமாயிருக்கும் மனிதன் ஒருவன்

யாரிடத்திலாவது ஆழ்ந்த அன்போ, அபிமானமோ வைத்திருக்க முடியாது. வெறும் வாய்ப்பேச்சு உபசாரத்தோடு அதுமுடிந்து விடும். நாட்டைப் பார்க்க வருபவர்களில் பலர் நாட்டின் உள்வலிவு, ஒற்றுமை, செல்வம் ஆகியவைகளை உளவறிய வருபவர்களுமிருப்பார்கள். அத்தனை பேரோடு இணக்கம் வைப்பதற்குப் பதிலாக நம்பிக்கைக்குரிய ஒரு சிலரோடு ஆழ்ந்த அன்பும் இணக்கமும் வைத்திருப்பது மேல். பிறகு எந்த நாடோ, அல்லது மனிதனோ பிறரோடு உறவாடுதலிலேயே காலம் கழித்து விடுவானாகில் அவன் தன் கருமத்தை ஆழ்ந்து செய்ய இயலாதவனாய் விடுவான். பிறரோடு தொடர்வும் இணக்கமும் வைப்பது மிக நன்று. ஆனால் அதற்குரிய வரம்பைக்கடந்து விடலாகாது.

உலக நலத்தின்பொருட்டு இப்பொழுது ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம் (United Nations Organization) ஒன்றை நிறுவியிருக்கிறார்கள். குறிப்பிட்ட காலங்களில் எல்லா நாடுகளின் பிரதிநிதிகள் ஆங்குக் கூடி உலக நலத்தின் பொருட்டும், உலக ஒற்றுமையின் பொருட்டும் அளவளாவிப் பேசி ஒற்றுமைக்கான நல்ல திட்டங்களை அமைப்பார்களானால் அதில் காலவிரயமும் பொருள்விரயமும் அதிகம் உண்டாய் விடாது. மக்களுக்கிடையில் நல்ல மனப்பான்மையை வளர்ப்பதற்கு அத்தகைய ஸ்தாபனங்கள் மூலமாக முயற்சி பண்ணி வருவது நலம். சான்றோர்கள் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்துகொள்வார்களானால் அது உலக ஒற்றுமைக்கு நல்ல அஸ்திவாரம் ஆகும். அந்தச் சான்றோர்களின் மூலம் அவரவர்க்குரிய நாடுகளும் நல்ல மனப்பான்மையுடையவைகளாக அமைந்து வரவேண்டும்.

---

## செய்திகள்

### நிகழ்ந்தது

ஆசிரியர் கல்லூரிச் சொல்லாக்கத்திற்குப் பெருந்துணை புரிந்தமைக்காக நமது விவேகானந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு முதற்பரிசாக சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தாரால் 4—2—59 உ சென்னை ராஜாஜி ஹாலில் மேன்மைதங்கிய கவர்னர் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் செப்புப்பட்டயம் வழங்கப் பெற்றது.

### நிகழ்பவை

பிப்ரவரி மாதம் 21, 22 தேதிகளில் விவேகானந்த வித்யாவனம் உயர்நிலைப்பள்ளி மாணாக்கர்கள் வெவ்வேறு ஊர்களுக்கு உல்லாசப் பிரயாணம் போய்வருவார்கள். பிப்ரவரி மீ 22 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை உதகமண்டலம் ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசிரமத்தில் நிகழும் ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தி விழாவில் நம் குருகுல மாணவர்கள் சிலர் கலந்துகொண்டு தவப்புதல்வர்கள் என்னும் நாடகத்தை நடிப்பார்கள். அவ்விழாவில் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் தலைமை தாங்குவார்கள்.

ஏற்கனவே தை மாத இதழில் விளம்பரம் செய்துள்ளபடி பிப்ரவரி மாதம் 25, 26, 27 தேதிகளில் தபோவனத்தில் அந்தர்யோகம் நிகழும். மார்ச்சு மாதம் முதல் தேதி ஞாயிற்றுக்கிழமை ராமகிருஷ்ணர் ஜயந்திவிழா தபோவனத்தில் கொண்டாடப் பெறும். அதுபற்றிய நிகழ்ச்சி முறை இவ்விதழ் பொருளடக்கத்தின் பின்புறத்தில் வெளியாகி இருக்கிறது. அன்று காலை 9 மணிக்கு குருகுல மாணவர்களின் பெற்றோர் கூட்டம் நடைபெறும்.

மார்ச்சு மாதம் 11ம் தேதி ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஜன்மதினமாகும். அன்று குருகுல மாணவர்கள் 24 மணி நேரம் அகண்டநாமபஜனை செய்வார்கள்; நண்பகல் 11 மணிமுதல் 12 மணி வரை ஐக்கிய வணக்கம் நடைபெறும்.

---

ஸ்ரீ ராமகிருஷ்ண

# தபோவனப் பிரசுராலயம்

திருப்பராய்த்துறை போஸ்ட், திருச்சி ஜில்லா

## எங்கள் கிளை விற்பனை நிலையங்கள்

1. ஸ்ரீ T. P. மாரிமுத்து பிள்ளை, கோணமண்டபம், தாயுமானசுவாமி கோவில், திருச்சி.
2. ஸ்ரீ சி. ஐம்புலிங்கம் பிள்ளை, டிரங்கு ரோடு, திருவானைக்காவல்.
3. வெங்கடேஸ்வரா லாட்ஜ், அடிவாரம், பழனி.
4. ஸ்ரீ ச. சு. நடராஜன், 51, அம்மன் சந்நிதி, மதுரை.
5. ஸ்ரீ A. S. K. சங்கரலிங்க நாடார், வியாபாரம், விருதுநகர்.
6. ஸ்ரீ A. R. அருணாசல நாடார், பஞ்சு வியாபாரம், சிவகாசி.
7. பூபதி நியூஸ் மார்ட், ராஜபாளையம்.
8. ஸ்ரீ மே. ச. மாணிக்கவாசகம் பிள்ளை, புஷ்பவியாபாரம், தென்காசி.
9. அரசன் & கோ., திருநெல்வேலி ஜங்ஷன்.
10. சண்முகவிலாஸ் புக்ஸ்டால், ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோவில், திருச்செந்தூர்.
11. அரசன் & கோ., 24-514, பாலாமோர் ரோடு, டெலிபோன் நெ. 33- [நாகர்கோவில்.
12. ஸ்ரீ S. K. S. ராஜமணி நாடார், 65 C. தெற்கு ராஜவீதி, தூத்துக்குடி.
13. ஸ்ரீ T. ராமலிங்கம் பிள்ளை, கதர் ஸ்டோர்ஸ், பொள்ளாச்சி.
14. தி கோயமுத்தூர் மெட்டல் மார்ட், பாத்திரக்கடை, 26/265 பெரியகடைவீதி, கோயமுத்தூர்.
15. பாரத் கபே, பவானி.
16. ஸ்ரீ R. பூவராகவ மூர்த்தி, பஸ் ஸ்டாண்ட், பவானி.
17. காந்தி ஆசிரமம் காதிபந்தர், கடைவீதி, சேலம்.
18. ஸ்ரீ ராமலக்ஷ்மணா & கோ., அருணாசல ஆசாரி தெரு, சேலம் டவுன்.
19. ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம், பசுவங்குடி, பெங்களூர்—4.
20. ஸ்ரீ K.C.S. அண்ணாமலைநாடார், தி பிரிலியண்ட் டிரேடிங் கார்ப்பரேஷன் LTD. 4-A, பேஸின் பிரிட்ஜ் ரோடு, போன் 3876, சென்னை-1
21. ஸ்ரீ P. K. மாதவன், 7, ஷண்முகராயபிள்ளை வீதி, புரசவாக்கம், சென்னை-7
22. ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், 70, நெல்லுக்காரத்தெரு, காஞ்சீபுரம்.
23. ஸ்ரீ R. நாராயணசாமி ரெட்டியார், Prop: மாடர்ன் கேப், திருவண்ணாமலை.
24. ஸ்ரீ C. G. ராமாநுஜம் செட்டியார்சன், மேல சந்நிதி, சிதம்பரம்.

### இலங்கையில் கிடைக்குமிடங்கள் :

25. ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன், ராமகிருஷ்ண மிஷன் ரோடு, கொழும்பு-6.
26. ஸ்ரீ P. கந்தையா, 'தனசக்தி' திரிகோணமலை, சிலோன்.
27. ஸ்ரீ T. தம்பித்துரை, 226, ஆஸ்பத்திரி ரோடு, யாழ்ப்பாணம்.

ஆவலுடன் எதிர்பார்த்த

மூன்றும் பதிப்பு வெளிவந்துவிட்டது

# ஸ்ரீமத் பகவத்கீதை

தேவநாகரியிலும் தமிழிலும் மூலம்

**சுவாமி சித்பவானந்தர் அவர்கள் இயற்றிய**

பதவுரை — பொழிப்புரை — விளக்கமான விரிவுரையுடன், ஏற்ற இடங்களில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேசங்களிலிருந்து மேற்கோள்களும் தரப்பட்டிருக்கின்றன.

எல்லோரும் அறிந்துகொள்ளக்கூடிய இனிய தமிழ்நடை. டெம்மி 1-க்கு 8ல் 920 பக்கங்களை உடையது. உயர்ந்த தடிப்பான இந்தியன் பிரிண்டிங் கிளேஸ் காகிதம் - சுத்தமான பதிப்பு - அழகிய பிளாஸ்டிக் காலிகோ பைண்டு. ரூ. 10-00 மதிப்புள்ள இப்புத்தகம் பிரசார நோக்கத்தைக்கொண்டு மிக மிகக் குறைந்த

***விலை ரூ. 3—75 க்கு விற்கப்படுகிறது.***

புத்தகத்தின் கிரயத்துடன் (ரூ. 3-75) பேக்கிங் செலவு 0-25 ந.பை சேர்த்து ரூ. 4-00 மணியார்டர்மூலம் முன்பணம் அனுப்பிவைத்தால் புத்தகத்தை ரயில்வே பார்சல் மூலம் 'To Pay'ல் அனுப்பப்படும். ரயில்வே நிலையத்தின் பெயரை தெளிவாக எழுதியனுப்பவேண்டும். ரயில்வே பார்சல் மூலம் அனுப்புவதில் ஒரு கீதை பிரதிக்கு சுமார் 0-50 ந.பைசாவிலிருந்து ரூ. 1/- வரைதான் செலவு ஆகும். தங்களுக்கும் தங்கள் நண்பர்களுக்குமாகச் சேர்த்து அதிகப் பிரதிகள் தருவித்தால் இன்னும் பார்சல் செலவு கணிசமாகக் குறையும்.

ரயில்வே நிலையம் அருகில் இல்லாதவர்களுக்கு ரிஜிஸ்தர் தபால் மூலம் புத்தகம் அனுப்பிவைக்கப்படும். ரிஜிஸ்தர் தபாலில் அனுப்ப பேக்கிங், தபால் செலவு ரூ. 2/- ஆகும். ரூ. 5-75 மணியார்டரில் அனுப்பிவைத்தால் புத்தகத்தை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பிவைக்கிறோம்.

ஆங்காங்கு உள்ள எங்கள் கிளை நிலையங்களில் பார்சல் செலவுகளுக்காக 25 நயா பைசா சேர்த்து நான்கு ரூபாயாகத் தந்து புத்தகத்தை எளிதில் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர்


***ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனப் பிரசுராலயம்***

திருப்பராய்த்துறை போஸ்ட் :: திருச்சி ஜில்லா


Edited by SWAMI CHIDBHAVANANDA,
Printed & Published by Br. RAMUDU at Tapovanam Press, Tirupparaitturai, Tiruchi Dt.

1122

# தர்மசக்கரம்



விளம்பி ஹூ பங்குனி மீ சக்கரம் 8 ஆரம் 3

**ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்**

திருப்பராய்த்துறை, எலமனூர் ஸ்டேஷன், திருச்சி ஜில்லா.

ஸ்ரீ ராமகிருஷ்ண

# தபோவனப் பிரசுராலயம்

திருப்பராய்த்துறை போஸ்ட், திருச்சி ஜில்லா

## எங்கள் கிளை விற்பனை நிலையங்கள்

1. ஸ்ரீ T. P. மாரிமுத்து பிள்ளை, கோணமண்டபம், தாயுமானசுவாமி கோவில், திருச்சி.
2. ஸ்ரீ சி. ஜம்புலிங்கம் பிள்ளை, டிரங்கு ரோடு, திருவானைக்காவல்.
3. வெங்கடேஸ்வரா லாட்ஜ், அடிவாரம், பழனி.
4. ஸ்ரீ ச. சு. நடராஜன், 51, அம்மன் சந்நிதி, மதுரை.
5. ஸ்ரீ A. S. K. சங்கரலிங்க நாடார், வியாபாரம், விருதுநகர்.
6. ஸ்ரீ A. R. அருணாசல நாடார், பஞ்சு வியாபாரம், சிவகாசி.
7. பூபதி நியூஸ் மார்ட், ராஜபாளையம்.
8. ஸ்ரீ மே. ச. மாணிக்கவாசகம் பிள்ளை, புஷ்பவியாபாரம், தென்காசி.
9. அரசன் & கோ., திருநெல்வேலி ஜங்ஷன்.
10. சண்முகவிலாஸ் புக்ஸ்டால், ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோவில், திருச்செந்தூர்.
11. அரசன் & கோ., 24-514, பாலாமோர் ரோடு, டெலிபோன் நெ. 33. [நாகர்கோவில்.
12. ஸ்ரீ S. K. S. ராஜமணி நாடார், 65 C. தெற்கு ராஜவீதி, தூத்துக்குடி.
13. ஸ்ரீ T. ராமலிங்கம் பிள்ளை. கதர் ஸ்டோர்ஸ், பொள்ளாச்சி.
14. தி கோயமுத்தூர் மெட்டல் மார்ட், பாத்திரக்கடை, 26|265 பெரியகடைவீதி, கோயமுத்தூர்.
15. பாரத் கபே, பவானி.
16. ஸ்ரீ R. பூவராகவ மூர்த்தி, பஸ் ஸ்டாண்ட், பவானி.
17. காந்தி ஆசிரமம் காதிபந்தர், கடைவீதி, சேலம்.
18. ஸ்ரீ ராமலக்ஷ்மண & கோ., அருணாசல ஆசாரி தெரு, சேலம் டவுன்.
19. ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம், பசுவங்குடி, பெங்களூர்—4.
20. ஸ்ரீ K. C. S. அண்ணாமலைநாடார், தி பிரிலியண்ட் டிரேடிங் கார்ப்பரேஷன் LTD. 4-A, பேஸின் பிரிட்ஜ் ரோடு, போன் 3876, சென்னை-1
21. ஸ்ரீ P. K. மாதவன், 7, ஷண்முகராயபிள்ளை வீதி, புரசவாக்கம், சென்னை-7
22. ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், 70, நெல்லுக்காரத்தெரு, காஞ்சீபுரம்.
23. ஸ்ரீ R. நாராயணசாமி ரெட்டியார், Prop: மாடர்ன் கேப், திருவண்ணாமலை.
24. ஸ்ரீ C. G. ராமாநுஜம் செட்டியார்சன், மேல சந்நிதி, சிதம்பரம்.

### இலங்கையில் கிடைக்குமிடங்கள் :

25. ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன், ராமகிருஷ்ண மிஷன் ரோடு, கொழும்பு-6.
26. ஸ்ரீ P. கந்தையா, 'தனசக்தி' திரிகோணமலை, சிலோன்.
27. ஸ்ரீ T. தம்பித்துரை, 226, ஆஸ்பத்திரி ரோடு, யாழ்ப்பாணம்.

# தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை


சக்கரம் 8 || விளம்பி ௵ பங்குனி ீ || ஆரம் 3


## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிரார்த்தனை | 81 |
| 2. | அருள் விருந்து | 82 |
| 3. | பரமஹம்ஸர் புகட்டிய பெருநெறி விளக்கம் | 83 |
| 4. | பக்தியோகத்தின் இயல்பு | 86 |
| 5. | தாயுமானவர் பாடல்—38 | 90 |
| 6. | மூவர் இராமாயணம் T. R. ராமநாத சாஸ்திரி, M. A. வித்வான் R. வேங்கடசாமி | 96 |
| 7. | சந்தேகம் தெளிதல் | 102 |
| 8. | தானவீரன் கர்ணன் | 105 |
| 9. | காந்தே திரு கா. இராமனுதன் பி. ஏ., பி. எல். | 112 |
| 10. | குறிப்புகள் | 117 |
| 11. | செய்திகள் | 120 |



வருட சந்தா : உள்நாடு ரூ. 4-00 வெளிநாடு ரூ. 5-00

தனி இதழ் : „ 45 ந. பை. „ 55 ந. பை.


வியாபார விளம்பரங்களையும், மதிப்புரைக்குப் புத்தகங்களையும் ஏற்பதில்லை.

தர்ம சக்கரம் ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியன்று வெளி வருகிறது. ஒவ்வொரு சந்தாதாரரின் விலாசமும் சரியாக எழுதப்பெற்றுள்ளதா என்று சரிபார்த்துப் பதிவு செய்துகொண்ட பின்னரே தபாலில் சேர்க்கப்படுகிறது. தமிழ் மாதம் பத்து தேதிக்குள் இதழ் கிடைக்கவில்லையேல் தபால் அதிகாரிகளுக்கு மனுச்செய்து கொள்வதுடன் அதன் நகலை அனுப்பி எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

சந்தாதாரர்கள் தங்கள் தபால்களில் சந்தா நம்பரைக் குறிப்பிடுதல் அவசியம்.

மானேஜர்,
தர்ம சக்கரம்

# THE TEACHER
# THE STUDENT

Here are two booklets on
Education as it is and as it ought to be
By
**Swami Chidbhavananda**

The ancient ideals of Guru and Sishya are portrayed in these brochures with clarity and fullness, against the background of the changing modern India.

TEACHER AND TAUGHT will find much in these booklets
to disturb complacence
to rouse thinking
to get at solutions

**The Teacher 30 nP.** **The Student 45 nP.**

**TAPOVANAM PUBLISHING HOUSE**
TIRUPPARAITTURAI P. O. : : TIRUCHI DT.


## DHARMA CHAKRAM

**Statement about ownership and other particulars about Newspaper 'Dharma Chakram' to be published in the first issue every year after the last day of February.**

FORM IV
(See Rule 8)

| | | |
|---|---|---|
| 1. | Place of Publication : | Tirupparaitturai |
| 2. | Periodicity of its Publication : | Monthly |
| 3. | Printer's name : | Br. Ramudu |
| | Nationality : | Indian |
| | Address : | Tapovanam Press, Tirupparaitturai P. O., Tiruchi Dt. |
| 4. | Publisher's name : | Br. Ramudu |
| | Nationality : | Indian |
| | Address : | Sri Ramakrishna Tapovanam, Tirupparaitturai P. O., Tiruchi Dt. |
| 5. | Editor's name : | Swami Chidbhavananda |
| | Nationality : | Indian |
| | Address : | Sri Ramakrishna Tapovanam, Tirupparaitturai P. O., Tiruchi Dt. |
| 6. | Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total | Sri Ramakrishna Tapovanam Tirupparaitturai P. O., Tiruchi Dt. |

*I, Br. Ramudu, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

Date : 8-3-59

**Br. RAMUDU,**
Signature of the Publisher

प्रज्ञानं ब्रह्म

# தர்ம சக்கரம்

*அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்*
*பிறவாழி நீந்த லரிது.*


**சக்கரம் 8** | **விளம்பி ௵ பங்குனி ௴** | **ஆரம் 3**


## பிரார்த்தனை

तत्पुरुषाय विद्महे चक्रतुण्डाय धीमहि ।
तन्नो नन्दिः प्रचोदयात् ॥

(नन्दिगायत्री)

*தத்புருஷாய வித்மஹே சக்ரதுண்டாய தீமஹி*
*தந்நோ நந்தி: ப்ரசோதயாத்*

அந்தப் பரம புருஷனை நாம் அறிந்துகொள்வோமாக
அதற்குச் சக்ரதுண்டனை தியானிப்போமாக
அந்த நந்திகேசுவரன் நம்மை லக்ஷியத்தின்கண் தூண்டுவாராக

*(சக்ரதுண்டன் — சக்ராயுதத்தை வாயில் கௌவி சிவனாருக்குப் போரில் துணைபுரிந்தவன்)*

*நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம்*
*நந்தி அருளாலே மூலனை நாடினோம்*
*நந்தி அருளாவ தென்செயும் நாட்டினில்*
*நந்தி வழிகாட்ட நானிருந் தேனே.*

*(திருமூலர்)*

## அருள் விருந்து

அன்பில் நிலைத்திருப்பவன் அச்சத்தை அறியான்.

நல்வாழ்வு வாழ விரும்புகிறவன் தனது நாவை அடக்கிப் பழகட்டும்.

ஒருவனுடைய எண்ணம் எப்படியோ வாழ்வும் அப்படியே ஆகிறது.

ஆழ் ஆழிபோன்று மனிதனுடைய மனது யாண்டும் ஆழ்ந்தும் விரிந்தும் இருப்பதாகுக.

பலவிஷயங்களை அறிந்திருப்பவன் அறிவாளியல்ல. பயன்படுவதை அறிந்திருப்பவனே அறிவாளி.

மக்கள் படைத்துள்ள தளராத நெஞ்சமே ஒருநாட்டுக்கு நெருக்கடி நேர்ந்த காலை நல்ல அரண் ஆகிறது.

வசை மொழியையும் குறைகூறுவதையும் அமைதியாக ஏற்றுக்கொள்வது மனபரிபாகத்துக்கு அறிகுறியாகும்.

பூத்த மரத்தின் நறுமணம் நாலாபக்கமும் பரவுகிறது. மனிதனுடைய கீர்த்தியும் தானாகவே நாலாபக்கமும் பரவுகிறது.

நலம் புரிவதை முன்னிட்டு ஒருவனுக்கு இன்னல்களும் இடுக்கண்களும் நேரிடுமாயின் அவைகளைக் குறித்து அவன் வருந்தலாகாது.

நல்ல நாளா அல்லது மப்பு மந்தாரமுடைய நாளா என்பதை சூரியோதயம் விளக்குகிறது. மனிதனுடைய வாழ்க்கைத்தரத்தைப் பிள்ளைப்பருவம் விளக்குகிறது.

உலக விஷயங்களுக்குக் காது கொடாது செவிடன் போன்று ஆய்விடு. அப்பொழுது பகவத் பெருமை உன் உள்ளத்தினுள் ஒலித்துக்கொண்டிருப்பதைக் கேட்க வல்லவனாவாய்.

மனதை நடுநிலையில் வைத்திருப்பவன் உண்ணும் பொழுதும், உறங்கும் பொழுதும், நடக்கும் பொழுதும், இருக்கும் பொழுதும், வினையாற்றும்பொழுதும், எப்பொழுதும் சாந்தியில் நிலைபெற்றிருக்கிறான்.

**பரமஹம்ஸர் புகட்டிய**

# பெருநெறி விளக்கம்

தக்ஷிணேசுவரத்தில் அன்பர்கள் பலர் வந்து கூடியிருந்தனர். அவர்களிடம் பரமஹம்ஸர் பகர்வாராயினர்: "நன்னெறி கடைப்பிடிக்கின்ற மனிதன் ஒருவன் எக்காரணத்தை முன்னிட்டும் பொய்பேசலாகாது. நாடகத்தில்கூட பொய் பேசி நடிக்கலாகாது. அப்படிப் பொய் பேசினால் அதற்கேற்றவளவு அவனுடைய மனது தூய்மையை இழந்துவிடும்.

"கேசவ சந்திரசேனருடைய வீட்டுக்கு நான் ஒருநாள் சென்றிருந்தேன். அங்கே புதிய நாடகம் ஒன்று நடிப்பதற்கு அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். நவீன பிருந்தாவனம் என்பது அந்த நாடகத்தின் பெயர். அந்த நாடகத்தில் அமைந்திருந்த பகுதிகளையெல்லாம் பொருளற்ற கதம்பம் எனலாம். வெவ்வேறு சமயங்களிலிருக்கின்ற பகுதிகளையெடுத்து பத்துப்போட்டு அமைக்க அவர்கள் முயன்றனர். சிலுவை என்னும் சின்னம் ஒன்றை நாடக மேடையின்மீது கொண்டு வந்து நாட்டினர். மற்றொரு நடிகன் மேடையின்மீது வந்தான். ஹிந்துமத ஐதிகப்படி நீர் தெளித்து புரோக்ஷணம் பண்ணும் கிரியை அந்தச் சிலுவையினிடத்துக் கையாளப்பட்டது. தெளிக்கப்பட்ட நீர் சாந்தியின் அறிகுறியாம். சிலுவையின் மூலம் உலகிலே சாந்தி நிலவவேண்டுமென்று அவர்கள் கருதினார்கள் போலும்! மூன்றாவது நடிகன் ஒருவன் மேடையின் மீது தோன்றினான். குடிகாரனாக நடித்த அம்மனிதன் ஒருவேளை உண்மையிலேயே குடிவெறி கொண்டிருந்திருக்கலாம். மேடையின்மீது அவன் தட்டித் தள்ளாடி நடக்க ஆரம்பித்தான். அத்தகைய நிகழ்ச்சிகள் எல்லாம் ஏதோ வெறும் பொழுது போக்குக்கு நிகழ்ந்தவைகள் போன்று தென்பட்டன. அவைகளில் கலந்துகொள்ளுதல் அல்லது அவைகளைச் சென்று பார்ப்பது ஆத்ம சாதகன் ஒருவனுக்குப் பொருந்தாது. அத்தகைய விஷயங்களைப் பற்றி நெடுநேரம் பேசிக்கொண்டிருப்பதும், ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பதும் முறையன்று. அதனால் மனது மாசு படிந்துவிடும். புதிதாகச் சலவை செய்து கொண்டுவந்திருக்கும் வெள்ளை வஸ்திரத்துக்குச் சமானமானது மனது. எந்தச் சாயத்தில் வேண்டுமானாலும் அதைத் தோய்த்து எடுக்கலாம். அதே விதத்தில் மனதும் நாம் அளிக்கிற விருத்திகளை எடுத்துக் கொள்கிறது. நெடுங்காலத்துக்கு அதுபொய்ம்மையோடு பொருந்திக்கிடக்குமாகில் அம்மனதும் பொய்ம்மையின் வடிவத்தை எடுத்துக் கொள்கிறது."

மற்றொரு தடவை பரமஹம்ஸர் கேசவ சந்திரசேனருடைய வீட்டுக்குச் சென்றிருந்தார். அப்பொழுது இன்னொரு நாடகம் நடிக்கப்பட்டது. கௌரங்கதேவர் துறவறம் பூண்ட வரலாற்றைப்பற்றியது அந்த நாடகம். அதன் இனிமையை முகஸ்துதிக்காரர்கள் சிலர் முற்றிலும் கெடுத்துவிட்டனர். கேசவ சந்திரசேனரை மிகைபட புகழ்ந்து பேசுவது அவர்களின் நோக்கமாயிருந்தது. முகஸ்துதிக்காரர்களில் ஒருவன் கேசவ சந்திரசேனரைப் பார்த்துப் பெருமிதமாகப் புகழ்ந்து பேச ஆரம்பித்தான். 'நீவிர் இக்காலத்துக்குரிய கௌரங்கதேவர் ஆவீர்' என்று புகழ்ந்து பேசினான். கௌரங்கதேவருக்கு இன்னும் சில பெயர்கள் உண்டு. அவரை கிருஷ்ண சைதன்யர் என்றும், நிமாயி என்றும் அழைப்பதுண்டு.

அவர்கள் அப்படிப் பேசிய பொழுது கேசவ சந்திரசேனர் புன்னகை பூத்தவரா

கப் பரமஹம்ஸதேவரைச் சுட்டிக் காட்டினார். "நீங்கள் என்னை கௌரங்கதேவரின் அவதாரம் என்று சொன்னால் இவரை என்னென்று சொல்லப் போகிறீர்கள்?" என்று அவர் கேட்டார். மற்றவர்கள் பேச்செடுப்பதற்குப் பரமஹம்ஸர் இடம் தரவில்லை. அவர் தாமே முந்திக்கொண்டு பேச ஆரம்பித்தார்: "ஏன், நான் உமது அடியார்களுக்கு அடியேன். உமது பாத தூளியில் படிந்துள்ள ஒரு சிறு தூளி ஆவேன் நான்." பேர் புகழில் சிறிது இச்சை வைத்திருந்தவராக இருந்தார் கேசவர்.

அமிர்தரையும், திரிலோக நாதரையும் பார்த்துப் பரமஹம்ஸர் மேலும் பகர்ந்தார்: "நரேந்திரனும், ராக்காலும் நித்திய சித்தர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பிறப்பெடுக்கும் பொழுதெல்லாம் கடவுளிடத்துப் பக்தி கொண்டிருக்கிறார்கள். சாதாரண ஜீவன் ஒருவன் நெடுங்காலம் கடுந்தவம் புரிந்து பக்தியை ஒரு சிறிதளவு பெறுகின்றான். ஆனால் இச் சிறுவர்களோ பிறந்தது முதற்கொண்டு பக்தியே வடிவெடுத்தவர்களாக இருக்கிறார்கள். சிவலிங்கங்களுள் சுயம்பு லிங்கம் என்றும், பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கம் என்றும் இரண்டுவிதமானவைகள் உண்டு. தாமாகவே பூமியில் தோன்றியிருப்பவைகள் சுயம்புலிங்கம் எனப்படுகின்றன. இச் சிறுவர்கள் சுயம்புலிங்கம் போன்றவர்கள்.

"நித்திய சித்தர்கள் ஒரு தனி கோஷ்டியினர் ஆகின்றனர். சாதாரண உலக மக்கள் ஆத்மசாதனங்கள் பயின்று கடவுள் பக்தியைப் பெறுகின்றனர். அதே வேளையில் அவர்கள் காமத்துக்கும் பொருளாசைக்கும் உட்பட்டவர்களாகிறார்கள். இத்தகைய மாந்தரை வீட்டில் வசிக்கும் ஈக்களோடு ஒப்பிடலாம். இந்த ஈக்கள் புஷ்பத்தின்மீதும், நல்ல பட்சணங்கள்மீதும் உட்காருவது போன்று அழுக்கின் மீதும் அமர்கின்றன. ஆனால் நித்திய சித்தர்களோ தேன் ஈ போன்றவர்கள். தேன் ஈ புஷ்பத்தின் மீதும், தனது அடையின் மீதும் மட்டும் உட்காரும். வேறு எங்கும் அவைகள் அமரமாட்டா. பரமானந்தம்என்னும் அமிர்தத்தையே நித்திய சித்தர்கள் அருந்துகிறார்கள். உலக இன்பங்களை அவர்கள் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை.

"படாத பாடுபட்டு உலக மக்கள் பெறுகிற சாதாரண தெய்வபக்தி போன்றதன்று நித்திய சித்தர்கள் கொண்டிருக்கிற பக்தி. அவர்கள் படைத்திருக்கும் பக்தி மிகத் தீவிரமானது. கடவுளை அறவே பற்றிப்பிடிக்கும் பேரியல்பு அவர்களுடைய பக்தியில் உண்டு. 'பக்தி வலையில் படுவோன் காண்க' என்னும் கோட்பாட்டை நித்திய சித்தர்களுடைய பக்திக்கு உரியதாக்கலாம். பூஜாவிதிகளுடனும், சடங்குகளுடனும் கூடிய பக்தி ஒன்று உண்டு. சாஸ்திரங்களில் சொல்லி வைத்திருக்கிறபடி பூஜை பண்ணுதல், ஜபம் செய்தல் முதலியவைகளை சாதாரண மக்கள் செய்து வருகின்றனர். வயலிலே வளைந்து வளைந்து போகிற வரப்பின்மீது நடப்பதற்கு ஒப்பாகிறது உலகத்தவருடைய பக்தி. அல்லது வளைந்து வளைந்து ஓடுகிற நதியிலே படகு ஒன்றையும், வளைந்து வளைந்து செலுத்தி அண்மையிலிருக்கும் ஒருகிராமத்துக்குப் போவதற்கு ஒப்பாகிறது சாதாரண பக்தி. ஆனால் வயல் அறுவடை செய்திருக்கிற பொழுது வரப்பின் மீது வளைந்து வளைந்து போக வேண்டிய அவசியமில்லை. நேரே வயலுக்குள் நடந்து செல்லலாம். மாரி காலத்தில் எங்கும் நீர்ப் பெருக்கெடுத்திருக்கிற பொழுது பட்கை நதியினுள் செலுத்த வேண்டிய அவசியமில்லை. தரையெங்கும் நிறைந்திருக்கிற நீரிலே குறித்த இடத்தை நோக்கிப் படகை நேராகச் செலுத்தலாம். அதுபோன்றது நித்திய சித்தர்கள் படைத்துள்ள பக்தி. சாஸ்திரங்களில் சொல்லி



வைத்திருக்கிற பூஜா விதிகளையும், கிரியா விசேஷங்களையும் பேரன்பு படைத்திருக்கிற சித்த புருஷர்கள் கையாள வேண்டிய அவசியமில்லை. அவர்களுடைய பக்தியையே ராகபக்தி என்று பகரலாம். ஈசுவரானுபூதி பெற வேண்டுமானால் எல்லையிலடங்காத உள்ளக்கசிவும் அருள்தாகமும் நெக்கு நெக்குருகிப் பெறுகிற பக்தியும் ஆத்மசாதகன் படைத்திருக்க வேண்டும்."

இப்பொழுது அமிர்தர் கேள்வி ஒன்று கேட்டார்: "ஐயனே சமாதி நிலையில் தாங்கள் பெறும் அனுபவம்தான் என்ன?"

பரமஹம்ஸர்: "புழு ஒன்று குளவியையே நினைந்திருந்து தானே குளவி ஆகிற நியாயத்தைப்பற்றி நீ கேள்விப்பட்டிருக்கலாம். அதே போன்று பரம்பொருளையே நினைந்து பக்தன் பரம்பொருள்மயம் ஆகிவிடுகிறான். நீரினுள்ளே விடப்பட்ட மீன் எப்படி இன்புற்று நீந்தித் திரிகிறதோ அப்படி நான் சமாதியில் பேரானந்தத்தில் திளைத்திருக்கிறேன். நீர் நிறைந்துள்ள ஒரு சிறிய பாண்டத்திலிருக்கும் மீன் தடாகத்தினுள்ளே எடுத்து விடப்பட்டால் எங்ஙனம் மகிழ்வுற்றிருக்குமோ அங்ஙனம் நான் சமாதியில், நிஜ சொரூபத்திலே பேரானந்தமுற்றிருக்கிறேன்."

அமிர்தர் மேலும் வினவினார்: "சமாதி நிலையில் தங்களுக்குச் சிறிதளவாவது அகங்காரம் எஞ்சியிருப்பதில்லையா?"

பரமஹம்ஸர்: "ஆம். மிக இலேசான அகங்காரம் கொஞ்சம் எஞ்சியிருக்கிறது. சிறிய தங்கக்கட்டி ஒன்றை எடுத்து உரைகல்லின்மீது நாம் எவ்வளவுதான் தேய்த்துக்கொண்டு போனாலும் அந்தத் தங்கக் கட்டியில் மெல்லிய பகுதி ஒன்று எஞ்சியிருக்கும். சமாதி நிலையிலிருக்கிற அகங்காரம் அத்தகையது. மற்றொரு உபமானத்தைக் கொண்டும் அதை விளக்கலாம். பெருந்தீ ஒன்று எரிந்து கொண்டிருக்கிறதென்று வைத்துக்கொள். அதினின்று பொறிகள் பறந்து வருகின்றன. அப் பொறிகளில் ஒன்றுக்கு ஒப்பானது சமாதி நிலையிலிருக்கிற அகங்காரம். சமாதி நிலையில் வெளியுலகத்தைப் பற்றிய உணர்வு முற்றிலும் அகன்று போய்விடுகிறது. ஆனால் இறைவனுடைய திருவருள் என் உள்ளத்தின் உள்ளே மெல்லிய அகங்காரம் ஒன்றைப் பிடித்து வைத்திருக்கிறது. அத்தகைய அகங்காரம் சிறிது இருந்தால்தான் இறைவனிடத்திருந்து வருகிற பேரானந்தத்தை ஜீவாத்மன் அனுபவிக்க முடியும். அகங்காரம் அடியோடு போய் விட்டால் பேரானந்தம் என்பதும் அதை அனுபவிக்கின்ற ஆத்மா என்பதும் ஆகிய பேதம் இல்லாது போய்விடுகிறது. அந்த அபேத நிலையில் அனுபவிப்பவன், அனுபவிக்கப் படுகிற ஆனந்தம் என்னும் வேற்றுமையில்லாது போய்விடுகிறது. நான், நீ என்கிற வேற்றுமை இருக்கிறபொழுதுதான் நாம் ஒருவரோடு ஒருவர் பேசுதலிலிருந்து வருகிற இன்பத்தைப் பெறுகிறோம்.

"வேறு சிலவேளைகளில் மிக நுண்ணியதாயிருக்கிற அகங்காரத்தையும் இறைவன் அகற்றிவிடுகிறார். அப்பொழுது அமைவதை ஜடசமாதி என்றோ, நிர்விகல்ப சமாதி என்றோ நவிலலாம். அது சொல்லிலடங்காதது.

"உப்புப்பொம்மை ஒன்றுகடலினுள்ளே வேண்டியவாறெல்லாம் நீராடவும், கடலின் ஆழத்தை மூழ்கிப் பார்த்துக் கண்டு பிடிக்கவும் தீர்மானம் செய்து அதனுள் நுழைந்தது. நீராட ஆட அது தன் வடிவத்தை இழந்தது. ஏற்கனவே நீரிலிருக்கும் உப்போடு உப்பாக அது அருவ நிலையை எட்டிவிட்டது. இனி கடலினுடைய ஆழம் இவ்வளவென்று கரைக்கு வந்து கதைசொல்லுவதற்கு ஆளெங்கே?"

# பக்தி யோகத்தின் இயல்பு

*(சுவாமி விவேகானந்தர் கருத்தைத் தழுவியது)*

*பகவத்கீதையில் பன்னிரண்டாவது அத்தியாயத்தின் முதல் ஏழு சுலோகங்கள் கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளன.*

**अर्जुन उवाच**

**एवं सततयुक्ता ये भक्तास्त्वां पर्युपासते ।**
**ये चाप्यक्षरमव्यक्तं तेषां के योगवित्तमाः ॥**

அர்ஜுன உவாச

ஏவம் ஸததயுக்தா யே பக்தாஸ்த்வாம் பர்யுபாஸதே
யே சாப்யக்ஷரமவ்யக்தம தேஷாம்கே யோகவித்தமா:

அர்ஜுனன் சொன்னது

இவ்வாறு யாண்டும் யோகத்தில் உறுதிப்பாடுடன் உம்மை உபாசிக்கும் பக்தர்கள், மற்று நிர்க்குண பிரம்மத்தை உபாசிப்பவர்கள் ஆகிய இவர்களுள் யோகத்தை நன்கு அறிந்தவர்கள் யார்? 1

**श्री भगवानुवाच**

**मय्यावेश्य मनो ये मां नित्ययुक्ता उपासते ।**
**श्रद्धया परयोपेतास्ते मे युक्ततमा मताः ॥**

ஸ்ரீ பகவானுவாச

மய்யாவேச்ய மனோ யே மாம் நித்யயுக்தா உபாஸதே
ச்ரத்தயா பரயோபேதாஸ்தே மே யுக்ததமா மதா:

ஸ்ரீ பகவான் சொன்னது

என்னிடத்து மனதை வைத்து யோகத்தில் நிலைத்தவராய், பெருஞ் சிரத்தையுடையவராய் யார் என்னை உபாசிக்கிறார்களோ அவர்கள் யோகத்தில் மேம்பட்டவர்கள் என்பது என் கருத்து. 2

**ये त्वक्षरमनिर्देश्यमव्यक्तं पर्युपासते ।**
**सर्वत्रगमचिन्त्यं च कूटस्थमचलं ध्रुवम् ॥**
**संनियम्येन्द्रियग्रामं सर्वत्र समबुद्धयः ।**
**ते प्राप्नुवन्ति मामेव सर्वभूतहिते रताः ॥**

யே த்வக்ஷரமநிர்தேச்யமவ்யக்தம் பர்யுபாஸதே
ஸர்வத்ரகமசிந்த்யம் ச கூடஸ்தமசலம் த்ருவம்
ஸந்நியம்யேந்த்ரியக்ராமம் ஸர்வத்ர ஸமபுத்தய:
தே ப்ராப்னுவந்தி மாமேவ ஸர்வபூதஹிதே ரதா:

ஆனால் யார் எங்கும் ஸமபுத்தியுள்ளவர்களாய், இந்திரியக் கூட்டத்தை நன்கு அடக்கி, சொல்லுக்கடங்காததும், கட்புலனாகாததும், மனதுக்கெட்டாததும், எங்கும் நிறைந்ததும், மாறுததும், நகராததும், நிலைத்ததும், அழியாததும் ஆகிய பிரம்மத்தை நன்கு உபாசிக்கிறார்களோ, எல்லா உயிர்களின் நன்மையில் ஈடுபட்டுள்ள அவர்கள் என்னையே வந்தடைகிறார்கள். 3-4

**क्लेशोऽधिकतरस्तेषामव्यक्तासक्तचेतसाम् ।**
**अव्यक्ता हि गतिर्दुःखं देहवद्भिरवाप्यते ॥**

க்லேசோऽதிகதரஸ்தேஷாமவ்யக்தாஸக்தசேதஸாம்
அவ்யக்தா ஹி கதிர்து:கம்தேஹவத்பிரவாப்யதே

நிர்க்குணப் பிரம்மத்தில் சித்தம் வைப்பவர்க்குப் பிரயாசை மிக அதிகம். ஏனென்றால் உடலுணர்ச்சியுடையார்க்கு நிர்க்குணப் பிரம்மநிஷ்டையடைதல் அரிதாம். 5

**ये तु सर्वाणि कर्माणि मयि संन्यस्य मत्पराः ।**
**अनन्येनैव योगेन मां ध्यायन्त उपासते ॥**
**तेषामहं समुद्धर्ता मृत्युसंसारसागरात् ।**
**भवामि नचिरात्पार्थ मय्यावेशितचेतसाम् ॥**

யே து ஸர்வாணி கர்மாணி மயி ஸந்ந்யஸ்ய மத்பரா:
அனன்யேனைவ யோகேனமாம்த்யாயந்த உபாஸதே
தேஷாமஹம் ஸமுத்தர்தா ம்ருத்யுஸம்ஸாரஸாகராத்
பவாமி நசிராத்பார்தத மய்யாவேசிதசேதஸாம்

ஆனால் யார் வினையனைத்தையும் எனக்கு அர்ப்பித்து, என்னையே பரகதியாகக்கொண்டு, சிதைவுறு யோகத்தால் என்னைத் தியானித்து வணங்குகிறார்களோ, சித்தத்தை என்பால் வைத்த அவர்களை, பார்த்தா, நான் மரண ஸம்ஸார ஸாகரத்தினின்று விரைவில் கரையேற்றுகிறேன். 6–7

*பகவத் கீதையிலே இந்த அத்தியாயத்துக்கு பக்தியோகம் என்னும் பெயர் தரப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் ஞானயோகம், பக்தியோகம் ஆகிய இரண்டும் ஈண்டு விளக்கப்படுகின்றன. ஞானயோகம் தன்னளவில் மகத்தானதே. முடிவான தத்துவங்கள் அதில் அடங்கியிருக்கின்றன. மெய்ப்பொருளை விசாரித்து அறிந்துகொள்ளுதற்கு அது நன்கு பயன்படுகிறது. இனி, மனிதனைப் பற்றிய அதிசயம் ஒன்று உளது. தத்துவ ஞானத்தில்*



*புகட்டப் பெற்றுள்ள கோட்பாடுகளையெல்லாம் தான் நிச்சயமாகவே அனுஷ்டிக்கமுடியும் என்று மக்களுள் கிட்டத்தட்ட ஒவ்வொருவனும் தன்னைப்பற்றிப் பெருமிதமாக மதிப்புப் போட்டுக்கொள்கிறான். ஆனால் அக்கோட்பாடுகளை வாழ்க்கையில் அனுஷ்டித்துப் பார்த்தால்தான் தத்துவ ஞானத்துக்கு ஒப்ப வாழ்க்கையை நடாத்துவது மிகக்கடினமானது என்பது விளங்கும். சாஸ்திரம் சொல்லியிருப்பது போன்று நம் வாழ்க்கையைக் கொண்டு செலுத்துகிறோம் என்று எண்ணிக் கொண்டு நாம் அதில் பிரவேசிக்கலாம். ஆனால் பலதடவைகளில் அவ்வாழ்க்கையின் உட்பொருளை அறிந்து கொள்ளாது நம்மைப் பேராபத்தில் விட்டுவிடுகிறோம். இவ்வுலகத்தை இருதரமாகப் பிரித்து விடலாம். தெய்வ சம்பத்து வாய்ந்தது ஒன்று. அசுர சம்பத்து வாய்ந்தது மற்றொன்று. இவ்விரு பாங்குகளுள் அசுர சம்பத்து வாய்க்கப்பெற்றவர்கள் உடலைப் பேணிப் பாதுகாத்தல் ஒன்றுதான் வாழ்க்கையின் முடிவான குறிக்கோளெனப் பொருள் படுத்துகின்றனர். மற்று தெய்வ சம்பத்து வாய்க்கப் பெற்றவர்களோ ஒரு லக்ஷியத்தின்பொருட்டு உபயோகப் படுத்தும் கருவி என்று உடலைப்பற்றி எண்ணுகின்றனர். ஆத்ம பரிபாகம் அடைவதற்காக உடலைப் பயன்படுத்தவேண்டுமென்பது அவர்களின் கருத்து.*

*சாஸ்திரத்தையோ, பாரமார்த்திக வாழ்க்கையையோ சரியாக அறிந்து கொள்ள மனிதனுக்கு இயலுவதில்லை என்பதற்குச் சான்றுகள் ஏராளமாக இருக்கின்றன. போர்க்களத்திற்கு வந்த அர்ஜுனன் திடீரென்று தனது நோக்கத்தை மாற்றிக் கொண்டான். போரினின்று பின் வாங்குவதுதான் நல்லறம் என்று அவன் நினைத்தான். அவனுடைய மனப்பான்மையிலிருந்த குறையைக் கிருஷ்ண பகவான் விளக்கிக் காட்டினார். பிறகு நல்வழியையும் அவர் புகட்டலானார். அரக்கரின் இயல்பு படைத்தவர்களும், பேய்த்தன்மை வாய்க்கப் பெற்றவர்களும் தங்களுடைய நோக்கம் நிறைவேறுவதற்கேற்ற முறையிலே சாஸ்திரப் பிரமாணங்களை எடுத்துக் காட்டுவார்கள். அப்படிப் பலபேர் துணிந்து செய்தும் வருகின்றனர். நல்ல விவேகத்தை அடிப்படையாகக் கொண்டில்லாததும் குயுக்தியைக் கையாளுவதுமாகிய ஞான மார்க்கமோ கொடியவன் கேடதினுள்ளே விரைந்து செல்லுதற்கு ஆதரவு தருவதுபோன்று தென்படலாம். பின்பு நல்லவன் நன்னெறியிலே செல்லுதற்கு ஊக்கம் தருவது போன்றும் தென்படலாம். மாறுபடுகின்ற இவ் இரண்டு கோட்பாடுகளுக்கு ஏற்ற யுக்திகளையும் அமைத்து வைத்து விடமுடியும். நியாயஸ்தலத்தில் இரண்டு வழக்கறிஞர்கள் தங்களுடைய அறிவுத் திறமையைக் கையாளுதற்கு ஒப்பானது அது. நல்லவனைக் குற்றவாளியாக எடுத்து நிரூபிப்பதற்கும் குற்றவாளியை நல்லவன் என்று எடுத்துக் காட்டுவதற்கும் அதே அறிவுத்திறன் பயன்படுகிறது. ஞானயோகம் என்கின்ற மார்க்கத்திலும் இத்தகைய ஆபத்துக்கு இடமிருக்கிறது. கொடியவனுடைய செயலில் கொடுமையொன்றும் இல்லையென்றே யுக்தியானது நிரூபித்து விடும். ஆனால் பக்தியோகத்தில் இத்தகைய ஆபத்துக்கு இடமில்லை. பக்தி நெறி இயல்பாக அமைந்துள்ளது. அதன்கண் இனிமையும், அமைதியும் திகழ்கின்றன. ஞானயோகி ஒருவன் தன்னுடைய அறிவுத் திறமையினால் மிக உயர்ந்த நிலைக்குப்போக முடியும். அவ்வுயர் நிலையினின்று அவன் வழுவுவானாகில் அவனுடைய வீழ்ச்சியும் மிகப் பெரியதாகும். ஆனால் பக்தன் ஒருவனோ தன்னைப் பணிவுடையவனாக்குகிறான். உயர்நிலை எய்துதல் பக்தியின் நோக்கமல்ல. அடியார்கள் அனைவர்க்கும் தன்னை அடியவனாக்குவது பக்*

தனுடைய போக்கு. நெறி வழுவுதல் என்னும் ஆபத்து அவனுக்கு இல்லை. இனி மற்றொரு விஷயம். பக்தியோகம், ஞானயோகம், கர்மயோகம், ராஜயோகம் ஆகிய எந்த மார்க்கத்தில் வேண்டுமென்றாலும் ஆத்ம சாதகன் ஒருவன் செல்லலாம். ஜீவாத்மனைப் பிணைத்திருக்கிற தளைகள் நீங்கும் வரையில் அவனுக்கு முக்தி இல்லை.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

என்பது மறைமொழி. பிறவிக்கு ஏதுவாய் இருப்பதனால் நல்வினை தீவினை ஆகிய இரண்டும் அக்ஞான இருளோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. இறைவனிடத்து அன்புகொள்ளுதலின் மூலம் அவ் இருவினைகளின் வாயிலாக வரும் கட்டுஅவிழ்க்கப்படுகிறது. பகவானுடைய அனுக்கிரகத்தை அடையப்பெற்ற கோபியர்களுள் ஒருத்தி அடைந்தபேறு விஷ்ணுபுராணத்தில் இங்ஙனம் விளக்கப்படுகிறது.

तच्चिन्ताविपुलाह्लादक्षीणपुण्यचया तथा ।
तदप्राप्तिमहद्दुःख विलीनाशेषपातका ॥
...निरुच्छ्वासतया मुक्तिं गतान्या गोपकन्यका ॥

தச்சின்தாவிபுலாஹ்லாதக்ஷீணபுண்யசயா ததா
ததப்ராப்திமஹத் துஃக விலீநாசேஷபாதகா
.... நிருச்ச்வாஸதயா முக்திம் கதான்யா கோபகன்யகா

"பகவானைப்பற்றி ஆழ்ந்து சிந்தனைபண்ணுவதனால் உண்டாகும் பேரானந்தத்தின் வாயிலாக அவளுடைய புண்ணியச்செயல்களின் பந்தபாசங்களெல்லாம் அகற்றப்படுகின்றன. பகவானை அடையப்பெறுமையினால் அவளுக்கு உண்டாகின்ற அருள்தாகத்தின் சோகத்தால் அவளிடத்துப் பாதகமாய் அமைந்துள்ள வினைப் பயன்கள் எல்லாம் நீக்கப்படுகின்றன. கோபகன்னிகை அங்ஙனம் முக்தியடைந்துவிடுகிறாள்."

பக்தியோகத்தின் இரகசியம் இப்பொழுது வெளியாகிறது. மனிதனுடைய நெஞ்சத்திலே விதவிதமான உணர்வுகளும், வேகங்களும், உள்ளக்கசிவுகளும் புதைந்து கிடக்கின்றன. அவைகளுள் பல நலன் தரக்கூடியவைகளாயிருக்கின்றன. வேறு பல கேடு விளைவிக்கக் கூடியவைகளாகவும் இருக்கின்றன. கேடு விளைவிக்கக்கூடியவைகள் போன்று தென்படுபவைகளும் பக்தி சாதனத்துக்கு நன்கு பயன்படுகின்றன. அந்த இயல்புகளை யெல்லாம் எடுத்துக் கையாளுதலில்தான் பக்தியோகத்தின் சிறப்புவெளியாகிறது. மற்ற யோகசாதனங்களில் புகுங்கால் மனிதன் தன் இயலிலுள்ள கேடுகளை அகற்றவும் நலன்களை வளர்க்கவும் செய்யவேண்டும். ஆனால் எதைத் தவிர்ப்பது எதைத்தழுவுவது என்னும்கேள்வி பக்தியோகத்தில்எழுவதில்லை. எத்தனை விதமான இயல்புகள் படைத்தவனாக மனிதன் இருக்கிறானோ அத்தனை விதமான இயல்புகளையும் அவன் கடவுளிடத்துப் பக்தி பண்ணுதல் பொருட்டுப் பயன்படுத்திக்கொள்ளலாம். வாய்க்கால் வழியே ஓடும் நீரை மடைமாற்றிப் புதிய வழியில் ஓடச்செய்வதுபோன்று கீழான விஷயங்களில் ஓடுகிற மனதை மேலான விஷயங்களில் ஓடச்செய்யவேண்டும். நாடப்படுகிற பொருள் எவ்வளவு மேலானதோ அவ்வளவு மேலானதாக மனிதனுடைய இயல்புகளும் தாமாக மாறிவிடுகின்றன. நாடுகின்ற குறியின்கண் ஒப்புயர்வு அற்ற மேன்மைகள் யாவும் மிளிருமாகில் அதை நாடுகிற மனதுக்கும் அந்த மேன்மையெல்லாம் வந்துவிடுகிறது. குறிகளனைத்திலும் கடவுள் ஒருவரே ஒப்புயர்வு அற்ற குறி ஆகின்றார். கடவுள் ஒருவர் நீங்கலாக ஏனைய லக்ஷியங்கள்படிப்படியாகக் கீழ்மையடைந்து விடுகின்றன. மானுட ஜீவிதத்தில் இன்பங்களும் துன்பங்களும் திரும்பத்திரும்ப தோற்றத்துக்கு வரக்கூடியவைகளாயிருக்கின்றன என்பதை நம் அனுபவத்தில் நாம் காண்கிறோம். தனக்குச் செல்வம் வந்துசேரவில்லையே யென்று மானுடன் ஒருவன்



...ான்? ராமன் மாயை வடிவில் தோன்றிய ...இந்திரனும் அல்லன், யமனும் அல்லன். ...ல்லா வல்லமையும் பெற்ற இறைவனே, ...ன்றுமழியாப் பரம்பொருளே, தொடக்...மும் இடையும் இறுதியும் அற்ற கட...ளே, இருளிற்கப்பாலுள்ள பெரும் ...ளியே, பெரியவற்றிற்கும் பெரிய பர...ாத்மனே, திருமாலே ராம வடிவத்தில் ...ானிடனாகத் தோன்றி உலகின் நலனுக்...ாக உன்னை வதைக்க முன்வந்துள்ளார்.

"ராமருடன் பகை வேண்டாம் என்று ...கெஞ்சினேன். ஏற்றாயா? ஸீதையிடம் ...ற்று வேண்டாம் என்று தடை செய்...தேன். மதித்தாயா? அருந்ததி, ரோகிணி, ...பூமிதேவிகளைக் காட்டிலும் சிறப்புற்ற அந்த உத்தமியை, அப் பொறுமைக்களஞ்...சியத்தை, கற்பிற்கு எடுத்துக் காட்டாகத் ...தோன்றிய அம்மங்கையர் திலகத்தைத் ...தொடுவதற்கு எவ்வாறுதான் நீ துணிந்தாயோ! வீரனின் உள்ளத்தில் இவ் இழிவான எண்ணம் ஏன் தோன்றியதோ! ...நேர்மையைத் துறந்து, மாயையை ஏற்றுக் ...கபடமான முறையில் களவாடி வந்தாயே, ...நாணம் இல்லையா? அவ்வுத்தமியின் ஒளி உன்னை மாத்திரமா எரித்தது! உன் மைந்தரை வதைத்தது. உறவினரை அழித்தது. எங்களைப் பாழாக்கியது. லங்கை ...நகரையே உருக்குலையச் செய்தது.

इन्द्रियाणिपुराजित्वा, जितंत्रिभुवनं त्वया ।
स्मरद्भिरिव तद्वैरं,इन्द्रियैरेवनिर्जितः ॥

"நாதா! முன்னர் நீ புலன்களை வென்றாய். அவற்றை உன் வசமாக்கினாய். தவம் புரிந்தாய். மூவுலக காட்சியைப் பெற்றாய். புலன்கள் அந்தப் பகைமையை மறவாதிருந்தனபோலும். உன்னைத் தம் வசப்படுத்தின. அழித்தன. வஞ்சம் தீர்த்தன.

"சீதையைத் தூக்கிவந்த அன்றே நீ எரிந்து மாளாமல் இதுவரை உயிர் வாழ்ந்திருந்ததே ஓர் விந்தையாக உளது.

अवश्यमेवलभते, फलं पापस्यकर्मणः ।
घोरं पर्यागते काले कर्ता नास्त्यत्रसंशयः ॥

13

"அவனவன் செய்த தீவினைப் பயனைத் தக்க நேரம் வந்தவுடன் அவனவன் பெற்றேயாகவேண்டும். இதில் ஐயமே இல்லை.

शुभकृच्छुभमाप्नोति पापकृत्पापमश्नुते ।
विभीषणस्सुखंप्राप्तः त्वं प्राप्तः पापमीदृशम् ॥

"நன்மை செய்தவன் நலனைப் பெறுவான். தீமை செய்தவன் தீதைப் பெறுவான். விபீஷணன் நற்செயல் புரிந்தான். இன்புறுகிறான். நீ தீய செயல் புரிந்தாய். இந்நிலையில் உள்ளாய்.

"உன் அந்தப்புரத்தில் ஸீதையைக் காட்டிலும் அழகிற் சிறப்புற்றவர் இல்லையா? ஏன் உன் கண்கட்கு அது தெரியாது போயிற்று? வம்சம், அழகு, அன்பு இவற்றில் ஸீதை எனக்கு நிகராவாளா? ஸீதை ராமருடன் மகிழ்ச்சியுடன் வாழப்போகிறாள். நான் மாத்திரம் ஏன் வருந்தவேண்டும்? அரசருடைய செல்வத்தின், வாழ்வின் நிலையே இதுதான் போலும்! என் தந்தை அசுரர் வேந்தன், என்கணவன் அரக்கர் வேந்தன், என்புதல்வன் இந்திரனையும் வென்றவீரன், என்று இறுமாப்புற்றிருந்தேன். இறுதியில் எனக்கு மனிதரிடமிருந்து அச்சம் ஏற்பட்டது.

"நாதா! யமனையே அஞ்சி ஓடச் செய்தாய். திமிர் கொண்டவரை யெல்லாம் அடக்கினாய். எட்டு லோகபாலரையும் பணியச் செய்தாய். பகைவர்களை அழித்தாய். அவர் மனைவிகளைக் கதறச் செய்தாய். முனிவர்களை நடுக்கமுறச் செய்தாய். விந்தைச் செயல்கள் பல புரிந்தாய். லங்கை நகரில் ஆட்சி புரிந்தாய். எங்களை இன்ப வாழ்வு வாழச்செய்தாய். அந்த நிகரற்ற வீரனை நீ தரையில் இவ்வாறு கிடக்கலாமா! கும்பகர்ணன், மாரீசன், விபீஷணன், என் தந்தை முதலியவர் கூறிய நல்லுரைகளைப் புறக்கணித்தாய். இன்று மடிந்தாய். எத்துணை அரசரைக் கொன்று அவர்கள் மனைவிமாரைக் கதறச்செய்தாயோ! அவர்களுடைய நிலை உன்மனைவி

யான எனக்கு இன்று வந்து சேர்ந்தது. அந்தோ! உன்னை நான் ஏன் இகழவேண்டும்? நீ செய்த புண்ணிய பாபங்கள் உன்னைப் பின்தொடரப் போகின்றன. பெண்ணாகப் பிறந்து துன்பமுறும் நான் என் வாழ்க்கையை எண்ணியே வருந்துகிறேன்" என்று கதறியவாறே மந்தோதரி மயக்கமுற்றாள். பணிப்பெண்கள் ஓடோடிவந்தனர். அவளுக்குப் பணிபுரிந்து மயக்கம் தெளியச் செய்தனர்.

இதற்கிடையில் ராமர் விபீஷணனை அழைத்தார். "விபீஷணா! அந்தப்புர மங்கைகளைத் திரும்பச்செய். ராவணனுடைய ஈமச்சடங்குகளை முறைப்படி செய்" என்று ஏவினார்.

விபீஷணன் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்தான். அறப்பாதையை ஆராய்ந்தான். ராமருடைய உள்ளப் போக்கின் நிலையை அறிய விரும்பினான். "தலைவா, துயரத்தால் வருந்தினேன். நான் ஆராய்ந்து பார்த்தேன். மனப் போக்கை மாற்றிக் கொண்டேன். ராவணன் என் அண்ணன்தான். ஆனால் அறப்பாதையை அறவே ஒதுக்கியவன். கொடிய நெஞ்சினன். கருணையற்றவன். பொய்யன். பிறர் மனைவிகளைத் தீண்டியவன். பலருக்குத் துன்பம் விளைவித்தவன். எனக்கு எதிரியாக வாழ்ந்தவன். ஆதலால் நான் சடங்கு செய்ய இயலாத நிலையில் உள்ளேன். இவனை எவ்வாறு நான் மதித்து வணங்க முடியும்? மக்கள் என்னைக் கல்நெஞ்சன் என்று தூற்றக்கூடும். அவர்களே ராவணனின் குறைகளை ஆராய்வார்களேயாகில் என்னைப் புகழ்வார்கள்" என்று பகர்ந்தான்.

அறப்பாதையை நன்கு பாகுபடுத்தி அறிந்திருந்த ராமர் விபீஷணனின்சொல்லினால் மகிழ்வுற்றார். அறமுறையைக் கூறலுற்றார். 'விபீஷணா! உன் தூய்மையும் பெருமையும் என் வெற்றிக்கு உதவின. நான் நேர்மை முறையில் சென்றாக வேண்டும். என் சொல்லை நீ ஏற்கவும் வேண்டும். ராவணன் அதர்மம், பொய் எனும் இரு குறைகள் நிறைந்தவன்தான். ஆயினும் வீரம், வலிமை, உறுதி, ஒளி ஆகிய நற்பண்புகள் நிரம்பியவன். தோல்வியையறியாதவன். விரிந்த உள்ளமுடையவன். பகைமையை என்றென்றும் கொண்டாடுவது முறையன்று. சாவுதான் அதன் எல்லை. இனியும் பகைமையைப் பாராட்டுவது தகாது. நான் கூறுகையில் நீ ஏன் கலங்கவேண்டும். முறைப்படி, உண்மைப் பற்றுடன், மதிப்புடன், நீ சடங்குகளைச் செய்யவேண்டும். மக்கள் உன்னை வாழ்த்துவர்' என்றார்.

அதையே எதிர்பார்த்தான் விபீஷணன். மகிழ்வுற்றான். ராவணன் ஒழுங்காக அக்னிஹோத்திரம் செய்தவன். அந்தத் தீயை முறைப்படி எடுத்து வரச் செய்தான். மிகுதியான சீருடன் வேதமுறையை முற்றிலும் பின்பற்றித் தானே ஈமச்சடங்குகளைச் செய்து முடித்தான். அந்தப்புர மங்கைகட்கு ஆறுதலுரைத்தான். பின்னர் ராமரிடம் வந்து பணிவுடன் அமர்ந்தான். செயலாற்றி வெற்றி பெற்றுக் கடமையை நிறைவேற்றிய ராமரும் மகிழ்வுற்றார். ராவணவதத்தைக் காண்பதற்கென்று வானிற்குழுமியிருந்த தேவர், கந்தர்வர், அசுரர் முதலியவர் தம் தம் விமானங்களில் ஏறியவர்களாய்த் திரும்பலுற்றனர். ராமருடைய வீரத்தையும், சுக்கிரீவன் ஹனுமான் பராக்கிரமத்தையும், லக்ஷ்மணன் ராமரிடம் கொண்டிருந்த அன்பையும், அவனுடைய போர்த்திறனையும், ராவணன் புரிந்த கடும் போரையும் புகழ்ந்தவாறு சென்றனர்.

ராமரும் மாதலியைத் தக்க முறையில் புகழ்ந்தார். தன் தலைவனிடம் திரும்புவதற்கு அனுமதியும் அளித்தார். தீயைப் போலத் திகழும் அந்தத் தேரில் அமர்ந்து மாதலி ராமரிடம் தெரிவித்த பின்னர் வானிற்கேகினான். பின்னர் ராமர் சுக்கிரீ



வனிடம் திரும்பினார். அன்புடன் அவனைத் தழுவினார். அருகில் பணிவே வடிவெடுத்தாற்போல் நின்றுள்ள லக்ஷ்மணனை அழைத்தார்.

पपमेपरमः कामः यदिमं रावणानुजम् ।
लंकायांसौम्यपश्येयं अभिपिक्तं विभीपणम् ॥

'லக்ஷ்மணா! ராவணனுடைய தம்பி விபீஷணனை லங்கையின் தலைவனாகமுடிசூட்டி என் கண்ணால் காணவேண்டும் என்ற ஒரே அவா என் மனதில் மிகுந்துள்ளது. அதை நிறைவேறச்செய்' என்று ஏவினார். உடனே லக்ஷ்மணன் பொற்குடத்தை வானரரிடம் அளித்தான். அவர்களும் கடல் நீரைக் கொண்டுவந்தனர். வேதமுறைப்படி விபீஷணனை லங்கைவேந்தனின் சிம்மாஸனத்தில் அமர்த்தி அபிஷேகம் செய்துவைத்தான் இளையோன். அமைச்சரும் மக்களும் விபீஷணன் ஆட்சி ஏற்றதனால் மகிழ்ந்தனர்.

மக்கள் மலர்களையும், இனிப்புத் தின்பண்டங்களையும், அக்ஷதை (அரிசி)களையும், பொரிகளையும் விபீஷணன் முன்னிலையில் காணிக்கையாக வைத்தனர்.

விபீஷணன் மக்களுக்கு ஆறுதலுரைகளைக் கூறினான். தனக்களித்த காணிக்கைப் பொருள்களை எடுத்துக்கொண்டான். ராமரிடம் வந்தான்; ராமரிடமும் லக்ஷ்மணனிடமும் அவற்றை அளித்தான்; பணிவுடன் நின்றான். ராமரும் விபீஷணன் உள்ளம் மகிழ்வுறுவதற்காகவென்று அவற்றைத்தாம் ஏற்றுக்கொண்டதாகக் கூறி அருளினார்.

### துளளி நோக்கியவிதம்

எதிரில் வைக்கப்பட்ட தலைகளைக் கண்ட மந்தோதரி மயங்கித் தரையிற் சாய்ந்தாள். மற்ற மங்கைகளுடன் ராவணனுடைய உடல் இருந்த இடத்திற்கு ஓடி வந்தாள். எல்லோருடனும் தலைவிரிகோலமாக உடல் உணர்விழந்து புலம்பினாள். "நாதா! உன்னை எண்ணி பூமி நடுக்கமுற்றது. சூரியன், சந்திரன், அக்னி முதலியோர் ஒளி குன்றிப் போயினர். ஆதிசேஷனும், ஆதிகூர்மரும் உன் உடலின் வலிமையைத் தாங்கமுடியாது திணறினர். யமனையும் இந்திரனையும் வென்றாய். ஆயினும் ஸ்ரீ ராமபிரானிடம் பகைமை கொண்டாய். அழிந்தாய். உனக்காக அழுவதற்குக் கூட ஒரு உறவினன் இல்லாது போயினனே! ராமர் மனிதரல்லர் என்று கூறினேன். காலனுக்கு வசமான உன் செவிகளில் அது ஏறவில்லை. பிரம்மரும் சிவபிரானும் வணங்குகின்ற ராமர், பிறரைத் துன்புறுத்துவதையே குறிக்கோளாகக் கொண்ட உனக்கும் ஸாலோக்கியம் (தன் உலகில் வாழ்தல்) என்ற நிலையை அளித்தார். அவ்வருளை வணங்குகிறேன். யோகிகளும் பெற முடியாத நிலையை நீ பெற்றாய்" என்று மந்தோதரி புலம்பினாள். அங்கிருந்த நாரதர் பிரம்மன் சிவபிரான் முதலியவர் மந்தோதரியின் உயர்ந்த மனப்போக்கைப் புகழ்ந்தனர்.

அந்நிலையில் விபீஷணனும் துயருற்றான். பிரபு ஏவவே, இளையோன் விபீஷணனுக்கு ஆறுதல் உரைத்தான். விபீஷணன் ராமரருகில் சென்றான். அன்பைப் பெருக்கும் விழிகளால் ராமர் அவனை நோக்கினார். 'துயரை அகற்று. சடங்குகளைச் செய்' என்று அருளினார். விபீஷணனும் சடங்குகளைச் செய்து முடித்தான். ராமருடைய பெருமையைப் புகழ்ந்தவாறே மங்கையர் அந்தப்புரம் சென்றனர்.

கருணைக்கடல் ராமர் லக்ஷ்மணனை அழைத்தார். "தம்பி! சுக்கிரீவன், அங்கதன், நீலன், முதலியவருடன் லங்கைக்குச் செல். விபீஷணனை சிம்மாதனத்தில் உட்காரச்செய்து பட்டாபிஷேகம் செய். தந்தையின் சொல்லினால் நான் நகரில் நுழைய இயலா நிலையில் உள்ளேன்" என்றார். எல்லோரும் சேர்ந்து சிறப்புடன் விபீஷணனுக்குப் பட்டாபிஷேகத்தைச் செய்தனர். கைகளைக் கூப்பி விபீஷணனுக்கு அஞ்சலியும் செய்தனர்.

## கம்பன் கண்டவிதம்

### வீடணன் வருந்துதல்

இராவண வீழ்ச்சி இராம காவியத்திலே ஒரு பெரும் நிகழ்ச்சியாகும். ஏனெனில் இராம காரியங்களில் முக்கியமானது இதுவேயாகும். அறவோர் வாழ அல்லோர் வீழ அவதரித்த அண்ணல் இராமன் இராவணனை — இராவணத் தன்மையை அழித்துவிட்டான். இது முனிவர்க்கும் தேவர்க்கும் மகிழ்வைத் தருவதோடு வீடணன் போன்ற நல்லோர்க்கும் அமைதியைக் கொடுத்துள்ளது எனலாம். வீடணன் தனது அண்ணன் சாவை முன்னமே அறிந்திருந்தான். எனினும் தன் முன்னே இரத்தத் தொடர்புள்ள அண்ணனுடைய பேருருவம் விழுந்துகிடப்பதைப் பார்த்த பொழுது அவனுடைய துக்கம் கட்டுக்கடங்காததாகிவிட்டது. அண்ணனுடைய உடலின்மேல் மலைபோன்று வீழ்ந்தான். 'கோ' என்று வாய்திறந்து கதறிவிட்டான். அவன் கதறலைக் கண்டு உலகத்து உயிர்களெல்லாம் இரங்கின. தேவரும் முனிவரும் கூட உளம் வருந்தினர்.

இராவணனுடைய ஆற்றலில், அறிவில், பண்பில் என்றுமே குறை கூறியதில்லை வீடணன். அண்ணனிடம் அத்தனை மதிப்பு அவனுக்கு. கடலனைய அவனுடைய பண்பிலே ஒரு துளி நஞ்சு கலந்துவிட்டதே என்றுதான் எண்ணி எண்ணி ஏங்குகிறான் வீடணன்.

> உண்ணுதே உயிருண்ணு(து) ஒருநஞ்சு ;
> சனகியெனும் பெருநஞ்சுன்னை
> கண்ணுலே நோக்கவே போக்கியதே
> உயிர்; நீயும் களப்பட் டாயே.

நஞ்சு ஒருவரைக் கொல்வது அதனை உண்ட பிறகுதான். ஆனால் இராவணனோ நஞ்சின் நோக்கிலேயே களப்பட்டான் என்று கற்புத் தெய்வத்தின் வலிமையைக் கூறி வருந்துகிறான் வீடணன். அவனுடைய உள்ளத்தில் இராவணனுடைய சிறப்புக்களெல்லாம் படலம் படலமாகத் தோன்றுகின்றன. இராவணன் சென்ற இடங்களிலெல்லாம் வெற்றியே பெறுபவன். கலைகளையெல்லாம் கற்றுத் தெளிந்தவன். போர்ச் சிறப்பாலும் கலைச் சிறப்பாலும் பெரும் புகழ்படைத்தவன். இவற்றில் பெருவிருப்பம் கொண்ட இராவணன் தன் விருப்பத்தைக் காம நெறியில் செலுத்திய காரணத்தால் இன்று நிலத்திலே குப்புறவிழுந்து கிடக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

பல வழிகளிலே தேடிய புகழை ஒரு நொடியிலே இழந்து விட்டான் இராவணன். 'புகழெனின் உயிரும் கொடுக்குவர்' என்பது ஆன்ருேரின் இலக்கணம். ஆனால் இராவணனோ உயிரையும் கொடுத்துப் பழியையும் ஏற்றுக் கொண்டான். இந்நிலைதான் வானத்திலே ஒளி வீசிக்கொண்டிருந்த விண்மீன் ஒளியிழந்து மண்ணில் வீழ்ந்து கிடப்பது போன்றுள்ளது வீடணனுக்கு. இதுவே வீடணனுடைய எல்லையற்ற துக்கத்துக்குக் காரணமாகும்.

### மண்டோதரியின் புலம்பல்

கற்பிற் சிறந்த மங்கையருள் மண்டோதரி தலைசிறந்தவள். மாசுமறுவற்ற உள்ளத்தினள். இவளுடைய கற்புத்தன்மையைப்பற்றிக் கூறும் பொழுது "நினைந்ததும் மறந்ததும் இலாத நெஞ்சினுள்" என்று பாராட்டப்படுகிருள். அவள் இராவணனை நினைப்பதே இல்லை. ஏனெனில் அவனை மறப்பதே இல்லை. மறதி என்ற ஒன்று நிகழ்ந்தாலல்லவா நினைவு என்பது தோன்றும்? இராவணனை எப்போதும் தன் உள்ளத்தில் கொண்டிருக்கும் சீரிய கற்புடைய மங்கை மண்டோதரி. தன் கணவன் பட்டான் என்றவுடன் அழுதிரங்கும் ஆயிரம் அரக்கிமார் தொடர களம் வந்து கணவனைக் கண்டாள். அப்படியே மின்னல் ஒன்று வீழ்ந்தாற்போல இராவணன் மேல் வீழ்ந்து விட்டாள். சிறிது மயக்கம் நீங்கிப் புலம்பலுற்ருள்: "அன்



னேயோ! அன்னேயோ!" என்று அலறினுள். "இராவணனுக்கு முன் நான் சாகாமல் போய் விட்டேனே" என்று கலங்கினுள். இராவணனுடைய உடம்பில் ஏராளமான அம்புகள் துளைத்திருப்பதைக் கண்டாள். அவளுக்கு இராமனுடைய வாளி செய்த செயல் நினைவுக்கு வந்தது. அதனைக் கூறி புலம்பினுள். சிவன் எழுந்தருளியுள்ள கைலாசத்தையே தூக்கிய வலிமை படைத்த பேருடல் இராவணனுடையது. அந்த உடலில் எல்லா இடங்களிலும் துளைகள் இருப்பதைக் கண்டனள். 'இராமனது அம்புகள் இராவணனது உயிரைக் கவரமட்டும் அவனுடைய உடம்பில் பாயவில்லை. அவ்வம்புகளுக்கு வேறு ஏதோ நோக்கமும் இருக்கவேண்டும்' என்று கருதினுள் மண்டோதரி.

இராவணன் சானகியை மனமெனும் சிறையில் முன்பே வைத்துவிட்டான். அங்கு வைப்பதற்குக் காரணமாயிருந்த காதலையும் அழிக்கவேண்டுமென்பதே இராமபாணங்களின் நோக்கம். அதற்காக அவன் உடலெல்லாம் சென்று தேடும் பொழுது துளைத்துள்ளதோ என்று கூறி ஏங்கினள் மண்டோதரி. இறுதியில் அவன் உடலினைத் தழுவிக்கொண்டே உயிரை விட்டனள். இதனைக்கண்ட மங்கையரனைவரும் மண்டோதரியின் கற்புச் சிறப்பைப் போற்றி வாழ்த்தினர்.

### தகனக்கிரியைகள்

வீடணன் அண்ணனுக்கு ஈமக்கிரியைகள் செய்யத்தொடங்கினுன். முறைப்படி அக்கினியைப் பிரதிஷ்டை செய்தான். ஈமவிறகை வேதம்கூறிய முறையில் தொகுத்தான். பின்னர் வருத்தம் நிறைந்த நெஞ்சுடனே அண்ணன் உடலை விறகடுக்கின்மேல் வைத்தான்.

> பின்னர் வீடணன் பேரெழில் தம்முனை
> வன்னி கூவி வரன்முறையான் மறை
> சொன்ன ஈம விதிமுறை யால் தொகுத்து
> இன்ன நெஞ்சினெ(டு) இந்ததை தேற்றினுன்.

அண்ணன் உடலை விறகின்மேல் ஏற்றிய பின்னர் அகில், சந்தனக் கட்டைகளை அடுக்கி மந்திர விதிகளுடன் தீ மூட்டினுன். அப்பொழுது சங்கம் முழங்கிற்று. ஈமக்கடன் செய்துமுடித்தவுடன் வீடணன் இராமன் திருவடிகளை வணங்கி நின்ருன். இராமனும் அவனுக்கு ஆறுதல் கூறி துக்கத்தைப் போக்கினுன்.

### வீடணன் முடிசூட்டிக்கொளல்

போர் தொடங்குமுன்பே, "இலங்கை நின்னதே" என்று இராமன் வீடணனை நோக்கிக் கூறினுன். அதன்படி வீடணனுக்கு முடிசூட்டுமாறும் அதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறும் கூறினன் இராமன். இதனைக்கேட்ட தேவர்கள் விரைந்து அப்பணியை மேற்கொள்வாராயினர். புண்ணிய தீர்த்தங்களைக் கொணர்ந்தனர். கிரீடங்களின் தொகுதியையும் சிறந்த சிங்காசனத்தையும் கொண்டுவந்து சேர்த்தனர். பிரமன் கட்டளைப்படி மயன் யாவரும் வியக்கும் வண்ணம் மண்டபம் ஒன்றை அமைத்தான். பிறகு வீடணனுக்கு வேதமுறைப்படி தூய நீராட்டிப் பிற சடங்குகளும் செய்யப்பட்டன. இறுதியாக இராமன் கட்டளைப்படி இலக்குவன் வீடணனுக்கு இலங்கைப் பேரரசையளித்து முடிசூட்டினுன்.

> மெய்கொள் வேத விதிமுறை விண்ணுளோர்
> தெய்வ நீள்புனல் ஆடல் திருத்திட
> ஐயன் ஆணையி னுல்இளம் கோளரி
> கையி னுல்மகு டம்கவித் தானரோ

முடிசூடிய வீடணன் இராமன் திருவடிகளைப் பணிந்து ஏத்தினுன். இராமன் அவனுக்கு அறநெறிகளை உபதேசித்து நல்லாட்சி நடத்துமாறு ஆசி கூறினுன். தேவரும் சித்தரும் முனிவரும் வாழ்த்த வீடணன் இலங்கை வேந்தன் ஆயினன்.

158845
N59-8-1-3

# சந்தேகம் தெளிதல்

[அன்பர்கள் தமக்குற்ற சந்தேகங்களை ஆசிரியருக்கு எழுதி அனுப்பலாம். கேள்விகளுள் பொதுமக்களுக்குப் பயன்படாதவைகளும் நல்ல கருத்துக்கள் அமையப்பெறாதவைகளும் கவனிக்கப்படமாட்டா.]

**கேள்வி: (282)** *'ஞானயோக விளக்கம்' பக்கம் 98-ல் 'ஒரு சமூகத்தைப் புனிதம் நிறைந்ததாகச் செய்ய விரும்பினால் அதிலுள்ள ஆடவரையும் மகளிரையும் பாலிய விவாகத்தின் மூலம் உடல் வலிவு அற்றவர்களாக்கிவிட வேண்டும்' என்று கண்டுள்ளது. அதனால் சமூகம் இவ்வுலக வாழ்க்கை வசதிகளை அடையமுடியாமல் செயலற்ற நிலைமைக்குச் சென்றுவிடாதா? 'உடல் உறுதி பெற நின்று, உள்ளே ஆண்மை உணர்ச்சி கிளரும்போது, உபநிடதங்களின் பொருளையும் ஆத்மனின் மகிமையையும் முன்னினும் நன்கு அறிவீர்' என்று சுவாமி விவேகானந்தரின் வீரமுரசு தெரிவிக்கிறது. இந்த முரண்பட்ட கருத்துக்களை விளக்குவீர்களாக.* ரா. எ.

ஞானயோக விளக்கத்தில் கொடுத்திருக்கிற கருத்துக்களையெல்லாம் ஒன்றோடொன்று தொகுத்து ஆராய்ச்சி பண்ணினால் முரண்பாடு தென்படாது. ஒவ்வொரு சீரமைப்பிலும் அனுகூலம், பிர்திகூலம் ஆகிய இரண்டு பகுதிகள் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. பொதுமக்களுக்கிடையில் பால்ய விவாகம் ஒழுக்கத்தைப் பாதுகாப்பதற்குப் பயன்படுகிறது. சிறு வயதிலேயே யார் யாருக்கு வாழ்க்கைத் துணை என்னும் எண்ணம் உறுதி பெற்று விட்டால் பிறகு மனது பிறமனை விழைதல் என்னும் தீங்கில் அதிகமாகச் செல்லுதல் இல்லை. ஆனால் காதல் விஷயத்தில் மனம் போகிற போக்கிலெல்லாம் போவதற்கு பால்ய விவாகம் இடம் தருவதில்லை.

பால்ய விவாகம் செய்து கொள்ளுகிறவர்களுக்கு வாழ்க்கையில் மற்றொரு சீரிய லக்ஷியத்தைப் புகட்டுதல் அவசியமாகிறது. அந்த லக்ஷியத்துக்கு எடுத்துக்காட்டாக இருப்பவர்கள் ராமனும் சீதையும். சிறுவயதிலேயே அவர்கள் விவாகம் செய்துகொண்டார்கள், எனினும் சுமார் இருபது வருஷத்துக்கு அவர்கள் பிரம்மசரிய விரதத்தைக் கடைப்பிடித்து வந்தனர். அதன் விளைவாக அவர்களுக்கு மகப்பேறாக வாய்த்த குசன் லவன் ஆகிய இருவரும் உடலுறுதி, மனத் தெளிவு, பராக்கிரமம், வீரியம், நிறைஞானம் ஆகிய மேன்மைகளெல்லாம் வாய்க்கப் பெற்றவர்களாக இருந்தார்கள். உபநிஷதம் சொல்லி வைத்திருக்கிற மேலாம் கோட்பாட்டுக்கு ராமனுடைய குடும்ப வாழ்வே நல்ல எடுத்துக்காட்டு ஆகிறது. மாந்தரனைவர்க்கும் இளமையில் விவாகம் செய்துகொண்ட ஸ்ரீ ராமனும் சீதையும் நல்ல எடுத்துக்காட்டு ஆகின்றனர். ஆனால் இன்றைக்கு இந்திய சமுதாயத்திலுள்ளவர்கள் அப்பெருமக்களைப் பின்பற்றுவதில்லை. பால்ய விவாகம் செய்து கொண்டு இளம் வயதிலேயே மகப்பேறு பெற ஆரம்பித்து விடுகின்றனர். அதன் விளைவாக நாட்டு மக்களில் பெரும்பான்மையோருக்கு உடல் திட்பம் குன்றியிருக்கிறது. ஒழுக்கத்தில் அவர்கள் சிறப்புற்றிருக்கின்றனர். உடல் மென்மையடைந்திருப்பதே அதற்கு ஈடு ஆகிறது. இங்ஙனம் நலமும், கேடும் ஒவ்வொரு வாழ்க்கைத் திட்டத்திலும் வெவ்வேறு விதங்களில் சேர்ந்தே அமைந்து விடுகின்றன. கேடுகளைக் குறைத்து நலன்களை அதிகப்படுத்தும் வாழ்க்கைத் திட்டமே சாலச் சிறந்தது. ஆனால் அது ஸ்ரீ தசரத ராமன் போன்ற யாரோ சிலருக்குத்தான் வாய்க்கிறது. பெரும்பான்மையோர் ஒரு விதத்தில் நலனைப் பெற்றால் மற்றொரு விதத்தில் கேட்டுக்கும் ஆளாகின்றனர். இதைத்தான் உலகெங்கும் நாம் கண்டு வருகிறோம்.



கேட்டைக் குறைத்து நலனைப் பெருக்கும் வாழ்க்கைத் திட்டத்தை அனுஷ்டிப்பவர்களே நல்ல விவேகிகள் ஆகிறார்கள். ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒருசிலராவது நல்ல வாழ்க்கைத்திட்டத்தை நடைமுறையில் கொண்டுவர வேண்டும். அது பாராட்டுதற்குரிய பெரும் செயலாகும்.

**கேள்வி: (283)** *ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் இஷ்டதேவதையான காளிதேவி கோரசொரூபியாக இருக்கிறாள். தீயோரை அழித்து நல்லோரைக் காக்கும் கருணா மூர்த்தியான அன்னைக்கு இக் கோர உருவை ஏன் சாஸ்திரங்களும் அளித்திருக்கின்றன? இராமகிருஷ்ணர் போன்ற மகான்கள் ஏன் இதை ஏற்று வழிபட்டு வந்தார்கள்?* V. M.

ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸர் வழிபட்ட தெய்வம் காளிகாதேவி என்னும் பராசக்தி. அத்தெய்வத்தின் நிஜசொரூபமே சாஸ்திரத்திலும் விளக்கப்படுகிறது; வடிவத்திலும் அமைக்கப் பெற்றிருக்கிறது. அந்த நிஜசொரூபம் என்ன என்பதை ஆராய்வோம். இயற்கைத் தாயே காளிகாதேவி என்னும் பெயர் பெற்றிருக்கிறாள். இயற்கைத் தாயினிடத்து பயங்கரமும், இனிமையும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. உயிர் வகைகளைத் தோற்றுவித்து அவைகளைப் பரிபாலித்து வருவது இயற்கைத்தாயின் இனிய செயல்கள் ஆகின்றன. அப்படித்தோன்றியுள்ள உயிர்வகைகளைச் சின்னஞ் சிறுவயதிலிருந்து விருத்தாப்பியதசை வரையில் வெவ்வேறு காலங்களில் எடுத்து விழுங்குவது அதே இயற்கைத் தாயின் பயங்கரச் செயலாகிறது. அவள்செய்கிற செயல் இத்தகையது என்பதைத்தான் சாஸ்திரம் விளக்குகிறது. இனிமை நிறைந்த இந்த இயற்கைத்தாய் ஏன் இத்தகைய கொடியசெயலைச் செய்யவேண்டும் என்பதுதான் ஈண்டு எழுந்துள்ள கேள்வி. தாயின் இயல்பை உள்ளபடி பகர்ந்துவிடுவதுதான் இக்கேள்விக்கு நாம் கொடுக்கும் விடையாகும்.

காளிகாதேவி அல்லது இயற்கைத்தாய் ஏககாலத்தில் இன்னியல்பே வடிவெடுத்தவளாகவும், பயங்கரமே வடிவெடுத்தவளாகவும் இருக்கிறாள். அந்த இரண்டு விதமான இயல்புகளும் உயிர்களின் முன்னேற்றத்திற்கு முற்றிலும் அவசியமானவைகளாக இருக்கின்றன. முன்னேற்றத்துக்கு இன்பம் உதவுவது போன்று துன்பமும் உதவுகிறது. முன்னேற்றத்துக்கு ஆரோக்கியம் உதவுவது போன்று நோயும் உதவுகிறது. நோய்வாய்ப் படுவதன் மூலம் மக்கள் எத்தனையோ நல்ல பாடங்களைக் கற்றுக் கொள்கின்றனர். துன்பத்துக்கு ஆளாவதன் மூலமாகவும் நல்ல பாடங்கள் எத்தனையையோ மக்கள் கற்றுவருகின்றனர். எனவே பயங்கர சொரூபமாகத் தென்படுகிற காளிகாதேவி அந்தப் பயங்கர சொரூபத்தின் வாயிலாக உயிர்களைப் பண்படுத்தி வருகிறாள். இது இயற்கையைப் பற்றிய உண்மை. இயற்கையின் இயல்பை இருக்கிறபடி ஏற்றுக் கொள்ளுதலே நமது கடமையாகும். அதைத்திருத்தியோ, மாற்றியோ அமைக்க நமக்கு இயலாது. நம்பொருட்டு இயற்கைத் தாய் தன் இயல்பை மாற்றப்போவதில்லை.

ஆனால் நமது இயல்பை நாம் திருத்தியமைத்துக் கொண்டால் அதே இயற்கைத் தாய் நமக்கு நலம் தருபவளாக அமைந்து விடுகிறாள். இதை ஒரு உபமானத்தைக் கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ணரே நன்கு விளக்கியிருக்கிறார். பூனையின் பல் நல்லதா அல்லது கொடியதா என்பது கேள்வி. எலியைக் கேட்டால் அதைவிடக் கொடியது உலகில் ஒன்றுமில்லை என்று பகரும். அதே கேள்வியைப் பூனைக்குட்டியிடம் கேட்டால் அதைவிடப் பக்ஷமானது உலகில் வேறொன்றுமில்லை என்று இயம்பும். பூனையின் பல் போன்றவள் இயற்கைத்தாய். பக்தர்களுக்கு அவள் இன்னியல்பே வடிவெடுத்தவள். மற்றவர்களுக்கு

அவள் கொடூரம் நிறைந்தவளாகத் தென்படுவது இயல்பு. காளிகாதேவியின் சொரூபத்தில் இந்த இரண்டு பகுதிகளும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன என்பதை அறிபவர்கள் அவளைப்பற்றிய உண்மையை அறிபவர்கள் ஆகின்றனர். உண்மையை அறிந்து அதற்கொப்ப ஒழுகுவதன் மூலம் நாம் நலன் அடைய முடியும். அதைத்தான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் செய்தார். நாமும் அங்ஙனம் செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம்.

**கேள்வி: (284)** ***கோவில்களில்பிரதோஷம் கொண்டாடுவது ஏன்? அன்று நந்தியம் பெருமானுக்கு வழிபாடு சிறப்பாக நடப்பது எதற்கு?*** *க. தா.*

ஏகாதசி, பிரதோஷம், மாசிய சிவராத்திரி ஆகியவைகள் ஒன்றன்பின் ஒன்றாக மாதந்தோறும் தொடர்ந்து வருகின்றன. மாதத்தில் சுக்லபட்சம், கிருஷ்ணபட்சம் என்னும் இரண்டு பட்சங்களிருக்கின்றன. ஒருபட்சத்துக்குப் பதினைந்துநாள். இந்தப் பதினைந்து நாட்களில் பௌர்ணமி அல்லது அமாவாசையைத் தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு மக்களிடத்தில் சத்வகுணம் ஓங்கியிருக்கிறது. பிறகு ஐந்து நாளைக்கு ரஜோகுணம் முன்னணியில் வந்து நிற்கும். கடைசி ஐந்து நாளில் தமோகுணம் தலையெடுக்கும். அப்படித் தமோகுணம் தலையெடுக்கிற நாட்களில்தான் ஏகாதசி, பிரதோஷம்,சிவராத்திரி முதலிய நாட்கள் அமைகின்றன. அந்நாட்களில் உபவாசம் இருப்பது சிறந்த ஆத்ம சாதனமாகக் கருதப்படுகிறது. உபவாசம் அல்லது உண்ணாவிரதத்தின் மூலம் தமோகுணத்தின் வேகத்தைத் தணித்து விடலாம். முற்றிலும் உபவாசமிருக்க இயலாதவர்கள் ஏகாதசி நாளிலிருந்து சதுர்த்தசி நாள் ஆகிய நான்குநாட்களுக்கு மிதமாக உணவு உண்டு பழகினால் தமோகுணத்தின் வேகத்தைத் தடுப்பதற்கும், மனதைப்பண்படுத்துவதற்கும் அது நன்கு பயன்படும்.

ஜீவாத்மாவின் பிரதிநிதியாக இருப்பது நந்திதேவன். ஆத்மசாதனத்தில் தங்களைப் பண்படுத்துவதற்கென்றே ஜீவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். நந்திதேவரின் வழிபாட்டின் மூலமாக ஜீவர்கள் தங்களை உயர்நிலைக்கு உயர்த்திக்கொள்ளவேண்டும் என்னும் கோட்பாடு விளக்கப்படுகிறது.

**கேள்வி: (285)** ***தாங்கள் பத்திரிகையில் பல விடங்களிலும் ராமகிருஷ்ண தேவரை ராமகிருஷ்ணர் என்றேபேசி வருகிறீர்கள். பகவான் ராமரை நீங்கள் எந்த இடத்திலும் ராமன் என்றே சொல்லிவருகிறீர்கள். பக்தியுடன் ராமகிருஷ்ணரையும் மனித இயல்புடன் ராமரையும் சொல்லுவதேன்?*** *ப. க.*

கடவுளை அவர் என்றும், அவன் என்றும் அவள் என்றும் அது என்றும் வேண்டியபடியெல்லாம் சொல்லலாம். அதனால் பக்திக் குறைவு வந்துவிடாது. ஸ்ரீ ராமரை ராமன் என்று கூறிக் கட்டுரை யெழுதியவர்க்கு அது பிடித்தமாயிருக்கிறது. எழுத்தாளர் விருப்பப்படி அவரை அவன் என்று அழைக்கலாம். அப்படி அழைப்பதில் இழுக்கு ஒன்றுமில்லை. பக்தி வளர்ச்சிக்கு அது இடுக்கண் ஆகவும் வாய்த்து விடாது. ஆனால் முற்றிலும் கடவுள் நிலையை அடையப்பெறாத மனிதரை அவர் என்றே அழைக்கவேண்டும்.

**கேள்வி: (286)** ***ஆத்ம சாதனத்தில் முறையாக முன்னேற்றம் அடைந்து வருகிறவர்கள் எத்தகைய மறுபிறப்பு எடுக்கிறார்கள்?*** K. V.

இக்கேள்விக்கு விடை பகவத்கீதை ஆறாவது அத்தியாயம் நாற்பத்தொன்று, நாற்பத்திரண்டாவது சுலோகங்களில் வருகிறது. அவர்கள் நற்குடியிற் பிறந்துவிட்ட குறையை நிறைவேற்றுவதற்குத் தீவிரமாக ஆத்மசாதனத்தில் ஈடுபடுகிறார்கள். இறைவனையடைந்த பிறகு அவர்களுக்குப் பிறப்பு ஏற்படுவதில்லை.

# தானவீரன் கர்ணன்

(37-ம் பக்கத் தொடர்ச்சி)

துரோணர்: துர்யோதனா! குருவினுடைய அன்பு செல்வத்தால் பெறக்கூடியதென்று எண்ணிவிட்டாயோ? என்ன உன் மடமை! போகட்டும். எங்கே! அர்ஜுனன் காண்பிக்கும் ஒவ்வொரு வில்வித்தையிலும், சரிபாதியை அவன் காண்பிக்கும் நேரத்தைப்போல் இருபங்கு நேரத்திலாவது நீ செய்து காண்பிக்கக் கூடுமா? எங்கே? ஆண் பிள்ளையாகில் முன்வா. பார்க்கலாம்.

துர்யோதனன்: (சினத்துடன்) நான்முதலிலேயே உம்மிடமிருந்த ஒருதலைச்சார்பை அறிந்து, வில்வித்தை பயிலுதலையே விட்டொழித்து விட்டேனே!

துரோணர்: (சிரிப்புடன்) ஓ! ஓ!! கற்றிருந்தால் வேறுவிதமாய் இருந்திருப்பாய் போலும்! அப்படித்தானே! என்ன அறியாமை!! சரி. உன் கதாயுதச் சண்டையிலாவது நீ நிகரற்று இருக்கிறாயா? பார்க்கலாம். பீமனை அழைக்கட்டுமா?

துர்யோதனன்: (அலட்சியப் பார்வையுடன்) கதாயுதப் போரைப்பற்றி உமக்கு என்ன தெரியும்? அதை நான் பலராமருக்கெதிரில் காண்பிப்பேன். அர்ஜுனனுடைய கைத்தேர்ச்சியைப்போல் என் தேர்ச்சியையும் நீர் அங்குக் காண்பீர்.

துரோணர்: மிகச் சரி. அவ்விதமாகில் உனக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் நீ ஏன் வீணாகத் தலையிடுகிறாய்?

துர்யோதனன்: ஏன்? பிறருக்காகப் பேசுவதற்கு இளவரசனான எனக்கு உரிமை கிடையாதா?

துரோணர்: (ஆத்திரத்துடன்) அங்ஙனமாகில் அப்படியுள்ள ஓர் புருஷனை அழைத்து வந்து என் சொல்லிற்கு மறுப்புக் கூறலாமே!

துர்யோதனன்: இதோ! என் அருகிலேயே இருக்கிறான் அத்தகைய சூரன். கர்ணன் என்ற இவன் பெயரைத் தாம் கேள்விப்பட்டதில்லையா? இவன் அர்ஜுனனுக்கு எவ்விதத்திலும் தாழ்ந்தவனல்லன் என்பதைத் தாம் மறுக்கக் கூடுமா?

துரோணர்: இவன் யார்? எந்த ஊர்? எவர் மகன்? எவர் மாணாக்கன்? எந்தெந்தப் போர்களில் வெற்றி பெற்றிருக்கிறான்? முதலில் இவற்றிற்கெல்லாம் விடை கொடு.

துர்யோதனன்: இதே ஊர்...........

(சிறிது யோசனை செய்கிறான்)

கர்ணன்: நண்பா! சற்றுப் பேசாதிரு. நான் விடையளிக்கிறேன். பெரியோரே! நான் பாரதவீரன். எங்கோ தோன்றினேன். எங்கோ வளர்ந்தேன். எங்கோ கல்வி பயின்றேன். அதைப் பற்றியெல்லாம் ஏன் கூறவேண்டும்? இதோ என் வில். என் அம்புகள். நீங்களே தீர்ப்பளிக்கும் நியாயாதிபதியாக இருக்கலாம். எங்குவேண்டுமானாலும் திறமையைக் காண்பிக்கிறேன்.

துரோணர்: (சிறிது பதட்டத்துடன்) வீர புருஷா! ஏன் இவ்வளவு படபடப்பு! பெரியோரிடம் பணிந்து குலம் கோத்திரம் முதலியவற்றைக் கூறுவது பாரத வீரனின் பண்பல்லவா! மறைக்கக் கூடியது ஏதாவது இருந்தாலும், விரிவாகக் கூறுவதே மேல் எனச் சத்யகாம ஜாபாலன் கதை விளக்க வில்லையா? கூசாமற்கூறு. இதையறியாது தீர்ப்புக் கூறுவது வீரர் மரபன்று.

துர்யோதனன்: அதைச் சொல்லவேண்டியதில்லை. தோள்வலிமையைப் பற்றி நேரில் பார்த்துத்தீர்ப்புக் கூறுவதுதான் உம்வேலை.

கர்ணன் : (தடுத்து) நண்பா ! ஆசார்யர் கூறுவதில் நியாயமுளது. அதை நாம் ஏற்கவேண்டும். ஒருமுறை ஏமாற்றி நான் பட்ட துயரம் போதும். பெரியோரே ! தாய் தந்தையரை யறியேன். தேர்ப்பாகச் சதிபதிகள் என் வளர்ப்புப் பெற்றோர்கள். பரசுராமரிடம் கல்வி பயின்றேன். போதுமா ? இன்னமும் ஏதாகிலும் விளங்கவேண்டுமா ?

துரோணர் : ஆ ! என்ன ! பரசுராமரின் சீடனா ! பீஷ்மருக்குப் பிறகு அவர் எவருக்கும் கல்வி பயில்வித்திருக்கமாட்டாரே !

கர்ணன் : அதைப்பற்றி உங்களுக்கென்ன ! கர்ணன், தேர்ப்பாகரில்லத்தில் இருக்கலாம். ஆனால் பரசுராமருக்கு அவன் ஏன் சிஷ்யன் ஆகலாகாது ?

துரோணர் : (தனக்குள்) இஃதென்னடா ! தர்மசங்கடமாக வந்துள்ளது ! பரசுராமரிடம் கல்வி பயின்ற இவனுடன் அர்ஜுனனை முதல் முதலில் போட்டியிடச் செய்தால் என் பெருமைக்கே இழுக்கு ஏற்பட்டுவிடக் கூடுமே ! எவ்விதமாவது இப்பொழுது அர்ஜுனனை விடுவிக்க வேண்டும். பரசுராமர் எப்படிச் சொல்லை மாற்றியிருப்பார் ! அதைப்பற்றி நமக்கென்ன ! (வெளிப்படையாக) வீரா ! தேர்ப்பாகத் தொழிலுக்கேற்ற உன்னுடன் செங்கோலேந்தும் புஜங்களைப் பெற்ற அர்ஜுனன் எவ்விதம் போட்டியிட முன் வருவான்? கர்ணா ! நீ உன் தொழிலில் உள்ள தேர்ப்பாகர்கட்கிடையில் சமமானவனைத் தேர்ந்தெடுத்து தோள் வலிமையைக் காண்பி. அப்பொழுது வேண்டுமாகில் நான் தீர்ப்புக்கூற முன்வருவேன். துர்யோதனா ! நீயும் ஆட்சி புரியும் ஒருவனைத் தேடிக் கொண்டுவா. பிறகு அர்ஜுனன் அவனுடன் போராடித் தன் உயர்வை நிலைநாட்டுவான்.

துர்யோதனன் : (சினத்துடன்) ஆ ! என்ன குத்தல் ! என்ன ஏமாற்றும் சொற்கள். முதலில் பொதுவாகப் பேசி விட்டு இப்பொழுது குறிப்பிட்டுப் பேசியதாகக் கூறுகிறீரே ! உண்மை வீரனான கர்ணனுக்கு அவனுடைய தொழில் மட்டும் தடையாக இருக்கலாமா ? என்ன அக்கிரமம்! முயற்சியால் இதை வெல்வேன்.

(சிறிது எண்ணிப்பார்த்து)

ஆசிரியரே ! இந்தக் கர்ணன் இன்று முதல் என் உயிர்த்தோழனானான். என் மூத்த சகோதரனுமானான். அதற்கடையாளமாக என்பங்கில் சேர்ந்துள்ள அங்க ராஜ்யம் முழுவதையும் கர்ணனுக்களித்துள்ளேன். ஆருயிர் நண்பா! இன்று முதல் நீ அங்கநாட்டு மன்னனாகி விட்டாய். அங்கராஜனே, நாளையதினம் உனக்கு அபிஷேகத்தை நடத்தி வைப்பேன். ஆசார்யரே ! அங்கநாட்டு மன்னனாக உள்ள கர்ணனுக்கு என்றைக்கும் நாட்டையாள உரிமை பெறக் கூடாத அர்ஜுனன் சமமாக மாட்டான். ஆயினும் உயர்ந்த மனப்பான்மை கொண்ட கர்ணன் அர்ஜுனனைத் தனக்குத் தாழ்ந்தவனாகக் கருதாமல் பந்தயத்தை ஏற்க முன் வந்துள்ளான். ஏன் அர்ஜுனன் முன்வரட்டுமே !

துரோணர் : (தனக்குள்) இஃதேதடா கிணறு வெட்டப் பூதம் கிளம்புகிறதே! நான் பேசியதனால் கர்ணனுக்கு அரசாங்கமல்லவா கிடைத்துவிட்டது! என்னைவிடப் பன்மடங்கு உயர்ந்த பரசுராமருடைய மாணவனான கர்ணனுடன் பதட்டமாக அர்ஜுனனைப் போரிடத் தூண்டக்கூடாது. இதினின்று எவ்விதம் தப்பிக்கொள்ளலாம். (வெளிப்படையாக) துர்யோதனா ! உன் உதார குணத்தை மெச்சுகிறேன். நட்பைக் குறித்து வியக்கிறேன். உரிமையாளரான சகோதரருக்கு சிறு பகுதியையும் கொடுக்க விரும்பாத நீ நட்பில் இவ்விதம் கடமைப் பட்டிருக்கிறாய் என்



பது விந்தையே. ஆயினும் அரசனாக்கப்பட்ட கர்ணனை நீ க்ஷத்திரியனாக்கிவிட முடியுமா ?

துர்யோதனன் : (உரத்தகுரலில்) ஐயா! நினைத்து நினைத்துப் பேசுகிறீர்! அரசனாயிருக்கவேண்டும் என்றீர். அரசனாக்கினேன். இப்பொழுது க்ஷத்திரியனாக்க வேண்டுமென்கிறீர். அதுவும் ஆக்கிவிட்டால் மேலும் என்ன செய்வீர் ?

துரோணர் : அப்பா ! நீ சிறுகுழந்தை. பதட்டப்படுகிறாய். அந்தணனான பரசுராமன் க்ஷத்திரியரான பீஷ்மரிடம் தோல்வியடையவில்லையா ? யானை மிகவும் வலிமையுடைய விலங்கென்று கூறினால், மலையுடன் மோதிக் கொள்ளட்டும் என்று சொல்வதைப் போலிருக்கிறதே உன்பேச்சு. வேண்டுமானால் தேர்ப்பாகரினத்தைச் சேர்ந்த அரசர்களுள் கர்ணன் சிறந்த வீரனாக இருக்கலாம். அதற்காக அர்ஜுனனுடன் போட்டியிட முடியுமா ? நான் மற்ற குருகுலப் பெரியார்கட்கு விடையளிக்க வேண்டாமா ? வீண் பேச்செதற்கு ! க்ஷத்திரியனும் அரசனும் உள்ள ஒருவனுடன்தான் அர்ஜுனன் எதிர்த்து நிற்பான்.

கர்ணன் : நண்பா ! நான் சொல்வதைச் சிறிதுகேள். பிறவி யுண்மையை யறியாததற்காகவும், தேர்ப்பாகரில்லத்தில் வளர்ந்தமைக்காகவும், என்றும் சிரத்தைத் தாழ்த்தியதில்லை. வருந்தியதில்லை. பிறவி யெடுத்தமைக்கு நான் பொறுப்பாளியல்ல. ஆனால் ' முயற்சியினால் எதையும் பெற்றுவிடலாம். விதியுடன் போரிடலாம்' என்ற கொள்கையை என்றும் கடைப்பிடித்து வந்தேன். முடிவைப்பற்றிய கவலை எனக்கில்லை. முயல்வதற்குத்தான் எனக்கு உரிமையுண்டு. ஆயினும் இவ்வுலகில் தாழ்விற்குக் காரணமாகக் கருதப்படும் தேர்ப்பாகன் நிலையை நீக்கி என்னை அரசனாக்கிய உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்! என் உயிர், உடல், உரிமை அனைத்தையும் உன்னுடையது ஆக்கினேன். நீ செல்லும் பாதை எவ்வாறாயிருப்பினும் அதுவே என் பாதையாகும்.

துர்யோதனன் : நண்பா ! போதும் போதும். நான் செய்த அற்ப உதவியைப் புகழாதே.

கர்ணன் : தோழா ! அரசாங்கத்திற்காக வல்ல நான்புகழ்வது. அதைக் கொடுக்கத் தூண்டிய மனப்பான்மைக்காகவே நான் புகழ்ந்தேன். ஆயிரம் அரசாங்கங்களைப் பெறமுடியும். ஆனால் உன்போன்ற நண்பனை வேறெங்கும் பெறேன்.

துர்யோதனன் : கர்ணா, கடலில் தவிக்கும் கப்பலுக்கு தீபஸ்தம்பம் போல் நீ எனக்குக் கிடைத்தாயே, அஃது ஒன்றே போதும். இனி நிம்மதியாக நான் வாழ்வேன்.

(கண்ணீர் விடுகிறான்)

கர்ணன் : நண்பா ! வருந்தாதே. உன் மனதில் உள்ளதை நான் அறிந்துகொண்டேன். உன்னால் வெறுக்கப்படும் அப்பகைவனிடம், எனக்கும் ஏனோ காரணம் இன்றியே ஒரு போட்டியுணர்ச்சி ஏற்பட்டு விட்டது. இரு போட்டித் தலைமை யானைகள் ஒரே காட்டில் நிம்மதியுடன் வாழமுடியுமா ? நானும் அவனும் சேர்ந்து பூமியில் வாழமுடியாது. வாரும். செல்லலாம். சமயத்தில் அர்ஜுனனை எதிர்த்து நிற்பேன்.

(இருவரும் செல்கின்றனர்)

துரோணர் : நாம் ஒன்றை நினைக்கத் தெய்வம் மற்றொன்றை எண்ணுகிறதே ! வெடி மருந்துச் சாலையில் தீ வைத்த பிறகு அது வெடிக்காது எவ்வாறு ஓய்வு பெறும்? கடவுள் சித்தப்படி நடைபெறட்டும்.

(செல்கிறார்)

## காட்சி 4

### துர்யோதனனின் அந்தப்புரம்

(பானுமதி தேவியும் கர்ணனும் எதிரெதிராக உட்கார்ந்து சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கின்றனர்.)

பானுமதி : அண்ணா! என்ன எல்லாக்கலைகளிலும் ஆடவரே தேர்ந்தவர் என்பது தம் எண்ணமோ!

கர்ணன் : சகோதரி! யார் அப்படிச் சொல்லியது? சக்தி யின்றேல், சிவம் சவம்போன்றதுதானே.

பானுமதி : இப்படிப் பேசிப் பேசி அறியாத பேதைகளை ஏமாற்றுவது ஆடவருக்கென்றேற்பட்ட சூழ்ச்சிதானே.

கர்ணன் : ஆம். ஆம். (காய்களை நகர்த்திய வண்ணம்) தோல்வியேற்படும் எனத் தோன்றிவிட்டால், சூழ்ச்சி முதலிய சொற்களையடுக்குவது பெண்டிரின் இயற்கையன்றோ! ஆட்டத்தைக் கவனி. எவ்வாறு தப்புவாய்?

பானுமதி : ஏன்! இதோ தப்பினேன். (காய்களை நகர்த்தப் பார்க்கிறாள்.) எல்லா இடங்களிலும் தடையிருக்கிறதே. பார்க்கலாம்.

(கர்ணனுடைய பின்புறத்து வாயிலின் வழியாக துர்யோதன மன்னன் சந்தடியின்றி நுழைகிறான். பானுமதி பார்த்துவிடுகிறாள். திடுக்கிட்டுப் பதைபதைத்து எழுந்திருக்கிறாள்.)

கர்ணன் : (சிரித்துக்கொண்டே) தப்பும் வழி சிறந்த வழியாகவல்லவோ இருக்கிறது.

(ஆடைத் தலைப்பைப் பிடித்திழுக்கிறான். விரைந்து பானுமதி பிடுங்கிக்கொள்கிறாள். இடுப்பில் கட்டியிருந்த முத்துமாலை அறுந்து விழுகிறது. முத்துக்கள் நான்கு புறங்களிலும் சிதறி ஓடுகின்றன.)

கர்ணன் : (திகைப்புற்றவாறு) மன்னிக்கவும். தங்கையே! இது வரம்பு மீறிய செயல். நான் இதோ மாலையை ஒழுங்குபடுத்திவிடுகிறேன்.

(நூலில் முத்துக்களைச்சேர்க்க முயலுகிறான். பானுமதி நடுங்கிய வண்ணம் பேசாது நிற்கிறாள்.)

துர்யோதனன் : (நடுவில் நின்று) நண்பா! பேசாதிரு. நான் மாலையைச் சீர்ப்படுத்தி விடுகிறேன். நீ ஆட்டத்தைத் தொடர்ந்து ஆடு. (மனைவியைப் பார்த்து) நன்றாயிருக்கிறது. தோல்வியுற்றால் ஓடிவிடுவதுதான் பாரத அரசியின் லட்சணமோ? உட்கார்ந்து வெற்றி கிட்டும்வரை ஆடவேண்டும்.

(கைகளைப் பிடித்து உட்காரச் செய்கிறான். கர்ணன் துர்யோதனனைப் பார்த்துப் பேச்சற்றுப் பதுமைபோல் நின்று விடுகிறான்.)

நண்பா! ஏன் பேசாது திகைத்து நிற்கின்றாய்? என் மனைவி விளையாட்டின் நடுவில் எழுந்தமைக்காகச் சினமோ? அவளுக்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன்.

(கர்ணனை உட்காரவைக்கிறான்.)

கர்ணன் : நண்பா! என்னையும் மன்னிப்பாயா? இச்செயலையும் மன்னிப்பாயா? வந்ததும் உன்னைக் காணாது தனிமையில் ஆடிக்கொண்டிருந்த தேவியுடன் கூசாது ஆடினேன். ஆட்டவெறியில் அறிவை இழந்தேன். உன்னைக் கண்டு எழுந்த தேவியை,தோல்விக்காகஎழுந்ததாகவெண்ணி வரம்புமீறிச் சேலையின் தலைப்பைப் பிடித்து இழுத்தேன். முத்துக்கள் உதிர்ந்தன. என் கையைத் துண்டித்துவிடு.

துர்யோதனன் : (சிறிது சினத்துடன்) என்ன சொன்னாய்? இதுதான் நட்பின் அறிகுறியோ? அண்ணனுக்கும் தங்கைக்கும் இந்த உரிமையைக்கூட மறுப்பதற்கு நான் என்ன ஓர் அறிவிலியா?

கர்ணன் : (கண்களில் நீரைப் பெருக்கியவாறு) என் நாவு பேச மறுக்கிறது.

துர்யோதனன்: ஓ! ஓ! நண்பனென்ற முறையில் உன் இல்லத்தில் தடையின்றி நான் நுழைவதைத் தடை செய்யும் நோக்கமாகில் வெளிப்படையாகச் சொல்லிவிடு.



கர்ணன் : நண்பா! உன் உயர்குணம் என்னை என்னவெல்லாமோ செய்கிறது. நான் பிரம்மானந்த நிலையில் இருக்கின்றேன். என்றென்றைக்கும், எவராவது உன் போன்ற நண்பரைக் கண்டிருக்கக் கூடுமா?

துர்யோதனன்: (சிரித்த வண்ணம்)நண்பா! நட்பு என்றால் ஒரேவிதமாகத்தான் இருக்க முடியும். உயர்வு தாழ்வு அதில் இருக்க முடியாது. தாழ்ந்திருக்குமாகில் அது நட்பாகாது. நட்பு, பகை இரண்டிலும் நான் உயர்வையல்லாது மையத்தையோ, தாழ்வையோ மனதிற்கொள்வதேயில்லை. போதும். இதைப்பற்றிப் பேசாதே. நமக்கு அரசாங்க வேலையிருக்கிறது. எனக்காக இன்று பானுமதியை ஒப்பந்தத்திலிருந்து விடுவித்துவிடு. நாம் செல்லலாம்.

(பானுமதி செல்கிறாள்)

கர்ணன் : நண்பா! அழியாவரம் பெற்ற நட்பு தெய்வத்திற்கு இன்று அமிர்த பானமும் கிடைத்துவிட்டது. எப்பேர்ப்பட்ட,தவிர்க்க முடியாதசந்தர்ப்பங்கள் ஏற்பட்டாலும் நம் இருவருடைய நட்பு சீர்கெடாதிருக்கும். இது உறுதி. உன் லக்ஷியமே என் லக்ஷியம். என் தனி லக்ஷியத்தைக் கூட உனக்காக விட்டுக் கொடுக்கத் தயங்கேன். இது சத்தியம்.

துர்யோதனன் : இந்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? செல்வோம்.

(செல்கின்றனர்.)

## காட்சி 5

### கர்ணனும் சூரியனும்

(கர்ணன் பூஜையறையில் அமர்ந்து மூடிய கண்களுடன் தியானம்செய்து கொண்டிருக்கிறான். சூரியபகவான் மானிட உருவத்தில் எதிரில் நிற்கிறார்.)

கர்ணன் : (கண்களைத் திறந்ததும்) பெரியோரே! வணங்குகிறேன். ஆசிமொழிகளை யருளவேண்டும்.

சூரியன் : குழந்தாய்! நீ நிகரற்ற தியாக வீர புருஷனாக விளங்கப் போகிறாய்.

கர்ணன் : ஆஸனத்தில் அமர வேண்டுகிறேன். தாம் யாரென்பதை அறிவிக்கக் கூடுமோ?

சூரியன் : (ஆவலுடன்) மைந்தா! நீ என் அருகில் வா. உன் உயர் அவயவங்களின் ஸ்பர்சத்தால் எனக்கு இன்ப மூட்டு.

(கைகளைப் பிடித்து முதுகில் தடவுகிறார்.)

கர்ணன் : எவரிடமும் பெறாத இந்த அன்பு மொழிகள் என் செவிகளில் தேனாகப் பாய்ந்து இன்ப மூட்டுகின்றன. காரணமின்றி அன்பைப் பொழியும் தாம் யாரென நான் அறியக்கூடுமா?

சூரியன் : மைந்தா! காரணமின்றிக் காரியம் ஏற்படாதென்பதை உறுதியாக நம்பு. சில இடங்களில் சிலநேரங்களில் காரணங்கள் நமக்கு விளங்காதிருக்கலாம்.ஆனால் காரணங்கள் இருந்தே தீரவேண்டும். கடவுளை நாம் அறிய முடிவதில்லை. ஆனால் காரியமான உலகம் காரணமான கடவுளில்லாமல் ஏற்பட முடியாதென்றே நாம் கடவுள் இருப்பதை ஏற்கிறோமல்லவா? அதைப் போலவே இதிலும் காரணமிருக்கிறது.

கர்ணன் : அதை நான் அறிவதற்கு உரிமையுண்டா?

சூரியன் : அஃதின்றேல் என் காட்சி உனக்கு ஏற்பட்டிருக்காது.

கர்ணன் : அங்ஙனமானால் அருள் புரிக.

சூரியன் : கர்ணா! நான் யாரென்பதை முடிவில் நீ அறிவாய். அதுவரையில் நீ எதையும் வினவாதே.

கர்ணன் : உத்திரவு.

சூரியன் : முதலில் நான் கேட்கும் கேள்விகளுக்கு விடை பகர்வாய்.

கர்ணன் : அப்படியே.

சூரியன் : உன்னிடம் மற்றவரிடமிருந்து பிரிக்கும் வேற்றுமை எதையாவது காண்கிறாயா?

கர்ணன்: ஒன்றல்ல பலவற்றைக் காண்கிறேன்.

சூரியன்: ஒவ்வொன்றாகக் கூறுவாயாக.

கர்ணன்: என் செவிகளில் குண்டலங்களையணிவதற்கு அவசியமின்றி இயற்கையாக இரண்டுகுண்டலங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சூரியன்: ஒன்று. பிறகு?

கர்ணன்: என் உடலின் மேல் தோல் பிறருடையதைவிட மிகக் கடினமாகவும் மிருதுத் தன்மையை இழந்ததாகவும் தோன்றுகிறது.

சூரியன்: சரி இரண்டு. பிறகு?

கர்ணன்: இவைதான் விளக்கமுடியாத இரு சிறப்புகளோ, தாழ்வுகளோ. மற்றவை, என் தீவினைப் பயன்களாலானவை. அவற்றைச் சொல்லித் தம் திருவுள்ளத்தை ஏன்புண்படுத்த வேண்டும்?

சூரியன்: என்னிடம் எதையும் மறைக்காதே. நான்அறியாதது ஒன்றுமில்லை.

கர்ணன்: என் தாய்தந்தையர் கல்நெஞ்சம் படைத்தவராயிருத்தல் வேண்டும்.

சூரியன்: சிவ, சிவ. ஏன் அப்படிக் கூறுகிறாய்?

கர்ணன்: இளமையிலேயே தாய்தந்தைகளால் புறக்கணிக்கப்பட்டு வளர்ப்புப் பெற்றோரால்வளர்க்கப்பட்டு வந்தேன்.

சூரியன்: உண்மைதான். பிறகு?

கர்ணன்: தெய்வ உதவியை என்றும் இழந்து வந்தேன்.

சூரியன்: அதுவும் உன் புகழிற்காகவே.

கர்ணன்: ஜாதி, தொழில், பெற்றோரையறியாமை, இவற்றால் சிறுமை பெற்றேன்.

சூரியன்: விளக்கு அருகில் இருந்தும் சுவர் தடை செய்தால் ஒளி எவ்வாறு கிட்டும்?

கர்ணன்: காரணம் ஏதும் இன்றி ஓர் உயர்ந்த வாலிப வீரன்மேல் மாற்ற முடியாத பகைமை கொண்டேன்.

சூரியன்: கதிரவனைக் கண்டதும், சூரிய காந்தக்கல் தீயைக் கக்குவதில் யாது விந்தையுளது?

கர்ணன்: காரணம் ஏதும் இன்றி ஓர் உயர்ந்த வாலிப வீரனின் அழியா நட்பைப் பெற்றுள்ளேன்.

சூரியன்: பிறகு?

கர்ணன்: வேறொன்றும் இல்லை. அந்த நட்புதான் பாலைவனத்தை யொத்த என் வாழ்க்கையில் ஓர் கனவுச் சோலையைப்போல் திகழ்கிறது.

சூரியன்: நண்பனுடைய செயல்கள் நியாயமானவை யென்று நீ ஏற்கிறாயா? அல்லது, அவனைத் தடுத்துத் திருப்புகின்றாயா?

கர்ணன்: நண்பனுடைய தன்மையை நான் நன்கு அறிவேன். மும்மூர்த்திகளும் சேர்ந்துவரினும் அவனுடைய உள்ளத்திற்றோன்றியதை மாற்ற முடியாது. அவனிடமுள்ள சிறந்த பல குணங்கட்கிடையில் பங்காளிப் பகை மிகுந்து காண்கிறது. ஆனால் தாமரை இலை தண்ணீர்ப் பசையை ஏற்காதிருப்பதைப் போலவும், ஸ்படிகக்கல், அருகிலுள்ள பொருளின் நிறத்தை ஏற்பதைப் போலவும், பற்றின்றி, நான் அவனைப் பின்தொடருகிறேன்.

சூரியன்: அதே மாதிரி நீ இருந்து விடு. சிறந்து விளங்குவாய்.

கர்ணன்: என் நண்பனுடைய சிறந்த பகைவனான ஒருவனை மாத்திரம் நானும் வெறுக்கிறேன்.

சூரியன்: என்ன செய்யலாம்? அது விதியின் திருவிளையாடல். எனக்கும் உனக்கும் நடக்கும் இந்த சம்பாஷணையை உன் நண்பனல்ல, மனைவியல்ல, எவருக்கும் வெளியிடக் கூடாது. ஆணையிடுவாயா?

கர்ணன்: அவசியமில்லை. பொய்பேசுவதில்லை. ஆதலால் சொல்லே போதுமானது.



சூரியன்: மைந்தா! ஓர் உயர்ந்த க்ஷத்திரியப் பெண் குந்தி என்பவள் ஓர் உயர்ந்த மந்திரத்தால் கதிரவனைச் சேவித்தாள். அவளிடம் மகிழ்ந்த நான் பெண்கட்குப் பிரியமான ஓர் மைந்தனையளித்துவிட்டேன். என் அம்சம் பெற்றவன் என்பதற்காக அவனுடைய உடலில் எந்த ஆயுதங்களாலும் பிளக்க முடியாத இயற்கைக் கவசம் ஒன்றையும், அழகிற்காக இரு குண்டலங்களையும் அளித்தேன்.

கர்ணன்: ஐயா! நான்தானா அந்த பாக்கியமற்றவன்.

சூரியன்: பொறு. நீயேதான். உன் அன்னையை நொந்து கொள்வதில் யாதொரு பயனும் இல்லை. அப்பேதைக்குச் சமூகத்தினிடமிருந்த அச்சமே அதற்குக் காரணம். அவளுக்கு நல்லறிவு புகட்டுவதற்கு எவரும் இல்லை.

கர்ணன்: விதியைத் தவிர எவரையும் நான் நோவதில்லை. அத்துடன் முயற்சியுள்ளவரை போராடவும் தயங்கேன்.

சூரியன்: உன்னுடைய வாழ்க்கையின் முன்னேற்றத்தில் மிகவும் ஈடுபட்டிருக்கிறேன். உலகம் மெச்சும் ஆதர்ச புருஷனாக நீ பிரகாசிக்க வேண்டும் என்பது என் ஆசி.

கர்ணன்: உயர் தந்தையே! தம் ஆசிமொழிக்கு என்றும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். தம் ஆசிக்கேற்ற விதம் நான் நடப்பேன்.

சூரியன்: உனக்குச் சில எச்சரிக்கைகளையளிக்கவே நான் வந்திருக்கிறேன்.

கர்ணன்: தந்தையே! என் கொள்கைகட்கு மாறுபடாதிருக்கும் வரையில் அந்த எச்சரிக்கைகளை நான் பின்பற்றுவேன்.

சூரியன்: சுவற்றை வைத்துக் கொண்டல்லவா சித்திரம் வரையவேண்டும். உன் உடலைக் காக்கவேண்டியது முக்கியம்.

கர்ணன்: சித்திரக் கலையில் உண்மைப் பற்றுள்ளவர்கள், சில நேரங்களில் சுவரை இடிக்கவும் துணிவர்.

சூரியன்: நீ மிகவும் பகைக்கும் அர்ஜுனனுடன் உனக்கு உள்ள உறவு என்ன என்பது தெரிந்ததா?

கர்ணன்: நன்கு அறிந்தேன். அதற்காக வருந்துகிறேன். என் மனதை அந்தப் பகைமையிலிருந்து திருப்ப முடியாத நிலையில் இருக்கிறேன். நீங்களும் சந்திரனும் வானில் சேர்ந்து வாழ முடிகிறதா? சொல்லுங்கள்.

சூரியன்: உன் எதிரிக்கு தெய்வபலம் முற்றிலும் அனுகூலமாக இருக்கிறது. ஆயினும் என் உதவியினாலும், உன் முயற்சியினாலும் நீ அவனை வெல்லக்கூடும்.

கர்ணன்: நன்றி.

சூரியன்: நீ எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். எவர் எதைக் கேட்டாலும் கொடுப்பதென்ற கடுமையான விரதம் எடுத்துக்கொண்டிருக்கிறாய். உன் உடல் கவசத்தையும் காதின் குண்டலங்களையும் மாத்திரம் கொடுத்துவிடாதே.

கர்ணன்: அவற்றை யணிந்துள்ள உடலையே பிறர்க்கு அளிப்பதற்கு நான் தயங்க மாட்டேன். மன்னிக்கவும்.

சூரியன்: நான் வேறு என்ன சொல்ல முடியும்! எவர் உன்னிடம் இதைக் கேட்டாலும் அவர் தேவாம்சம் கொண்டவர் என்று உறுதியாக நம்பு. அவரிடம் எதிரியைக் கொல்லும் ஓர் வேலாயுதத்தைப் பெற்றுக்கொள்ள மறந்துவிடாதே.

கர்ணன்: அங்ஙனமே ஆகட்டும்.

சூரியன்: நம்முடைய இந்தப் பேச்சு கனவில் நடந்ததாக உனக்குத் தோன்றும். ஆனால் இதை உண்மை யென்று நம்பு.

(கர்ணன் வணங்குகிறான். சூரியன் மறைகிறான்.)

(தொடரும்)

# காந்தே (கி. பி. 1724 - 1804)

திரு கா. இராமனாதன் பி. ஏ., பி. எல்.

எடுத்த நெற்றி. ஒரு தோள் சப்பை. தொப்பைவயிறு. குட்டை உருவம். சாய்வு மேஜையில் சில காகிதங்களை வைத்துக் கொண்டு இப்பக்கம், அப்பக்கம் திரும்பாமல் ஏதோ ஓரிடத்தையே பார்த்துக் கொண்டு சொற்களைத் தேடாமல், எண்ணங்களுக்குத் தயங்காமல் பேசிக்கொண்டிருக்கிறார் ஒருவர். பல மாணவர்கள் சப்தமின்றி, அசைவின்றி, செதுக்கிய பொம்மை போலிருந்து அவரைப் பார்த்த வண்ணம் செவி வாயாக நெஞ்சு வயிறாக அவர் சொற்களைப் பருகுகிறார்கள். பல உதாரணங்களுடன் அழகாக அறிவைப் புகட்டும் அந்த ஆசிரியர் யார்?

அவர்தான் காந்தே. அவர் வாழ்க்கைச் சரித்திரத்தை எழுதுவது சிரமம். ஏனென்றால் அதில் வாழ்க்கையுமில்லை; சரித்திரமுமில்லை.

காந்தே பிரஷ்யா தேசத்தில் கோனிங்ஸ்பர்க் என்ற நகரத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். இவருடன் கூடப் பிறந்த சகோதர சகோதரிகள் பத்துப்பேர். எல்லாருக்கும் உணவு கொடுக்க முடியாவிட்டாலும் கல்வி கொடுத்திருந்தார் அவர்களுடைய தந்தை. காந்தே பள்ளியில் படித்து முடித்துவிட்டுக் கல்லூரி சென்றபொழுது தகப்பனார் இறந்துவிட்டதால் படிப்புக்கு வேண்டிய பொருளைத் தாமே தேட நேர்ந்தது. மாணவர்களுக்கு வீட்டில் பாடம் சொல்லிக் கொடுத்து ஊதியம் பெற்றார். படிப்பு முடிந்ததும் கலாசாலையில் உதவி ஆசிரியர் பதவி கிடைத்தது. அப்பொழுது அளவை, தத்துவம், கணிதம், புவிநூல் கற்பித்தார். இப்பதவியில் 1755-ம் ஆண்டு சேர்ந்து பதினைந்து ஆண்டு பணிபுரிந்தார். அச்சமயம் பேராசிரியர் பதவிக்கு இரண்டு முறை மனுக்கொடுத்தார். இரண்டு தடவையும் அவர் மனு தள்ளப்பட்டது. 1770-ம் ஆண்டு பேராசிரியர் பதவி கிடைத்தது. இப்பதவியில் இருபத்தேழாண்டு நிலைத்திருந்து அளவையும் தத்துவமும் சொல்லிக் கொடுத்தார்.

அவர் மணம் புரிந்து கொள்ளவுமில்லை; தம் ஊரை விட்டு ஒருதரங்கூட நாற்பது மைலுக்கப்பால் சென்றதுமில்லை. மணம் செய்து கொள்ளலாமென்று இரண்டு தடவை யோசித்தார். ஒரு முறை நினைத்த பெண் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டாள். மற்றொரு முறை கருதிய பெண் இவரைவிட விரைவாக அவனை மணம் செய்து கொள்ள முடிவு செய்தவனை மணம் செய்து கொண்டு விட்டாள்.

அவரது அன்றாட வாழ்க்கை மிக ஒழுங்காக நடக்கும். காலையில் ஐந்து மணிக்கு எழுந்து விடுவார். ஒருநாளும் அதில் தவறுவதில்லை. உடனே இரண்டு மணி நேரம் படிப்பு. பின்னர் ஒவ்வொரு வேலையாக மணிப்படி நடக்கும். எழுத்துவேலை, கற்பித்தல், உண்ணல், உலாவுதல், படுத்தல் யாவும் முறைப்படி ஒரு நிமிஷம் முன்பின் இல்லாமல் நடைபெறும். நகர மக்கள் அவர் மாலை உலாவ வருவதைப் பார்த்து மணியைத் திருப்பி வைத்துக் கொள்ளலாம். உலாவும் இடத்தையும் மாற்றினதில்லை. எப்பொழுதும் வேலையாள் குடை கொண்டு வருவான். அவருக்கு அவர் ஆயுள்வரை ஒரே வேலையாள். மழையானாலும் இடியானாலும் உலாவல் நிற்காது. யாவற்றிலும் அவ்வளவு ஒழுங்கு.

இப்பேராசிரியர் நாற்பத்திரண்டாண்டுகள் கல்லூரியில் பாடங்கற்பித்து, எழுபத்து மூன்றாவது வயதில் ஓய்வெடுத்துக் கொண்டார்.

வயதேற, நாடி தளர்ந்தது. மறதி அதிகரித்தது. அறிவு ஆற்றலை இழந்தது. சிற்சில சமயங்களில் பழைய எண்ணங்கள் மிக வேகமாக வரும். ஆயினும் நாளுக்கு நாள் ஆற்றல்கள் அனைத்தும் குறைந்தன. மரத்திலிருந்து நன்கு பழுத்த இலை உதிர்வது போல் எண்பதாவது வயதில் பேராசிரியர் உடலை விடுத்தார்.

ஆசிரியர் விரிந்த ஆராய்ச்சி செய்து நூல்கள் எழுதியுள்ளார். அவைகள் Critic of Pure Reason (1781), Critic of Practical Reason (1788), Critic of Judgement (1790). பல விஷயங்களைச் சொல்லிவிட வேண்டுமென்ற எண்ணத்தால் கருத்துக்களைச் சுருக்கிச் சொல்லியிருக்கிறார். ஆனால் விஷயங்களை விளங்க வைத்தார் என்று ஒருவரும் சொல்லிவிட முடியாது. படிப்போர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு எண்ணம் கொள்ள இடந்தரும். நாற்பதாண்டுகளுக்குமேல் ஆசிரியர் பதவி வகித்து எண்ணில்லாத மாணவர்களுக்கு விளங்கவைத்த அறிஞர் இவ்வாறு எழுதுவானேன்? உதாரணங்கள் புத்தகங்களின் பக்கங்களைச் சாப்பிட்டுவிடுமென்றும் அவ்வாறு வீணாகும் பக்கங்களில் பல விஷயங்களைப் புகுத்திவிடலாமென்றும் அவா நினைத்தார் போலும். மாணவர்களில் அறிவுடையவர்கள் இரண்டொருவர்தாம் இருக்கக்கூடும். நடுத்தர மாணவர்களே பெரும்பாலோர் இருப்பர். அவர்களுக்கு விளங்க வேண்டுமானால் எடுத்துக்காட்டு அவசியம் இடம்பெற வேண்டுமென ஆசிரியர் நினைக்கவில்லை. காந்தே கடினமாகச் சொல்வதில் சமர்த்தர்; புரியாத சொற்களைச் சிருஷ்டித்தும் எழுதுவார்.


காந்தே செய்த ஆராய்ச்சி அறிவைப் பற்றியது. ஞானம் என்ற அரசி மூன்று நிலையில் நின்று விஷயத்தைத் தெரிந்து கொள்ளுகிறாள். அறிவாக (Reasoning) நின்று உண்மையை அறிகிறாள்; இச்சையாக (Will) நின்று நன்மையைக் காட்டுகிறாள்; உணர்ச்சியாக (Aesthetic) நின்று அழகை உணருகிறாள்.

'அறிவென்றால் என்ன, எவ்வாறு அறிகிறோம்' என்பனவற்றைக் காந்தே விளக்கியிருக்கிறார். ஒவ்வொரு எண்ணமும் (idea) அறிவாகாது. பூமி, மனிதன் என்பன எண்ணங்கள். ஆனால் அவைகளிலிருந்து நாம் ஒன்றும் தெரிந்து கொள்வதில்லை. அத்துடன் வேறு எண்ணங்கள் சேரவேண்டும். பூமி சுற்றுகிறது. மனிதன் அறிவுடையவன். இவைகளில் சொல்லப்படும் பொருள்கள் பூமி, மனிதன். அவைகளைப்பற்றி சில முடிவுகள் (Judgement) செய்கிறோம். 'சுற்றுகிறது' 'அறிவுடையவன்' என்பன முடிவுகள். இம்மாதிரி முடிவுகள் இருவகை. ஒன்று பகுத்த முடிவு (Analytic Judgement). மற்றது தொகுத்த முடிவு (Synthetic Judgement). உடல் நீளம் என்று சொல்லும் பொழுது உடலைப்பற்றி நாம் ஒன்றும் அதிகமாகத் தெரிந்துகொள்ளவில்லை. உடல் என்ற போதே அதன் நீளமும் உடன் தெரிவதால், உடல் நீளம் என்பதிலிருந்து உடலைக் குறித்து நாம் புதிதாக ஒன்றையும் தெரிந்துகொள்ள முடியவில்லை. இது பகுத்த முடிவு. பூமி ஒரு கிரகம் என்று சொல்லும்போது பூமி என்ற எண்ணத்துடன் கிரகம் என்ற எண்ணத்தையும் சேர்த்துச் சொல்லுகிறோம். பூமி கிரகம் என்று எண்ணாமலேயே நாம் பூமியை எண்ணமுடியும். ஆகையால் கிரகம் என்று சொல்லுவதால், பூமியைப்பற்றி ஒரு விஷயம் தெரிந்து கொள்ளுகிறோம். இது தொகுத்த முடிவு. இரு விஷயங்களையோ, பல விஷயங்களையோ தொகுத்துச் சொல்வதால் இதனைத் தொகுத்த முடிவு என்போம். பகுத்த முடிவால் அறிவுவளருவதில்லை. தொகுத்த முடிவே அறிவை வளர்க்கும்.

தொகுத்த முடிவிலும் இருவகை உண்டு. இன்று நல்ல மழை, கோபாலன் இறந்தான் என்பவைகளில் தெரிந்துகொள்ள

வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன. அவைகள் எக்காலத்தும் உண்மையல்ல. எப்பொழுதாவது நிகழ்பவை. நாளை மழைபெய்யாமலிருக்கலாம். கோபாலன் மாண்டது இறந்தகாலம். இனி அவனுக்குச் சாவு மறுமுறை வரப்போவதில்லை. இவற்றை ஏகதேச முடிவு (Accidental and contingent) எனலாம். அறிவைப் பெருக்க இவைகளும் பயனில்லை. தேவையான விஷயங்கள் பல உண்டு. எக்காலத்திற்கும் எந்த இடத்திற்கும் பொருத்தமான விஷயங்கள் உண்டு; அவைகளை என்றும் எங்கும் பொருந்தும் முடிவு (Universal Judgement,) எனலாம். சூடு விரிக்கும்; குளிர் சுருக்கும் என்னும் முடிவுகள் நேற்றும் இன்றும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் உண்மையே.

முடிவுகளைக் கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ளபடி வகைப்படுத்தலாம்.




எக்காலத்திற்கும் பொருந்தும் முடிவிலும் இருவகையுண்டு. கல்லை ஆகாயத்தில் எறிந்தால் அது பூமியில் விழும். இது எக்காலத்திலும் உண்மையே. இதனை எப்படித் தெரிந்துகொண்டோம். நேற்று கல் கீழேவருவதைப் பார்த்தோம். அங்கு மலை கீழே உருண்டு வருவதைப் பார்த்தோம். பலமுறை இம்மாதிரி நிகழ்வதை அறிந்தோம். முடிவுக்கு வந்தோம். ஆகையால் இது அனுபவத்தால் ஏற்பட்ட அறிவு. இதனை அனுபவ முடிவு (Judgement aposteriori or Judgement of experience) என்பது. சில நிகழ்ச்சிகளைக் கொண்டோ, பல நிகழ்ச்சிகளைக் கொண்டோ முடிவு செய்தல் என்றும் உண்மையாக இருக்கவேண்டுமென்று கட்டாயமில்லை. இது காரண காரியத்தால் ஏற்பட்டதன்று; பகுத்தறிவால் ஏற்பட்டதன்று. அனுபவத்தால் அன்றி ஆராய்ச்சியில் முடிவு கட்டுவது மற்றொருவகை. இவ்வகையில் சேர்ந்தது கணக்கு, பௌதிக ஆராய்ச்சி முதலியன. இவைகளை ஆராய்ந்த தொகுதி முடிவு அல்லது விஞ்ஞான முடிவு (Synthetic Judgement apriori or Scientific Judgement) எனலாம். ஆகையால் ஆராய்ந்த தொகுதி முடிவுகளே அறிவுக்கு ஆதாரம். அவைகளே அறிவு.

அறிவு யாதெனக் கண்டோம். அவ்வறிவைப் பெறுவது எங்ஙனம்? அதாவது ஆராய்ந்த தொகுதி முடிவுகளை எங்ஙனம் அடைவது? இதனை ஆராய்வோம். வெளிச்சம் எரிகிறது. காற்று வீசுகிறது. எல்லாம் பொறிகளில் தாக்குகின்றன. ஆனால் எல்லாவற்றையும் பொறிகள் உணர்கின்றனவா? எறும்பு என் உடம்பில் ஊரலாம். நான் வேலைசெய்துகொண்டிருக்கும்போது அது எனக்குத் தெரிவதில்லை. குழந்தைகள் வீட்டில் கூச்சல் செய்கின்றன. நான் என் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறேன். அப்பொழுது அக்கூச்சல் என் காதில் விழுவதில்லை. பொறிகள் யாவற்றையும் வாங்கிக்கொள்வதில்லை. சிலவற்றைத் தள்ளிவிடும். தட்டினவர்களுக்கெல்லாம் நாம் கதவு திறக்



கிறோமோ? வந்தவர்களையெல்லாம் கல்லூரியில் உள்ளே விடுவார்களா? கெடிகாரம் 'டிக் டிக்' என்று அடிப்பதைக் கேட்கிறோம். சில சமயம் அலாரம் அடித்தாலும் கேட்பதில்லை. தாய்க்குக் குழந்தையின் கால் அசையும் ஓசை கேட்கிறது. வீட்டுக்கு வெளியே கூக்குரல் போட்டால்கேட்பதில்லை. பொறிகளில் படும் அலைகள் சிலவே உள்ளே செல்லுகின்றன; அறிவாக மாறுகின்றன.

எவ்வாறு மாறுகின்றன? பொறிக்கு விஷயமாகும் புலன்கள் (அதாவது பொருள்கள்) காலம் இடம் என்ற இரு கண்ணாடிகள் வழியாகப் பார்க்கப்படுகின்றன. எப்படிக் கண்ணாடியின் நிறம் பொருளுக்குப் படுகிறதோ, அவ்வாறே காலம் என்ற தன்மை படிகிறது. காலம் இடம் தன்மை கலவாமல் பொறி உணர்ச்சி ஏற்படுவதில்லை. ஒரு நாற்காலியைப் பார்க்கும்போது அது இருக்கும் தரையையும் சேர்த்துப் பார்க்கிறோம். சாப்பிடுதல், தூங்குதல் முதலிய நிகழ்ச்சிகளை காலத்திலிருந்து பிரித்துப் பார்க்க முடிவதில்லை. எது முன், எது பின், எது நேற்று நடந்தது, எது நாளை நடப்பது என்ற தொடர்பில்லாமல் நிகழ்ச்சிகளை அறியமுடியாது. காலமும், இடமும் பொருளல்ல. அவைகள் இரண்டும் பார்க்கும் கருவிகளேயாம். பொறியில் தாக்கும் அலைகள் என்றும் இவைகளை இயம்பலாம். பொறி உணர்ச்சியாக மாற இக்கருவிகள் அவசியம். இவ்வுணர்ச்சிகள் உள்ளே சென்று எண்ணங்களாக மாறுகின்றன.

அறிவுபெற உள்ளமும் கருவிகளும் அவசியம். அவ்வாறே பொறியுணர்ச்சியும் வேண்டும். ஒன்றிருந்து மற்றொன்றில்லையானால்அறிவு ஏற்படாது. பொட்டையன் வெளிச்சம் என்னவென்று எப்படி அறிய முடியும்? கண்ணால் பார்த்தும், கையால் தொட்டும் பொருள்களை எவ்வாறு அறிவான்?

இவ்விதமாக அறிவைப் பெறுகிறோம். புலனிலிருந்து வரும் அலைகள் முறைப்படின் உணர்ச்சியாகும். இவ்வுணர்ச்சிகள் முறைப்படின் பொறியாகும். அப்பொறியறிவு முறைப்படின் நினைவாகும். அதுவே அறிவு. அறிவு முறைப்படின் விஞ்ஞானம் தோன்றும். அது வாழ்க்கையோடு பொருந்தி முறைப்படின் அதுவே ஞானம்.

நம் அறிவு நமக்குள் இருப்பது. காணும் உலகம் நாம் படைத்தது. நம் அறிவால் படைத்த இவ்வுலகம் நமக்குப் புறம்பேயில்லை. மனதில்படுவது தோற்ற உலகம் (Phenomenon). இது காலத்துடனும், இடத்திலும் பார்க்கப்படுவது. உலகம் உள்ளதுபோல் நம் மனதிற்கு எட்டாது. காணும் உலகத்திற்குள்ளே உண்மை உலகம் (Noumenon) அடங்கியுள்ளது.

இவ்வாறு அறிவைப்பற்றி Critique of Pure Reason என்ற நூலில் ஆராய்ந்த ஆசிரியர் Critique of Practical Reason என்ற நூலில் இச்சையை ஆராய்கின்றார். அறிவிலும் இச்சையே சிறந்தது. இச்சையை வாழ்க்கைக்குப் பயன்படும் பகுத்தறிவு (Practical Reason) என்று கூறப்பட்டது. அறிவு முரண்பட்ட கொள்கைகளைத் தருகிறது. அதனால் இச்சையின் உதவி நாடப்படுகிறது. இச்சை நம்பிக்கையின் தோழன்; சமயத்தின் தாயகம்.

மக்கள் பல வேலைகள் செய்கிறார்கள். அவர்கள் செயல் மிருகத்தின் செயல் போன்றது அன்று. மனிதன் செயலுக்கு நோக்கமுண்டு. ஊதியம் பெறும் தொழிலாகலாம்; இன்பத்தை நாடும் செயலாகலாம். கடமையை முடிக்கும் பணியாகலாம். இலாபத்தைக் கருதி நடக்கும் செயல் உயர்வன்று; இன்பத்தைத் தேடும் செயல் சிறந்ததன்று; தன் நலம் பாராது கடமை கருதி எழும் செயலே சீருடையது; மேம்பாடுடையது.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒழுக்க உணர்ச்சி ஒன்று உண்டு. அது நல்லதெது,

கெட்டதெது என்று பாகுபடுத்திச் சொல்லும். 'இது செய்தால் இது வரும், அது செய்தால் அது வரும்' என்று சொல்லாது இலாப நஷ்டத்தைச் சொல்லாது இது நல்லது; இதனைச் செய் எனத் தூண்டும். தவறாது தூண்டும். காரணங்காட்டாது தூண்டும். இந்தப் பெரிய ஏவல் நம்மை ஒழுக்கத்தில் செலுத்தும். இதனை ஆசிரியர் 'Categorical imperative' என்பார். அவ்வுணர்ச்சி தவறு சொல்லாது. நாம் அதனை மறுக்கும் போதும் புறக்கணிக்கும் போதும் அது உண்மையைச் சொல்லிக் கொண்டுதானிருக்கிறது. அது நம் இன்பத்தை நாடுவதில்லை. அது நம்மை இன்பத்திற்குத் தகுதியாக்கும்; பிறர் இன்பத்தைத்தேடும்; பிறர் துன்பத்தைத் துடைக்க முயலும். அவ்வுணர்ச்சி இன்பத்திலும் சிறந்தது. அது அற்றபோது மக்கள் மாக்கள். அது உற்றபோது மக்கள் சிறப்படைகிறார்கள்.

மேடையில் காணும் நாடகங்கள்போல் வாழ்க்கை முடிவதில்லை. அக்கூத்துக்களில் துஷ்டன் தண்டிக்கப் படுகிறான். அறச் செயல் நற்பயன் தருகிறது. ஆனால் உலகத்தில் அவ்வாறுகாண்கிறோமா? அறிவுடைய பாம்பு கடித்துவிட்டு விரைவாகப் புற்றில் மறைந்து தப்புகிறது. தீமையொன்றும் எண்ணாத பூருவிற்குத் தீங்கு நேரிடுகிறது. எளியவன் பிறர் பொருளைக் கொண்டால் அது திருட்டு. பணக்காரன் அவ்வாறு செய்தால் அது சம்பாத்தியம்; சாமர்த்தியம். அதிகமாகத் திருடினால் அக்குற்றத்திலிருந்து தப்பிக்க வேண்டிய பொருளும் கிடைத்து விடுகிறது. உலகத்திலே லாபத்திற்கும், தன்னலத்திற்கும் அறம் இடையூறுவதை ஒரு தரமல்ல பலமுறை காண்கிறோம். ஆயினும் தீமைக்குப் பலன் நிச்சயம் உண்டென்றும் அதனை விலக்கவேண்டுமென்றும் நம் உள்ளத்தில் தோன்றுகிறது.

அறவழி நன்மை பயக்குமாயின், எப்பொழுது பயக்கும்? இப்பிறப்பில் இல்லையானால் மறுபிறப்பில் தானே விளையக் கூடும்? அதனால் மறுபிறப்பு உண்டென ஏற்படுகிறது. ஆகையால் தெய்வமும் இருக்கக் கூடும்.

தெய்வம், உயிர், மறுபிறப்பு முதலியவற்றை ஆராய்ச்சியால் நிலை நாட்ட முடியாது. இல்லை என்றும் மறுக்க முடியாது. அவைகள் உலகத்துப் பொருள் அல்ல; புறப்பொருள் அல்ல; இந்திரியங்களுக்கு எட்டிய பொருள் அல்ல. ஆகையால் ஆராய்ச்சிக்கு எட்டாதது. ஆயினும்அவைகள் உண்டென வைத்துக்கொண்டே வாழ்க்கை நடத்தவேண்டும். கடவுள் உண்டென்று நன்கு தெரிந்து விட்டால் நம் நல்லொழுக்கத்திற்கு மேம்பாடு ஏது?

மனிதனுக்கு மூன்றாவது ஆற்றல் ஒன்று உண்டு. அது அழகுணர்ச்சி. இதனைப் பேசுவது (Critique of Judgement) என்ற நூல்.

காந்தேயின் கொள்கையில் பலபாகம் தெளிவுபடவில்லை. இவருக்குப் பின் வந்த ஹெஜல் (Hegel), பிட்சே (Fichte), ஷெல்லிங் (Shelling) என்ற மூவரும் பிறர் புரிந்துகொள்ளாத வகையிலே எழுதினார்கள். ஹெஜலைப் பற்றிச் சொல்லும் பொழுது ஒரு ஆசிரியர் கூறுகிறார். அளவையைப்பற்றி ஒருவருக்கும் விளங்காத வகையில் ஒரு நூல் எழுதியதும் அதில் அரிய விஷயம் ஏதாவது இருக்கத்தானேவேண்டுமென்ற நினைப்பால் உடனே அவருக்கு ஹில்டன் பர்க் சர்வகலாசாலையில் பேராசிரியர் வேலை கிடைத்தது. காந்தேயைப் பற்றி சோபான்ஹார் கூறுகிறார்: "மடமை நிறைந்த வரிகளும், பொருளற்ற தொடர்களும், தடபுடலான பதங்களும் நிறைந்து பைத்தியக்காரர் பேச்சைப் போன்று, தனக்கும் விளங்காமல் பிறர்க்கும் புரிய விடாமல் செய்வதில் மேதாவி காந்தே."

கடவுளைக் காரணம் காட்டி நிலைநாட்ட முடியாதென்று காந்தே சொன்னது பாதிரிமார்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்களில் சிலர் தங்கள் நாய்களை 'காந்தே' என்று கூப்பிடுவார்கள். வேறுசிலர் காந்தேயை நாய் என்று கூப்பிட்டார்கள்.



பர்க்ளி எண்ணமே (Idealism) எல்லாமென்று சடத்தை அழித்தார். ஹியூம் யாவும் சடமே (Materialism) யென்று எண்ணத்தைக் கொன்றார். வால்டயர் "இரண்டும் தொலைக. பகுத்தறிவில் (Rationalism) நிற்போம்" என்றார். ரூசோ "பகுத்தறிவு படுகுழியில் தள்ளும். உணர்ச்சியைப் (Emotionalism) பின் பற்றுவோம்" என்றார். எல்லாவற்றையும் ஆராய்ந்து காந்தே இவைகளுக்குப் புறம்பான முடிவைக் கட்டினார்.

காந்தே கண்ட கொள்கைகள் பின் வந்த பேராசிரியர்களுக்கு அடிக்கட்டம் ஆயிற்று. கடவுள் ஆராய்ச்சியை முதலில் ஆரம்பித்தவர் தேகார்ட்டே எனலாம். அதனை முடித்தவர் காந்தே எனலாம். இச்சைக்கு அறிவைவிட உயர்ந்த இடம் கொடுத்தவர் காந்தே. பின் வந்த பேராசிரியர் பலர் இதனைப் பின்பற்றினர். இக் கருத்து சோபன்ஹார் நிட்சே, பர்க்ஸன், வில்லியம் ஜேம்ஸ் முதலியோர் ஆராய்ச்சிக்குத் துணையாக இருந்தது. காந்தேயைக் கண்டுபிடித்தார் ஷில்லர்; கீதேயும் (Goethe) அவர் நூலை எழுத்தெண்ணிப் படித்தார். பீதோவன் என்ற சங்கீதப் புலவர் காந்தே சொல்லிய இரண்டு வரிகளைப் பலமுறை சொல்லி மகிழ்வார்: "உலகத்தில் அதிசயம் இரண்டு. வெளியே மீன் நிறைந்த வானம்; உள்ளே ஒழுக்க உணர்ச்சி நிறைந்த மனம்."

# குறிப்புகள்

பிப்ரவரி மாதம் 9-ம் தேதி கும்பகோணம் கல்லூரி ஆண்டு விழாவில் சென்னை உயர்நீதி மன்றத்தில் நியாயாதிபதியாகப் பணியாற்றி இப்பொழுது ஓய்வு பெற்று வரும் திரு. A. S. P. அய்யர் அவர்கள் பேசியபொழுது மூன்று அரிய கருத்துக்களை வெளியிட்டு இருக்கிறார். மனப்பண்பாட்டில் மக்களிடத்தே உள்ள வேற்றுமைகள் இன்று ஜாதிப் பூசலாக வடிவெடுத்து மக்களிடையே பிணக்கை உண்டுபண்ணி வருகிறது. இத்தகைய ஜாதிப்பூசல் நாட்டைவிட்டு அடியோடு மறையவேண்டும் என்பது அவருடைய கருத்துக்களில் ஒன்றாகும். சமஸ்கிருதம் ஒரு தலையாய மொழி என்றும், ஆங்கிலத்தை நாம் நழுவவிடக்கூடாது என்றும் மொழியைப்பற்றி அவர்தெரிவித்துள்ளது இரண்டாவது கருத்தாகும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சமயத்தின் அடிப்படை உண்மைகளைப் போதிக்காததே ஹிந்து மதத்தின் சீர்குலைவுக்குக் காரணம் என்பது அவருடைய மூன்றாவது கருத்தாகும். இம்மூன்று கருத்துக்களையும் ஈண்டு முறையாக ஆராய்வோம்.

ஜாதிப்பூசல்

உலகம் யாவும் ஒற்றுமைப்படுவதற்கு வழிகாண வேண்டிய இந்நாளில் நம் சமுதாயத்துக்கிடையில் இப்பொழுது இருந்து வரும் ஜாதிப்பூசல் வருந்துதற்குரிய விஷயமாகும். பள்ளி இறுதி வகுப்பு, பி. ஏ., எம். ஏ., என்று அரசாங்கத்தில் கல்வியில் படித்தரங்கள் செய்து வைத்திருக்கின்றனர். எந்த வகுப்பு வரையிலும் ஒருவன் படித்துதேர்ச்சியடைந்திருக்கிறானோ அதற்குரிய மதிப்பு அவனுக்கு உண்டு. குறிப்பிட்டவர்கள்தாம் அம் மதிப்புக்குரியவர் என்னும் நியதி இல்லை. ஆனால் வகுப்புக்கு ஏற்ப அவர்கள் பெறும் மதிப்பில் ஏற்றத் தாழ்வு உண்டு. இவ்வேற்றத் தாழ்வை நியாயமென்று சமுதாயமும் ஏற்றுக்

கொள்கிறது. இப்போக்கிலே பண்டைக் காலத்தில் சமுதாயத்தில் ஜாதிப்பிரிவினையானது ஏற்பட்டது. நாளடைவில் அப்பிரிவினையின் உண்மையான அம்சத்தை மக்கள் மறந்து விட்டதால் இப்பொழுது அது பூசலாக வடிவெடுத்து இருக்கிறது.

அறிவின் திறமைக்கு ஏற்பக் கல்வித் திட்டத்தில் ஏற்றத்தாழ்வு அமைந்திருப்பதுபோன்று மனப் பண்பாட்டுக்கு ஏற்ப மக்களிடையேயும் ஏற்றத்தாழ்வு இருக்கத்தான் செய்யும். இதையாரும் போக்கிவிட முடியாது. மனப் பண்பாட்டிலே மிக உயர்ந்த நிலைக்குப் போனவன் அந்தணன். க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் மூவர்ணத்தாரும் அவனுக்கு அடுத்தபடியாக முறையே அமைகின்றனர். சத்வ குணம் மேலோங்கப் பெற்றவன் அந்தணன் ஆகிறான். சத்வகுணத்தை அடிப்படையாகக்கொண்டு ரஜோகுணம் ஓங்கப் பெற்றவன் க்ஷத்திரியன் எனப்படுகிறான். தமோகுணத்தை அடிப்படையாகக் கொண்டு ரஜோகுணம் ஓங்கப்பெற்றவனை வைசியன் என்று அழைக்கலாம். தமோ குணம்சிறப்பாகவும் ரஜோகுணம் சிறிதும் அமையப் பெற்றவன் சூத்திர இனத்தைச் சேர்ந்தவனாகிறான்.

இத்தகைய நான்குவித வேறுபாடுகளோடு அமைந்த சமூகத்தைத்தவிர தீண்டத்தகாதார் என்னும் ஒரு கூட்டத்தார் சமூகத்தில் கிடையாது. மக்கள் தங்கள் அறியாமையால் ஒருகூட்டத்தாரை அங்ஙனம் கருதிவருகிறார்கள். அங்ஙனம் கருதிவரும் கூட்டத்தார்களுள் அந்தணர் நிலையை அடைந்துள்ளவர்கள் இருக்கிறார்கள். அந்தணன் என்றுதங்களைச் சொல்லுபவர்கட்கிடையில் சூத்திரத்தன்மையுடையவர்கள் உண்டு. இப்பொழுது மக்களிடையே இருந்து வரும் குடிப்பிறப்பை முன்னிட்டு ஒருவனை சூத்திரன் என்றோ, வைசியனென்றோ, க்ஷத்திரியன் என்றோ பாகுபடுத்தமுடியாது. ஒருவன் எந்த வருணத்தைச் சேர்ந்தவன் என்பதை அவன் செய்யும் செயலிலிருந்துதான் நாம் தீர்மானிக்கவேண்டும். சூத்திரன் என்பவன் தேகத்தில் அதிகப் பற்றுடையவன். சிந்திக்கும் திறன் சிறிதும் அவனிடத்தில் இருக்காது. எக்காரியத்தையும் திட்டம் போட்டுநிறைவேற்றும்திறமை அவனிடத்தில்லை. தலைமை வகிக்கும் இயல்பு இராது. வைசியன் பொருளீட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பான். தொழில் நுட்பம் நன்கு அறிந்தவனாக இருப்பான். வாணிபம் செய்வதும், கிருஷித் தொழிலும், கால்நடை வளர்த்தலும் வைசிய இயல்புக்கு ஒத்த தொழில்களாம். நன்மை எது தீது எது என்று ஆராய்ந்து நன்மையை மட்டும் கடைப்பிடிக்கும் ஆற்றல் க்ஷத்திரியனுக்கு அமைகிறது. ஆளும் திறமை க்ஷத்திரியனுக்கு அமைந்திருக்கும் இயல்பாம். சதா ஆத்ம நிஷ்டையில் திளைத்திருப்பவன்அந்தணன். அவன் புரியும் தபசே அவன் படைத்திருக்கும் தனமாகும். பணத்தில் எக்காரணத்தை முன்னிட்டும் பற்றுதல் வைப்பது என்பது அவனிடத்திலிருக்காது. தனத்தை விரும்பினால் அவனிடத்துள்ள தவம் குறைய ஆரம்பித்துவிடும். எளிய வாழ்க்கையும் உயர்ந்த எண்ணமுமே அவனது வாழ்க்கையின் குறிக்கோளாகும். மனம், வாக்கு காயம் என்னும் திரிகரணத்தாலும் உயிர்களுக்கு ஹிதம் புரிவது அவனுடைய இயல்பாகும். சொல்லும், சிந்தையும் அவனிடம் ஒன்றுபட்டிருக்கும். பாரமார்த்திகம் ஒன்றைத் தவிர அவனுக்குத் தனது என்று சொல்லுவதற்கு இவ்வுலகில் ஒரு பொருளுமில்லை. தான் பெற்றுள்ள அறம், சீலம், ஞானம் ஆகிய மூன்றையும் ஓயாது உலகுக்கு வழங்கிவருவதே அவன் செய்யும் தொழிலாகும்.

ஜாதிப் பூசலை ஒழிக்க நாம் எல்லோரையும் படிப்படியாக உயர்நிலைக்குக் கொண்டு வரவேண்டிய சூழ்நிலையை சமுதாயத்தில்



அமைக்க முயலவேண்டும். இதுவே ஜாதிப் பூசலை ஒழிப்பதற்கு நேர்மையான முயற்சியாகும். இம்முறையில் ஜாதிப் பூசலை ஒழிக்க நாம் அனைவரும் கடமைப்பட்டிருக்கிறோம்.

மொழி

மனதில் தோன்றும் கருத்துக்களைப் பிறருக்கு எடுத்து சொல்வதற்குச் சாதனமாக அமைந்திருப்பது மொழி. ஒரே கருத்தைப் பல மொழிகளில் வெளியிடலாம். எனவே மொழியின் சிறப்பு அம்மொழியில் அமைந்துள்ள விஷயத்தின் ஆழத்தைப் பொறுத்தது. உயர்ந்த விஷயங்கள், மனதைப் பண்படுத்தும் சக்தி வாய்ந்த சொற்கள் எந்த மொழியில் அமைந்திருக்கின்றனவோ அம்மொழி சிறப்புக்குரியதாகும். இந்த முறையில் போற்றுதற்குரிய மொழிகளுள் சம்ஸ்கிருதம் முதலிடம் வகிக்கிறது.

சொல்லுக்கு வடிவம் உண்டு. பதார்த்தம் என்பது வஸ்துவுக்கு வழங்கும் பெயர். பதம் என்றால் சொல்; அர்த்தம் என்றால் அதன் பொருள். எனவே பதார்த்தம் என்பது சொல்லுக்குரிய பொருள் அல்லது வஸ்துவைக் குறிக்கிறது. ராம, கிருஷ்ண, நமசிவாய என்னும் இவைபோன்ற மந்திரங்களுக்கு அததற்குரிய வடிவம் உண்டு. சொற்களுக்கு வடிவங்களை உண்டாக்கும் சக்தி அமைந்திருக்கிறது. இத்தகைய சக்தி வாய்ந்த சொற்களை சம்ஸ்கிருதத்தில் மற்றெல்லா மொழிகளிலும்விட அதிகம் காணலாம்.

மக்களிடையே நல்ல மனப்பான்மையை வளர்ப்பது மதம். மதங்களுள் ஹிந்து மதமே இந்தியாவில் பெரும்பான்மையோர் அனுஷ்டித்து வருவதாகும். ஹிந்து மதத்தின் உண்மைகள் யாவும் ரிஷிகள் தங்கள் அனுபவத்தில் கண்டறிந்தவைகளாம். ரிஷிகள் உள்முகமாக ஆழ்ந்து சென்று தாங்கள் கண்ட உண்மைகளை உலகுக்கு எடுத்து வழங்கியிருக்கிறார்கள். அவ்வுண்மைகள் வேதாந்தத்தில் அடங்கியிருக்கின்றன. அவ்வேதாந்தத்தின் மூல மொழி சம்ஸ்கிருதமாம். ஆகையால் சம்ஸ்கிருதம் மொழிகளுள் தலையாயது ஆகிறது.

தமிழிலுள்ள அறநூல்கள், சமயநூல்கள் ஆகிய யாவற்றிலும் சம்ஸ்கிருதச் சொற்கள் இடம் பெற்றிருக்கின்றன. திருக்குறளில் நூற்றுக்குப் பதினொருசம்ஸ்கிருதச் சொற்களும், கம்பர் நூல்களில் நூற்றுக்கு இருபது சம்ஸ்கிருதச் சொற்களும், அருணகிரியார் பாக்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து சம்ஸ்கிருதச் சொற்களும் இடம் பெற்றிருக்கின்றன என்று திரு. A. S. P. அய்யர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அத்வைத ஞானத்தைத் தமிழ்ப்பாக்களால் புகட்டும் தாயுமானவர் தம் பாடலில் சம்ஸ்கிருதச் சொற்களைத் தாராளமாகப் பெய்திருக்கிறார். இதனால் அவர் பாடலுக்குக் குறைவு ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. எனவே சம்ஸ்கிருதத்தை நமக்குரியது அல்ல என்று கூறுவது நாம் செய்யும் தவறாகும்.

இன்று ஆங்கிலத்தைக் கற்பதா அல்லது அதைத் தள்ளிவிடுவதா என்பது ஒரு பிரச்னையாக இருந்து வருகிறது. ஆங்கிலம் உலகமொழி என்பது யாவரும் அறிந்ததே. மேலாம் கல்விகற்ற உலக மக்களுள் நான்கு பேருக்கு ஒருவர் வீதம் ஆங்கிலம் பேசுபவர்கள் இருக்கிறார்கள். இன்று நாம் உலகமுழுதுடனும் இணக்கம் வைக்க வேண்டிய நிலையிலிருக்கிறோம். அதுமட்டுமல்ல. உலக நாடுகளில் இந்தியா முக்கிய இடம் பெற்றிருக்க வேண்டும். இதற்கு ஆங்கிலத்தை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். அதைப் புறக்கணித்துவிடலாகாது. ஆங்கிலேயர் மூன்று நன்மைகளை நமக்குச் செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவைகளுள் ஆங்கில மொழியை அளித்தது ஒன்றாகும்.

### ஹிந்துமதத்தின் சீர்குலைவு

உலகிலுள்ள பல சமயங்களுள் ஹிந்து மதம் புராதனமானது. ஹிந்துமதம் எல்லா மதங்களையும் தன்னகத்தே அடக்கிக் கொண்டிருக்கிறது. நல்ல கொள்கைகள் எங்கிருந்தாலும் அவைகளைத் தனதாக்கிக் கொள்வதில் ஹிந்துமதம் தயங்குவது கிடையாது. இத்தகைய பரந்த கொள்கை அதனிடத்திருப்பதால் இதுவரையிலும் நேர்ந்த அழிவுகளிலிருந்தும் அது தப்பித் தலைதூக்கி நிற்கிறது. மக்கள் தங்கள் மன இயல்புக்கு ஒத்த நெறியை அனுஷ்டிக்க ஹிந்துமதம் இடம் அளிக்கிறது.

ஹிந்துமதத்தைப் பின்பற்றுபவர்களுள் அதிலுள்ள தத்துவங்களை அறிந்திருப்பவர்கள் மிகச் சிலரேயாவர்; தெரிந்திருப்பவர்களும் சடங்குகளையே பிரதானமாகக் கருதி வருகின்றனர். ஒவ்வொரு சடங்குக்கும் அடிப்படைத் தத்துவம் உண்டு. அத் தத்துவத்தை அறியாது வெறும் சடங்கை மட்டும் செய்பவர்களாக ஹிந்துக்களில் பலர் இருந்து வருகின்றனர். தத்துவத்தை மறந்துவிட்டு வெறும் சடங்கைமட்டும் செய்து வருவதற்குச்சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். ஆலய வழிபாடு ஹிந்து மதத்தில் முதலிடம் பெற்றிருக்கிறது. ஆலயத்துக்குச் செல்வோர் அனைவரும் பலிபீடத்தின் முன் விழுந்து வணங்கி விட்டுக் கோயிலை வலம் வந்து உட் செல்வார்கள். பலிபீடத்துக்கு முன் தாங்கள் செய்த பாபங்களை யெல்லாம் பலியிடுவதற்காக அச்செயல் ஹிந்து மதத்தில் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் இந்த உண்மையை அறிந்து செய்பவர்கள் மிகச் சிலரே. பூஜை நடப்பதற்கு [illegible] திரைபோட்டு மறைத்து விடுவார்கள். திரையை விலக்குவதற்குமுன் மணி ஓசையைக் கிளப்புவார்கள். திரையைத் திறந்தவுடன் தீபாராதனை காட்டுவார்கள். இது கோயிலில் தினசரி நிகழ்ந்து வரும் நிகழ்ச்சி. ஏன் இப்படி நிகழவேண்டும்? இந்நிகழ்ச்சி எந்தத் தத்துவத்தை விளக்குகிறது? இப்படிக் கேள்விகள் கேட்டால் அவைகளுக்குப் பதில் விடுக்க யாருக்கும் தெரியாது. உள்ளத்திலே தியான வேளையில் நிகழ்வதைப் புறத்தோற்றத்தில் அங்ஙனம் கோயிலில் அமைத்து வைத்திருக்கிறார்கள். கண்ணை மூடி உள்ளே மனத்தைச் செலுத்தினால் ஆரம்பத்தில் ஒரே இருளாக இருக்கும். பல நாள் பயிற்சிக்குப்பின் தியான வேளையில் அனாகத தொனி என்னும் ஓசையைச் சாதகன் உள்ளே கேட்பான். இன்னும் பல நாட்களுக்குப்பின் அக்ஞானம் என்னும் திரை நீக்கப்பெற்று ஆத்மப் பிரகாசத்தைச் சாதகன் உள்ளே காண்பான். இவ்வுண்மைதான் கோயிலில் பூஜைவேளைகளில்எடுத்து விளக்கப்படுகிறது. உண்மையான தத்துவங்களைத் தாங்களே அறியாத பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு எங்ஙனம் தங்கள் மதத்தை எடுத்துப் புகட்டமுடியும்? பெற்றோர்கள் தத்துவங்களை முறையாக விளக்குவதில்லையாதலால் குழந்தைகள் இப்பழக்கங்களை யெல்லாம் மூடப்பழக்கங்கள் என்று தள்ளி விடவும் செய்கிறார்கள். இங்ஙனம் ஹிந்துமதச் சீர்குலைவுக்குப் பெற்றோர்கள் ஒருவிதத்தில் காரணமாக இருந்து வருகிறார்கள். இவர்கள் தங்கள் நிலையை மாற்றியமைத்துக் கொண்டு தங்கள் மதத்தை முறையாகப் பின்பற்றிவரக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

18847

## செய்திகள்

**நிகழ்வுறு**

ஏப்ரல் மீ 4, 5 தேதிகளாகிய சனி, ஞாயிறு ஸ்ரீமத் சித்பவானந்த சுவாமிகள் தலைமையில் [illegible] திருவண்ணாமலை [illegible]சந்ந்ய மடத்தில் அந்தர்யோகம் நடைபெறும்.

Edited by SWAMI CHIDBHAVANANDA,
Printed & Published by Br. RAMUDU at Tapovanam Press, Tirupparaitturai, Tiruchi Dt.

# ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
## இயற்றிய நூல்கள்

| | |
|---|---|
| ஸ்ரீமத் பகவத்கீதை தேவநாகரியில்மூலம் - பதவுரை பொழிப்புரை - விளக்கமான விரிவுரை - மூன்றாம்பதிப்பு (அனுப்பும் செலவு தனி) பிரசாரவிலை ரூ. | 3-75 |
| ஞானயோக விளக்கம் காலிகோ பைண்டு ... | 6-00 |
| கர்மயோக விளக்கம் „ ... | 5-00 |
| பரமஹம்ஸரின் பெருமை „ ... | 4-50 |
| கடவுளின் வடிவங்கள் ... | 2-00 |
| எதிர்கால இந்தியா ... | 1-50 |
| அனுஷ்டான வேதாந்தம் ... | 1-50 |
| தாயுமானவர் இயற்றிய பரிபூரணானந்தம் ... | 1-50 |
| தாயுமானவர் இயற்றிய சின்மயானந்த குரு ... | 1-50 |
| தாயுமானவர் இயற்றிய மௌனகுரு வணக்கம் ... | 1-50 |
| பரமஹம்ஸர் புகட்டிய பெருநெறி விளக்கம் பாகம் 1 & 2 (தனித்தனி) | 1-50 |
| சந்தேகம் தெளிதல் ... | 1-50 |
| ஸ்ரீ சாரதா தேவியாரது சரிதம் | 1-25 |
| திருக்கயிலாயகிரி யாத்திரை ... | 1-12 |
| உலகுக்கு உயிர்கொடுத்த உத்தமன் ... | 1-00 |
| கண்ணன் என்னும் கடவுள் ... | 1-00 |
| சகோதரி நிவேதிதை ... | 1-00 |
| Introducing the Gita ... | 1-00 |
| அறம் வளர்த்த நம்பி ... | 0-95 |
| *கயிலைமலை யாத்திரை ... | 0-95 |
| உலகை உய்வித்த உத்தமன் ரூ. | 0-95 |
| சுவாமி விவேகானந்தர் ... | 0-90 |
| தேவரகசியம் முதலிய கதைகள் | 0-90 |
| ஸ்ரீராமகிருஷ்ண சரிதம் ... | 0-75 |
| நன்மக்களைப் பெறுதல் ... | 0-50 |
| தாயுமானவர் இயற்றிய பரசிவ வணக்கம் ... | 0-50 |
| பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்) | 0-50 |
| *ஸ்ரீமத் பகவத்கீதை முன்னுரை... | 0-40 |
| *ஆத்ம சக்தி ... | 0-40 |
| இராவண தத்துவம் ... | 0-40 |
| மார்க்கண்டேயன் (நாடகம்) ... | 0-35 |
| தபோபலன் (நாடகம்) ... | 0-35 |
| கவிச்சக்கரவர்த்தி கம்பன் ... | 0-35 |
| *மனிதனது நிஜ சொரூபம் ... | 0-25 |
| *சக்தி தத்துவம் ... | 0-25 |
| *ஆலய வழிபாடு ... | 0-25 |
| *ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் | 0-20 |
| *சூரிய நாராயணன் ... | 0-20 |
| *சிவதத்துவம் ... | 0-20 |
| இந்து மதமும் கிறிஸ்துவ மதமும் | 0-20 |
| *வர்ணாச்ரம தர்மம் ... | 0-15 |
| *கணபதி ... | 0-15 |
| *முருகக் கடவுள் ... | 0-15 |
| *விஷ்ணு தத்துவம் ... | 0-15 |
| திருக்குறளில் கடவுள் வாழ்த்து | 0-15 |
| அருள் விருந்து 1 முதல் 7 வரை (ஒவ்வொன்றும்) ... | 0-15 |
| *அன்னை சாரதா தேவியார் வரலாறு ... | 0-15 |

* எல்லாப்புத்தகங்களையும் வாங்கவிரும்புபவர்கள் இக்குறியிட்ட புத்தகங்களை வாங்கத் தேவையில்லை. ஏனென்றால் இவை ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

முன்பணம் அனுப்புவோர்க்குத் தபால் செலவின்றி புத்தகங்கள் அனுப்பப்படும். நான்கு ரூபாய்க்குக் குறைந்த ஆர்டர்களுக்கு புக்போஸ்டில்தான் புத்தகங்கள் அனுப்பப்படும்.

**தபோவனப் பிரசுராலயம்**

**திருப்பராய்த்துறை போஸ்ட், எலமனூர் ஸ்டேஷன்**

**திருச்சி ஜில்லா**




சமுதாயத்தில் தீர்வுகாண வேண்டிய பிரச்னைகள் பல உள. அப் பிரச்னைகளில் சிலவற்றைப் பரமஹம்ஸர் வாழ்வோடு சீர்தூக்கி சரியான மார்க்கத்தை விளக்குகிறது இந்நூல்.

சிந்தனைக்கோர் விருந்து
கிரௌன் சைஸ், காலிகோ பைண்டு

இப்பொழுது வெளிவந்துள்ளது
பக்கங்கள் 400 விலை ரூ. 4–50



| (1) | (2) | (1) | (2) |
| --- | --- | --- | --- |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |